கலைமகள்

250

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
31 JAN 1942
MADRAS

விஷூ மலர்

1941

6 As அணா

ஐப்பசி மீ

OCTOBER

ஒடியன்
வெளியீடுகள்
ஒங்க அப்பன்மவனே-
சிங்கன்டா அடிப்பியோ?
C.A.1403
N.S.கிருஷ்ணன்
T.S.துரைராஜ்
பாடிய
சகுந்தலை
டாக்கி பாட்டுகள்
செருகளத்தூர் சாமா பாடிய
மன்னனுக்கே
கைலாசவாசா
CA.1362
பக்த கௌரி
கச்ச தேவயானி
டாக்கி பாடல்கள்
ஒடியன்
ரிகார்டுகளில்
கேளுங்கள்
G.H.RAO
ஸரஸ்வதி ஸ்டோர்ஸ்,
மவுண்ட் ரோட்,
மதராஸ்.

31 JAN 1942
MADRAS

மங்களகரமான

தீபாவளிக்கு

எச் எம் வி

ரிகார்டுகள்

புதிய பிலிம் வெளியீடு

"ஸாவித்திரி"

ஸ்ரீமதி எம். எஸ்.
ஸுப்புலக்ஷ்மி

N. 18134 { ப்ருஹிமுகந்தேதி
மனமே கணமும்

*

"ப்ரேம பந்தன்"

ஸ்ரீமதி
டி. சூர்யகுமாரி

N. 18117 { ராதையின்
அழகாமே

*

"ஸன்யாஸி"
N. 18141-42

ரிகார்டுகளிலமைந்த சங்கீதத்
தின் சகஜமாதுர்யத்தைப்
பிரதிபலிப்பவை
"எச். எம். வி."
கிராமபோன்களே.

இந்த கிராமபோன் "எச். எம். வி."
போர்டபிள் மாடல் நெ. 102 (கருப்பு)
விலை ரூ. 105.
எல்லா "எச். எம். வி." கிராமபோன்
வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

HIS MASTERS VOICE

SAMUEL

"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"

சென்னை-600 00

எம்பயர் ஆப் இந்தியா லைப் அஷ்யூரென்ஸ் கம்பெனி லிமிடெட்.

தலைமை ஆபீஸ்:—பம்பாய். ஸ்தாபிதம் 1897.

ஐவேஜிகள் ரூ. 5,60,00,000க்கு அதிகமானது.

இக்கம்பெனியினால் அளிக்கப்படும் லைப் அஷ்யூரென்ஸ் திட்டங்களைப்பற்றிக் கேட்டுத் தெரிந்து கொள்வதற்கு ஒருவிதச் செலவுமில்லை. தவிரவும் குடும்ப ரக்ஷணையோடுகூடத் திடமான சேமிப்பைத் தேர்ந்தெடுக்க உதவும்.

தேவை

பத்திரமான முதலீடுகள், சிக்கனமான நிர்வாகம், கண்டிப்பான மதிப்புவெளியீடு இவைகளுக்குப் பெயர்போன இக்கம்பெனிக்குச் சுறுசுறுப்பும் செல்வாக்குமுள்ள ஏஜெண்டுகள் தேவை. உயர்ந்த செல்வநிலையுடன் குறைந்த விகிதப் பிரிமியங்கள் இருப்பதால் இக்கம்பெனிக்கு அஷ்யூரென்ஸ் தொழில் செய்வது சுலபமாயிருக்கிறது. அஷ்யூரென்ஸ் விபரத்திற்கும், ஏஜென்ஸி நிபந்தனைகளுக்கும் தலைமை ஆபீஸுக்காவது அல்லது கீழ்க்கண்ட கிளை ஆபீஸுக்காவது எழுதித் தெரிந்து கொள்ளவும்:—

11, முதல் லயன் பீச்சு, மதராஸ்.

டிஸ்டிரிக்ட் போர்டு பில்டிங், கேம்பகௌடா ரோடு, பெங்களூர் ஸிடி.	ஹூசூர் ரோடு, கள்ளிக்கோட்டை	முசாகிப் மன்ஸில், அபிட் ரோடு, ஹைதராபாத், (டெக்கான்)

கலைமகள் புதிய ஸோல் ஏஜெண்டுகள்

1. S. ஸேதுராமன்
   1, ஞானசம்பந்தர் தெரு,
   சீகாழி
2. S. O. காவேரி உத்தமன்,
   போஸ்ட் ஆபீஸ் தெரு,
   ஷண்முகநாதபுரம்
3. K. M. நரசிம்மன்,
   செங்கல்பட்டு
4. P. கோவிந்தராஜுலு
   செட்டியார்
   வக்கீல் குமாஸ்தா,
   திண்டிவனம்
5. K. சுப்பிரமணியம்,
   ஈசுவரன் கோவில் தெரு,
   திருப்பூர்
6. R. நாராயணசாமி,
   107, மதராஸ் ரோட்டு,
   புதுச்சேரி
7. S. M. ஸ்ரீராமலு,
   பெரியகடை வீதி,
   போளூர்
8. I. R. ராமஸ்வாமி ஐயர்,
   சத்திரம் ஸ்டோர்ஸ்,
   மதுரை ரோட்டு,
   விருதுநகர்
9. R. S. மணி ஐயர்,
   திருவண்ணாமலை
10. G. K. ராமசுப்பன்,
    கோபிசெட்டிபாளையம்
11. K. பாலகிருஷ்ணையர்
    மிராசுதார்,
    சேந்தங்குடி (மாயவரம்)
12. S. வைகுண்டநாதன்,
    கல்லிடைக்குறிச்சி &
    அம்பாசமுத்திரம்
13. M. A. L. காசிவிசுவநாதன்
    செட்டியார், திருப்பத்தூர்
    (ராமநாதபுரம்)

இந்தியன் பாங்க் லிமிடெட்

இந்தியன் பாங்க் பில்டிங்ஸ் : நார்த் பீச் ரோட், மதராஸ்

தென்னிந்தியாவெங்கும் கிளை ஆபீஸ்கள்

அதிகார மூலதனம்	60,00,000
வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	47,92,800
செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 100 ஷேர்களில் ரூ. 50 வீதம் செலுத்தப்பட்ட 20,000 ஷேர்கள்	10,00,000
ரூ. 100 ஷேர்களில் 10 வீதம் செலுத்தப்பட்ட 27,928 ஷேர்கள்	2,79,280
ரிஸர்வ் பண்டும், இன்னும் மற்ற பண்டுகளும்	19,18,060

செக்ரடரி: **N. கோபால அய்யர்.**

7 வது வாரம் அக்டோபர் 16௳ முதல்

சிந்தாமணி டாக்கீஸ் மதுரை
வெலிங்டன் டாக்கீஸ் திருச்சி
எடிசன் தியேட்டர் கோயமுத்தூர்
6 வது வாரம் வள்ளாளர் டாக்கீஸ் மாயவரம்

17-10-41 முதல்
சென்னை பிரபாத் டாக்கீஸ்
ராதா பிக்சர் பாலெஸ் கல்லிக்கோட்டை

19-10-41 முதல்
டைமண்ட் சினிமா கும்பகோணம்
டவர் டாக்கீஸ் தஞ்சாவூர்
ராஜா டாக்கீஸ் திருவாரூர்
சம்பகா டாக்கீஸ் மன்னார்குடி
கிருஷ்ண டாக்கீஸ் காரைக்குடி
ராயல் டாக்கீஸ் திருநெல்வேலி
ராமலிங்கேஸ்வரா டாக்கீஸ் — சேலம்
ராஜா டாக்கீஸ் — ராஜபாளையம்

ராயல் டாக்கீ டிஸ்டிரிபியூட்டர்ஸாரின்

சாவித்திரி

டைரக்ஷன்
Y.V. ராவ்
பாட்டுகள்:
பாபநாசம் சிவன்
ஒலிப்பதிவு:
அத்துல் சட்டர்ஜி
ஒளிப்பதிவு:
யூசுப் முல்ஜி
ஸ்டுடியோ:
நியூ தியேட்டர்ஸ்

நடிகர்கள்:
சாந்தா ஆப்தே
M.S. சுப்புலக்ஷ்மி
ராவ் - சாரங்கபாணி
T.S. துரைராஜ்
V.A. செல்லப்பா
கிருஷ்ணவேணி
சாரதாம்பாள்

சாந்தா ஆப்தே M.S.S. பாட்டுகளை H.M.V. ரிக்கார்டுகளில் கேளுங்கள்!

DAYAL TALKIE

W. Amchou

தேசமெங்கும் அழகிய பெண்மணிகள்
அழகை வளர்க்க விரும்பி
உபயோகிப்பது எது ?

மைசூர் சந்தன சோப்பே

Mysore SANDAL SOAP



ஆதலால்
எப்பொழுதும்

மைசூர் சந்தன சோப்பையே

உபயோகியுங்கள்

டிஸ்டிரிப்யூடர்கள்: பெஸ்டு அண்டு கம்பெனி லிமிடெட், சென்னை.

Retail Branch:

285, China Bazar Road.

நல்ல விதமான

கலர் ப்ளாக்குகள்
ஆப்டோன் ப்ளாக்குகள்
செய்யுமிடம்

விபரங்களுக்கு:

எம். ஸி. அப்பாசாமி செட்டி
அண்டு கோ.,
14, ஜோன்ஸ் தெருவு,
மண்ணடி, மதராஸ்.

REGD. No. 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
ஸ்ரீ
ரிஜிஸ்டர். நெ. 1506

அசோகா சுகந்த பாக்குத்தூள்

குருவும் சிஷ்யனும்



" சித்திரப் பாவையின் அத்தக வடங்கி "

ஓவியர்: ஸ்ரீமான் எஸ். ராஜம்

OFFICE OF THE REGISTRAR
31 JAN 1942
MADRAS

வித்துவான் தியாகராச செட்டியார்

ஆசிரியரும் மாணாக்கரும்

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர்

ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடத்தில் தியாகராச செட்டியாருக்கு இருந்த பக்தி இணையற்றது. சில நாட்கள் இவரோடு பழகினால் மாத்திரம் இது தெரியவராது. ஆசிரியரும் மாணாக்கரும் நண்பர்களைப் போலவே பழகிவந்தனர். பிள்ளையவர்களின் கவிப்போக்கிலே ஈடுபட்டு அனுபவித்து அதன் அருமையை உணர்ந்து வாயாரப் பாராட்டுவார் செட்டியார். பிள்ளையவர்களை ஐயாவென்றே அழைப்பது இவர் வழக்கம்.

அப்புலவர்பிரான் இயற்றிய திருவாவடுதுறை அம்பலவாண தேசிகர் கலம்பகம் அச்சிடப்பெற்ற காலத்தில் மதுரை இராமசாமிப் பிள்ளை யென்பவர் அதனைச் செட்டியாரிடம் கொண்டுபோய்க் காட்டினார். அதில் முகப்புப் பக்கம் இல்லை. "இது யார் இயற்றியது?" என்று செட்டியார் இராமசாமிப் பிள்ளையைக் கேட்டார்.

"மடத்து அடியார்களில் ஒருவர் செய்தது" என்றார் பிள்ளை.

செட்டியார் படித்துப் பார்த்தார். அந்த நூலின் நடையிலிருந்து அது தம் ஆசிரியரால் இயற்றப்பெற்றதென்று இவர் தெரிந்துகொண்டார். "என்னை ஏமாற்றப் பார்க்கிறீர்களோ! ஐயா அவர்கள் வாக்கு என்று தெளிவாகத் தெரிகின்றதே!" என்று இராமசாமிப் பிள்ளையிடம் சொன்னார்.

"அதற்கு ஏதாவது அடையாளம் இருக்கிறதா? துணிவாகச் சொல்லமுடியுமா?" என்று அவர் கேட்டார்.

"அடையாளமா! ஆதீனத்துச் சம்பிரதாயங்களை இவ்வளவு நன்றாகத் தெரிந்து அமைக்கக்கூடியவர்கள் வேறு யாரையா இருக்கிறார்கள்?"

"மடத்தைச் சார்ந்த தம்பிரான்களுக்கு அந்தச் சம்பிரதாயம் தெரியாதா? எவ்வளவோ முதியவர்கள் இருக்கிறார்களே; அவர்களுக்குத் தெரியாதா?"

"தெரியலாம். ஐயாவைவிட அதிகமாகக்கூடத் தெரிந்து கொண்டிருக்கலாம். ஆனால் அந்தச் சம்பிரதாயத்தை இந்த மாதிரி கற்பனை செய்து செய்யுட்களிற் பொருத்தி அமைக்கத் தெரியவேண்டுமே."

"வேறு யாரும் அப்படிச் சொல்ல இயலாதா?"

"சொல்லலாம். சொல்லுகிற முறையிலே பிள்ளையவர்களுக்கென்று தனிச்சிறப்பு ஒன்று உண்டு. நமக்கு வேண்டியவர்களை முகச்சாயலிலிருந்து நாம் தெரிந்துகொள்ளுகிறோமல்லவா? அழகுள்ள இருவர் முகச்சாயலில் மூக்கு, கண், வாய் எல்லாம் ஒரேமாதிரி இருக்கின்றன. இரண்டு முகங்களிலும் அழகு இருக்கிறது. ஆனாலும் நாம் பார்த்துப் பழகிய முகத்தைச் சட்டென்று தெரிந்துகொள்ளுகிறோம். இன்ன காரணத்தால் இந்த முகம் இன்னாருடையது என்று வரையறுத்துப் பேசமுடியுமா? அது கண்ணுக்கும் கருத்துக்கும் சம்பந்தப்பட்ட விஷயம். கவிநடையும் அத்தகையதே. பிள்ளையவர்கள் வாக்கிலே பழகிய காதுக்கு இந்த நூலைக் கேட்கும்போது அவர்களுடைய வாக்குத்தான் இந்த நூல் என்பது தெரிந்துவிடும்."

இராமசாமிப் பிள்ளை அதற்குப்பிறகு ஆட்சேபிக்கவில்லை; உண்மையை ஒப்புக்கொண்டார்.

மற்றொரு முறை பிள்ளையவர்கள் சுப்பிரமணிய தேசிகர் விஷயமாக, "துங்கஞ் சார்தரு" என்ற இங்கிலீஷ் நோட்டு மெட்டில் அமைந்த கீர்த்தனத்தை இயற்றி என்னைக்கொண்டு தேசிகர் முன்னிலையில் பாடச் செய்தார்கள். இசையுடன் அதை நான் சொன்னபோது யாவரும் கேட்டு ஸந்தோஷித்தனர்.

பின்பு பிள்ளையவர்களும் நானும் கும்பகோணத்துக்கு ஒரு முறை போயிருந்தபோது செட்டியார் வீட்டில் தங்கினோம். அந்தச் சமயத்தில் பிள்ளையவர்கள் செட்டியாரிடம், "தியாகராசு,

சாமிநாதையர் சந்நிதானத்தின் விஷயமாக ஒரு கீர்த்தனம் செய்திருக்கிறாரே; நீ கேட்டாயா?'' என்று சொல்லி அந்தக் கீர்த்தனத்தைப் பாடிக் காட்டும்படி எனக்குக் கட்டளையிட்டார். நான் மெல்ல இசையுடன் பாடினேன்.

''இவர் பாட்டு எப்படி இருக்கிறது?'' என்று ஆசிரியர் கேட்டார்.

''இவர் பாடுவதற்குச் சொல்லவேண்டுமா, என்ன? இசையில் இவர் சமர்த்தரென்று எனக்கு முன்பே தெரியுமே.''

''நான் அதைச் சொல்ல வரவில்லை. கீர்த்தனம் எப்படி இருக்கிறது, எதுகை மோனை எவ்வளவு பொருத்தமாக இருக்கின்றனவென்று கேட்கிறேன்.''

செட்டியார் பிள்ளையவர்கள் முகத்தை விழித்துப் பார்த்தார்; ''என்ன சொல்லுகிறீர்கள்! இந்தப் பாட்டு இவர் இயற்றியதா? இல்லவே இல்லை. நான் நிச்சயமாகச் சொல்கிறேன்: நீங்கள் பாடின பாட்டு இது'' என்றார்.

''என்ன அப்பா அப்படிச் சொல்லுகிறாய்? இசைப் பழக்கமுடைய இவர் இப்படிப் பாடமாட்டாரா? இவருடைய சக்தியை இன்னும் நீ தெரிந்து கொள்ளவில்லைபோல் இருக்கிறதே!''

''இவருக்குச் சக்தி இல்லையென்று யார் சொன்னார்கள்? உங்களுக்கும் எனக்கும் தெரியாத இசையிலே இவர் வல்லவரென்பதை நான் நன்றாக அறிவேன். ஆனால் இந்தப் பாட்டு இவர் இயற்றியதே அன்று. எங்கே வேண்டுமானாலும் சொல்லுகிறேன்.''

ஒருவர் ஆட்சேபிக்கத் தொடங்கினால் செட்டியாருக்கு அதிக வேகம் பிறந்துவிடும். தொனி அதிகமாகும். பேச்சிலே கடுமை தோன்றும். அந்த நிலைக்கு வராமல் இருப்பதற்கு முன்னே நான் இடைமறித்து, ''ஐயா செய்ததுதான் இது'' என்று உண்மையைச் சொல்லிவிட்டேன்.

பிள்ளையவர்கள் வாக்கில் யாரேனும் பொறாமையினால் குறை கூறத் தொடங்கினால் அவரைக் கேள்விகள் கேட்டுக் கலங்க அடித்துவிடுவார் செட்டியார். தம்முடைய ஆசிரியர் வாக்குத் 'தங்கந் தங்கமாக' இருக்கிறதென்று அடிக்கடி சொல்லிப் பாராட்டுவார்.

இவ்வாறு இருந்தாலும் சில விஷயங்களில் பிள்ளையவர்களைத் தியாகராச செட்டியார் கண்டிப்பதும் உண்டு. எல்லோருக்

கும் விளங்காத ஸ்தல விஷயங்களைச் செய்யுட்களில் அமைத்துப் பாடுவதை இவர் கண்டிப்பார். திரிபு யமகமாக உள்ள அந்தாதிகள் வரவரக் கடினமாக இருப்பதாகச் சொல்லுவார். "நீங்கள் இயற்றும் பாடல்கள் படிப்பவர்கள் உள்ளத்திற் புகுந்து கவர்ச்சியை உண்டுபண்ண வேண்டும். எவ்வளவு தரம் யோசித்தாலும் விளங்காதபடி சொற்பிரயோகங்கள் இருந்தால் உங்கள் நூலை யார் படிப்பார்கள்? அப்படி எங்கேயாவது இரண்டோரிடத்தில் கடினமான பிரயோகம் இருந்தால் உடனே அதற்கு அடியில் ஒரு குறிப்பு எழுதிவிடவேண்டும். தமிழ் நாட்டில் தமிழன்பு உடையவர் யாராக இருந்தாலும் படித்து இன்புறும்படி இருக்க வேண்டும். இல்லாவிட்டால் எங்கெங்கே புஸ்தகம் போகிறதோ அங்கெல்லாம் நீங்களும் பாடம் சொல்லப் போய்க்கொண்டிருக்க வேண்டும். இது சாத்தியமான விஷயமா?" என்று இவர் கண்டிப்பதை நான் பலமுறை கேட்டிருக்கிறேன்.

ஒரு வருஷம் எப்.ஏ., வகுப்புக்குத் தமிழ்ப் பாடமாக இருந்த ஒரு வசன புத்தகத்தில் 'தான் கெட்டதல்லாமல் சந்திர புஷ்கரணியையும் கெடுத்ததுபோல' என்ற பழமொழி வந்திருந்தது. அதன் பொருள் ஒரு பண்டிதருக்கு விளங்கவில்லை. பள்ளிக்கூடத்துத் தமிழாசிரியர்கள் சிலர் விடுமுறைக்காலங்களில் பிள்ளையவர்களிடம் வந்து தங்கள் சந்தேகங்களைத் தெளிந்துகொண்டு போவது வழக்கம். அப்படியே அந்தப் பண்டிதரும் பிள்ளையவர்களிடம் வந்தபோது அந்தப் பழமொழியைச் சொல்லி, "இதில் சொல்லப்பட்ட வரலாறு என்ன?" என்று வினவினர்.

பிள்ளையவர்களுக்கு அந்த விஷயம் தெரியாது. "தெளிவாகத் தெரியாது" என்று அவர் சொல்லவே பண்டிதர், "யோசித்துச் சொல்லுங்கள். உங்களுக்கே தெரியாதென்றால் வேறு யாரிடம் போய்க் கேட்பது?" என்று மன்றாடினர். அந்தக் கவிஞர் சிறிதுநேரம் யோசித்துவிட்டு ஏதோ ஒரு வகையாகச் சொல்லலானர்:

"சந்திர புஷ்கரிணியென்பது ஸ்ரீரங்கத்திலுள்ள ஒரு தீர்த்தம். அது திருவானைக்காவைச் சார்ந்த நவதீர்த்தங்களுள் ஒன்றாக இருந்தது. திருவானைக்காப்புராணத்தால் இதனை அறியலாம். திருவானைக்காக் கோயிலில் இருந்த அதிகாரி ஒருவன் சிவ கைங்கரியங்களைச் சரியாகச் செய்யாமல் இருந்தான். அவனை ஆலய நிர்வாகிகள் வேலையிலிருந்து நீக்கிவிட்டனர். அவன் உடனே வைஷ்ணவனாகி ஸ்ரீரங்கம் கோயிலில் உத்தி

யோகம் பெற்று வசிக்கலானன். பிறகு அவன் பெருமுயற்சி செய்து அந்தத் தீர்த்தத்தையும் ஸ்ரீரங்கத்து ஆலயத்தோடு சேர்த்துக்கொண்டான். அவன் அவ்வாறு செய்த வரலாற்றை உட்கொண்டு இந்தப் பழமொழி எழுந்தது.''

பண்டிதருக்கு அளவற்ற திருப்தி உண்டாகிவிட்டது. அவர் சைவராதலின், "மிகவும் அழகான கதை; அருமையான பொருள்'' என்று பாராட்டிக்கொண்டே போய்விட்டார்.

பிறகு ஒருநாள் செட்டியார் மடத்திற்கு வந்தார். பிள்ளையவர்கள் இவரைப் பார்த்து, மேலே குறிப்பிட்ட பழமொழியில் குறிப்பித்த வரலாறு என்னவென்று கேட்டார்.

"ஏன்? யாராவது காலேஜ் உபாத்தியாயர் உங்களிடம் வந்து கேட்டாரோ? நீங்கள் என்ன சொன்னீர்கள்?'' என்று சிரித்துக்கொண்டே வினவினர் செட்டியார்.

பிள்ளையவர்கள் நிகழ்ந்தவற்றைச் சொன்னர். கேட்ட செட்டியார், "தெரியாததைத் தெரியாதென்று சொல்லிவிடாமல் ஏன் அப்படிக் கற்பித்துச் சொன்னீர்கள்? நாளைக்கு அந்த மனுஷன் பிள்ளைகளிடத்தில் இந்தக் கதையை இப்படியே ஒப்பித்துவிட்டுப் பிள்ளையவர்கள் சொன்னர்களென்றல்லவா சொல்லிவிடுவான்? யாராவது விஷயம் தெரிந்தவர் கேட்டால் உங்களுக்கு அபக்கியாதி வராதா?'' என்று சொன்னர்.

"என்னவோ சொல்லிவிட்டேன். அந்தப் பண்டிதர் என்னை மிகவும் வற்புறுத்தினர். சொல்லாவிட்டால் போக மாட்டாரென்று தோற்றியது. அதன் உண்மையான வரலாறு தான் என்ன? சொல்.''

"ஸ்ரீரங்கம் கோயிலில் இருந்த சமையற்காரன் ஒருவன் ஒரு தாசியை வைத்திருந்தான். கோயிற் பிரசாதத்தை அவளுக்குச் சுடச் சுடக் கொண்டுபோய்க் கொடுப்பான். அந்த வழக்கப்படி ஒருநாள் சட்டியரணையென்னும் பொங்கலை எடுத்துக்கொண்டு போனன். வழியில் சந்திரபுஷ்கரிணியில் இறங்கிக் குளிக்க எண்ணி அதன் கரையில் வைத்தான். சூடு ஆறுவதற்குமுன் கொடுக்கவேண்டுமே என்ற எண்ணத்தால் அவசர அவசரமாக இறங்கும்போது படி வழுக்கிவிட்டுப் புஷ்கரிணியில் விழுந்து இறந்துவிட்டான். கோயிலார் மறுநாட் காலையில் பிரேதத்தை அப்புறப்படுத்தி அத்தீர்த்தம் கெட்டுப்போனதற்கு வருந்திப் புஷ்கரிணிக்கும் கோயிலுக்கும் சம்புரோக்ஷணை செய்து, பின்பே பூஜை நடத்தினர்கள். அந்தச் சமையற்காரன் பண்ணின காரி

யத்தை எண்ணி உண்டானது இந்தப் பழமொழி'' என்று செட்டியார் விளக்கினர்.

செட்டியாருடைய அறிவுத்திறமையை அறிந்த பிள்ளையவர்கள் தாம் இயற்றும் ஒவ்வொரு நூலையும் இவருக்குக் காட்டுவது வழக்கம். செட்டியார் சொல்லும் யோசனைகளை அங்கீகரித்துக்கொண்டு ஏற்ற திருத்தங்களையும் செய்வார். எந்தப் புராண அரங்கேற்றம் நடந்தாலும் செட்டியாரை அருகில் வைத்துக் கொண்டு நடத்துவது அவருக்கு வழக்கம். இவ்வாறு ஆசிரியரும் மாணாக்கரும் ஒருவர் பெருமையை மற்றொருவர் அறிந்து அன்பு பூண்டு விளங்கினர்கள்.

ஒரு சமயம் செட்டியார் திருவாவடுதுறைக்கு வந்திருந்தார். பிள்ளையவர்கள் பலவகையான மாணாக்கர்களுக்குப் பாடம் சொல்லிவந்த காலம் அது. அப்புலவர்பிரான் செட்டியாரைப் பார்த்து, "இந்தப் பிள்ளைகளின் தொந்தரவு பொறுக்க முடியவில்லை. நீ நிறையச் சம்பளம் வாங்கிக்கொண்டு காலேஜில் சுகமாக இருக்கிறாய். பிள்ளைகள் தொந்தரவு இராது'' என்று கூறினர். உடனே செட்டியார், "அப்படியல்ல; காலேஜ் மாணாக்கர்களுக்குப் பாடம் சொல்வதில் எவ்வளவோ கஷ்டங்கள் இருக்கின்றன. தாங்கள் வந்து அங்கே பாடம் சொல்வதானல் பிள்ளைகள் உங்களை அப்படியும் இப்படியும் ஆட்டி வைத்து விடுவார்கள். இங்கே சொல்வதுபோல் சுலபமானதன்று'' என்று சொன்னர். ஆசிரியருக்கு இவர் சொன்ன வார்த்தை திருப்தியாகத் தோற்றவில்லை. உடனிருந்த நாங்களும், 'செட்டியார் இப்படிச் சொல்வது நன்றாக இல்லையே' என்று எண்ணினேம்.

மற்றொருமுறை செட்டியார் திருவாவடுதுறைக்கு வந்திருந்தபோது திருவிளையாடற் புராணப் பாடம் நடந்துகொண்டிருந்தது. வலைவீசிய படலம் கேட்டுக்கொண்டிருந்தோம். செட்டியார் வந்து அங்கே அமர்ந்தார். இடையே ஒரு கடினமான பாடல் வந்தது. அப்போது எங்கள் ஆசிரியர் செட்டியாரைப் பார்த்து, "தியாகராசு, இதற்கு நீ பொருள் சொல்; நான் சற்று அப்பால் போய்வருகிறேன்'' என்று சொல்லிப் புறத்தே சென்றார். அவர் குறிப்பறிந்து நானும் உடன் சென்றேன்.

படித்துக்கொண்டிருந்த மாணாக்கர்கள் பல நூல்களைக் கற்றுத் தேர்ந்தவர்கள். பிள்ளையவர்களைத் தெய்வம்போல மதிப்

பவர்கள். செட்டியார் கர்வம் பிடித்தவரென்ற எண்ணம் சில ருக்கு இருந்து வந்தது. இவர் திருவிளையாடற் பாடலுக்கு உரைசொல்லத் தொடங்கும்போது, 'இவர் அகப்பட்டுக்கொண் டார். இந்தச் சந்தர்ப்பத்தில் இவரை விட்டுவிடாமல் மட்டந் தட்டவேண்டும்' என்று அவர்கள் நிச்சயித்துக்கொண்டனர். இவர் உரை சொல்லிவரும்போது ஒவ்வொரு விஷயத்திலும் ஒவ்வோர் ஆக்ஷேபணையை எழுப்பிக் கேள்விகேட்கத் தொடங் கினர். அவர்களுள் பழனிக்குமாரத் தம்பிரானும் சண்பகக் குற்றாலக்கவிராயரும் அதிகமாகக் கேள்விகள் கேட்டார்கள். செட்டியார் சிறிது கலக்கத்தை அடைந்தார்.

அப்போது அயலில் வந்து கவனித்துக்கொண்டிருந்த பிள்ளையவர்கள் மெல்ல என்னிடம், "மடத்தில் படிக்கிற பிள்ளை களுக்குப் பாடம் சொல்வது கஷ்டமென்பதைத் தியாகராசு இப்போதாவது தெரிந்துகொண்டிருப்பானா?" என்று சொல்லி விட்டு அங்கே வந்தார். மாணாக்கர்களைப் பார்த்து, "என்ன, தர்க்கம் செய்துகொண்டே இருக்கிறீர்களே! சும்மா இருங்கள். தியாகராசு நல்ல புத்திமான். அவனருமை எனக்குத் தெரியும்" என்று சொல்லிக் கையமர்த்தினர்.

மற்றொரு சமயம் கும்பகோணத்தில் செட்டியார் வீட்டிற்கு ஆசிரியர் சென்றிருந்தபோது இவர், "உங்களிடம் நான் இறுமாப்போடு பேசினதற்கு ஏற்ற தண்டனையை அடைந்து விட்டேன். காலேஜ் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லச் சிறிது சாதுரியமும், கதை சொல்லும் திறமையும், அதிகார தோரணையும் வேண்டும். ஆனால் மடத்திலே உள்ள மாணாக்கர்களுக்குப் பாடம் சொல்லுவதற்கோ பரந்த அறிவும், தெளிவான நூலாராய்ச்சி யும் வேண்டும். அதிகாரமும் படாடோபமும் அங்கே செல்லா. இதை நான் அன்று நன்றாகத் தெரிந்துகொண்டேன்" என்று சொன்னார்.

செட்டியார் உண்மையை உணர்ந்துகொண்டு அதை வெளிப்படையாகச் சொன்னதுபற்றி எனக்குமிக்க ஸந்தோஷம் உண்டாயிற்று.

'காலம் கெட்டுப்போச்சு'

ஒருநாள் ஏதோ ஒரு காரியமாகத் திருவாவடுதுறையி லிருந்து கும்பகோணத்திற்குப் போனேன். பிள்ளையவர்கள் இல்லாத காலம் அது. வழக்கம்போலத் தியாகராச செட்டி

யாரைப் பார்க்கும்பொருட்டுச் சென்றேன். இவர் அப்போது இடைகழியில் சயனித்தபடியே ஏதோ ஒரு புத்தகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார். அப்போது மணி மூன்று இருக்கும். இவர் என்னைக் கண்டவுடன், "எப்போது வந்தீர்கள்? சௌக்கியமா?" என்பனபோன்ற கேள்விகளைக் கேளாமல், திடீரென்று, "காலம் கெட்டுப்போச்சு" என்றார். எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. 'நம்மைப்பற்றித்தான் ஏதாவது சொல்லப்போகிறாரோ! நம்மை அறியாமல் ஏதேனும் குற்றம் செய்துவிட்டேமோ!' என்ற எண்ணம் எனக்கு வந்தது. "ஐயா அவர்கள் இறந்துபோனபிறகு எங்கே பார்த்தாலும் வித்துவான்கள் கிளம்பிவிட்டார்கள். தங்களுக்குச் சமானம் ஒருவரும் இல்லையென்றும் சொல்லிக்கொள்ளுகிறார்கள். புத்தகங்களைத் தப்புத் தப்பாக எழுதிவிடுகிறார்கள். நாலுபேர் பரிகசிப்பார்களே என்ற பயமில்லை" என்று இவர் சொல்லிக்கொண்டு வந்தார். நான் பின்னும் விஷயந்தெரியாத மயக்கத்திலே நின்றுகொண்டிருந்தேன்.

செட்டியார் என்னை உட்காரச்சொல்லித் தம் கையிலிருந்த புத்தகத்தை என்னிடம் கொடுத்து, "இதைப் பாருங்கள். இது யாப்பிலக்கணம் மாணுக்கர்களுக்குச் சுலபமாக விளங்க வேண்டுமென்று ஒருவன் எழுதியிருக்கிறான். முதலில் படித்துப் பாருங்கள். செய்யுளுக்கு அங்கம் எட்டு என்று இருக்கிறது. யாப்பருங்கலக்காரிகையில் எழுத்து முதல் பாவினம் வரையில் எட்டு விஷயங்கள் சொல்லப்படுகின்றன அல்லவா? அதைப் பார்த்து எட்டு என்று தெரிந்துகொண்டான். ஆனால் எட்டும் செய்யுளுக்கு அங்கமாகுமா என்று யோசிக்கவில்லை. அந்த எட்டில் பா ஒன்று ஆயிற்றே; செய்யுளுக்குச் செய்யுள் அங்கமாகுமோ? ஆரம்பத்திலேயே இப்படி இருக்கும்போது போகப் போக எப்படி இருக்கிறதோ! காலம் சுத்தமாகக் கெட்டுப் போச்சென்று தெரியவில்லையா?" என்று கூறினர்.

"இதைப்பற்றி நாம் ஏன் கவலைப்படவேண்டும்?" என்று நான் மெல்லச் சொன்னேன்.

"என்ன அப்படிச் சொல்கிறீர்கள்? யாப்பருங்கலக்காரிகை பிள்ளைகளுக்கு விளங்காதென்றுதானே இதை எழுதினன்? இது பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்கு உபயோகமாகவேண்டும், தனக்குப் பேரும் பணமும் வரவேண்டுமென்பதுதானே இதை எழுதியவன் ஞாபகம்? இப்படித் தப்பாக இருந்தால் இதை

நம்பிப் படிப்பவர்கள் எப்படி உருப்படுவார்கள்? அச்சிலே வந்து விட்டால் அதைக் கௌரவமாக நினைக்கும் சாதுக்கள் உலகத்தில் எவ்வளவு பேர் இருக்கிறார்கள்? நாளைக்கு யாராவது ஒருத்தன் வந்து, 'இதை உங்கள் பள்ளிக்கூடத்தில் உள்ள பிள்ளைகளை வாங்கிக்கொள்ளச் செய்ய வேண்டும்' என்று தொந்தரவு செய்வான். அவன் தலையில் கிழித்துப்போட்டு, 'போய்விட்டு வா' என்று சொல்லவேண்டுமென்று எனக்குத் தோன்றுகிறது'' என்றார்.

பரீக்ஷகர் வேலையில் வெறுப்பு

கும்பகோணத்தில் ஒரு ஹைஸ்கூலில் ஒரு தமிழ்ப் பண்டிதரை நியமிக்கவேண்டியிருந்தது. பலர் விண்ணப்பம் செய்துகொண்டார்கள். பள்ளிக்கூட நிர்வாக சபையார் விண்ணப்பம் செய்துகொண்டவர்களைப் பரீக்ஷை செய்வதற்காக மூவரை நியமித்தனர். தியாகராச செட்டியார், பி. ஏ., பட்டம் பெற்ற ஓர் ஆசிரியர், ஒரு ஸிவில் கோர்ட்டு வக்கீல் என்னும் மூவருமே அவர்கள். பின் இருவரும் செட்டியாரிடம் படித்த வர்கள். இந்த விஷயம் செட்டியாருக்குத் தெரிந்தபோது இவருக்குத் திருப்தி உண்டாகவில்லை; 'தமிழ்ப் பண்டிதருடைய தகுதியைப் பரிசோதிப்பதற்கு இவர்கள்பால் என்ன சக்தி இருக்கிறது?' என்று எண்ணினர். பள்ளிக்கூடச் சபையாரின் வற்புறுத்தலினால் பரீக்ஷகராக இருக்க உடன்பட்டார்.

பலர் விண்ணப்பம் அனுப்பியிருந்தனர்; செட்டியார் பரீக்ஷகராக இருக்கிறாரென்று கேள்வியுற்றதும் அஞ்சி அவர் களிற் பலர் வாராமலே நின்றுவிட்டனர். கடைசியில் மூவர் நேரே வந்து சேர்ந்தனர். பரீக்ஷை ஆரம்பமாயிற்று. செட்டியாரும் மற்றவர்களும் வந்தவர்களைக் கேள்விகள் கேட்டனர். மற்றவர்கள் தாங்களும் கேட்டதாகப் பேர் பண்ணினார்கள். வந்த மூவரில் இருவர் தகுதியில்லாதவரென்று விலக்கப்பட்டனர். மற்றொருவரும் தக்க விடை கூறவில்லை. பரீக்ஷகர்களுள் செட்டியாரைத் தவிர மற்ற இருவரும் அவரையே நியமித்துவிடலாமென்று சொன்னார்கள். ''பிழையாக விடை அளித்தவரை எப்படி நியமிப்பது? இப்படிச் செய்வதாக இருந்தால் பரீக்ஷையென்று ஒன்று ஏன் வைக்கவேண்டும்? திருவுளச் சீட்டுப் போட்டு ஒரு மனிதரைத் தெரிந்தெடுத்து நியமித்து விடலாமே!'' என்று செட்டியார் கூறினர்.

"நீங்கள் கேட்டவை கடினமான கேள்விகள். இவருக்கு இருக்கும் அறிவு ஒரு பள்ளிக்கூடத்தில் பாடம் சொல்வதற்குப் போதுமானது. கடினமாக இராமல் கொஞ்சம் கருணை காட்ட வேண்டும்'' என்று மற்ற இருவரும் சொன்னார்கள்.

"நன்றாயிருக்கிறது உங்கள் கருணை! பள்ளிக்கூடத்தில் தமிழ்ப்பாடம் சொல்வதைப்பற்றி உங்களுக்கு என்ன தெரியும்? நீங்கள் என்னிடம் தமிழ் வாசித்தவர்களல்லவா? உங்களுக்குத் தமிழில் எவ்வளவு பழக்கம் உண்டென்பது எனக்குத் தெரியாதா? இந்தச் சொற்ப அறிவை வைத்துக்கொண்டு தீர்மானம் செய்ய வந்துவிட்டீர்களே!'' என்று வெறுப்போடு செட்டியார் கண்டிக்கத் தொடங்கினார்.

முடிவில் அந்த மனிதரையே பண்டிதராக நியமித்து விட்டார்கள். அதிகப்படியான 'வோட்டு'ப் பலத்தால் அவர் நியமனம் பெற்றார். இதைத் கண்டு செட்டியார், 'என்ன பைத்தியக்கார உலகம் இது! படிப்பில்லாதவர்களெல்லாம் விதாயகர்த்தர்களாக வந்துவிடுகிறார்கள். நாலுபேர் சேர்ந்து கூச்சல் போட்டால் காரியம் ஜயித்துவிடுகிறது. படிப்புக்கு மதிப்பே இல்லை. சே! இனி இந்தமாதிரி பரீக்ஷகர் வேலையே நமக்கு வேண்டாம்' என்று தீர்மானம் செய்துகொண்டார்.

குருவும் சிஷ்யனும்

(முகப்புப் படம்)

இந்தியரீதியிலே அமைந்த ஓவியம் வேண்டுமானால் 'வங்காளத்தைக் கேள்; ஆந்திரநாட்டை அணுகு' என்று சொல்லும் நிலை மாறித் தமிழ்நாட்டவர்கள் அந்தக் கலையில் திறமைபெற முன் வந்திருக்கிறார்கள். அவர்களுள் முன்னணியில் நிற்பவர்களுள் ஒருவர் ஸ்ரீமான் ராஜம். சென்னை ஓவியக்கலாசாலையில் சாங்கோபாங்கமாகக் கலையைக் கற்றவர். ஓவியக் கலைஞனுக்கு வேண்டிய தகுதி வாய்ந்தவர். இவருடைய சிறந்த ஓவியங்களுள் ஒன்று முகப்புப்படமாக இந்த இதழில் வெளிவந்திருக்கிறது. பாரத நாட்டுக் குருவையும் பாரத பூமியிலே பிறந்த மாணாக்கனையும் சித்திரித்துக் காட்டும் இப்படத்தில் கலையுணர்ச்சி பரிபூர்ணமாக நிரம்பியிருக்கின்றது. இத்தகைய படங்கள் இனி அடிக்கடி 'கலைமகளி'ல் வெளிவருமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

கருணையின் வேகம்

கி. வா. ஜகந்நாதன்

1

"ஓரே உத்ஸாகத்திலே பாடிவிட்டேன். எனக்கே ஸந்தோஷம் தாங்கமுடியவில்லை. யாரிடமாவது படித்துக் காட்டாவிட்டால் எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும்போல் இருந்தது. இருப்புக்கொள்ளவில்லை. பாகவதத்தில் எவ்வளவோ கட்டங்கள் அழகாகப் பாடியிருக்கிறேன். இனியும் பல அருமையான சந்தர்ப்பங்கள் வருகின்றன. ஆனாலும் இந்தக் கஜேந்திர மோக்ஷத்தில் என் மனம் ஒன்றிப் போய்விட்டது. வாக்தேவியின் பிரஸாதம் தங்குதடையின்றிக் கிடைத்தது. இதோ படிக்கிறேன் கேளுங்கள்" என்று போத்தன்ன சுவடிக்கட்டை அவிழ்த்துத் தம் மைத்துனருக்குமுன் அமர்ந்தார்.

"என்ன, அப்படிப் பிரமாதமாகப் பாடிவிட்டாய்? வியாஸபகவான் மழைபோலப் பொழிந்து தள்ளியிருக்கிறார். அதை வைத்துக்கொண்டு வாக்கியத்துக்கு வாக்கியம், வார்த்தைக்கு வார்த்தை அப்படியே எடுத்து வைப்பதுதானா பிரமாதம்? தெலுங்கு பாஷை எப்படி இழுத்தாலும் வளைகிறது. அதுவும் ஸம்ஸ்கிருதத்தில் இருக்கிறதைத் தெலுங்கில் கொண்டு வருவது பெரிய காரியமோ?" என்று புன்னகை பூத்தபடியே கூறினார் ஸ்ரீநாதர்.

இருவரும் தெலுங்கில் பெயர்பெற்ற கவிஞர்கள். பாகவதத்தை இயற்றித் தெலுங்கு மொழியை வளம்படுத்தியவர் போத்தன்ன என்னும் புலவர் பெருமான். அவருடைய மனைவியின் சகோதரர் ஸ்ரீநாதர். கவிஞர்களாகிய இருவரும் மைத்துனக் கேண்மையினாலே ஒருவரை ஒருவர் ஏசிக்கொள்வதும் கிண்டல் பண்ணுவதும் உண்டு; அதனால் அவர்கள் நட்பும் பழக்கமும் பின்னும் ருசியுடையவையாயின.

"உங்கள் பரிஹாஸம் இருக்கட்டும். இதை உங்களுக்குச் சொல்லிக் காட்டிவிட்டுத்தான் மறுகாரியம் பார்ப்பதாக வந்திருக்கிறேன். என்னுடைய கவிதாரஸத்தை அறிந்து அனுபவிப்பதற்கு உங்களைவிடத் தகுதியானவர்கள் வேறு யார் இருக்கிறார்கள்?" என்றார் போத்தன்ன.

"ஸ்தோத்திரம் இருக்கட்டும். உன்னுடைய காவியத்தை ஆரம்பி, பார்க்கலாம்."

கவிஞர் ஆரம்பித்தார். கஜேந்திர மோக்ஷத்தை முதலிலிருந்து தொடங்கி வாசித்துவந்தார். அப்படி வாசிக்கும்போது அவருடைய கை அசைப்புக்களும் உடம்புக் குலுக்கும் நிறுத்தி நிறுத்திச் செய்யும் வியாக்

கியானமும் அவருடைய உத்ஸாகத்துக்கு அடையாளங்களாக இருந்தன. ஸ்ரீநாதர் அப்பொழுதப்பொழுது 'ஸபாஷ்' போட்டுக்கொண்டிருந்தார். சில இடங்களில், "அவ்வளவு ரஸமாக இல்லை" என்று கூசாமல் சொல்லி விடுவார். "இங்கே பிராசம் இன்னும் போட்டிருக்கலாம்" என்று குறிப்பிப் பார்.

கஜேந்திரன் மடுவில் இறங்கியதும், முதலை அவனைப் பற்றிக் கொண்டதும், யானையரசன், "ஆதிமூலமே!" என்று கதறியதும் விரிவாக வருணிக்கப்பெற்றிருந்தன. அடிக்கடி கவிஞர், "கவனித்தீர்களா? கவனித் தீர்களா?" என்று மைத்துனரைக் கேட்டுக்கொண்டே வந்தார். "இனிமேல் கொஞ்சம் நன்றாகக் கவனியுங்கள்" என்று கூறிவிட்டுப் போத்தன்ன வாசித்தார்.

"ஆதிமூலமே!" என்று அலறிய யானையின் முழக்கம் ஸ்ரீவைகுந்தத் தில் திருமகளோடு அளவளாவிக்கொண்டிருந்த திருமாலின் காதில் விழுகிறது. அவர் திடுக்கிட்டு விளையாட்டை நிறுத்தி உடனே யானையைக் காப்பாற்றப் புறப்பட்டுவிடுகிறார்.

இந்தக் கட்டத்தில் கவிஞர் தாம் எழுதிய கவிதையை வாசிக்கலானர்:

"திருமகளிடத்தும் சொல்லவில்லை; சங்கு சக்கரங்களிரண்டையும் திருக்கரங்களில் கொள்ளவில்லை; ஏவலர் யாரையும் அழைக்கவில்லை; பக்ஷி ராஜனையும் கூட்டிக்கொள்ளவில்லை. இருகாதடியிலும் தவழ்ந்து படிந்து கிடந்த மயிர்ச்சுருளையும் ஒதுக்கவில்லை. இன்பமயமான பேச்சினிடையே திருமகளின் மேலாக்குத் தன்மேற் கிடந்ததையும் கவனிக்கவில்லை. யானையின் உயிரைக் காப்பதில் ஒரே நோக்கமுடையவனாகி ஓடிவந்தான்."

பாட்டு இன்னும் முடியவில்லை; "அடே பாவி! என்ன காரியமடா பண்ணிவிட்டாய்?" என்று அடித்தொண்டையிலிருந்து எழுந்த தொனி யில் ஆவேசம் வந்தவரைப் போலக் கத்தினர் ஸ்ரீநாதர். எந்தச் செய்யுளைக் கேட்டால் ஸ்ரீநாதர் ஆனந்தத்தினால் குதித்துக் கூத்தாடுவாரென்று போத்தன்ன நினைத்தாரோ அந்தச் செய்யுளைக் கேட்டு அவர் கர்ஜித்த கர்ஜனை கவிஞரைக் கலங்கவைத்துவிட்டது.

"அடே, என்னடா பாட்டுப் பாடுகிறாய்? ஸம்பிரதாய விரோதமாகச் செய்திருக்கிறாயே! வியாஸ பகவான் இப்படியா சொல்லியிருக்கிறார்?"

"இல்லை; தீனசரண்யனான எம்பெருமான் பக்தர்களைக் காப்பாற்றும் விஷயத்தில் எவ்வளவு வேகமாக இருக்கிறானென்பதைக் காட்ட நான் கற்பனை செய்து இவ்வாறு அமைத்தேன்."

"என்ன கற்பனை இது! மகாபாவமல்லவா? ஸ்வாமி திருக்கரத்தில் சங்கு சக்கரம் இல்லாமல் வரலாமா? கருடாரூடராக வந்து சேவை சாதிப் பதுதானே சம்பிரதாயம்? லக்ஷ்மீதேவியின் முன்றானைத் தலைப்பைக்கூட எடுக்காமல் அப்படியே ஓடிவந்ததாகச் சொல்லியிருக்கிறாயே; அது பெரிய அபசாரமல்லவா? உன்னுடைய சிருங்கார ரசத்தைக் காட்ட இதுவா

சமயம்? அந்தமாதிரி நடக்குமா?" என்று சரமாரியாகக் கேள்வி கேட்கத் தொடங்கிவிட்டார் ஸ்ரீநாதர்.

கவிதையின் ரஸத்தை வினவிடையால் அனுபவித்துவிடமுடியுமா? போத்தன்ன மனமொன்றி அமைத்த காட்சியிலே ஸ்ரீநாதர் ஈடுபடவில்லை. அவர் எம்பெருமானின் திருக்கோலத்திலே உள்ள குறையைத்தான் கண்டார்.

"இதை உடனே மாற்றிவிடு; இல்லாவிட்டால் லோகாபவாதம் சம்பவிக்கும்."

"அப்படியே செய்கிறேன். ஆனாலும் இதை முழுவதும் ஒரு முறை கேட்டுவிடுங்கள்."

முழுவதும் படித்துக் காட்டிவிட்டுப் போத்தன்ன தம் வீட்டுக்குப் போனார். வரும்போது அவருக்கிருந்த உத்ஸாகமெல்லாம் மறைந்து விட்டது. முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு வந்தார். 'பகவானே, இவருக்கு உன் கருணைத் திறத்தைக் காட்டிலும் உன் படாடோபந்தானே பெரிதாகத் தோன்றுகிறது! இதை மாற்றிவிட வேண்டுமென்றல்லவா சொல்கிறார்? எனக்கு இதில்தான் ரஸம் இருக்கிறதாகப் படுகிறது. மாற்ற மனம் வரவில்லை. நான் மாற்றமாட்டேன். அபவாதம் வந்தாலும் வரட்டும். பகவானது கருணை என்னைக் காப்பாற்றும்' என்று சிந்தித்துக் கொண்டே அவர் இரவு முழுதும் தூக்கம் வராமல் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தார். அவர் பாகவதத் தேர் மேல் நகராமல் நின்றது.

2

அன்று சனிக்கிழமை. காலை எட்டு நாழிகையிருக்கும். ஸ்ரீநாதர் தம்முடைய வீட்டில் அப்யங்கன ஸ்நானம் செய்ய எண்ணித் தைலம் தேய்த்துக்கொண்டிருந்தார். கௌபீனதாரியாக மணையின்மேல் உட்கார்ந்து கொண்டு எண்ணெயைத் தேய்த்துக்கொண்டார். தலைக்குத் தேய்த்துப் பிறகு உடம்பெல்லாம் தேய்த்துக்கொண்டார். சிறிது நேரம் ஊறலாமென்று உட்கார்ந்திருந்தார்.

தடதடவென்று ஏதோ சத்தம் கேட்டது. போத்தன்ன வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு, "ஐயையோ! உங்கள் குழந்தை வாசற் கிணற்றில் விழுந்துவிட்டான்" என்று கத்திக்கொண்டு உள்ளே ஓடிவந்தார். "அட படுபாவி! எங்கேடா, எங்கேடா?" என்று கதறியபடியே ஸ்ரீநாதர் போத்தன்னவைத் தொடர, அவர் முன்னே ஓடினார். ஓடினவர் வீதியின் நடுவிலேயிருந்த ஒரு கிணற்றங்கருகிற் போய் நின்று உள்ளே சுட்டிக்காட்டினார். ஸ்ரீநாதர் பதைக்கப் பதைக்க வந்து, மார்பு படபடக்கக் கால்தடுமாற உடம்பெல்லாம் நடுங்க உள்ளே எட்டிப்பார்த்தார். "ஒன்றும் தெரியவில்லையேடா!" என்று புலம்பினார்.

போத்தன்னாவின் முகத்தில் திடீரென்று ஒரு மாறுதல் உண்டாயிற்று. அதில் ஓர் அமைதியும் புன்சிரிப்பும் தோற்றின; "கோபித்துக் கொள்ள வேண்டாம். கொஞ்சம் உங்களையே பார்த்துக்கொள்ளுங்கள்" என்றார்.

"அட பாவி! என்னடா விளையாடுகிறாய்? குழந்தை எங்கே?"

ஸ்ரீநாதர் கௌபீனதாரியாக உடம்பில் எண்ணெய் வழிய அதன் மேலே வேர்வை வழிய நடுவீதியில் நின்றுகொண்டிருந்தார். போத்தன்னா அவரை ஏற இறங்கப் பார்த்துச் சிரித்துவிட்டு, "உங்கள் பிள்ளை பத்திரமாக இருக்கிறான். வாருங்கள் வீட்டுக்கு. யாராவது கண்டால் சிரிக்கப்போகிறார்கள்!" என்று சொல்லியபடியே ஸ்ரீநாதரையும் அழைத்துக்

கொண்டு அவரது வீட்டுக்குப் போனார். ஒன்றும் விளங்காத கலக்கத்தோடு ஸ்ரீநாதர் பின் தொடர்ந்து தம் வீடு சென்றார்.

"என்னை க்ஷமிக்கவேண்டும். உங்கள் குழந்தை சௌக்கியமாக இருக்கிறான். பகவானது கருணை எப்படி இருக்குமென்பதை நீங்கள் உணர்ந்துகொள்வதற்காக இந்தப் பொய் சொன்னேன். நான் இந்த விஷயத்தைச் சொன்னவுடன் நீங்கள் நிஜமா பொய்யா என்றுகூடக் கேட்கவில்லை. கௌபீனதாரியாக இருக்கிறோமே என்று எண்ணவில்லை. வீதியில் இருப்பவர்கள் சிரிப்பார்களே என்று யோசிக்கவும் இல்லை. குழந்தையைக் காப்பாற்றவேண்டுமென்ற ஒரே எண்ணத்தோடு எல்லாவற்றையும் உதறிவிட்டு ஓடிவந்தீர்களே. உங்களுக்குள்ள வாத்ஸல்யத்திற்குப் பரம கருணாநிதியாகிய பகவானுடைய கருணை எந்தவிதத்தில் குறைந்துபோயிற்று? கஜேந்திரன் முதலைவாயில் அகப்பட்டானென்றவுடன் அப்பெருமானுக்கு இருந்த வேகத்தில் கருடவாகனத்தில் ஏறாமல் வந்தானென்பது தவறா? சங்கு சக்கரத்தைத் தரிக்கவில்லையென்றால் அபசாரமா? அவைகளெல்லாம் இல்லாமல் உடனே ஓடிவந்தானென்றால், தீனர்களை ரக்ஷிப்பதில் அவனுக்கு இருக்கும் தீவிரத்தைக் காட்டவில்லையா? நான் அப்படிச் சொல்லியிருப்பது தவறு என்றீர்களே. இப்பொழுது யோசித்துப் பாருங்கள். உங்கள் பிள்ளையைக் காப்பாற்றுவதற்காக விழுந்தடித்துக்கொண்டு ஓடினீர்களே. சாதாரணமான நிலையில் 'ஸ்ரீநாதர் வஸ்திரம் தரிக்காமல் குண்டலங்கள் அணியாமல் கௌபீனதாரியாக ஓடினார்' என்று சொன்னால் பொருத்தமாக இராதுதான். ஆனால் தம் குழந்தையைக் காப்பாற்றுவதற்காக அவர் ஓடினாரென்றால் அதுதானே இயற்கையாகப் படும்?......என்ன பேசவில்லை?"

எல்லாவற்றையும் அமைதியாகக் கேட்டுவந்தார் ஸ்ரீநாதர். அவர் மனக்கண்முன் கஜேந்திரனது பரிதாபமான காட்சி தோற்றியது. காதில் ஆதிமூலமே என்ற தொனி கேட்டது. பகவான் ஓட்டமும் நடையுமாகத் தன் மேலிருந்து திருமகளின் மேலாக்கு நுனி வேகத்திலே கொடி போலப் பறக்க, வரும் கோலம் தென்பட்டது. "போத்தன்னா, நீதான் கவி; உனக்கு வாஸ்தவத்திலே வாக்தேவியின் அருள் இருக்கிறது. நான் குறை கூறியது தப்பு. இப்போதுதான் அந்த வேகத்தை நான் உணரமுடிகிறது. வியாஸபகவான் இங்கே இருந்தால் உன்னை மிகவும் பாராட்டுவார். நீ சிரஞ்சீவியாக இருக்கவேண்டும்" என்று வாழ்த்திக்கொண்டே அந்தக் கவிஞரைத் தழுவப் போனார்.

"மறுபடியும் உங்களை மறந்துவிட்டீர்களே; உங்கள் உடம்பிலுள்ள எண்ணெயை என்மேலே பூசிவிடுவீர்கள்போல் இருக்கிறதே!" என்று நகர்ந்துகொண்டார் போத்தன்னா.

வணக்கம் !



மாமுகில் கண்ட மகிழ்ச்சியிலே மரம் வணங்கி வழிபடல் பார் !

போட்டோ:
ஸ்ரீ ஸி. ஜி. ஜகந்நாத தாஸ்

உபயம்:
சென்னை அமெச்சூர் போட்டோகிராபிக் ஸொஸைடி

'விக்கிரமாதித்தன் கதை'

ரா. ஸ்ரீ. தேசிகன், எம். ஏ.

இக்கட்டுரையை எழுதுகிறபொழுது, சுமார் பதினைந்து வருஷத்திற்கு முன் நடந்த ஒரு காட்சி என் கண் முன்னே நிற்கிறது: சாயங்காலம் ஆறுமணி இருக்கும்; இருண்டு விடவில்லை; மஞ்சள் வெயிலும் மாறவில்லை. மன்னார்குடியில் கடைத்தெருப் பக்கம் போக நேர்ந்தது. அங்கே இரண்டு பக்ஷணக்கடைக்காரர்கள் பத்திரிகைகளைக் கைகளில் வைத்துக்கொண்டிருந்தார்கள். ஒருவரை ஒருவர் நோக்கிச் சிரித்தபடியே தங்களை மறந்து சம்பாஷணையில் அவர்கள் ஈடுபட்டார்கள். தங்களுக்குச் சோறு போடுகிற வியாபாரத்தையும் அவர்கள் கவனிக்கவில்லை. ஐந்து நிமிஷ நேரம் அவர்கள் பக்ஷணக்கடையில் இல்லை. அவர்கள் மனம் வேறு ஓர் உலகத்திற்குப் போய்விட்டது. உலகத்தின் சந்தடிகள், இரைச்சல்கள், காட்சிகள், சிரிப்புக்கள், விளையாட்டுக்கள் இவைகளிலிருந்து விலகி, ஒரு தனி உலகத்தில் அவர்கள் திரிந்து புகலரும் ஆனந்தத்தைப் பருகி நின்றனர்.

இது மாதிரி நிலையை உணர்ந்துதான், தன்னை மறக்கும்படி செய்கிற எவரையும் நாம் கைகூப்பித் தொழவேண்டும் என்று ஜான் கூப்பர் பாவிஸ் (John Cowper Powys) என்பவர் தம் 'ஆனந்தத்தின் மர்மம்' (The Art of Happiness) என்ற புஸ்தகத்தில் எழுதினார்போலும்.

இப்படி அமைதியென்பது மருந்துக்கும் காணாத சூழலில் மெய்ம்மறந்து நிற்கின்ற தோற்றங்கள் அவ்வப்போது நம் கண்ணில் படுகின்றன. உதாரணமாக: ரிக்ஷாக்காரர்களின் நிலைதான் நமக்குத் தெரியும். சில நாட்களில் அவர்களுக்குக் கூலியே கிடைக்காது. குழந்தை குட்டிகளுக்கும் குறைவில்லை. பசி அவர்களை வாட்டும். குழந்தைகளின் வாடின ஆசைமுகங்கள் அவர்கள்முன் மிதந்து வரும். இந்நிலையிலும் ரிக்ஷாவுக்கடியில் உட்கார்ந்துகொண்டு தெம்மாங்கு, அல்லி அரசாணி மாலை, பவழக்கொடி மாலை முதலியவைகளை ஒருவன் வாசிக்க மற்றவர்கள் கேட்டுக் கவலைகளை மறப்பார்கள். சிந்தை முகத்தில் தேக்கிய மனைவி மக்களின் தோற்றங்கள், குழந்தைகளின் கண்ணீர்க் கறைபட்ட முகங்கள் எவையுமே அந்நேரத்தில் வரா. அவர்களுடைய மனம் எல்லாவற்றையும் கடந்து எங்கேயோ திரியும். இந்த அளவில் சில புஸ்தகங்கள் அவர்களுக்கு மனச் சாந்தியை அளிக்கின்றன. 'விக்கிரமாதித்தன் கதை'யும் ஜனங்களுக்கு ஏதோ ஒரு மகிழ்ச்சியைத் தந்திருக்கக் கூடும். ஜனசமுதாயத்தில் ஒரு தேவை இருந்திருக்கவேண்டும். இல்லாமற் போனால் 'விக்கிரமாதித்தன் கதை', 'அல்லி அரசாணி மாலை' முதலிய நூல்களுக்கு இடம் இருந்திருக்க முடியாது.

'விக்கிரமாதித்தன் கதை'யைப் படிக்கிறபொழுது நாம் நுகர்கிற ரசம் பெரும்பாலும் சிருங்காரமே. ஓர் அரசனுக்கு வீரவெற்றியைப் போலவே காதல் விஷயத்திலும் வெற்றி அவசியம் என்று ஆசிரியர் கருதியிருக்கவேண்டும்.

விக்கிரமாதித்தனின் பராக்கிரம வரலாறுகள், ஒரு காலத்தில் நம் நாடுமுழுவதும் பரவியிருக்கவேண்டும் என்பதில் சந்தேகமில்லை. அவ்வேந்தனைப் பற்றிப் பல கட்டுக்

கதைகள் எழுந்துவிட்டன. கூடுவிட்டுக் கூடு பாய்தல், காளியின் வரப் பிரசாதத்தினால் செத்தவர்களை உயிர் எழுப்புதல், அமாநுஷ்யமான கிருத்தியங்களைச் செய்தல் முதலிய விஷயங்களை ஆதாரமாக வைத்துக்கொண்டு தங்கள் கற்பனைத்திறியிலிருந்து கதைகளைப் பலவிதமாக நெய்துவிட்டார்கள்.

மஹாகாளியைப் பற்றிப் பிரஸ்தாபம் பண்ணுத இடமே இதில் இல்லை. அந்தக் காலத்தில் உஜ்ஜயினிப் பட்டணத்து மஹா காளிக்கு நரபலி நடந்திருக்க வேண்டும். அக்காலத்திலிருந்த காளியின் புகழ் ஒலி இன்றும் பாரத நாட்டில் கேட்கிறது.

"உஜ்ஜயினீ! நித்ய கல்யாணீ!
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி."

காளியைப் புகழ்ந்து பாடினுல் என்ன? நரபலி நடந்தால் என்ன? இந்தப் புஸ்தகத்தில் எங்கே பார்த்தாலும் காதல், காதல், காதல்; அல்லது சாதல், சாதல், சாதல்; சாதலோடு நிற்கிறதில்லை; எல்லாம் அநேகமாய் முடிவில் கல்யாண மங்கள கீதந்தான்; பாட்டுத்தான்; கூத்துத்தான்; சாதலோடு நின்ற ஒரு கதையை இங்கே குறிக்கிறேன். வைசியப் பெண் கதையை நோக்கினுல் இது நன்கு விளங்கும்:

> "ஒரு வணிகப்பெண் ஒரு பிராமணனைக் காதலித்தாள். சில நாட்கள் கழித்து அப்பெண்ணிற்கு வேறிடத்தில் கல்யாணம் ஆகிவிட்டது. அந்தப் பிராமணனை அடையாமல் அவள் மனோவியாதியால் இறந்தாள். இதைக் கேட்ட பிராமணனும் இறந்து விட்டான். மனைவி இறந்ததனுல் புருஷனும் இறந்துவிட்டான். இம் மூன்று பெயரில் யார் அதிகமென்று வேதாளம் கேட்க விக்கிரமாதித்தன் சொல்லுகிறன்."

"சிருங்கார ரசத்தில் கதைகள் முடிகிறதன் மர்மம் என்ன?" என்று ஒருவர் கேட்கலாம். இலக்கியம் வாழ்க்கையைக் காட்டுகிற கண்ணுடி என்பதைக்கொண்டு பார்த்தால், சமுதாயத்தில் காதலுக்கு அதிகமான இடம் இருந்திருக்கவேண்டுமென்று தோன்றுகிறது.

இலக்கியத்தில் சிருங்கார ரசம் பிரதிபலிப்பதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. சிருங்கார ரசத்திலே தோய்ந்திருந்த சமுதாயமாயிருந்தால் இலக்கியத்திலும் அது வரலாம்; அல்லது சிருங்கார ரசத்திற்குத் தளைகள் ஏற்பட்டாலும், அதை உடைத்துக்கொண்டு இலக்கியத்தில் பாய்ந்துவிடும். உணர்ச்சிகளை அழிக்கமுடியாது; அவைகளுக்கு வேறுவிதமான போக்கிடத்தைச் சிருஷ்டி செய்யலாம். சமூகத்தடையிலே மறுகிக்கொண்டிருந்த மனம் கட்டுத்தளையை விட்டு இஷ்டப்படி இலக்கிய உலகத்தில் திரியலாம். உணர்ச்சி வேகத்தைத் தங்கள் கற்பனைக்காட்சிகளில் தணித்துக் கொள்ளலாம். இயந்திர உலகத்தில் உணர்ச்சிக்குப் போக்கிடம் இல்லாமையால் உலகத்தில் பெரும் போர் நிகழ்ச்சிகள் உண்டாகின்றன என்று பெட்ராண்டு ரஸ்ஸல் சொல்லுகிறுர். இவ்வுண்மையைப்பற்றி வேறுபட்ட அபிப்பிராயங்கள் இருக்க முடியாது என்று உறுதியாகச் சொல்லலாம். ஆகவே மேற்கூறிய இரண்டு காரணங்களினுல் விக்கிரமாதித்தன் கதையில் சிருங்கார ரசம் வந்திருக்கலாம் என்று தோன்றுகிறது.

சிருங்கார ரசத்தைத் தவிர, 'ஸ்திரீகள் நல்லவர்களா? அல்லது புருஷர்கள் நல்லவர்களா?' என்ற சர்ச்சையையும் இதில் காண்கிறோம். மாதரைப் பழித்தலையே அங்கமாக உடைய பாடல்கள் பட்டினத்தடிகள் நூல்களிலும் தாயுமானவர் பாடல்களிலும் உள்ளன. இத்தகைய கேள்விகளும் உத்தரங்களுந்தான் விக்கிரமாதித்தன்

கதையிலும் எழுகின்றன. சில கதைகள் பைரன் (Byron) எழுதிய டான் ஜுவானில் (Don Juan) காணப்படுகிற சந்தர்ப்பங்களை ஞாபகப்படுத்துகின்றன. ஷேக்ஸ்பியர் (Shakespeare) எழுதிய காதல் முயற்சியினது சிதைவு (Love's Labour's Lost) என்பதன் சாயை இதில் அடிக்கின்றது. ஒரு கதையில் ரவிக்கை தான் பிறந்து வளர்ந்துவந்த கதையைச் சொல்லுகிறது. இதைப் படிக்கிறபொழுது ஸ்விப்ட் (Swift) எழுதின துடைப்பக்கட்டைத் தியானம் (Reflections upon a broomstick) நினைவுக்கு வருகிறது.

சிரிப்புக்கு விளைவிடமான சில கதைகளும் இதில் அடங்கியிருக்கின்றன. கால் திருடன், அரைத்திருடன், முக்கால் திருடன், முழுத்திருடன் முதலிய கதைகள் குழந்தைகளின் உள்ளத்தைக் கவரலாம். 'சுக தேகமாருக்கு' என்ற கதையை நோக்குங்கள். எதோ சதா படுக்கையில் படுத்துக்கொண்டு இன்பத்திலே காலங் கழிக்கிற ஜமீன்தார்களை மனத்திலே வைத்துக்கொண்டு எழுதினது போலப் படும்.

"கொண்டையில் முடித்திருக்கும் பூவில் வண்டு உட்காரவே ஒரு ஸ்திரீ மூர்ச்சை போட்டு விழுந்து விட்டாளாம். மற்றொரு ஸ்திரீக்கு நிலவின் ஒளி தாங்காமல் உடம்பில் கொப்புளங்கள் கண்டு விட்டனவாம். உலக்கைச் சத்தம் காதில் விழுவதனால் கை விரலெல்லாம் கன்றிப் போய்விட்டனவாம் ஒருத்திக்கு."

இந்த முறையில் சில கதைகள் செல்லுகின்றன. 'விக்கிரமாதித்தன் கதை'யின் வர்ணனைகளெல்லாம் பழைய சம்பிரதாய முறையில்தான் இருக்கின்றன. அலங்கார சாஸ்திரத்தில் கூறப்பட்டிருக்கிற உதாரணங்களெல்லாம் பேசாமடந்தையைப்பற்றிய வர்ணனையில் கண்டு விடலாம்.

"கேளுங்கள் மக்களே, அந்தப் பேசாமடந்தையின் கூந்தல் நிறமானது மேகத்தினையும், உகாந்த இருளையும், கரிய மணலையும், கொடிப் பாசிகளையும் வண்டுக் கூட்டங்களையும்" பழித்து விடுகிறது. மாவடு, குவளைப்புஷ்பம், தாமரை, இளவாழைத்தண்டு, யானைத்துதிக்கை, அனிச்ச மலர் எல்லாம் வந்து விடுகின்றன. புஸ்தகமோ மஞ்சள் படிந்திருக்கிறது. எழுத்தோ மங்கல். அயர்லாந்தில் அயர்லாந்து இலக்கியப் புது மலர்ச்சிக்கு முன் இப்படித்தான் இருந்தது என்று நோபெல் பரிசுபெற்ற டபிள்யூ. பி. யேட்ஸ் (W. B. Yeats) சொல்லுகிறார். வாக்கியங்களோ ஓய்வில்லாமல் சென்று கொண்டிருக்கின்றன. ஒரு விதமான நிறுத்துப் புள்ளிகளும் இல்லை.

"கேளும் போஜமகாராசனே எங்கள் வீராதிவீர விக்கிரமாதித்த மகாராசனும் பட்டியாகிய மந்திரியும் இச்சிம்மாதனத்திலிருந்து யாதொரு குறைவின்றிச் செங்கோல் நடத்தி இவர்கள் விரதப்படி முதலில் சிம்மாதனத்தில் நாடாறுமாதந் தவணையிலிருந்து இராஜரீகஞ் செய்யும் நாளையில் அந்த உச்சினி மாகாளி நகரத்தில்.........."

எல்லாவிதத்திலும் மட்டுக்கு மிஞ்சிய ஓர் அமிதத்தைத்தான் பார்க்கிறோம். மதீவல்லபன் மோகனாங்கியின் கதையை வாசித்துப் பாருங்கள். மோகனாங்கி தீயில் குதித்தபடியினால் மந்திரி குமாரன் இறந்தான். மந்திரி குமாரன் விழுந்து இறந்தபடியால் அவனைக் காதலித்த தாசியாகிய சுந்தரியும் மரித்தாள். இதைக் கண்ட நீதிநெறி மந்திரியும் தீயில் குதித்தான். இவைகளைக் கண்டு அரசனும் தீயில் குதிக்கிற சமயம் காளி பிரத்தியக்ஷமாய் அனைவருக்கும் உயிர்ப்பிச்சை கொடுத்துவிட்டாள். இந்த

அமிதம் எல்லாவித அம்சங்களிலும் ஏற்பட்டுவிடுகிறது. நம் நாட்டுப் புராண கதைகளிலும் இந்த அமிதத்தைப் பார்க்கலாம். உண்மையைக் கூற வந்த அரிச்சந்திரன் கதையைப் பார்க்கப்போனால் அங்குள்ள எல்லை கடந்த சத்திய பக்தியை நம்பமுடியவில்லை; பொய்போலப் படுகிறது. தெய்வங்கூடப் பிள்ளைக்கறி கேட்கிறது. தியாகம் வேண்டுந்தான்; தியாகமும் நன்னெறியில் சென்றால்தானே நம்பமுடியும்?

இத்தனை குறைபாடுகள் 'விக்கிரமாதித்தன் கதை'யில் இருந்த போதிலும், இதில் அடங்கிய சில கதைகளைப் படிக்கிறபொழுது கிரேக்கர் நாட்டில் தோன்றிய நாடகங்கள் நினைவுக்கு வருகின்றன. தன் தாய் இன்னாள் என்று தெரியாத ஒரு மகன் தன் தாயையே காமுற ஆரம்பித்துவிட்டான் என்று ஒரு கதை ஆரம்பிக்கிறபொழுது, நம் மனம் திடுக்கிடுகிறது. சோப்பாகிளிஸ் (Sophocles) எழுதின ஒடிபஸ் (Oedipus) நாடகத்தில் மகன் தாயை மணந்துகொண்டு விடுகிறான். அந்நிலை வரையில் இக்கதை போகவில்லை. பாவச்செயல் சம்பவிப்பதற்கு முன்னாலேயே தாய் தன் பிள்ளையை அறிந்துவிடுகிறாள்; கதை மங்களமாய் முடிந்துவிடுகிறது.

கிரேக்க தேசத்துக்கதையில் பழிக்கு மேல் பழி சென்று கொண்டிருக்கிறது. அகமம்னன் (Agamemnon) தன் மகள் இப்பிஜீனியாவைப் (Iphigenia) பலி கொடுக்கிறான். அதைக் கண்டு சகியாமல் அகமம்னன் மனைவி கிளிட்டம்நேஸ்ட்ரா (Clytemnestra) தன் கணவனைக் கொன்றுவிடுகிறாள். கிளிட்டம்நெஸ்ட்ராவை அவன் மகன் அரிஸ்டீஸ் (Oristes) கொன்றுவிடுகிறான். அரிஸ்டீஸைப் பூதங்கள் (Furies) இழுத்துச் சொல்லுகின்றன. கடைசியில் எல்லாம் நிர்மூலமாய்ப் போய் விடுகின்றன; சுடுகாட்டு நிலை வந்துவிடுகிறது.

இம்முறையில் கதையை நிறுத்துவதற்கு மனம் இடங்கொடுக்கிறதில்லை, நம்மவர்களுக்கு. அழிவோடு நிற்கிறதில்லை; அழிவிலிருந்து ஒரு நூதனமான சிருஷ்டி ஏற்பட வேண்டும். இந்தக் கொள்கையில் நம் சிந்தை வேரூன்றி நிற்கிறது.

மாபஸான் எழுதிய மாலுமிக் கதை ஒன்றிலும் இத்தகைய முறையற்ற காதல் வரலாறு ஒன்று வருகிறது.

எந்த விஷயமும் கலைக்குப் புறம்பன்று. அதைச் சரியானபடி நாகரிக முறையிலே, அளவோடு, மிதமாக உண்மைக்கு மாறுபாடு இராமல் சமைக்கிறோமா என்று தான் பார்க்கவேண்டும். அப்படிச் சமைத்தால் எல்லாம் பொலிவுபெற்றுக் காட்டும் என்பதில் சந்தேகமில்லை. என்ன துணிச்சலோடு, சங்கராசாரியார் கூடுவிட்டுப் பாய்ந்த கதையைச் சிருஷ்டித்திருக்கிறார்கள் பாருங்கள்! "சிற்றின்ப ஞானம் தெரியாமற் போனால், பூர்ணமான ஞானத்துக்குக் குறை வந்துவிடுமென்று எண்ணி, சங்கராசாரியார் வேறொரு சரீரத்தில் புகுந்து அநுபவித்தார்" என்று கதையை முடிக்கிறார்கள். இக்கதை, லாரன்ஸ் (D. H. Lawrence) எழுதிய இறந்துபோன மனிதன் (The man who, died) என்ற கதைக்குச் சளைக்கவில்லை என்று சொல்லலாம்.

'விக்கிரமாதித்தன் கதை'யில் அநேக சோகநாடகங்களுக்கு வேண்டிய கல்லும் சுண்ணாம்பும் இருக்கின்றன. அவைகளை வைத்துக்கொண்டு உண்மையான கலைஞன் தக்கவண்ணம் தன் சொந்தக் கற்பனையினால் மெருகு கொடுத்துப் பல கலைக் கூடங்கள் கட்டலாம்.

———

திருநீலகண்ட நாயனார் சரித்திரம்

ஸ்ரீ கோபாலகிருஷ்ண பாரதியார்

[மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் உதவியது]

(208-ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருநீலகண்ட நாயனார் வீட்டுள் வைத்திருந்த ஓடு இறைவன் மாயையாற் காணாமற் போகவே அவர் எங்கே தேடியும் அகப்படவில்லை. அதனால் மனம் கலங்கிச் சிவயோகியாரிடம் வந்து சொல்கிறார்:

14

[ராகம்: சங்கராபரணம்—தாளம்: ஆதி]

பல்லவி

ஐயாஉம தடைக்கலம் - வேணது
அளிப்பேனுன் மட்கலம் (ஐயா)

அநுபல்லவி

மெய்யாநீர் தந்த பாத்திரம் யான்வைத்த
இடத்தில் பார்த்தேன் ஓர் இடத்திலும் காணேன் (ஐயா)

சரணங்கள்

1. காப்பும் கதவுமிட்டுக் காத்திருந் தேன்ஸ்வாமி
களவு போனதினி உளவறி யேன்நான் (ஐயா)
2. கெட்டிப் பூட்டுப்பூட்டிக் கட்டிக் காத்திருந்தேன்
கெட்டுப் போனவகை மட்டும் நானறியேன் (ஐயா)
3. தெய்வமே கதியென்று நம்பின பேர்களைத்
தீங்குசெய் தால்நான் தாங்குவே னேழை (ஐயா)

(விருத்தம்)

மறையவ னாகி நின்ற மலைமகள் கேள்வன் றானும்
உறையுளிற் புக்கு நின்ற வொருபெருந் தொண்டர் கேட்ப
இறையிலிங் கெய்தப் புக்காய் தாழ்த்ததென் னென்ன வந்து
கறைமறை மிடற்றி னானைக் கைதொழு துரைக்க லுற்றார்.

இழையணி முந்நூன் மார்பி னெந்தைநீர் தந்து போன
விழைதரு மோடு வைத்த வேறிடந் தேடிக் காணேன்
பழையமற் றதனி னல்ல பாத்திரந் தருவன் கொண்டிப்
பிழையினைப் பொறுக்க வேண்டும் பெருமவென் றிறைஞ்சி நின்றார்.

(பெரிய புராணம்)

ஸ்வாமி சொல்கிறார்

15

[ராகம்: யதுகுல காம்போதி—தாளம்: ஆதி]

1. வார்த்தை குளுமையாய்ப் பேசாதே—உன்
வல்லமை யறிவேண்டா—என்
வயிறு பசிக்குதடா—என்
மனது சலிக்குதடா

2. வழக்குப் பேசத் தெரியாதவனோ—என்
மகிமை செல்லாதோ—உன்
பழக்கம் தெரிந்தவண்டா—வெகு
ஒழுக்கம் அறிந்தவண்டா.

3. வீட்டுக் குள்ளே நீ போகாதே—நான்
வெறிகொண்ட பேயனடா—இந்தக்
கோட்டுக்குள் ளே இருடா—இந்த
நாட்டினி லேதிருடா.

இவ்வாறு சிவயோகியார் சினந்து கூறும் வார்த்தைகளைக் கேட்டு மனம் மறுகிய நாயனர், "தேவரீர் தந்த ஓட்டைப்போல் வேறு ஓடு தருகிறேன். பெற்று க்ஷமித்தருளவேண்டும்" என்று வேண்டிக்கொள்கிறார்.

16

[ராகம்: கமாசு—தாளம்: ரூபகம்]

பல்லவி

திருவோடு போல் மறுவோடு தருகுவேன்
தியங்க வேண்டாம் (திரு)

அநுபல்லவி

கருவா கியமண் எடுத்து—அதை அரைத்து
[1]உண்டை செறித்துப் பண்டி பொருத்தித் தண்டு செலுத்திக்
கன்னம் குவித்து வண்ணம் பிடித்துத் (திரு)

* * * * *

(விருத்தம்)

சென்னியால் வணங்கிச் சொன்ன தொண்டரைச் செயிர்த்து நோக்கி
என்னிது மொழிந்த வாநீ யான்வைத்த மண்ஓே டன்றிப்
பொன்னினு லமைத்துத் தந்தா யாயினுங் கொள்ளேன் போற்ற
முன்னைநான் வைத்த வோடே கொண்டுவா வென்றான் முன்னோன்.

---

1. (பி - ம்.) உண்டை சேர்த்துப் பண்டி பெருத்து. இந்தக் கீர்த்தனம் முழுதும் பிரதியில் இல்லை.

கேடிலாப் பெரியோ யென்பால் வைத்தது கெடுத லாலே
நாடியுங் காணேன் வேறு நல்லதோ ரோடு சால
நீடுசெல் வதுதா னென்று தருகின்றே னெனவுங் கொள்ளா
தூடிநின் றுரைத்த தென்ற னுணர்வெலா மொழித்த தென்ன.

ஆவதெ னுன்பால் வைத்த வடைக்கலப் பொருளை வௌவிப்
பாவகம் பலவுஞ் செய்து பழிக்குநீ யொன்று நாணுய்
யாவருங் காண வுன்னை வளைந்துநான் கொண்டே யன்றிப்
போவதுஞ் செய்யே னென்றான் புண்ணியப் பொருளாய் நின்றான்.

வளத்தினன் மிக்க வோடு வௌவினே னல்லே னல்லை
உளத்தினுங் களவி லாமைக் கென்செய்கே னுரையு மென்னக்
களத்துநஞ் சொளித்து நின்றான் காதலுன் மகனைப் பற்றிக்
குளத்தினின் மூழ்கிப் போவென் றருளினன் கொடுமை யில்லான்.

ஐயர்நீ ரருளிச் செய்த வண்ணம்யான் செய்வ தற்குப்
பொய்யில்சீர்ப் புதல்வ னில்லை யென்செய்கேன் புகலு மென்ன
மையறு சிறப்பின் மிக்க மனையவ டன்னைப் பற்றி
மொய்யலர் வாவி புக்கு மூழ்குவா யெனமொ ழிந்தார்.

(பெரிய புராணம்)

ஓடு கிடைக்கவில்லையென்றும் வேறு ஓடு தருகிறேனென்றும் சொன்ன நாயனரைப் பார்த்துச் சிவயோகியார் கடுமையாகப் பேசத் தொடங்கினர்.

17

[ராகம் : [1]ஹரிகாம்போஜி—தாளம் : ரூபகம்]

பல்லவி

[2]ஈதென்ன நியாயமடா
இனமறி யாதவனே (ஈதென்ன)

சரணங்கள்

1. துள்ளித் திரியும் காளை—சுமை
சுமந்திடும் பெரும் சூளை—போடும்
குயவனு னது நாளை
கூட்டிடும் இந்த வேளை (ஈதென்ன)

2. சபைதன்னில் வந்தாயோ
சம்மதங் கொண்டாயோ
அழைத்திங்கே வந்தாயோ
அறைக்குள்ளே புகுந்தாயோ (ஈதென்ன)

சிவயோகியார் சொல்லும் வார்த்தைகளைக் கேட்கப் பொறுத நாயனருக்கும் யோகியாருக்கும் வாக்குவாதம் நிகழ்ந்தது.

Z11868

(பி-ம்.) 1. சாருகேசி. 2. இதென்ன.

18

[ராகம்: தோடி]

(நாயனார்)

1. நானோ ஏழைக் குலாலன்—தில்லை
நாதனை நம்பினவன்
மானங் குறைந்திடச் சொன்னாலிப் போதென்
மனது நோகுமையா.

(சிவயோகியார்)

2. மானமும் லெச்சையும் உண்டானால்—என்
மண்ணோ டெடுப்பாயோ
ஈனச் சாதியான படியா லுனக்கு
இந்தப் புத்தி யாச்சு.

(நாயனார்)

3. ஈனச் சாதியென் றடிக்கடி சொன்னால்
என்ன லாபம் கிடைக்கும்
பிராணன் போனாலும் போகட்டும் நானினிப்
பாத்திரத்திற் கென்செய்வேன்.

(சிவயோகியார்)

4. கெட்டால் பெரிய வெட்டரி வாளென்று
கேட்ட தில்லை யோடா
சட்டம் சட்டமிது நல்லது தெய்வ
சபைக்கு நீவாடா.

(நாயனார்)

5. ஓட்டிக் கிரட்டி தருகிறே னையா
ஒன்றும் செய்ய வேண்டாம்
கெட்டுப் போச்சுதுநா னென்ன செய்குவேன்
கீர்த்தி பண்ணு மையா.

(சிவயோகியார்)

6. அருந்தவம் புரியும் பெரியோ ருடைமைக்
காசைப் படலாமோ
தெரிந்தவன் றானேநீ இப்படிச் செய்தால்
தெய்வமும் இல்லையடா.

(தொடரும்)

அல்லியிலைத் தண்ணீர்



'தாமரையிலைத் தண்ணீர் போலே' என்ற பழமொழி சொன்னால்
'அல்லியிலைத் தண்ணீரும் அப்படித்தான்' என்ற புது மொழி சொல்லலாமே!

போட்டோ:
ஸ்ரீ ஆர். என். நாகராஜ ராவ்

உபயம்:
சென்னை அமெட்யூர் போட்டோகிராபிக் ஸொஸைடி

ஒரு சந்தர்ப்பத்தில்

சி. சு. செல்லப்பா

சாய்வு நாற்காலியில் முதுகு படியாமல் உட்கார்ந்து ஷண்முகம் நேர் எதிர் ஜன்னலுக்கு வெளியே விறைத்துப் பார்த்துக்கொண்டிருந்தான். அதன் முதுகுப் பிடியில் ஒரு கை வைத்து மற்றொரு கையால் புடைவைத்தலைப்பை வாய் நுனியில் பொத்தினபடி செளந்தரம் கண்ணீர் விட்டுக்கொண்டிருந்தாள்.

இருவரும் வாய்கொடுத்துப் பதில்வாங்கி வெகு நேரம் ஆகிவிட்டது. அந்தப் பொழுது எப்படிக் கழிந்துகொண்டிருந்தது என்று அவர்களுக்கே நினைவில்லை. செளந்தரம்மட்டும் நடுநடுவே கண்ணீரை அடக்கி மீண்டும் ஏதோ பேச விரும்பின வளைப்போல வாயை அசைக்கப் போவாள். சத்தம் ஒன்றும் கிளம்பாத வெறும் மௌன அசைவாகவே அது இருந்துவிடும். ஆனால் நெஞ்சுக்குள்ளே போட்ட வேதனைவித்து வெடிப்பதுபோலக் கண்ணீர் குப்பென்று துளித்துத் துளித்துக் கிளம்பும்.

"தொலைந்து போ தள்ளி!" என்ற கடைசி வார்த்தைகளோடு அவர்களுடைய சம் பாஷணையை ஷண்முகம் மடக்கி இருந்தான். அந்த மடக்கலை நெகிழ்த்துக்கொடுக்கச் செளந்தரத்துக்குத் துணிவு வரவில்லை. அவன் குணம் அவளுக்குத் தெரியும். எதற்காக இன்னும் நெருக்கிக்கொள்ளவேண்டும்? தனக்குள் நெளிந்து பொருமிக்கொண்டிருந் தாள் அவள். அதை அலக்ஷியமாக நினைத்துப் போகவும் அவளால் முடியவில்லை.

சாதாரணப்போக்கில் நித்தியப்படி வேலைமுறையில் ஒன்றாகப் போய்விடக் கூடிய அந்தக் காரியம் ஒரு சந்தர்ப்பத்தில் இவ்வளவு தப்பாகிவிடும் என்று யார் எதிர்பார்க்க முடியும்? யதார்த்தமாகச் செய்த காரியம் அது. ஏன்? இப்போதுகூட அது எப்படித் தப்பாகும் என்று எவ்வளவோ நினைத்துப் பார்த்தும் தெளிவாக வில்லை.

அவன் உதடுகளிலிருந்து சீறிவந்த அந்த வார்த்தைகள் அவளை அப்படியே கொன்றுவிட்டன. "ஐயோ! இதென்ன வார்த்தை! நானா..." என்று பதறிக் கேட் டவள் வாக்கியத்தை முடிக்கவில்லை.

"சீ, மிருகம்!" என்பதுதான் அவன் நாக்கிலிருந்து விசும்பி வெளிப்பட்டது.

அவளுடைய குரலில் உள்ள பரிதாபங்கூட அவன் கிளப்பின வார்த்தைகளின் தப்பை அவனுக்கு உணர்த்திக் காட்டமுடியவில்லை.

அப்போது வாயை மூடிக்கொண்டவள்தான். இன்னும் அவள் பொட்டில் விழுந்த அடிக்கு எப்படிப் பதில் சொல்வது? அவளுக்குத் தெரியவில்லை; அவளால் மறக்க முடியவில்லை; அவனாலுந்தான்.

அவனுக்குப் பின்புறம் மாட்டியிருந்த லக்ஷ்மி படத்தடியின் சிறு ஸ்டாண்டில் செருகியிருந்த ஊதுவர்த்திகளிலிருந்து படர்ந்த மெல்லிய புகை ரேகைகள் அவன் சுவாசத்தில் கலக்கும்போது அவனால் எப்படி மறக்க முடியும்? போதாததற்கு

அறையின் மற்றொரு மூலையில் கட்டியும் கட்டாததுமாகக் கிடந்த மல்லிகையின் மணமும் வேறு சேர்ந்தது.

சாதாரணமாக மனமயக்கம் கொடுக்கும் அவைகளின் போதை சக்தி அப்போது அவனிடம் வலியிழந்து மோதியது. சுவாசம் சுவாசமாகக் கலந்து சென்று ஒரு பிரயோசனமும் காணுமல் வெறுமனே திரும்பி வெளிக்காற்றிலே சிதறியது.

அந்த நிலையை ஏற்கும் சுமுகம் அவன் மனத்துக்கு அப்போது இல்லை. ஒரு நிலையிலிருந்து திடீரென முழுதும் மாறுபட்ட மற்றொன்றுக்கு மாறி அந்தப் புதிய நிலையோடு கலந்து பொருந்துவது எவ்வளவு கஷ்டமானது! முன் நிலையின் நிகழ்ச்சியத்தனையும் அவன் மனத்திலே ஊஊந்துகொண்டிருந்தது. அதிலே ஏற்பட்ட கோளாறு அந்தச் சிறு சம்பவம். பிளாட்பாரத்திலிருந்து வீடு திரும்பினவரையில் ஒரே நினைப்பு; அதே உள்ளக் கிளர்ச்சி.

* * *

பிளாட்பாரத்திலிருந்து ரெயில் மறைந்துவிட்டது. ஸ்டேஷனுக்கு வெளியே வந்துவிட்டான்.

அவனை நிறுத்தி வைப்பதற்குத் தன்னுல் ஆனமட்டும் முயன்று பார்த்தான்; பயனில்லை.

ரெயில் புறப்பட அந்தக் கடைசி ஊதல் கிளம்புவதற்கு முன்புகூட ஷண்முகம், ''தம்பி, பேசாமல் நீ இங்கேயே...'' என்று இழுத்தான்.

அதை முடிப்பதற்குள் தம்பி இடைமறித்து, ''அண்ணு, புறப்பட்டாயிற்று; இன்னும் அதைப்பற்றிப் பேசிப் பிரயோஜனம் என்ன? சரி, வண்டி புறப்பட்டுவிட்டது. நான் வரட்டுமா?'' என்ருன்.

''சரி, போய் உடனே கடிதம் போடு. மறந்துவிடாதே'' என்று சமாளித்துக் கொண்டு ஷண்முகம் பதில் சொன்னுன்.

வேகமாகப் புறப்பட்ட வண்டியின் ஜன்னலிலிருந்து கையைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தளர்த்திக்கொண்டே ஷண்முகம் நகர்ந்து பிளாட்பாரத்தில் நின்ருன். ஜன்னலும் தள்ளித் தள்ளிப்போய், அதில் இடுப்புக்குமேல் வெளியே எழும்பிநின்ற அந்த உருவத்தோடு ஷண்முகத்தின் பார்வைக்கு மங்கலாகிவிட்டது. கார்டுவண்டிக்குப் பின் தோன்றின சிவப்பு விளக்கும் போகும் ரெயிலின் கடைசிச் சின்னமாக ஷண்முகத்தின் கண்களில் பட்டுக் குறைந்துகொண்டிருந்தது.

அவன் சட்டென்று திரும்பி வெளியே பஸ் ஸ்டாண்டில் வந்துநின்ருன். பஸ் ஒன்று வந்து நின்றது. முன்னுல் மாட்டியிருந்த பலகையைப் பார்த்துக்கொண்டே சரேலென்று பஸ்ஸிற்குள் ஏறி உட்கார்ந்துவிட்டான். இரண்டு தடவைக்குப் பிறகு மூன்ரும் தடவையாகக் கிளம்பின கண்டக்டரின் சத்தம் பலமாகக் காதில் விழுந்தது. பஸ்ஸிலிருந்து வேகமாகக் கீழே இறங்கி முன் எட்டுக்கள் போட்டுப் புறப்பட்டுவிட்ட பஸ்ஸின் பலகையைக் கூர்மையாகப் பார்த்தான். உதட்டுக்கு உள்ளூற அவனுக்கே சிரிப்பு வந்தது. கண்டக்டர் கூவினது சரிதான்.

காத்திருந்து, தான் போகவேண்டிய பஸ் வந்ததும் ஞாபகம் குறையாமல் ஏறிக் கொண்டான். பஸ் புறப்பட்டது. ரெயிலும் எவ்வளவு தூரம் போயிருக்கும் என்று அநுமானித்துப் பார்த்துக்கொண்டான். கொஞ்ச நிமிஷங்களுக்குமுன் இருவருடைய

குரல்களும் ஒன்ேறாடு ஒன்று கலந்து சப்தித்துக்கொண்டிருந்தன. இப்போது? தூரம் அவர்களை நேர் எதிர்த்திசைகளில் கொண்டுபோய்க் கொண்டிருந்தது.

அவன் நினைப்புச் சுழன்றது. அரை வயிற்றுக்குத் தான் சம்பாதிப்பதில் ஆளுக்கொரு பிடி சாப்பிட்டாவது தம்பியை அங்கேயே இருக்கும்படி செய்யவேண்டுமென்றுதான் அவன் விரும்பினான். தான் படித்து, ஒரு வேலை சம்பாதிக்கிற வரைக்குமுள்ள இடைக்காலத்தில் தான் பொறுத்துக்கொள்ள நேர்ந்த வார்த்தைகள் தம்பிக்கு வேண்டாமே என்ற எண்ணம் அவனுக்கு.

ஆனால் தம்பி தன்னோடு இருந்த அந்தச் சிறிய காலத்திற்குள் இரு மனசுகளுக்கும் எவ்வளவு வித்தியாசம் என்று அவனுக்குத் தெரிந்துவிட்டது. ஒரு நாள் திடீரெனத் தம்பி, ''அண்ணா, ஊருக்குப் போகலாம் என்று இருக்கிறேன்'' என்று சொன்னபோது அவனுக்கு ஆச்சரியம் ஏற்படவில்லை. ''இன்னும் கொஞ்ச நாட்கள் இருந்துவிட்டுப் போ'' என்று ஒரு மாதம் நிறுத்திவைக்க முடிந்தது. அதற்குமேல் முடியவில்லை.

வாழ்க்கை அநுபவம் இன்னும் உடலில் ஏறப்பெறாத தம்பியின் குஷால் உள்ளத்துக்கு அந்த இடம் கொஞ்சமும் ஒட்டிக்கொள்ளாமல் இருப்பதை ஷண்முகம் உணர்ந்திருந்தான். உணர்ந்தும் என்ன? தக்கபடி அவனால் ஈடுகொடுக்க முடிந்தால்தானே!

* * *

பஸ்ஸிலிருந்து இறங்கித் தன் தெரு வீடுகளைத் தாண்டிப் போய்க்கொண்டிருந்தான். அவன் வீட்டுப்படி ஏறுவதற்கு இன்னும் ஏழெட்டு வாசல்கள் பாக்கி இருந்தன. ''அண்ணா!''—எங்கிருந்தோ ஓர் ஓசை ஓங்கி அவன் காதோடு நெருங்கிக் கூவினது. உதறிக்கொண்டு ஷண்முகம் தன் உணர்வைச் சுற்றித் திருப்பினான். அது தன் தம்பியின் அழைப்பல்ல. அதேமாதிரி குரல்; அழைத்த தோரணையும் அவனுடையது போன்றதே. தெருவிலே ஷண்முகத்துக்கு முன்னால் போய்க்கொண்டிருந்த ஓர் உருவத்தை அக்குரல் பின் திண்ணையிலிருந்து கூப்பிட்டது.

''சீ! நல்ல பிரமை! ஓர் இமைப்பில் என்ன பிரமிப்பு ஊட்டிவிட்டது! வைகுண்டம் இங்கே எப்படி இருப்பான்? எவ்வளவோ தூரம் போயிருப்பானே?'' என்று தனக்குள் சொல்லிக்கொண்டான் ஷண்முகம். பனிப்பாதுகாப்பாகத் தலையில் 'கிர்க்கி'க்கட்டுக் கட்டிக்கொண்டு தன் பெஞ்சியில் சாய்ந்து 'ஹிந்து'வை விரித்துப் பிடித்துக்கொண்டு பிரயாணம் செய்யும் வைகுண்டத்தின் சாயல் அவன் அகக்கண் முன் வந்து நின்றது.

பழகின முகங்களைப் பார்ப்பது அபூர்வமாகிவிட்டது. மனம் விட்டுப் பேசும் சம்பாஷணைகளுக்குச் சந்தர்ப்பம் இல்லாது, ஒரு தொலைதூர நகரின் ஒதுக்குப்புறத்திலே இளம் மனைவியுடன் தனிக் குடித்தனம் நடத்திவந்த அவனுக்கு வைகுண்டம் வந்தது புதையல் கிடைத்தது போல இருந்தது. அந்தச் சிறு அறையிலே நேருக்கு நேர் உட்கார்ந்து பொழுதுபோவது தெரியாமல் இருவரும் வம்பளந்துகொண்டிருப்பார்கள். கிராமத்தைப்பற்றிப் பேச்சு எடுத்துவிட்டால் தலைகால் புரியாத உத்ஸாகம். இதில் எல்லாம் மௌனமாகக் கேட்டுச் சௌந்தரம் பங்கெடுத்துக்கொள்வாள். தனியே இலையில் உட்கார்ந்து சாப்பிடாமல் நேரமானாலும் வைகுண்டத்தின்கூட உட்கார்ந்து சாப்பிட்டால்தான் அவனுக்குத் திருப்தி. வைகுண்டத்தோடு ஈடுபட்டிருக்கும் பேச்சு ஸ்வாரஸ்யத்தில் சௌந்தரம் சைகை, லேசான வாயசைப்பு இவற்றுடன் தன்னைக் கூப்பிடுவதுகூட அவன் கவனத்திற்கு வரவே வராது.

ஆனால் இன்று?

ஒட்டி இருந்த தூசிகளைப் போக்கும் முறையிலும், தன் வரவை அறிவிக்கும் ரீதியிலும் பாதங்களை ஒருதரம் படிகளில் தட்டிக்கொடுத்து ஷண்முகம் வாசல் ஏறித் தன் அறை நிலையையும் தாண்டிப் புகுந்தான். அப்பொழுதுதான் அந்த வாசனை அவன் சுவாசத்திலே வந்து கலந்தது. சரேலென்று தலை நிமிர்ந்து பார்த்தான்.

அவன் பார்வை விழவும், குந்தி உட்கார்ந்திருந்த சௌந்தரம் எழுந்து நிற்கவும் சரியாக இருந்தது. இடது கையிலே அடக்கி இருந்த மல்லிகைச் சரம் நெகிழ்ந்து சாண் உயரத்துக்குமேல் ஊசலாடியது. இடது கை விரல் நுனிகள் இன்னும் இரு

புஷ்பங்களைப் பிடிக்க வலதுகை விரல்கள் சுருக்கேற்றிக்கொண்டிருந்தன. அந்தப் பாவனையிலே தன் முகத்தை அவனுக்கு நேராகத் திருப்பினாள். சுவரிலே மாட்டியிருந்த சுவரொட்டியின் வெளிச்சம் அவளது முழுமுகத்தில் நிழலை விரட்டி நின்றது.

அந்த முகத்தைப் பார்த்து அப்படியே விறைத்து நின்றான் ஷண்முகம்.

வெகு அழகாகக் கூந்தலைச் சுருள நெற்றியில் படிய வாரி நடுமெத்திக்குக் கொஞ்சம் ஒதுங்கினதுபோல வகிடு எடுத்துப் பின்னிச் சுழற்றிப் பிச்சோடா போட்டிருந்தாள். கையில் வளைந்துவரும் மல்லிகைச் சரம் அந்த வளைவிலே போய்ப் படிந்துவிட்டால்

அந்த அழகு அம்சம் பூரணமாகி விடும். முகத்திற்கு அழகூட்டும் நவீன ஸாதனங்களோடு சிரத்தையும் கலந்ததால் ஓர் அலாதியான சோபை முகச் சதைகளிலே ஏறியிருந்தது. நெற்றி நடுவிலே எடுப்பாகக் கண்ணைப்பறித்த, அகன்ற ஊதாப்பொட்டிலே ஜிகினுப்பொடிகள் மின் வெட்டின. ஊசிக் கூர்மைக்குத் தீட்டியிருந்த மைகலந்த இமைக்கோடுகளுக்கு உட்புறத்திலே விழிகள் இமையசைப்புக்கு அசைப்பு அபிநயம் பிடித்தன. தாம்பூலரசம் படிந்த உதடுகளில் ஏறியிருந்த செவ்வொளியின் பிரதிபலிப்புக் கன்னங்களுக்குக்கூட ஏறியிருந்தது.

"அம்பி ஊருக்குப் போயாயிற்று?" என்று தகவல் அறிய வினவும் ஓர் ஆத்திரத்தோடு அவன் முகம் பார்த்து அவள் கேட்டாள்.

அந்தக் கேள்வியே அவன் செவியில் தாக்காததுபோன்ற பாவனைக் குறிதான் அப்போது அந்த முகத்திலே தோன்றியது.

பளிச்சிடும் வைரக் கம்மல்களுக்கு அடியிலே ஊசலாடும் டோலக்குகளிலே அவன் கண்கள் ஒரு கணம் பறிபோய் நின்றன. மறுகணம் தலைப்புப் பின்புறமாக விசிறிதொங்கும் புது மோஸ்தர்ப் புடைவைக்கட்டிலே பட்டுநின்றன. ஒரு வெறித்த பார்வைதான் அந்தக் கண்களில்!

சௌந்தரம் கீழே குனிந்து இன்னும் இரண்டு மல்லிகைகளைக் கைகளில் சரிப்படுத்திக்கொண்டே, "ஓஹோ, அம்பி ஊருக்குப் போனதிலே நான் கேட்டது காதிலே விழவில்லையா?" என்று கேட்டவள் சிரித்துக்கொண்டே நிமிர்ந்தாள்.

தன் தொனியை அவள் மாற்றிக்கொள்ளவேண்டியதாயிற்று. அவனது உறுத்தின பார்வை சுருக்கென்றது. ஆனாலும் பெண்களுக்கு உண்டான இயல்பில் தன்னைச் சமாளித்துக்கொண்டு, "ஏன், என்ன யோசனை பண்ணுகிறீர்கள்?" என்று விவரம் புரியாமல் கேட்டாள். அவள் பார்த்துக்கொண்டிருக்கும்போதே ஷண்முகம் முன்னிலும் கடுப்பாவது, அவன் கண்களின் உறுத்தல் வலுத்து நிலையாக நிற்பது, உதடுகள் அமிழ்த்திக் கீழ்ப்பாகம் இறுகுவது முதலிய மாறுதல்களைக் கண்டுவிட்டாள். அவள் மனம் பரபரப்படைந்தது. வாயசைக்காமல் தீவிர முகக்குறியுடன் விழிகளைக் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தாள். கைப்புஷ்பம் தொடுபடாமல் நின்றது.

ஷண்முகம் சட்டென்று திரும்பித் தோள்மீதிருந்த துண்டைச் சாய்வு நாற்காலியின் முதுகில் போட்டுக்கொண்டே அதில் உட்கார்ந்தான்.

"அம்பி ஊருக்குப் போயாகிவிட்டதா என்று கேட்டேனே; பதில் சொல்லக்கூடாதா?" என்று ஈனஸ்வரத்திலே அவன் முதுகுப்புறமிருந்து சௌந்தரத்தின் குரல் கேட்டது. அவ்வளவுதான். அதற்குமேல் தன் ஆத்திரத்தை அவனால் அடக்க முடியவில்லை. மௌனத்தைக் காப்பாற்றச் சக்தி இல்லை. "ஏன்? அவன் இங்கிருக்க உனக்குப் பிடிக்கவில்லையாக்கும்?" என்று சீறி விழுந்தான்.

அதைக் கேட்டதும் சௌந்தரம் வெலவெலத்துப் போனாள்: "என்ன! என்றைக்காவது நான் அப்படிச் சொன்னேனா?" என்று பதறிப் பேசினாள்.

ஷண்முகம் ஏளனமாக ஒரு சின்னச் சிரிப்புச் சிரித்து, "நீ சொல்லவேண்டுமோ? உன் கோரம் காட்டுகிறதே, போதாதா?" என்று சிடுத்துச் சொன்னான்.

"என் கோரம் காட்டுகிறதா? என்னது? எனக்குப் புரியவில்லையே! எதற்கு இப்படி என்னை ......?" சௌந்தரத்தின் குரல் தழுதழுத்து வந்தது.

"இல்லை, உன் அழகு காட்டுகிறது. இந்த அலங்காரத்துக்கு அவன் தொலையக் காத்திருந்தாயாக்கும்!" என்று அவன் சொல்லும்போதே சௌந்தரம், 'ஹா' என்று

கூவிவிட்டாள். தேகம் முழுதும் ஒரேதிரியாகச் சிலிர்த்துக்கொடுத்தது. அழுகை கொதித்து வந்தது. "ஐயோ! இதென்ன வார்த்தை! நானு......" என்று துடிதுடித் துக் கேட்டவள் வாக்கியத்தை முடிக்கவில்லை.

"சீ! மிருகம், போ தள்ளி!" என்றுதான் அவன் நாக்கு விசும்பியது. தன்னை அறியாமல் அவனைத் தொடப்போன கைகளைத் பின்னரித்துக் கொண்டாள். அப் போது நின்ற நிலைதான்; அசைவற்ற சித்திரமாக இன்னும் நின்றுகொண்டிருந்தாள்.

* * *

யௌவனமும் உத்ஸாகமும் கலந்து கொப்புளித்துக்கொண்டிருக்கும் வனப்பு உருவம் சௌந்தரம். கிராமத்தில் புருஷன் வீட்டிலே சமையலறையோடுமட்டும் உறவு கொண்டு புழுங்கிக்கொண்டிருந்த அவள் உள்ளத்துக்கு, நகர வாழ்க்கை சுதந்திரம் கலந்த ஒரு களிப்புணர்ச்சியைக் கொடுத்திருந்தது. மனத்தை விட்டுப் பிடித்துத் தன் ஆசைக்கு இணங்க இன்பவாழ்க்கை நடத்திவந்தாள். நகரமோஸ்தரிலே கண் வைத்துப் புதுப்புது விதமாக, தினுசு தினுசானபடி யெல்லாம் தன்னை அலங்கரித்துக் கொள்வாள். கர்நாடகமான கிராமத்து நடையுடை பாவனைக்கு நேர் எதிரிடையாக, அந்திப்பொழுது வரவும் தலைப்புக்குப் பின்னல் முதுகுப்புறம் விசிறி தொங்க, முன் புறம் புடைவைநுனி கட்டைவிரல்களிலே பட்டு விசிறும்படியாகத் தழையத் தழையக் கட்டிக் காதுகளிலே, சென்ற வருஷம் நிகழ்ந்த பொருட்காட்சியில் கணவன் வலிய வாங்கிக்கொடுத்த டோலக் அசைவுக்கு அசைவு பலவிதமாக ஆடி ஒளியேற்ற, பிச்சோடாவுக்கு மேலாகக் கனகாம்பரம் வளைவாகப் பின்தலையை அழகாக அணைந்து நிற்க, உத்ஸாகத்தோடு அவனது சிறுநடைக்குச் சமமாக எட்டுவைத்துக் கடற்கரைக் குப் போகும்போது, அவளுக்கு எத்தனை கர்வம்!

ஆனால் வைகுண்டம் நாளை ரெயிலில் வந்து தங்களோடு தங்கப்போகிறான் என்றதும், விட்டுப்பிடித்த மனத்திற்குக் கட்டுப்பாடு இயற்கையாகவே வந்துவிட்டது. ஓடவிட்டிருந்த ஆசையை இறுக்கிப் பிடித்துவிட்டாள். தன்னை இந்த மோஸ்தரில் தன் மைத்துனன் பார்த்துவிட்டால் எப்படி நினைத்துக்கொள்வானோ என்ற கூச்சம், வணக்கம் எல்லாம் சேரவே தன் ஜோடனையிலே சாதாரணமாகிவிட்டாள்.

அதைப்பற்றி ஷண்முகம் பரிகசித்துப் பேசினதற்கு, "உங்களுக்கு என்ன? ஊரில் போய் அவர் சொல்லிவிட்டால் அப்புறம் எனக்கு வெட்கமாக இருக்கும். பெரிய வர்கள் என்ன நினைத்துக்கொள்வார்கள்?" என்றாள்.

"நானே அவர்களிடம் சொன்னால்?" என்றான் ஷண்முகம்.

"நீங்கள் சொல்லமாட்டீர்கள்; தெரியும்" என்றாள் சௌந்தரம்.

அதன் பிறகு ஷண்முகத்திற்குச் சௌந்தரத்தின் ஜோடனையில் கவனம் செலுத்த அவகாசம் இருந்தால்தானே? ஆபீஸ்நேரம் போக மீதியெல்லாம் தம்பி யோடு குஷால் பேச்சுக்குத்தானே இடம்?

வழக்கமாக இளந் தம்பதிகள் கடற்கரைக்குப் போய்க்கொண்டிருப்பதும் நின்றுவிட்டது. நடுவே ஒருநாள் சௌந்தரம் ஆரம்பித்தாள்: "இன்று நானும் பீச்சுக்கு..."

"இல்லை. தம்பியும் நானும் காங்கிரஸ் மாளிகைக் கூட்டத்திற்குப் போகப் போகிறோம். ஆமாம், என்ன பீச்சு வேண்டியிருக்கிறது, குளிர்காற்றிலே?" என்று சொல்லிக்கொண்டே புறப்பட்டுவிட்டான் ஷண்முகம்.

"ஆமாம், நான் கேட்டால் இப்படித்தான்..." என்றபடியே சௌந்தரம் திரும்பி உள்ளே போய்விட்டாள்; "அங்கிருந்து வரும்போது தையல் இலை வாங்கி வாருங்கள்" என்றாள். குரல் சற்றுக் கடுகடுப்பாகவே தான் இருந்தது.

இந்த ரீதியில் ஒவ்வொரு சந்தர்ப்பமும் ஏற்பட்டுச் சௌந்தரத்தை மறுபடியும் கிராமச்சமையலறைப் பெண்ணாகவே செய்துவிட்டது. சந்தர்ப்பத்தோடு அவள் குணமும் சேரவே பூரணமாக ஆகிவிட்டது. "மைத்துனன் வந்ததுமுதல் சௌந்தரத்தின் நடமாட்டமே தெரியவில்லையே! என்ன மாறுதலடியம்மா!" என்றுகூடக் குடியிருப்பவர்கள் எல்லாம் அவளைப் பரிகசிப்பார்கள். "பெரியவர்களுக்குப் பயப்பட வேண்டித்தானே இருக்கிறது?" என்பாள் சௌந்தரம்.

"அது யதார்த்தமடி சௌந்தரம்", "அதுதான் குணம்" என்று அவள் நடத்தையை எல்லோரும் பாராட்டுவார்கள். அவை அவளுக்குப் பெருமை தரும்.

அந்தப் பெருமையிலும் ஆசையிலுந்தான், தன் மைத்துனன் ஊருக்குப் போக அபிப்பிராயப்பட்டதாகக் கணவன் சொன்னபோது, "இங்கேயே இருக்கச் சொல்லுங்களேன் அவரை. ஊருக்குப் போவானேன்?" என்று அவளாகவே சொன்னாள்.

ஆனால் வைகுண்டம் தீர்மானமாகப் புறப்பட்டுவிடவும், 'சரி, நாம் என்ன பண்ணுவது? சாதிக்கிறாரே' என்று இருந்துவிட்டாள்.

கணவனும் வைகுண்டமும் ஸ்டேஷனுக்குப் புறப்பட்டுப்போய்ச் சிறிது நேரம் ஆகியிருக்கும். மைத்துனன் பிரயாணத்துக்குச் செய்துகொண்டிருந்த ஏற்பாட்டு அவசரத்தில், தன் சாதாரண ஜோடனையைச் செய்துகொள்ளக்கூட அவளுக்கு அவகாசம் இல்லை. இருட்டுவதற்குள் முகம் பார்த்துக்கொண்டுவிட வேண்டும் என்று பின்னிக்கொள்ள உட்கார்ந்துகொண்டாள். கண்ணாடி பார்த்து வகிடு வாரிக்கொள்ளும்போது கைப்போக்குச் சரியாக விழவில்லை. இப்போது எடுத்துக்கொள்ளும் நேர்வகிடுக்குச் சற்றுத் தள்ளிப் பழைய கோணல் வகிடின் ஆரம்ப இடம் அப்போது கண்ணில் விழுந்ததுதான் தாமதம்: உடனே கூந்தலை நேராக வாரி வகிடைக் கலைத்தாள். பழைய கோணல் வகிடை எடுத்தாள். வெகு லாகவமாக, நேர்த்தியாக, அவள் இதுவரை அலக்ஷியமாக விட்டிருந்த அந்த வகிடு பாதைவிட்டது.

"மாமி, மல்லிகைப் புஷ்பம் வந்திருக்கு" என்று குடியிருக்கும் வீட்டுச் சிறுமி அப்போது கத்திக்கொண்டு வந்தாள். ஓர் இமையசைப்பு நேரம் சௌந்தரம் தயங்கினாள். உடனே அவசரக் குரலில், "போய்க் காலணாவுக்குக் கால்படி வாங்கிவா" என்று அந்தச் சிறுமியை விரட்டிவிட்டுத் தொங்கவிடத் திட்டம்போட்டிருந்த பின்னலைப் பிச்சோடாப் போட்டுக்கொள்ள மாற்றிவிட்டாள்.

பிச்சோடா போட்டுக்கொண்டாள். தன்னை அறியாத உத்ஸாகம் அவள் மனத்திலே குபீலென வளர்ந்தது. நன்றாக அலங்கரித்துக்கொள்ளவேண்டும் என்ற வெறிநினைப்பு க்ஷணத்திலே ஜனித்தது. பழைய ரிப்பன்களை உதறி எறிந்துவிட்டுப் புதியவற்றை முடித்துக்கொண்டாள். குழாயடியிற் சென்று சில காலமாக இல்லாத சிரத்தையோடு முகம் கழுவி 'மேக் அப்' செய்துகொண்டாள். மிளகு அளவில் இருந்த சாந்துப் பொட்டுக்குப் பதில் பவுன் அளவுக்கு வர்ணக் குங்குமப்பொட்டு இட்டாள். தன் முகம் க்ஷணத்துக்கு க்ஷணம் அழகாகிக்கொண்டு வருவதைக் கண்ணாடியில் பார்க்கப் பார்க்க அவள் உத்ஸாகம் அதிகமானது. தாவியோடிப் பெட்டியைத் திறந்து டோலக் அணிந்துகொண்டாள். அதோடு இரண்டு ஊதுவர்த்திகளும் வந்தன. மறுபடியும் கண்ணாடியில் பார்த்துக் காதுகளுக்கு அசைவு கொடுத்து டோலக்கு

களைச் சரிபார்த்துக்கொண்டாள். அவள் இன்பநினைவு விசாலமடைந்தது. உடுத்திருந்த சாதாரணப் புடைவைக்குப் பதில் பகட்டானதை எடுத்து அணிந்து கொண்டாள். சந்தேகத்துக்கு மறுபடியும் கண்ணாடியில் பார்த்துக்கொண்டாள். அவளுக்குத் திருப்தி தரும் ஒரு பூரணம் ஏற்பட்டுவிட்டது. புஷ்பம் தொடுக்க உட்கார்ந்தாள். பரபரப்பாக மல்லிகைத்தொடர் நீண்டுகொண்டு வந்தது.

* * *

அந்த நிலையிலேதான் ஷண்முகத்தின் கண்கள் அவளைப் படம் பிடித்தன.

ஆனால் அவன் மனத்திலே எதிர்த்து விழுந்த படம் வேறுவிதமாக இருந்தது.

அடுத்து, அவன் வாயிலிருந்து கிளம்பின முறிவு வார்த்தை அவள் இன்பநிலைப் பொறியைத் தட்டி அவித்துவிட்டது.

இருவரும் வாய்கொடுத்துப் பதில் வாங்கி வெகுநேரம் ஆகிவிட்டது. அந்தப் பொழுது எப்படிப் போனதென்ற நினைவே இருவருக்கும் இல்லை.

'இன்பப்பொறி அவிந்துபோனது போகட்டும். வேதனைக் கனிவாவது இல்லாமல் இருந்தால் போதுமே' என்ற ஏக்கம் சௌந்தரத்தின் கண்களில் இருந்தது.

'வேதனை நினைவுக்குத் தூபம் போட்டுவிட்ட சந்தர்ப்பத்தை நிவர்த்திக்க வேண்டுமே' என்ற அங்கலாய்ப்பு ஷண்முகத்தின் மனத்தில்.

கணவன் தன்னைக் குத்திச் சொன்னதிலே உண்மை இருக்குமா என்று சௌந்தரம் ஆராய இடங் கொடுத்தாள். 'இல்லை' என்றது முதல் தீர்ப்பு. உடனே, 'அப்படியானால் என் இத்தனை நாளும் இல்லாதபடி இன்று சந்தர்ப்பமாறுதலை உபயோகித்துக்கொண்டேன்? மனத்திலே கல்மஷம்...' என்று நினைவு தொடர்ந்த போது தேகம் குலுங்கினது. அடுத்து, 'ஆமாம், என் மனத்தில் கல்மஷம் இல்லை. ஆனால் நான் செய்திருக்கக்கூடாது, கூடாது' என்று முடிவு செய்துகொண்டாள்.

சௌந்தரத்தின் தோற்றத்தால் தனக்கு உண்டான நினைப்பின் தன்மையை அலச ஷண்முகத்தின் மனம் ஆழ்ந்தது. 'ஆமாம்' என்றது முதல் தீர்ப்பு. உடனே, 'ஆனால் இதுவரை அவள் காட்டாத, ஆமாம், நான் கண்டிராத இந்த மனப்பான்மை இன்று மட்டும் திடீரென எப்படி ஏற்பட்டது?' என்று தொடர்ந்தபோது அன்று, 'அவரை இங்கேயே இருக்கச் சொல்லுங்களேன். ஊருக்குப் போவானேன்?' என்று அவள் பேசினது நினைவில் ஏறியது. மனம் சங்கடப்பட்டது. சிறிது நேரம் தொடர்ந்து, 'சீ சீ! அவள்தான் ஏதோ செய்துவிட்டாள், என்னவோ நினைப்பில். இதைப்போய்ப் பிரமாதப் படுத்தினேனே, முட்டாள்!' என்று நினைத்தான். இருவர் நினைவுகளும் இந்த நிலையிலே வந்துநின்றன. ஊதுவர்த்தியின் கடைசிப் புகைச் சுழலும் தன் வாசனையைக் காற்றிலே கொட்டிக்கொண்டு ஜன்னலுக்கு வெளியே போய்விட்டது.

சௌந்தரம் ஒருவாறு திடப்படுத்திக்கொண்டு வாயசைத்து ஏதோ கேட்கப் போனாள். ஆண்குரல் முந்திக்கொண்டுவிட்டது.

"ஹூம். பாலைக் கொண்டுவா" என்றான் ஷண்முகம் முகம் திரும்பாமலே; தொனி நெகிழ்ந்து வந்தது. முந்தின இறுக்கம் அதில் இல்லை.

"இதோ" என்று சௌந்தரம் பின்னாலிருந்த ஸ்டாண்டிலிருந்து எடுத்து டம்ளரைச் சரேலென நீட்டினாள். அவள் சுவாசம் அப்போது ஒருதரம் ஓர் இரைச்சலோடு எழுந்து சாவதானம் அடைந்தது.

நோபெல் பரிசு

பே. நா. அப்புஸ்வாமி ஐயர், பி.ஏ., பி.எல்.

"இன்றைக்கு என் பேச்சு எப்படி இருந்தது?", "நேற்று நான் ராகம் பாடினது எப்படி?", "அன்று நான் பந்து ஆடினது எப்படி?" என்றெல்லாம் பிரசங்கிகளும், பாடகர்களும், பந்தாடுபவர்களும் ஆவலோடு கேட்கிறார்கள். "பேஷ்! வெகு நன்றாயிருந்தது" என்று சொல்லும் பதிலானது அவர்கள் காதில் தேவாமிர்தம்போல் படுகிறது. அப்படிப் புகழ்பவன் அறிவாளியாயிருக்கவேண்டும் என்பதில்லை; ராகத்தின் சுவை தெரிந்தவனாயிருக்கவேண்டும் என்பதில்லை. மக்களுடைய மனமானது பிறருடைய நன்மதிப்பை அவ்வளவு நாடுகிறது; சாமானியன் ஒருவனுடைய வெறும் பேச்சுக்கூட மனத்துக்கு அத்தனை ஊக்கத்தையும், உற்சாகத்தையும் அளிக்கிறது.

சாமானியர்களுடைய வெறும் பேச்சே இத்தனை பாராட்டப்படுமானால், சிறந்த அறிவாளிகள் பலர் ஒன்றாகக் கூடி, "உலகம் அனைத்திலும் ஓர் ஆண்டு முழுவதிலும் செய்த செயல்கள் யாவற்றிலும் இன்னார் செய்த செயல்தான் தலை சிறந்தது" என்று ஏகோபித்து முடிவு செய்து, நற்சாக்ஷிப் பத்திரம் ஒன்றையும், பொற் பதக்கம் ஒன்றையும், சுமார் லக்ஷ ரூபாய் பெறுமான பொற்குவை ஒன்றையும் பரிசாக அளித்தால் எவனுடைய மனந்தான் குளிர்வடையாது? எவன்தான் ஊக்கமும் உற்சாகமும் பெற மாட்டான்?

இவ்வாறு ஆண்டுதோறும் அளிக்கப்பட்டு, உலகத்தார் அனைவராலும் 'எல்லாப் பரிசுகளிலும் தலை சிறந்தது' என்று கொண்டாடப்படும் பரிசு நோபெல் பரிசு எனப்படுவது. இது ஸ்வீடன் நாட்டினரான ஆல்பிரட் பெர்ன்ஹார்ட் நோபெல் என்பவரால் ஏற்படுத்தப்பட்டது.

இவருடைய பாட்டனார் ராணுவத்தில் ரணவைத்தியர். இவருடைய தகப்பனார் எம்மானுவெல் விஞ்ஞான ஆசிரியர். இவர் வெடி மருந்துகளையும் கடலினுள்ளே வெடிக்கும் கடற்கண்ணிகளையும் இயற்றியும் ஆராய்ந்தும் வந்தார். உயிரைக் கொள்ளைகொள்ளும் இந்தத் தொழிலில் ஈடுபட்ட எம்மானுவெல் உயிருக்கு உதவிசெய்யும் காரியத்திலும் ஈடுபட்டு ரண வைத்திய ஆயுதங்களையும், நோயாளிக்கு உதவும் ரப்பர்த் தலையணைகளையும் இயற்றிவந்தார்.

வெடிமருந்தைச் செய்வதே அபாயகரமானது. அதோடு அதையொட்டிய ஆராய்ச்சியும் சேர்ந்துவிட்டால் கேட்பானேன்? எம்மானுவெலுடைய தொழிற்சாலையிலே ஒருமுறை பெரிய வெடி விபத்து நேர்ந்தது. தொழிற்சாலை தூள் தூளாகிவிட்டது. அக்கம்பக்கத்திலுள்ள வீடுக

ளுக்கும் பலத்த சேதம். அதனால் ஊராருடைய கோபத்துக்கு உள்ளான எம்மானுவெல் அயல்நாடு செல்லவேண்டியதாயிற்று.

எம்மானுவெல் ருஷியாவுக்குச் சென்று அங்கே கிட்டத்தட்ட இருபது வருஷ காலம் தம்முடைய தொழிலை நடத்திவந்து பிறகு தம் ஊருக்குத் திரும்பினார். ருஷியாவிலே தங்கிய அவர் மகன் லுட்விக் என்பவன்தான் பாக்கு என்னும் இடத்திலுள்ள மண்ணெண்ணெய்ச் சுரங்கங்களைக் கண்டு பிடித்தவன்.

எம்மானுவெல் தம் சொந்த நாட்டை அடைந்த பிறகும், முன்போல் தம்முடைய தொழிலையே நடத்திவந்தார். மறுபடியும் ஒரு பெரிய வெடி விபத்து உண்டாயிற்று. அதில் எம்மானுவெலுடைய மகன் ஒருவன் இறந்து போனான். அதிர்ச்சியாலும், பொருள் நஷ்டத்தாலும், புத்திர சோகத்தாலும் மனமுடைந்த எம்மானுவெலும் அவருடைய மனைவியும் அப்படியே படுத்தபடுக்கையாய்ப் போய்விட்டார்கள். அதன் பிறகு அவர்களுடைய மகனான ஆல்பிரட் பெர்ன்ஹார்ட் நோபெல் அந்தத் தொழிலை மேற் கொண்டு நடத்திவந்தார். இவர்தாம் நோபெல் பரிசை ஏற்படுத்தியவர்.

ஆல்பிரட் பெர்ன்ஹார்ட் நோபெல் 1833-ஆம் வருஷத்திலே ஸ்டாக் ஹோம் நகரத்திலே பிறந்தார். குழந்தைப் பருவம் முதற்கொண்டே அவர் பலவீனமாக இருந்தார். ஆயுள் முழுவதும் அடிக்கடி தலைநோவினால் வருந்துவார்.

சிறுவயது முதலே இவருக்கு இரசாயனம், பௌதிகம், எந்திரம் முதலிய விஞ்ஞான சாஸ்திரங்களில் மிக்க அவா இருந்தது. இவர் அமெரிக்காவுக்குச் சென்று அங்கே மிகவும் பிரக்கியாதி பெற்றிருந்த எந்திர சாஸ்திர நிபுணராகிய எரிக்ஸன் என்பவரோடு தங்கி, அவரிடம் வேலை கற்றுக்கொண்டார். அப்போது எரிக்ஸன் பல தடவைகளில் சோதனைகளை நடத்தப் போதிய பணம் இல்லாமல் கஷ்டப்படுவதைக் கண்டு, தாம் பணக் காரரானால் விஞ்ஞானிகளுக்கு உதவும்படியாகப் பெரிய நிதி ஒன்றை அளிக்கவேண்டும் என்று தீர்மானம் செய்துகொண்டார். பிற்காலத்தில் இதை நிறைவேற்றுவதற்காகச் செய்த ஏற்பாடுதான் நோபெல் பரிசு.

* * * *

நாற்பது ஐம்பது வருஷங்களுக்குமுன் 'நைட்ரோக்ளிஸெரீன்' என்பதுதான் மிகச் சிறந்த வெடிமருந்து. ஆனால் எதிர்பாராத வேளைகளில் வெடித்துப் பெருத்த உயிர்ச்சேதமும் பொருள் நஷ்டமும் உண்டாக்கி வந்தது. வெடிக்கும் சக்தியில் மிகச் சிறந்ததாயும், பயமின்றிக் கையாளக் கூடியதாயும் உள்ள வெடிமருந்தைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று நோபெல் மிகவும் தீவிரமாய் முயன்றுவந்தார்.

இவ்வாறு முயன்றுவருகையில் தற்செயலாக நேர்ந்த சம்பவம் ஒன்று இவருக்கு உதவி செய்தது. பீப்பாய் ஒன்றிலிருந்து இலேசாக ஒழுகிய நைட்ரோக்ளிஸெரீன், பீப்பாயைச் சுற்றி அணைத்துக் கொட்டியிருந்த மண

லோடு கலந்து கட்டியாக இருந்தது. இதைச் சோதித்தபோது தாம் நாடிய குணங்கள் இதற்கு இருப்பதை நோபெல் தெரிந்துகொண்டார். பிறகு முக்கால் பங்கு நைட்ரோக்ளிஸெரீனையும் கால் பங்கு ஒருவகை மண்ணையும் கலந்து சிறந்த வெடிமருந்தை இயற்றினர். இதுதான் இக் காலத்தில் டைனமைட் என்று வழங்கும் வெடிமருந்து.

பீரங்கி, துப்பாக்கி, கடற்கண்ணி முதலியவை மூலமாக இது செய்துள்ள கெடுதியும் கணக்கற்றது. எனினும், இதனுல் உலகத்துக்கு விளைந்த நன்மைகளும் கணக்கில. நமது நாகரிகமே இதனுல் புதிய கிளர்ச்சியை அடைந்ததென்று சொல்லலாம். தூரதேசங்களைப் பிணைக்கும் ரெயில் பாதைகளைப் போடுவதற்கும், வழியே குறுக்கிடும் மலைகளைத் தகர்த்தெறிவதற்கும், பூமியைக் குடைந்து அதன் குடருக்குள்ளே ஒளித்துப் பயனற்றுக் கிடக்கும் செல்வங்களைக் கொண்டுவருவதற்கும், கடல்களை இரு கூறுக்கும் நிலத்தைப் பெயர்த்தெறிந்து சமுத்திரங்களை ஒன்ருக இணைப்பதற்கும் இது உதவுகிறது. கிணறு வெட்டவும், வாய்க்கால் வெட்டவும், மரம் வைக்கக் குழி தோண்டவும் உதவுகிறது. நதிகளைத் தடுத்து அணைகளைக் கட்டிப் பாலைவனத்தைச் செழிக்கச் செய்வதற்கும், கடலில் துறைமுகங்களைக் கட்டி வர்த்தகத்தை வளர்ப்பதற்கும், பெரிய பாலங்களைக் கட்டி நாட்டை ஒன்ருக இணைப்பதற்கும் வேண்டிய பெரும் பாறைகளை இது பெயர்த்துத் தருகிறது.

ராக்ஷஸ சக்திவாய்ந்த இந்த மருந்துப் பொடியினின்று நோபெல் லக்ஷம் லக்ஷமாகப் பணம் சம்பாதித்தார். ஆயினும் இவர் சந்தோஷமான சுக வாழ்வு வாழவில்லை. தாம் வாலிபத்தில் காதலித்த பெண் இறந்து விட்டபடியால் இவர் மணம் செய்துகொள்ளாது நோயுற்ற உடலோடு, தன்னந்தனியாகவே வாழ்ந்துவந்தார். தீராத் தலைநோவோடு வருந்திய நிலையிலுங்கூட இவர் துர்நாற்றம் வீசும் சோதனைச்சாலையிலே வேலை செய்வார்.

இவரை அழகானவரென்று சொல்லமுடியாது. குள்ள வடிவம் உடையவர். இவருக்குப் பல பாஷைகள் தெரியும். ரஸமாய்ப் பேசுவார்; நன்ருய்க் கதை சொல்லுவார். சற்றே அவநம்பிக்கையுள்ள சுபாவம். 1896-ஆம் வருஷம் டிசம்பர் மாதம் 10-ஆம் தேதியன்று தம்முடைய பாரிஸ் நகரத்துத் தொழிற்சாலையில் திடீரென்று இறந்துபோனர். சுமார் இருபது லக்ஷம் பவுன் மதிப்புள்ள தம்முடைய சொத்து முழுவதையும் தர்மத்துக்கு எழுதி வைத்தார்.

தம்முடைய சொத்திலிருந்து கிடைக்கும் வருமானத்தை வருஷந் தோறும் ஐந்து பரிசுகளாக வழங்கவேண்டுமென்று இவருடைய மரண சாஸனத்தில் கண்டிருந்தது. இதன்படி, பரிசளிக்கப்படும் வருஷத்துக்கு முந்திய வருஷத்திலே பௌதிகம், இரசாயனம், வைத்தியம், இலக்கியம், சமாதானம் என்னும் ஐந்து துறைகளுள் ஒவ்வொன்றிலும் மிகச் சிறந்த செயலைச் செய்த மேதாவியைத் தேர்ந்தெடுத்து, அவருக்குப் பரிசும், பொற்

பதக்கமும், நற்சாக்ஷிப் பத்திரமும் அளித்துவருகிறார்கள். பரிசின் மதிப்பு இப்போது சுமார் லக்ஷம் ரூபாயாக இருக்கிறது. இதைத்தான் நோபெல் பரிசு என்று சொல்லுகிறார்கள். பாரபக்ஷம் இன்றி, ஜாதி மதம் தேசம் முதலிய வேற்றுமைகளைக் கருதாது, மதிப்பு ஒன்றையே கருத்தாகக்கொண்டு இப்பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. உலகத்திலுள்ள அறிவாளிகள் அனைவரும் இந்தப் பரிசையே மிகவும் சிறந்த பரிசாகக் கொண்டாடுவதால் இதைப் பெறும் மேதாவி ஒவ்வொருவனும் தன்னுடைய பிறவியில் பெரும் பேற்றைப் பெற்றதாகக் கருதுகிறான்.

இந்தப் பரிசை ஏற்படுத்தின நோபெல் இறந்த தினமாகிய டிசம்பர் மாதம் பத்தாம் தேதியன்று இந்தப் பரிசு அளிக்கப்பட்ட விவரங்கள் வெளியிடப்படும்.

இரசாயனத்துக்கும், பௌதிகத்துக்கும் பரிசுக்குத் தகுதியானவரைத் தேர்ந்தெடுக்கும் உரிமையும் பொறுப்பும் ஸ்வீடென் நாட்டு விஞ்ஞான சங்கத்தாரைச் சேர்ந்தவை. வைத்தியப் பரிசுக்குத் தக்கவரைத் தெரிந்து எடுப்பது ஸ்டாக்ஹோம் நகரத்துக் காரலின் ஸ்தாபனம். இலக்கியப் பரிசுக்குத் தக்கவரைத் தேர்ந்தெடுப்பது ஸ்டாக்ஹோம் இலக்கியச் சங்கம். சமாதானப் பரிசுக்கு உரியவரைத் தேர்ந்தெடுப்பது நார்வே தேசத்துப் பார்லிமெண்டு சபையார் பொறுக்கி எடுத்த ஐவர் கொண்ட கமிட்டி ஒன்று.

1901-ஆம் வருஷம் முதல் இப்பரிசுகள் அளிக்கப்பட்டு வருகின்றன. பல நாட்டினர் இப்பரிசுகளைப் பெற்றிருக்கிறார்கள். போன வாரம் காலம் சென்று உலகம் முழுவதையும் துக்கத்தில் ஆழ்த்திய மகாகவி ரவீந்திரநாத் டாகுருக்கு 1913-ஆம் வருஷத்திலே இலக்கியப் பரிசு அளிக்கப்பட்டது. 1930-ஆம் வருஷத்திலே ஸர் ஸி. வி. ராமனுக்குப் பௌதிக சாஸ்திரப் பரிசு அளிக்கப்பட்டது. பெண்மக்களில் சிலரும் இப்பரிசைப் பெற்றிருக்கிறார்கள். ரேடியத்தைக் கண்டுபிடித்த மதாம் க்யூரிக்கு இரசாயனப் பரிசும் பௌதிக சாஸ்திரப் பரிசும் அளிக்கப்பட்டன. இலக்கியத்திலும் சங்கீதத்திலும் பெண்மக்கள் பரிசுகளைப் பெற்றிருக்கிறார்கள்.

1935-ஆம் வருஷத்திலே சமாதானப் பரிசு ஜெர்மனி நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்ட ஒருவருக்கு அளிக்கப்பட்ட காரணத்தால் அது முதற் கொண்டு ஜெர்மன் நாட்டினர்களுள் ஒருவரும் நோபெல் பரிசை ஏற்றுக் கொள்ளலாகாதென்று நாத்ஸிக் கக்ஷியார் மிகவும் விசித்திரமான தடை உத்தரவைப் பிறப்பித்தார்கள்.

உலகத்திலுள்ள பிறநாட்டு மக்கள் யாவரும் தாங்கள் பெறக்கூடிய பரிசுகள் அனைத்தினும் சிறந்ததாகவே நோபெல் பரிசைப் பாராட்டி வருகிறார்கள்.

சென்னை அகில இந்திய ரேடியோ நிலயத்தில் 13-8-'41-ல் ஒலிபரப்பியது. அனுமதியுடன் வெளியிட்டது.

வரவேற்பு

க. நா. சுப்ரமண்யம், பி. ஏ.

தஞ்சாவூர் ஜில்லாவிலே சாத்தனூர், சாத்தனூர் என்று ஒரு சின்னக் கிராமம் உண்டு. ரெயில்வே அட்டவணை, ஜில்லாப் படம், சர்க்கார் கெஜட் எதிலும் அதன் பெயரைக் காணமுடியாது; அவ்வளவு சின்ன ஊர். மோட்டார் நாகரிகம் அதற்கு மூன்று மைல் மேற்கே நின்றுவிடுகிறது. ஜில்லா முழுவதும் கால் நடையாகச் சுற்றி வருபவன் கண்ணில்கூட அந்தக் கிராமம் படுவது சற்றுச் சிரமந்தான். அது காவேரி யின் கிளை நதிகளில் ஒன்றன் கரையில் இருப்பதாகச் சொல்லிக்கொள்வார்கள். ஆனல் நதிக்கும் ஊருக்கும் இடையே ஒரு மைலுக்குமேல் இருக்கும். தஞ்சாவூரிலே நாயக்கர்கள் அரசுபுரிந்த காலத்தில் ஒரு சங்கீத வித்துவானுக்கு மான்யமாக அளிக்கப் பட்ட கிராமம் அது. வித்துவான் அவ்வளவு உயர்ந்த வித்துவான் அல்ல. ஏதோ ஒரு சமயம் அரசன் அவனிடம் சந்தோஷமடைய முடிந்தது; நாலுவேலி கிராமத்தை மான்யமாகத் தந்தான். இன்னும் அந்த மண்ணிலே வளம் குன்றிவிடவில்லை. ஆனல் இப்பொழுது ஊரிலே சுபிக்ஷம் இல்லை.

சாத்தனூரின் இன்றை நிலைமையின் சின்னம்போல நிற்கிறது சிவன் கோயில். இரண்டடுக்கு இடிந்து விழுந்துவிட்ட மொட்டைக் கோபுரம்; அதன்மேல் கொத்துக் கொத்தாகச் செடி கொடிகள்; புல்லும், நெருஞ்சியும், அரச ஆல வேப்பங்கன்றுகளும் முளைத்திருக்கும் மாஜி கல்தளம்; ஏராளமான பழந்தின்னி வௌவால்களின் வாச ஸ்தலம்—இதுதான் சாத்தனூர்ச் சிவன்கோயில். இதிலுள்ள சிவனுக்கு விளக்குக்கோ நைவேத்தியத்துக்கோ ஒன்றும் அவசியம் இல்லைபோலும்; இருந்தால் அதற்கான ஏற்பாடுகளை அவன் செய்துகொண்டிருக்கமாட்டானு? கோயிலுக்குப் பக்கத்தில் இருப்பதுதான் அக்கிரஹாரம். இப்பொழுது அங்கு ஆறு வீடுகளே இருக்கின்றன. ஊரிலே சுபிக்ஷம் இருந்த காலத்திலே பதினறு பதினேழு வீடுகள் இருந்திருக்கும்.

கும்பகோணத்தில் பஸ் ஏறிப் புளி அடைவதுபோல அடைபட்டு அரைமணி நேரம் நகரின் புழுதியையும் திவ்யமான கந்தங்களையும் அனுபவித்துவிட்டு வெளி யேறி ஒரு மணிநேரம் ஆனபிறகு, பஸ் ஒரு நிதானமாக எவ்வித ஆபத்துக்கும் உள்ளாகாமல் ஓடிவந்திருந்தால், சாத்தனூர் போக விரும்புகிறவனைச் சாலைக்கு அருகில் இருக்கும் பனங்காட்டில் இறக்கிவிடும். அந்தப் பனங்காட்டுக்கு நேர்வடக்கே மூன்றாவது மைலில் இருக்கிறது சாத்தனூர் அக்கிரஹாரம். பாதிவழி ஒற்றையடிப் பாதையிலும், மற்றப் பாதி வயல் வரப்பின்மேலும் நடக்கவேணும். வழி தவறிவிட் டால் விசாரிக்க அங்கு யாரும் அகப்படமாட்டார்கள்; ஊர்போய்ச் சேருவது அவரவர் அதிர்ஷ்டத்தைப் பொறுத்தது. சாதாரணமாக, சாத்தனூர் போகவேணுமென்று கிளம்புகிறவர்கள் மத்தியான்ன வேளையில் கிளம்பமாட்டார்கள். முன்ஜாக்கிரதையாக விடியற்கால வேளையிலேயே கிளம்பிவிட்டால், எவ்வளவு துர்ப்பாக்கியசாலியும் அஸ்தமனத்துக்குள் ஊர்போய்ச் சேர்ந்துவிடலாம். ஆனல் வெயில் காலத்தில் வெயி லுக்கும், மழைக்காலத்தில் மழைக்கும் பயப்படாதவனக இருக்கவேண்டும். ஊருக்கு

வடவண்டைப் பக்கத்தில் கும்பகோணத்திலிருந்து மண்ரஸ்தா ஒன்று நேரே வருகிறது. அதில் கட்டைவண்டிதான் நகரலாம்; மழைநாளில் அதுவும் முடியாது.

ஒருநாள் மத்தியான்னம் நடுவெயிலில் ஒருமணி சுமாருக்குப் பஸ்ஸிலிருந்து பனங்காட்டில் இறங்கினன் அண்ணுசாமி. அந்தப் பனங்காட்டைக் கண்டவுடனே அவனுக்குப் பழைய ஞாபகங்கள் எல்லாம் வந்து மூண்டன. அவன் சாத்தனூரை விட்டுப் போய் எட்டுவருஷங்களுக்கு மேலாகிவிட்டன. அந்தப் பிரிவைப்பற்றிய ஞாபகம் அவ்வளவாக இன்பகரமானது அல்ல. இப்போதும் அவன் சாத்தனூர் போகவேண்டிய அவசியமே இல்லை. எட்டுவருஷங்களுக்குமுன் தன்னை, "போ! போ!" என்று வீட்டையும் ஊரையும் விட்டு விரட்டியவர்கள், அவன் உறவினர்களும் ஊராரும், இப்போது கோபம் தணிந்து தன்னை அன்புடன் வரவேற்பார்கள் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. அவனை வரவேற்க யார் யார் ஊரில் உயிருடன் இருந்தார்கள் என்றுகூட அவனுக்குத் தெரியாது. உயிருடன் இருப்பவர்களும் அவனை வரவேற்று அங்கீகரிக்க அவ்வளவாக உத்ஸாகமோ, ஆர்வமோ காட்டமாட்டார்கள் என்பதும் நிச்சயம்.

அண்ணுசாமியின் கையில் குடையோ காலில் செருப்போ இல்லை; அவனிடம் மூட்டை முடிச்சுகளும் ஒன்றுமில்லை. சோப்புப் போட்டுப் போட்டுத் தினம் வெளுத்து உலர்த்தி அணியும் பழுப்பேறியிருந்த அவனுடைய கதர் ஜிப்பாவின் பைகளிலும் கனம் எதுவும் இருந்ததாகத் தெரியவில்லை. இருந்த கனத்திலும் பெரும் பகுதி காலணுக்களும் பீடிகளும் நெருப்புப் பெட்டியுந்தான். அந்த வெயிலிலும் ஒற்றையடிப்பாதையில் நிழல் இல்லாத இடத்தில் கால்சுட நின்றுகொண்டு அண்ணுசாமி ஒரு பீடியை எடுத்து, இரண்டு மணிநேரமாகப் பீடியே பிடிக்காமல் அவஸ்தைப்பட்டவனே அறியக்கூடிய ஆனந்தத்துடன், அதைப் பற்றவைத்துக்கொண்டு நடந்தான். அந்தப்பக்கம் அவன் வந்து நாளாகிவிட்டது என்றாலும், அதற்குமுன் வெகுநாள் அங்கெல்லாம் ஒடியாடித்திரிந்து பழகியவனுதலால், வழி தவறிவிடுமோ என்ற கவலை அவனுக்கு இல்லை. அவன் கால்கள் தாமாகவே சரியான வழியில் சென்றன. அந்தப் பக்கத்து மனிதர்களைப்போலவேதான் அந்தப் பக்கத்துப் பூமியும்; நித்தியமானது; நிரந்தரமானது; கேவலம் எட்டுவருஷங்களிலா மாறிவிடப்போகிறது?

பீடியை நாலுதரம் இழுத்தானதும் தூக்கி எறிந்துவிட்டு மெள்ள நடந்தான் அண்ணுசாமி. பழைய ஞாபகங்கள் அலை அலையாக வந்து மோதின. எட்டு வருஷங்களுக்குமுன் தனது என்று சொல்லிக்கொள்ள அவனுக்கு ஒரு வீடு இருந்தது; உற்றார் உறவினர்கள் இருந்தார்கள். குச்சுவீடுதான், ஏழைக்குடும்பந்தான்; ஆனல் இப்போது அண்ணுசாமி அதைக்கூடத் தனது என்று சொல்லிக்கொள்ள முடியாது. அவன் இப்போது ஒரு நாடோடி; தங்க இடங்கிடையாது; ஏனென்று கேட்பார் இல்லை. மற்றச் சாதாரண மக்களைப்போல அவனை வாழவிடாமல் அந்தக் காலத்தில் குறுக்கே நின்றவை அவனுடைய தடித்தனமும் மாற்ருந்தாயுந்தான். அவனுக்கு இருபது வயது ஆகுமுன்னரே ஊரில் அவனுடைய அட்டஹாஸங்கள் அடக்கமுடியாதனவாகிவிட்டன. ஊரில் ஒவ்வொருவரும் தனித்தனிக் காரணங்களுடன் அவனுக்கு எதிரிகளாகிவிட்டனர். அக்கிரஹாரத்தார் மட்டுமல்ல; குடியானத்தெரு, பள்ளித்தெரு, பறைத்தெரு, எங்கும் அவன் விரோதிகளே. அகப்பட்டுக்கொண்டு அவன் உதையும் அடியும் பட்டிருப்பது எவ்வளவு என்பது ஈசுவரனுக்குத்தான் வெளிச்சம். வீட்டிலும் எல்லோரும் அவனுக்கு வைரிகளே; இரண்டு

விஷயந் தெரிந்த பெரிய வைரிகள்; கொட்டுக் கொட்டென்று சதா கொட்டிக்கொண்டிருக்கும் நாலைந்து வைரிக்குஞ்சுகள். அவன் தகப்பனாரும் ஊராரும் சேர்ந்து அவனை ஊரைவிட்டுத் துரத்தாத குறைதான். பிதுரார்ஜிதமான ஆஸ்தி அந்த ஓட்டைக் குச்சு வீட்டைத்தவிர வேறு இல்லை. அந்தச் சிறு கிராமத்தில் தனது பிரதாபத்தை இன்னும் வளரவிடுவானேன், பரந்த உலகமே இல்லையா தன் திருவிளையாடலுக்கு என்று அண்ணாசாமி, ஒருநாள் மனமும் அடிபட்டு அடிபட்டு, உடலும் நொந்தவனாகத் துண்டை உதறிப்போட்டுக்கொண்டு கிளம்பிவிட்டான்.

எட்டுவருஷங்களில் எவ்வளவோ காரியங்கள் நடந்தேறிவிட்டன. அண்ணாசாமி மூன்றுதரம் சிறைக்குள் வாசம் செய்து வந்துவிட்டான்: ஒருதரம் காங்கிரஸ்காரனாக; ஒருதரம் ஏதோ கொலையில் சம்பந்தப்பட்டிருப்பதாகச் சந்தேகிக்கப்பட்டு; ஒருதரம் ரஷ்யாவை லக்ஷியமாகக்கொண்ட புரட்சியாளனாக. ஆனால் அதிகாரிகள் சிறையிலும் அவனை நிம்மதியாக இருக்கவிடவில்லை. "இங்கே இருக்காதே இனிமேல்! போ வெளியே" என்று அவர்களும் மறுபடியும் மறுபடியும் உலகில் கெட்டுத் திரிந்து அலைய அவனை வெளியே உந்தித் தள்ளிவிட்டார்கள். சிறையில் இப்படிக் கழிந்த மூன்று நான்கு வருஷங்களைத்தவிர மற்ற வருஷங்களை அவன் எப்படிக் கழித்தான் என்பது அவனுக்கே தெரியாது. இன்னும் உயிருடன் இருந்ததுதான் அவன் மற்ற வருஷங்களிலும் வாழ்ந்தான் என்பதற்கு ஒரு ருஜு. மற்றப்படித் திட்டுத் திட்டாக ஒன்றிரண்டு ஞாபகங்களே அவனுக்கு இருந்தன. அல்லல்களிலிருந்து விடுபட்டுத் தர்ம ஆஸ்பத்திரியில் கிடந்த ஒரு பத்துநாட்களே தன் வாழ்விலே மிகவும் ஆனந்தமான நாட்களாக அவனுக்குத் தோன்றின. இன்னும் ஒரு சிறிய சம்பவமும் ஓர் இன்ப ஞாபகமாக அவன் சிந்தனையில் தட்டியது. கையில் காசேயில்லாமல் திரிந்துகொண்டிருக்கையில் பட்டினத்தில் ஒருநாள் தெருவில் தனியாக விளையாடிக்கொண்டிருந்த ஒரு சின்னக் குழந்தையின் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியை எடுத்துக்கொண்டு போய்விடலாமா என்று வெகுநேரம் யோசித்துவிட்டுக் கடைசியில் திருடாமல், அதிக ஆதரவுடன் அந்தக் குழந்தையை அதன் பெற்றோரைத் தேடிப்பிடித்து ஒப்பித்துவிட்டுப் போனான். இந்த இரண்டையும் தவிர அவனுக்கு வேறு எந்த நல்ல அனுபவமோ ஞாபகமோ இல்லை. தினம் போர், போர், போர்தான்; விதியுடனும் மனிதனுடனும் சதா போர்தான்! உண்ண, உடுக்க, எதற்கும் போர்தான். எப்படியோ அவனும் அந்த எட்டு வருஷங்களையும் ஒருநாள் நின்ற ஊரில் மறுநாள் நில்லாமல் சுற்றிக் கழித்து வாழ்ந்துவிட்டான்.

இந்தச் சமயத்தில்கூட அண்ணாசாமியின் மனத்தில் அதையெல்லாம்பற்றி எண்ணிப் பார்க்கும்போது வருத்தம் தோன்றவில்லை. ஏதோ தலைச்சுழி, அவனை எங்கெல்லாம் இழுத்ததோ அங்கெல்லாம் போக அவன் தயாராகவே இருந்தான். தன் ஊரில் தங்கிவிடும் உத்தேசத்துடனா அவன் அங்கே போய்க்கொண்டிருந்தான்? அதெல்லாம் ஒன்றுமில்லை. தன் செயலாகக் கும்பகோணம் வந்தவன் ஏதோ ஆதிகாலத்தில் பழக்கமான தன் ஊரைச் சுற்றிப் பார்த்துவிட்டுப் போகலாமே என்று கிளம்பினான்; அவ்வளவுதான். பீடி குடிக்கவேணுமென்று சில சமயம் தாகமும் ஆத்திரமும் தோன்றுவதுபோல இப்போது அவனுக்கு ஊரைப் பார்த்துவிட்டுப் போகவேணுமென்று தோன்றியது. அவன் தன் சொந்த ஊரைப் பார்க்கப் போய்க்கொண்டிருந்தான். சொந்த ஊர்! சொந்த ஊர்! அண்ணாசாமிக்குத் தன்னையும் அறியாமலே சிரிப்பு வந்தது; உரக்கச் சிரித்துவிட்டான்.

ஊரில் யாரும் அவனை அடையாளம் கண்டுகொண்டுவிடமாட்டார்கள். எட்டு வருஷங்களுக்குமுன் ஊரை விட்டு ஓடிப்போன அண்ணுசாமிதான் அவன் என்று யாரும் அறிந்துகொண்டுவிடமாட்டார்கள். அவன் தலைமயிரெல்லாம் நரைத்துப்போய் விட்டது; முகம் காய்த்துப் பழுத்துக் கிழடுதட்டிவிட்டது; கண்கள் குழிவிழுந்து ஒளியிழந்து எக்கம் பெற்றுவிட்டன. பார்த்தால் அவனுக்கு வயது ஐம்பதுக்கு மேல் இருக்கும் என்றுதான் சொல்வார்களே தவிர யாரும் முப்பது வயது இன்னும் நிரம்பாதவன் என்று நம்பமாட்டார்கள். தான் யார் என்று சொல்லிக் கொள்ளுவதாக அண்ணுசாமிக்கும் உத்தேசமில்லை. ஊர், அப்பா, மற்றவர்கள் எல்லோரையும் எட்டி நின்றே பார்த்துவிட்டுத் திரும்பித் தன் வழியே செல்லுவதாகத் தான் அவன் உத்தேசம். அப்படி யாராவது அகஸ்மாத்தாக அவனை அடையாளங் கண்டுகொண்டுவிட்டால் அப்புறம் பார்த்துக்கொள்ளலாம். முதல் காரியம் சட்டை கழற்றுமுன், அவன் ரகசியமாக ஒரு பூணூல் சம்பாதித்து மாட்டிக்கொண்டாக வேணும். பையிலிருந்து இன்னும் ஒரு பீடியை எடுத்துப் பற்றவைத்துக்கொண்டு நடந்தான் அண்ணுசாமி.

ஊர் வந்துவிட்டது என்பதற்கு அடையாளமாக அந்தப் பக்கத்திலிருந்து வரு பவர்கள் கண்ணில் முதல் முதலாக ஊர்ச் சுடுகாடுதான் தென்படும். அண்ணுசாமி யின் முரட்டுப் பருவத்துத் திருவிளையாடல்களில் பல அந்தப் பக்கத்தில் நடந்தவை தாம். இப்போது சுடுகாட்டில் திகுதிகென்று ஒரு பிணம் எரிந்துகொண்டிருந்தது. 'எனக்கேற்ற வரவேற்புத்தான். யார் பிணமோ? ஊரிலுள்ள ஏழெட்டுக் குடும்பத் தில் யார் குடும்பத்துப் பிணமோ?' என்று சிந்தித்தவாறே அண்ணுசாமி மேலே நடந்தான். திடீரென்று அவன் குரல்வளையை யாரோ பலமாகப் பிடித்து அமுக்குவது போல் இருந்தது. வேறொன்றுமில்லை அது; திடீரென்று தோன்றிய ஒரு சிந்தனையின் சேஷ்டைதான். இலுப்பைத்தோப்பு, புளியந்தோப்பு, மாந்தோப்பு மூன்றையும் ஒன்றன்பின் ஒன்ருகக் கடந்து குளக்கரையை அடைந்தான். குளத்துக்கடுத்தாற்போலத்தான் சிவன் கோயிலும், அக்கிரஹாரமும். 'நல்ல வெயில்; ஆகையால்தான் யாரும் குளத்துக்குப் பத்துத்தேய்க்க வரவில்லை' என்று எண்ணிக்கொண்டான் அண்ணுசாமி. ஒரு மரநிழலில் உட்கார்ந்து இரண்டு மூன்று சிறுமிகள் புளியம் விதையை வைத்துக்கொண்டு ஏதோ விளையாடிக்கொண்டிருந் தார்கள். அந்தப் பெண்களில் ஒருத்தி - அவளுக்கு ஏழெட்டு வயதிருக்கும் - அண்ணு சாமியைக் கண்டவுடன் விளையாட்டை விட்டு எழுந்து ஓடிவந்து, "யாராத்துக்கு மாமா நீங்க வந்திருக்கேள்?" என்று கேட்டாள்.

கிராமத்துக் குழந்தையின் வெகு சாதாரணமான கேள்விதான் அது. ஆனல் சுருக்கென்று ஏனே அது அண்ணுசாமியின் உள்ளத்தில் தைத்தது. திரும்பிக் குனிந்து அந்தக் குழந்தையின் கபடற்ற முகத்தைப் பார்த்தான். அந்தச் சிறுமி யின் முகம் அவனுக்கு எதையோ ஞாபகப்படுத்தியது. அவன் முகத்தில் ஒரு நிழல் படர்ந்தது. அந்தக் காலத்தில் தன் வீட்டிலிருந்து மூன்ருவது வீட்டில் இருந்த பெண்ணின் பெயர் அலமுதானே?.........தலையை ஒருதரம் உதறி ஆட்டிவிட்டுத் தடுமாற்றத்துடன், "நாராயணசாமி ஐயர் ஆத்துக்குப் போறேன், அம்மா" என்று அண்ணுசாமி பதிலளித்தான். தடுமாற்றத்திலே தனது தீர்மானத்தை மறந்து தன் தகப்பனரின் பெயரையே அவன் சொல்லிவிட்டான். அந்தக் குழந்தையிடம் கோபம் வந்தது அண்ணுசாமிக்கு. ஆனல்.........

"நாராயணசாமி ஐயர்... ஆரு மாமா அது? இங்கே நாராயணசாமி ஐயருன்னு ஆருமே இல்லையே!" என்று தயங்கித் தயங்கிச் சொன்னாள் சிறுமி.

ஒரு காரணமும் இல்லாமலே அண்ணாசாமிக்குப் பக்கென்றது. அந்தப் பெண்ணிடம் சற்றுமுன் தோன்றிய கோபம் சட்டென்று மறைந்தது. "தெருவில் நான் போய் விசாரிக்கிறேன். சிவன் கோயிலுக்கு எதிரே இருக்குமே, அந்த நாராயண சாமி ஐயர் வீடு" என்றான் அண்ணாசாமி.

இந்தத் தடவை சற்றும் தயங்காமல் பதிலளித்தாள் சிறுமி; "சிவன்கோயிலுக்கு எதிர்த்தாப்பலே வீடே கிடையாதே, மாமா."

அண்ணாசாமி பதில் ஏதும் சொல்லாமல் தெருவை நோக்கி நடந்தான். அந்தப் பெண் அவனையே பார்த்துக்கொண்டு சிறிதுநேரம் அங்கேயே நின்றுவிட்டுத் தன் தோழிகளுடன் புளியம் விதை ஆடப் போய்விட்டாள். அண்ணாசாமி தன் நினைவு இழந்தவனாகத் தெருவுக்குப் போகும் ஒற்றையடிப்பாதையிலே நடந்தான். பூவரசமரக் கிளைகளிலிருந்து நாலுபக்கமும் கம்பளிப்பூச்சிகள் தொங்கி ஊசலாடிக்கொண்டிருந்தன. அந்த இருபது கஜத்தையும் கடக்க அவனுக்கு இருபது நிமிஷத்துக்கு மேல் பிடித்தன. தெரு வந்ததும் திரும்பிப்பார்த்தான். அந்தப் பெண் சொன்னது வாஸ்தவந்தான்; சிவன்கோயிலுக்கெதிரே வீடே இல்லை. மேடிட்ட ஒரு பாழ்மனை தான் இருந்தது. அவனால் நிற்கமுடியவில்லை; கால்கள் கெஞ்சின; இரண்டெட்டில் சிவன் கோயில் கோபுரத்துப்படியில் போய்ச் சாய்ந்துகொண்டு உட்கார்ந்து விட்டான். அவனுடைய அவசர வரவினால் எழெட்டு வௌவால்கள் தியானம் கலைபட்டுச் சிறகடித்துப் பறந்தன. ஓர் ஓணான் ஒரு கல்லிலிருந்து மற்றொரு கல்லுக்குத் தாவிச் சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டு நின்றது.

தெருவிலே ஒரு கிழவர் மூங்கில் கழியை ஊன்றிக்கொண்டு தள்ளாடித் தள்ளாடி வந்துகொண்டிருந்தார். அண்ணாசாமி மெதுவாக நிதானித்து எழுந்து அவரை அணுகிக் கேட்டான்: "இங்கே நாராயணசாமி ஐயர்னு ஒத்தர் இருக்காராமே! அவர் எந்த வீட்டில் இருக்கார்?"

கிழவர் பதில் சொல்லுமுன் சிறிது தயங்கினார். அப்புறம், "இங்கு யாரும் இல்லையே, நாராயணசாமி ஐயர்னு...ஆமாம்...நாராயணசாமி ஐயர்னு ஒத்தர் இருந்தார் முன்னே. இப்போ அவாள்ளாம் ஊரை விட்டுப் போயே எழெட்டு வருஷம் ஆகப்போறதே" என்றார்.

அண்ணாசாமியும் கொஞ்சம் தயக்கத்துடனேயே கேட்டான்: "அவா இப்போ எங்கே இருக்கா தெரியுமோ?"

"கடனுக்குப் பயந்துண்டு ஓடிப்போறவா விலாசம் சொல்லிவிட்டுப் போவா? கடனும் உடனுமாகப் போய், ஒருநாள் ராத்திரி ஊரிலே யார் கிட்டேயும் சொல்லிக்காமே போய்ட்டா. எங்கே இருக்காளோ யார் கண்டா?......எங்கேயாவது சந்திலே நிப்பா. பெத்த பிள்ளையை வச்சுப் பராமரிக்கத் தெரியாமல் இளையா பேச்சைக் கேட்டுண்டு வீட்டைவிட்டு விரட்டறவன் குடும்பம் உருப்படுமோ என்ன? எண்டாப்பா நீ யாரு?" என்றார் கிழவர். அவருக்கும் மனத்தில் ஏதோ பழைய ஞாபகம் தட்டுப்பட்டுவிட்டது என்று அண்ணாசாமி அறிந்துகொண்டான்.

"அவர் பையனும்; பட்டணத்திலே இருக்கான். அவன்தான் இந்தப் பக்கம் போனால் போய்ப் பார் என்று சொல்லி அனுப்பினான். வந்தேன்" என்று அண்ணாசாமி சொன்னான்.

"பையனாவது க்ஷேமமா இருக்கானா? என்ன பண்ணிண்டிருக்கான்?......... போகட்டும்; க்ஷேமமாயிருந்தா சரிதான். அவன் தங்கமான பையன். நன்னா படிச்சிண்டு இருந்தான். அந்தக் குடும்பத்திலேயே அவன் ஒத்தன்தான் உருப்படுவான்னு எனக்கு அப்பவே தெரியும்."

கிழவர் தன்னைப்பற்றித்தான் பேசிக்கொண்டிருந்தார் என்று அண்ணாசாமிக்கு முதலில் தெரியவில்லை. அவன் ஒன்றும் பேசாமல் போய்ச் சிவன் கோயில் மொட்டைக்கோபுரத்துப் படியிலே தலையில் கை வைத்துக்கொண்டு உட்கார்ந்துவிட்டான்.

எவ்வளவு நாழி அப்படி உட்கார்ந்திருந்தான் என்று அவனுக்கே தெரியாது. ஆனால் அவன் கிளம்பும்போது வெயிலின் உக்கிரம் தணிந்தபாடில்லை. குளத்தங்கரை, மாந்தோப்பு, புளியந்தோப்பு, இலுப்பைத்தோப்பு, சுடுகாடு, வயல், பனங்காடு எல்லாம் தாண்டி மூன்றுமைல் நடந்தாகவேணும். ஜிப்பாவின் பையில் கையை விட்டுத் தடவிப்பார்த்தான். நாலு பீடிகள் இருந்தன.

கோயிலுக்குள் யாரோ சிரிப்பதுபோல் இருந்தது. அண்ணாசாமி திரும்பிப் பார்த்தான். கர்ப்பக்ருஹத்தின் கதவு அடைக்கப்பட்டிருந்தது. அதற்குப் பின்னால் இருட்டில் அந்தப் பரமசிவன் என்னதான் பண்ணிக்கொண்டிருந்தானோ!

ராஞ்சி யாத்திரை

'கோனஷ்டை'

'**ரா**ஞ்சி எங்கே இருக்கிறது?' என்று என்னைக் கேட்காதீர்கள். பள்ளிக்கூடத்தை விட்டு எவ்வளவோ காலம் கழிந்தும், பூகோள சாஸ்திரப் புத்தகங்களெல்லாம் கிழிந்து போனபிறகும் என்னைப் பரீக்ஷிப்பது நியாயமா?

அங்கே போகவேண்டுமானால், நான் செய்தமாதிரி செய்யலாம். பட்டணத்தில் ஸென்ட்ரல் ஸ்டேஷனுக்குச் சென்று, "ராஞ்சிக்கு ஒரு டிக்கட்டு" என்று சற்று அலக்ஷியமாய்க் கேட்டால், நம்முடைய பணத்தை வாங்கிக்கொள்ளும்பொருட்டு, மார்க்கம் தூரம் முதலியவற்றைக் கண்டு பிடிக்கவேண்டியது அங்கேயுள்ள குமாஸ்தாவின் கடமை.

"கற்கப்பூரில்தானே வண்டி மாற்றுகிறீர்கள்?"

"ஆமாம், அதுதானே சௌகரியம்?" (கற்கப்பூராவது, கற்காதபூராவது? இதுவரை பெயரைக் கேட்டதில்லை!)

"அதுதான் சௌகரியம்; நாகப்பூர் வழியாய்ப் போவதானால், சற்றுச் சுற்று; நடு நிசியில் வண்டி மாற்றவேண்டி வரும்."

"அது என்னத்திற்கு? வேண்டாம். கற்கப்பூருக்கு வண்டி எத்தனை மணிக்குப் புறப்படுகிறது?"

"ராத்திரி எட்டு இருபதுக்கு."

எட்டு இருபதா? சரி. கல்கத்தா மெயிலில் புறப்படவேண்டுமென்பது தெரிந்துவிட்டது. பார்த்தீர்களா எவ்வளவு சுலபம்!

நம்முடைய நாட்டில், நீலகிரிக்கும் கொடைக்கானலுக்கும் போகிற மாதிரி, பீஹார் மாகாணத்து (மகததேசத்து) மனிதர் வேனிற்காலத்தில் போகும் இடம் ராஞ்சியென்றும், அங்கே குளிர் இல்லாமல் குளிர்ச்சியாயிருக்குமென்றும் பலர் சொல்லக் கேள்வி. ஜகந்நாதனும் பத்மாவும் இப்பொழுது அங்கே இருக்கிறபடியால் போய்ப் பார்க்கவேண்டுமென்று ஆசை. ரெயில்வே கம்பெனியாரை நம்பி டிக்கட்டு வாங்கினவர்களை அவர்கள் கைவிடமாட்டார்கள் என்று ஒரு நம்பிக்கை. யாத்திரைக்கு வேறு என்ன வேண்டும்?

ஞாயிற்றுக்கிழமை ராத்திரி சென்னையிலிருந்து கிளம்பினால் செவ்வாய்க்கிழமை காலை சுமார் ஒன்பது மணிக்கு வண்டி கற்கப்பூரைச் சேருகிறது. ஐம்பது அறுபது ஸைக்கிள்-ரிக்ஷாக்கள் ஸ்டேஷனில் வந்து நின்றால், அதுவே கற்கப்பூர் என்று எண்ணித் தைரியமாய் இறங்கி

விடலாம். அல்லது பழைய நாளைய வழக்கப்பிரகாரம், பலகையில் என்ன என்னவோ பாஷைகளில் பெயர் எழுதியிருப்பதைப் படித்துவிட்டும் இறங்கலாம்.

"ராஞ்சிக்குப் போகும் வண்டி—?"

"ராத்திரி பத்துமணிக்கு வரும். ஒரு நாளைக்கு ஒரு வண்டிதான்."

"அதுவரையில் தங்கியிருப்பதற்கு...?"

"மாடியில் உள்ள 'ப்ரைவேட்' அறைகளில் ஏதாவது காலியிருக்கிறதோ, பார்த்துவரச் சொல்லுகிறேன். தயை செய்து உட்காருங்கள்."

ஸ்டேஷன் மாஸ்டர் மிகவும் உபசாரமாகப் பேசினார். எதிர்பாராத இடத்தில் உபசாரம் பெற்றால் அதன் சந்தோஷம் இரட்டிக்கிறது. மாடியில் காலி அறை இருந்தது. மின்சாரவிளக்கு, பங்கா உட்படவே. வாடகை இல்லை என்று அவர் சொல்லிவிட்டார்.

ஸ்டேஷனை அடுத்தே ஊர் இருக்கிறது. ஒரு மார்வாரியின் விடுதியில் கட்டித்தயிர் கிடைக்கிறது. மற்றத் தின்பண்டங்கள் தமிழருக்கு வேண்டியவை நல்லவையாகக் கிடைக்குமென்று எண்ணி ஏமாறக்கூடாது.

ராத்திரி வண்டியில் ஏறினால் மறுநாட்காலையில் முரி என்கிற இடத்தில் வண்டி மாற்றவேண்டும். இதன் பிறகு சிறிய ரெயில்வண்டி; சிறிய டிராம்வண்டியென்றே சொல்லலாம். மணிக்குக் காதவழி மாயமாய்ப் பறந்து ஒன்பது மணிக்கு ராஞ்சியை அடைந்தோம்.

ஜகந்நாதன் குழந்தைகளுடன் ஸ்டேஷனுக்கு வந்திருந்தான். முரளிக்கு மூன்று வயது. இஷ்டப்பட்டபடி தமிழிலோ ஹிந்தியிலோ, பாஷைகளைக் கலக்காமல் வார்த்தைகளைப் பொழிந்தான். முகுந்தனுக்கு இரண்டு வயது. அசல் ஹிந்தியில்மாத்திரம் பேச்சு. அவன் சொல்லுவது எங்களுக்கு ஒன்றும் புரியவில்லை. 'இவ்வளவு உயரமாய் இருந்து என்ன பிரயோஜனம்? நான் சொல்லுவது ஒன்றும் தெரியவில்லை! பதிலுக்கு ஒரு வார்த்தை சரியாய்ப் பேசமுடியவில்லையே!' என்று தன்னுடைய ஆச்சரியத்தை அவன் கடைசிவரையில் முகத்தில் காண்பித்துக்கொண்டிருந்தான்.

ராஞ்சி ஒரு பீடபூமி; அதாவது மலைநாட்டின்மேல் வாய்த்திருக்கும் ஒரு சமபூமி. சமுத்திரமட்டத்தைக்காட்டிலும் 2,000 அடிதான் உயரம் (பங்களூர் 3,000 அடி உயரம்). ஆகையால் இங்கே கார்த்திகை மாசத்திற்கு முன்பு குளிர் உண்டு என்று சொல்லமுடியாது. ஆனால் வெயிலின் உபத்திரவமே இல்லை. குற்றாலம்மாதிரி, சில சமயம் தூவானம் விழும். அநேகமாய், வெப்பம் இல்லாமல் மப்பு மூடியிருக்கும். சில சமயம் மழை பெய்யும். மழையினால் அலுப்பு உண்டாகாதபடி மத்தியில் மத்தியில் இதமாக வெயில் காயும். பூஜைவிடுமுறையின்பொழுது (நம்முடைய நவராத்திரி சமயத்தில்) ராஞ்சிக்குப் போகவேண்டுமென்பதே வங்காளம் பீஹார், இரண்டு மாகாணத்திலும் குமாஸ்தா அந்தஸ்து உள்ளவர்முதல்

ஒவ்வொருவருடைய ஆசையுமாகும். அநேகமாய் அந்த ஆசையை நிறை வேற்றிக் கொள்ளுகிறார்களாம்.

வருஷத்தில் ஆறு மாதம், பீஹாரின் சர்க்கார் இங்கே வந்து இருக்கிற படியால், சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்காகக் குத்துக் குத்தாகப் பங்களாக்களைக் கட்டிவைத்திருக்கிறார்கள். வாடகை சிறிது அதிக மென்றாலும் தகுந்த பிரதிபலன் உண்டு. இக்காலத்தில் ஒரு நகரத்தின் சௌகரியங்களோடுகூடத் தன்னுடைய வீட்டுவாசலில் உட்கார்ந்த படியே, கண்ணுக்கெட்டுந் தூரம் பச்சென்று செடியும் மரங்களுமாக, வெயிலிலும் மப்பிலும் மழையிலும் வெளிச்சம் மாறிக்கொண்டேயிருப் பதைக் காண்பது எவ்வளவு அரிது? இதற்காகவே தினம் வனஸ்பதி ஹோமம் செய்யலாமே!

முனிசிபாலிடி இல்லை. எல்லாம் ஜில்லா போர்டார், சர்க்கார் இவர்கள் ஏற்பாடு. எல்லா ரஸ்தாக்களிலும் மிதமாகக் கீல் எண்ணெய் அடித்திருக் கிறது. உலாவுவதென்றால் மைல் கணக்காகப் போய்க்கொண்டே இருக்க லாம். வெயில் இல்லை; புழுதி இல்லை. சந்தடி, குப்பைவண்டிகள் இல்லை. கண்ணில் தென்படும் மரங்களெல்லாம், கீழ்நாட்டில் உள்ளவைகளைக்காட் டிலும் அரைமடங்கு அதிக உயரமாக இருக்கின்றன. இங்கே காணும் அரசமரத்திற்கு அதன் பெயர் தகும்.

பங்களாவிற்குத் திரும்பி வந்து, செக்ரடேரியட்டைச் சேர்ந்த உத்தி யோகஸ்தர்களும் அவர்களுடைய பத்தினிமார்களும், ஓய்வு நேரத்தில் பேசிக்கொண்டிருப்பதைக் கேட்பதே ஒரு வேடிக்கை. அதுவரையில் தெப்ப உத்ஸவத்தைக் குளக்கரையில் நின்றே பார்த்தவன் தெப்பத்தில் ஏறிச் சற்று ஸஞ்சாரம் செய்வதுமாதிரி இருக்கிறது. அதுவரை ஊகிக்காத உள்வயணங்களும் ஏற்பாடுகளும் தெரியவருகின்றன. எல்லாவற்றிலும் விநோதம், அவர்களுடைய வம்பளப்பு. ரசத்திற்குப் பெருங்காயம் மாதிரி, ஏதோ ஒரு விதத்தில் வம்பளப்பானது பல தினசு மனசுகளைக் கூடும்படி செய்து ஒரு புதிய உணர்ச்சியை உண்டாக்கிவிடுகிறது.

"மிஸ்டர்— வீட்டில், வேலைக்காரர்கள் ஒன்றுகூடி வேலைநிறுத்தம் செய்துவிட்டார்களாம். ஹோட்டல்காரன்தான் சாப்பாட்டை அனுப்பு கிறானாம்."

"வேலைக்காரர்களின்மீது தப்பு இராது. அவருடைய சம்சாரத்தின் குணத்தை யாரால்தான் சகிக்கமுடியும்? அந்த அம்மாள்தானே முன்பு கா— அவர்களுக்கு உத்தரவு அனுப்பினது!"

"அதென்ன உத்தரவு? நான் கேட்டதில்லையே?"

"அந்த அம்மாள் ஒருநாள் கா— அவர்களுக்குக் கடிதம் எழுதினாளாம். 'நீங்கள் இப்பொழுது ஆக்டிங்காக இருக்கும் உத்தியோகத்தின் ஸ்திரமான உரிமை என்னுடைய பர்த்தாவுக்கே. ஆகையால் நீங்கள் குடியிருக்கும் சர்க்கார் பங்களாவில் இப்பொழுது பழுத்திருக்கும் மாம்பழங்களெல்லாம்

என் பர்த்தாவைச் சேரவேண்டியவை. இக்கடிதம் கொண்டுவருபவனிடம் அவைகளை உடனே அனுப்பவேண்டும்' என்று அதில் கண்டிருந்ததாம்.''

''கா— இதற்கு இணங்கினாரா?''

''அவரா? அவரும் இரண்டாயிரத்தைந்நூறு ரூபாய் சம்பளக்காரர். தவிர, அவர் மகாராஷ்டிரர். தூக்கி எறிந்தாற்போல் பதில் அனுப்பி விட்டார். இவ்விஷயம் சர்க்காரின் சீப் ஸெக்ரடெரியின் காதில் விழுந்து அவர் அந்தத் துரைசானியின் புருஷரிடம் கடிந்துகொண்டாராம். புருஷர் என்ன செய்வார்? பாவம்!''

''நான் ஒரு பயந்தாங்கொள்ளி. அம்மாதிரி பதில் எழுதத் துணிய மாட்டேன்.''

''பின்னே, என்ன செய்வீர்களாம்?''

''ஒத்துப் போவேன். 'பழங்களை இரண்டுபேருமாகப் பங்கு பிரித்துக் கொள்ளலாம். கதுப்புகளைமாத்திரம் நான் எடுத்துக்கொள்வேன். மீதமுள்ளது உங்களுக்கே' என்று வினயமாய்ச் சொல்லியிருப்பேன்.''

''நம்முடைய — கைக் கேட்டிருந்தால் அவர் இம்மாதிரியெல்லாம் பிசுகமாட்டார். அவருடைய சம்சாரம் பலலக்ஷாதிபதி. தெரியுமல்லவா?''

''நன்றாகத் தெரியும். நாலு நாளைக்கு முன்பு அவர் கிளப்பில் சொல்லிக்கொண்டிருந்தார்: அவருடைய சம்சாரமும் அவளுடைய தம்பியும் விளையாடிக்கொண்டிருந்தார்களாம். எப்படித் தெரியுமா? பத்து ரூபாய் நோட்டுகளைச் சுருட்டி ஒருவர்மேல் ஒருவர் எறிந்துகொண்டார்களாம். விளையாட்டு முடிந்து எழுந்து வரும்பொழுது, கீழே விழுந்த நோட்டுக்களை ஒருவருமே கவனிக்கவில்லையாம். ஆகையால், அவை அப்படியே இழக்கப்பட்டனவாம்.''

இத்தியாதி.

இங்கேயுள்ள மலைநாட்டார்களில் அநேகர் படித்து முன்னுக்கு வந்திருக்கிறார்கள். அல்லாதவர், இன்னும் நம்முடைய நாட்டுக் குறவர்களைப் போலவே இருக்கிறார்கள். ஆண்குறவர்கள் நகை அணிந்துகொள்ளுகிற மாதிரி, இங்கே ஒருவன் ஒரு சிவப்பு நாடாவைத் தலையின்மேல் அர்த்த சந்திரனாக அணிந்துகொண்டே போகக் காணலாம். மற்றொருவன் ஒரு சீப்பை வாங்கித் தன்னுடைய சடையின் மத்தியில் செருகித் தொங்கவிட்டு ஒய்யாரமாய் நடக்கிறான். 'சீப்பு இருக்கையில், தலைமயிர் சடைவிழுவதைச் சகிப்பானேன்? அல்லது சடையை வளர்ப்பதனால் சீப்பு எதற்காக?' என்றெல்லாம் எண்ணுவதுதான் தப்பு. இந்த விசாரமெல்லாம் இல்லாமல் அவன் சந்தோஷத்தை அடைகிறான். அதற்குமேல் மனிதனுக்கு என்ன வேண்டும்?

ஆனால் அவர்களுக்குள் அடிக்கடி கொலை நடந்துவிடுகிறது. நடந்தால் போலீஸ் விசாரணைக்கு அவசியம் இல்லை. நாகரிகமற்றவர்களல்லவா? அதனுடைய பலன் என்னவென்றால், நியாயஸ்தலத்துக்கு வந்த

வுடன், நடந்தது நடந்தபடியே உண்மை முழுவதையும் தாங்களே தெரிவிப்பார்கள். ஆனால் அவர்களைத் தூக்கில் போடுவதில்லை. "அவன் எனக்குச் சூன்யம் வைத்தான். இன்ன விதங்களில் சூன்யம் வைத்தான். சூன்யம் வைக்கிறவனைக் கொல்லாமல் என்ன செய்கிறது?" என்று கேட்பார்கள். அவர்களுக்குச் சரியான பதில் என்ன சொல்லுவது என்று நியாயாதிபதிகளுக்கு விளங்குவதில்லை. பதில் சொல்லாமல் குற்றவாளிகளைத் தீவாந்தரத்திற்கு அனுப்புகிறார்கள். இரு கக்ஷிக்காரர்களுக்கும் அபிப்பிராயம்மாத்திரம் மற்றவர் பயித்தியக்காரரென்பதே.

இங்கே கொஞ்சதூரத்தில் மிகவும் வசதியான இடத்தில் ஒரு பயித்தியக்கார ஆஸ்பத்திரி இருக்கிறது. சுவஸ்தப்பட்டவனொருவனைச் சமீபகாலத்தில் வெளியில் விடுவித்தார்கள். நியமப்பிரகாரம், மூன்று டாக்டர்கள் அவனைப் பரீக்ஷித்துப் பார்த்து, 'இனி இவனுக்குப் பயித்தியமில்லை' என்று தீர்மானித்து விடுதலை செய்தார்கள். அம்மூவரில் ஒருவருக்கு நீண்டு அழகான தாடி உண்டு. வெளிவந்தவன் அவருக்காகக் காத்திருந்து, அவர் தனியாக அகப்பட்ட சமயத்தில் அவர்பேரில் தாவி, "நீ எப்படி என்னைப் பயித்தியக்காரன் அல்லவென்று சொல்லுவாய்?" என்று சீறி, அவருடைய தாடியைப் பிடித்து இழுத்துக் குலுக்கி, அதில் பாதியை நீக்கிவிட்டானும். அவர் அதை மறுபடியும் சரிப்படுத்திக் கொள்ளுவதற்காக லீவு எடுக்கவேண்டியிருந்ததாம். எல்லாக் காரணங்களையும் உத்தேசித்து, நாங்கள் அந்த ஆஸ்பத்திரியைப் பார்க்கப் போகவில்லை.

ராஞ்சிக்கு முந்தின ஸ்டேஷன் நாம்கோம். அங்கே அரக்குப்பூச்சி ஆராய்ச்சிச்சாலை ஒன்றைச் சர்க்காரில் ஏற்படுத்தியிருக்கிறார்கள். நம்முடைய நாட்டில் அரக்கைக்குறித்துச் சாதாரணமாய்த் தெரியுமே. ஒரு குண்டூசியின் தலையளவுள்ள ஒரு பூச்சி லக்ஷக்கணக்காய்க் கூடி (இதிலிருந்தே ஸம்ஸ்கிருதத்தில் லாக்ஷா என்ற பெயர் அரக்கிற்கு வந்தது) சில மரங்களின் கிளைகளின்மேல் அரக்கை உண்டாக்குகிறது. அந்த அரக்கைத் தண்ணீரில் தோய்த்தால் பங்களூர்ச் சேலைகளுக்கு இடப்படும் அரக்குச்சாயம் உண்டாகிறது. இச்சாயத்தை ஸ்திரீகள் பாதத்தைச் சுற்றித் தடவிக்கொண்டதாகப் பழைய கிரந்தங்களில் படிக்கிறோம். இம்மாதிரியே இந்தப் பிரதேசங்களில் இன்னமும் செய்கிறார்கள். சாயத்தை நீக்கினபிறகு, கரையாமல் தங்கி நிற்கும் சரக்குத்தான் வியாபாரத்தில் வழங்கும் அரக்கு. அதிலிருந்து கிராமபோன் தட்டுக்கள், மின்சார சம்பந்தமான சில சாமான்கள், பலவித சம்புடங்கள் முதலியன செய்யப்படுகின்றன. வெளிநாடுகளுக்கெல்லாம் நம்முடைய நாட்டிலிருந்துதான் அரக்குக் கிடைக்கும்.

ஏற்றுமதியாகும் அரக்கின்மேல் மணங்கு ஒன்றுக்கு அரைரூபாய் வரையில் வரிபோட்டு, வசூலாகும் தொகையான சுமார் இரண்டு மூன்று லக்ஷ ரூபாய் முழுவதையும் சர்க்கார் இந்த ஆராய்ச்சிச்சாலையின் செலவுக்காகக் கொடுத்துவிடுகிறார்கள். இங்கே உள்ள விஞ்ஞானிகள் இது சம்பந்த

மாக அநேக தத்துவங்களைக் கண்டுபிடித்துக் குடியானவர்களுக்குக் கற்றுக் கொடுக்கிறார்கள். அதனால் வருஷந்தோறும் சேர்க்கப்படும் அரக்கின் அளவும் தரமும் விருத்தியாகி, ஏற்றுமதி பெருகிக் குடியானவர்கள் லாபம் அடைகிறார்கள்.

இந்த ஆராய்ச்சிச்சாலையில் மூன்று தமிழர்கள் உயர்ந்த பதவியில் இருக்கிறார்கள். அவர்களில் ஸ்ரீ வேணுகோபாலையங்கார் அவர்கள் சிரமத்தைப் பாராட்டாமல் சுமார் இரண்டுமணி நேரம் எல்லா விவரங்களையும் எங்களுக்குத் தெளிய உரைத்தார்.

"ஆண்பூச்சிகள், பெண்பூச்சிகள் இவைகளில் ஆண்பூச்சிகள் அதிகமாய் அரக்கு உண்டாக்குவதில்லை; தவிர, சீக்கிரத்தில் இறந்துவிடுகின்றன. நாங்கள் பெண்பூச்சிகளைத்தான் முக்கியமாய்க் கவனிக்கிறோம்."

"இருந்தாலும்—"

"இதுவரை இருபது தலைமுறைப் பூச்சிகளைக் குறிப்பிட்டுப் பார்த்தாகி விட்டது. ஆண்பூச்சிகள் இல்லாமலே பெண்பூச்சிகள் முட்டையிடுகின்றன."

"ஸபாஷ்! பெண்களுக்கு 'வோட்டு' வேண்டுமென்பதுபோக, லாக்ஷா லோகத்தில் பெண்களுக்குமாத்திரம் 'வோட்டு' என்று விளங்குகிறது. இவைகளுக்கிடையில் ஆண்பூச்சிகள் என்னத்திற்காகத்தான் பிறக்கின்றனவாம்?"

"என்னவோ பழைய நாளைய சம்பிரதாயம் என்று நாம் சொல்லுவதில்லையா? அந்தமாதிரி அநேக முட்டைகளை இடும்பொழுது ஆணாகப் போகிற முட்டையும் ஒன்றிரண்டு இடப்படுகின்றன."

"உங்கள் ஆராய்ச்சிகளினால் குடியானவர்களுக்கு என்ன பலன்?"

"ஒவ்வோர் அம்சத்திலும் பலன் உண்டு. ஒன்றுமாத்திரம் உதாரணமாய்ச் சொல்லுகிறேன்: அதோ கண்ணாடிச் சீசாவில் அடைத்திருக்கிறதே, அந்த வெள்ளைப்பூச்சி, அரக்குப்பூச்சியின் ஜன்மசத்துரு; அதனால் அரக்கின் உற்பத்தியில் பத்தில் நாலுபங்கு சேதமாகிறது. நாங்கள் என்ன செய்திருக்கிறோமென்றால், அந்த வெள்ளைப்பூச்சிக்குமாத்திரம் வைரியான பூச்சி ஒன்றைக் கண்டுபிடித்து, அதை நூற்றுக்கணக்காய் வளர்த்துக்கொடுக்கிறோம். குடியானவர்கள் இவைகளை வாங்கிக்கொண்டு போய், அரக்குப்பூச்சி வளரும் மரங்களின் சமீபத்தில் பறக்கவிடுகிறார்கள். அதோடு அந்த வெள்ளைப்பூச்சிகள் துவம்ஸந்தான்."

"பழைய பாடத்தில் படிக்கிறமாதிரி இருக்கிறது. மற்ற மீன்களைச் சாப்பிடுகிற பெரிய மீன் ஒரு திமி. திமியையும் விழுங்கும் பெரிய மீன் ஒரு திமிங்கிலம். திமிங்கிலத்தையும் விழுங்குமாம் திமிங்கிலகிலம். நீங்கள் அரக்குப்பூச்சிக்கிலகிலத்தைத் தேடிப்பிடித்திருக்கிறீர்கள். போகட்டும். தமிழ்நாட்டு மரங்களின்மேல் இந்த அரக்குப்பூச்சி நன்றாக விருத்தியடையாதோ?"

"அடையாமல் என்ன? இலந்தைமரம், கருவேலமரம், இவைகளை யெல்லாங்காட்டிலும் புரசமரம்—"

புரசமரம், ஸம்ஸ்கிருதத்தில் பலாசவிருக்ஷமாம். பலாசந்தோப் புள்ள ஸ்தலம் பலாசி. இருநூறு வருஷங்களுக்குமுன் பலாசி என்கிற ரணகளத்தில், வங்காள தேச நவாப் ஸிராஜ்-உத்-தௌலாவைக் கிழக்கு இந்தியக் கம்பெனியார் வெல்லத் தவறியிருந்தால், இந்தியாவின் சரித்திரமே வேறுபட்டிருக்கும்; நம் ஒவ்வொருவருடைய வாழ்வும் வேறு நிலையில் நடக்கும்!

*   *   *   *   *

கட்டுச் சாதம் எடுத்துக்கொண்டு போய், உல்லாசமாகப் போஜனம் செய்வதற்குத்தக்க ஸ்தலங்கள் ராஞ்சியில் பல இருக்கின்றன. ராட்டு என்கிற ஏரி சுற்றுமுற்றும் அழகான இடத்தின் மத்தியில் இருக்கிறது. ஹூண்டுருவும் ஜோனுவும் பெயர்பெற்ற நீர்வீழ்ச்சிகள். இவை தவிர, ஊருக்குள்ளே ஒரு சிறிய மலை இருக்கிறது. அதன் சிகரத்தில் ஒரு கட்டிடம். கட்டிடத்தின்மீது என்ன காரணத்தினாலோ ஒரு சிலுவை காணப்படுகிறது. கட்டிடத்திற்குள் ஒரு லிங்கம் பிரதிஷ்டை செய்து பூஜிக்கப்பட்டு வருகிறது. ஆகையால் சிலுவைபோல் காண்பது அந்தத் தேசத்துத் தோரணையில் அமைக்கப்பட்ட திரிசூலமாயிருக்குமென்று விஷயமறிந்த ஒரு நண்பர் கூறுகிறார்.

சென்னபட்டணத்திலிருந்து வந்தவழியே திரும்பாமல், காசிக்குச் சென்று திரும்புவதாகத் தீர்மானித்தோம். ஆனால் அவ்விதம் செய்வதென்றால், ராஞ்சியிலிருந்து முப்பது மைல்தூரம் ரோடுமார்க்கமாக, மோட்டாரிலோ பஸ்ஸிலோ சென்று வேறொரு ரெயில்வே ஸ்டேஷனை அடையவேண்டும்.

ஆகவே ராஞ்சியை விட்டுப் பிரிவது எவ்விதத்திலும் கஷ்டமென்றே சொல்லலாம்.

பொய்யாகுமா?

எஸ். ஆர். வேங்கடராமன், பி. ஏ., பி. எல்.

டெக்கான் காலேஜ் (Deccan College) என்பது சில வருஷங்களுக்குமுன்பு புனாவில் பிரசித்தி பெற்ற ஒரு கலாசாலையாக இருந்தது. இன்றைக்கு அது



கோபாலகிருஷ்ண கோகலே

ஒரு கீழ்நாட்டு ஆராய்ச்சி நிலயமாக (Oriental Research Institute) விளங்குகின்றது. அக்கலாசாலையில் கல்வி பயின்று வெளியேறிய பல மாணவர்கள் பம்பாய்

மாகாணப் பொதுவாழ்க்கையிலும் கல்வித்துறையிலும் அரசியல் துறையிலும் உழைத்துப் பிரசித்தி பெற்றிருக்கின்றனர். அதன் மாணவர்களுள் மகாமேதாவிகளும் தேசபக்தர்களும் இருந்தனர். தம் வாழ்க்கைத் திறத்தால் அக்கலாசாலைக்கு ஒரு கண்யத்தையும், தேசத்திற்கு அழியாப் புகழையும் தேடிக்கொடுத்திருக்கின்றனர். அவர்களுள் பிரசித்திபெற்ற பால கங்காதர திலகர், கோபால்ராவ் கணேஷ் அகர்கர், கோபாலகிருஷ்ண கோகலே என்பவர்களை இந்திய நாடு முழுதும் நன்கு அறியும்.

அக்கலாசாலை இத்தனை பெருமையடைந்திருந்ததற்குப் பல காரணங்கள் உண்டு. அக்காலத்தில் பம்பாயைத் தவிரப் புனா ஒரிடத்தில்தான், பி. ஏ., படிப்புக்கும், எல் எல். பி., (LL. B.) படிப்புக்கும் வழியுள்ள கலாசாலை இருந்தது. இதன் காரணமாகப் பம்பாய் மாகாணத்தின் தென்பாகத்திலுள்ள மாணவர்களெல்லாம் அந்த ஒரு கலாசாலைக்கே வந்து சேரவேண்டியிருந்தது. மற்றொரு முக்கியமான காரணம் என்னவென்றால், அக்கலாசாலையில் பாடங்கற்பித்த ஆசிரியர்களெல்லாம் மிகப் பேர்படைத்தவர்கள். தங்கள் தொழிலில் உயர்ந்த லக்ஷியத்தையும் தேர்ச்சியையும் ஆற்றலையும் பெற்றவர்கள். அவர்களுள் இருவரைப் பற்றிக் கூறவேண்டுவது அவசியம். ஒருவர் பிரின்ஸிபால் வில்லியம் வொர்ட்ஸ்வர்த் (William Wordsworth) என்பவர்; பிரசித்தி பெற்ற ஆங்கிலக்கவியான வொர்ட்ஸ்வர்த்தின் பேரர். அவர் 1862-ஆம் வருஷம் முதல் 1874-ஆம் வருஷம் வரை டெக்கான் காலேஜில் பிரின்ஸிபால் வேலை பார்த்தார். அவர் ஒரு பெரிய பண்டிதர், படிப்பாளி, திறமை பெற்ற ஆசிரியர், உதாரகுணம் மிகுந்த ஆங்கிலச் சீமான். மாணவர்களுக்கு அவரிடம் என்றும் மாறாத அன்பும் பக்தியும் விசுவாசமும் உண்டு. அவருக்குப் பின்வந்த பிரின்ஸிபால் டாக்டர் எப். ஜி. ஸெல்பி (F. G. Selby) என்பவர். வொர்ட்ஸ்வர்த்தைப் போலவே இவரும் பெருந்தன்மையும், பண்பும், படிப்பும், பரந்த மனமும், நோக்கமும் படைத்தவர். இவர்களைப்போன்ற பல ஆங்கில ஆசிரியர்களும் இந்திய ஆசிரியர்களும் டெக்கான் காலேஜில் மகாராஷ்டிர யுவர்களுக்குக் கல்விகற்றுக் கொடுத்து, நன்னடத்தையையும் உன்னத லக்ஷியத்தையும் போதித்து வந்தனர். இதுவும் அக்காலேஜின் பிரசித்திக்கு மற்றொரு காரணம்.

டெக்கான்காலேஜ் புனா நகருக்கு வெளியில் கண்ணைக் கவரும் வனப்பு மிகுந்த மரமடர்ந்த ஒரு மேடான இடத்தில், மூதா (Mutha) வென்ற நதியின் இடது கரையை அடுத்து இருக்கிறது. கோகலே டெக்கான் காலேஜில் ஒரு வருஷம் பி. ஏ., வகுப்பில் படித்தார். அச்சமயத்தில் நேர்ந்த ஒரு சம்பவத்தைப் பற்றி இங்கே விவரிப்போம். டெக்கான் காலேஜில் மாணவர்கள் வசிக்க மாணவர் விடுதி ஒன்று உண்டு. அதில் சாதாரணக் குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களும் பணக்காரக் குடும்பத்துப் பிள்ளைகளுமேதான் வசிக்கமுடியும். ஏழைப்பையன்களால் அந்த விடுதியின் செலவைக் கொடுக்கமுடியாது. கோகலே ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர். ஹாஸ்டலில் அவரால் இருக்க இயலாமல் இருந்தமையால் புனாவிலேயே தம் நண்பர் ஒருவர் வீட்டில் வசித்து, ஒரு ஹோட்டலில் சாப்பிட்டு, அதிகச் செலவில்லாமல் வசித்துவந்தார். காலேஜுக்கும் இவர் வசிக்கும் இடத்திற்கும் மூன்று மைல் இருக்கும். காலேஜுக்குக் கால் நடையாகவே சென்று வருவார்.

இப்படியிருக்க, புனா ஜில்லாவைச் சேர்ந்த தபால் இலாகா சூபரின்டெண்டெண்டு தபால்காரர்கள் கடிதங்களைத் தவறாமல் விலாசதாரர்களுக்குக் கொண்டு போய்ச் சரியாகப் பட்டுவாடா செய்கிறார்களா இல்லையா வென்பதை அறியச் சோதனைக் கடிதங்களை ஊரில் பல பேருக்கு அனுப்பினார். அப்படி அனுப்பப்பட்ட

கடிதம் ஒன்று டெக்கான் காலேஜ் மாணவர் விடுதியில் வசித்துவந்த கோகலே என்ற ஒரு மாணவன் பெயருக்கு வந்தது. தபால்காரன், வழக்கம்போல் ஹாஸ்டலில் அந்தப் பெயருள்ள மாணவன் இருக்கிறானவென்று விசாரித்தான். அப்போது சிலரேதான் ஹாஸ்டலில் இருந்தனர். மற்றவர்கள் வெளியே போயிருந்தார்கள். ஹாஸ்டலில் தபால் காரன் போகும்போது ஆஜரில்லாமலிருக்கும் மாணவர்களின் கடிதத்தைத் தபால் காரன் வழக்கமாக, ஹாஸ்டல் மானேஜரின் ஆபீஸிலுள்ள ஒரு தபால் பெட்டியில் போட்டுப்போவது வழக்கம். இந்தத் தடவையும் கடிதத்தின்மீது எழுதியிருந்த பெயருள்ள மாணவனைக் காணமையால் எப்போதும்போல் மானேஜரின் ஆபீஸிலிருந்த தபாற் பெட்டியில் போட்டுவிட்டுப் போய்விட்டான். தபால்காரன் போனபிறகு வெளியில் போயிருந்த மாணவர்கள் திரும்பி வந்து தங்கள் தங்கள் கடிதங்களை எடுத்துக்கொள்வது வழக்கம். இந்த ஏற்பாடு நன்றாகத்தான் ஒருவிதப் புகாரும் இல்லாமல் நடந்துவந்தது. அந்தத் தபால்காரன் ஒரு முகம்மதியன்; வயதானவன், அனுபவமுள்ளவன். இன்னும் சில வருஷங்களில் ரிடையர் ஆகவேண்டியவன்; யோக்கியன். அவனிடத்தில் மாணவர்களுக்கு அன்பு உண்டு.

இது நடந்து இரண்டு நாட்கள் ஆயின. மூன்றாம் நாள், ஹாஸ்டல் சூபரின்டெண்டெண்டுக்குத் தபால் சூபரின்டெண்டெண்டிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில், தாம் டெக்கான் காலேஜ் ஹாஸ்டலில் உள்ள கே. பி. கோகலே என்ற மாணவனுக்கு ஒரு சோதனைக் கடிதம் எழுதியதாகவும், அது அந்த மாணவனுக்குக் கிடைத்ததாவென்பதை அறிந்து தெரிவிக்கும்படியாகவும் அவர் எழுதியிருந்தார். ஆயினும் ஹாஸ்டலில் அந்தப் பெயருள்ள மாணவனே இல்லை. தபால்காரன் தபாற் பெட்டியில் போட்ட கடிதமும் போனவிடம் தெரியவில்லை. அந்த ஹாஸ்டலில் கோபாலகிருஷ்ண கோகலேயின் வகுப்புத் தோழனான கர்மார்கர் என்ற ஒரு மாணவன் வசித்து வந்தான். அவனுக்கு வயது இருபத்தைந்துக்குமேல் இருக்கும். அவன் எப். ஏ., பரீக்ஷை தேறியதும் மேலே படிக்க முடியாமல் தபாலாபீஸில் எட்டு வருஷம் வேலை பார்த்துவிட்டுப் பணம் சேகரித்துக்கொண்டு பி. ஏ., படித்து, எல் எல். பி. (LL. B.) யும் படித்து வக்கீலாகவேண்டுமென்ற எண்ணத்துடன் மறுபடியும் டெக்கான் காலேஜில் பி. ஏ., வகுப்பில் சேர்ந்து கோகலேயுடன் படித்து வந்தான். அவன் தபாலாபீஸில் வேலைபார்த்தவனாதலின் அந்த இலாகாவின் விதிகளும் ரகசியங்களும் நடவடிக்கைகளும் அவனுக்கு நன்கு தெரியும். ஆகவே, ஹாஸ்டல் சூபரின்டெண்டெண்டு, கர்மார்கரைக் கூப்பிட்டு, தபால் சூபரின்டெண்டெண்டிடமிருந்துவந்த கடிதத்தைக் காட்டி, "இதோ, கர்மார்கர், இந்தக் கடிதத்தைப் பார். உங்கள் தபால் இலாகாவின் லக்ஷணத்தை. தப்பான விலாசத்திற்கு ஒரு சோதனைக் கடிதத்தை உங்கள் தபால் சூபரின்டெண்டெண்டு எழுதிவிட்டு இப்போது என்னை அக்கடிதத்தைப்பற்றிக் கேட்டிருக்கிறார். எனக்கு என்ன எழுதவேண்டுமென்று தெரியவில்லை. நீ நாளைக்குள் ஆணித்தரமான ஒரு பதிலைத் தயார் செய்யவேண்டும். உனக்குத் தபாலாபீஸ் விஷயமெல்லாம் தலைகீழாய்த் தெரியுமே; இந்தா கடிதம்" என்று சொல்லித் தபால் சூபரின்டெண்டெண்டின் கடிதத்தைக் கொடுத்துவிட்டுச் சென்றார்.

மேற்கூறிய சோதனைக்கடிதம் குறித்த விலாசதாருக்குச் சேராவிடில் அந்த வயதுவந்த முகம்மதியத் தபால்காரனின் வேலை போய்விடும் என்பது கர்மார்கருக்குத் தெரியும். இதற்கு ஒரு வழி செய்து ஏழைத்தபால்காரனைத் தப்புவிக்கவேண்டுமென்ற எண்ணமும் உண்டாயிற்று. ஓய்ந்த நேரத்தில், ஹாஸ்டலில் இருந்த ஒவ்வொரு

மாணவரிடத்தும் கர்மார்கர் சென்று யாராவது அக்கடிதத்தைப் பார்த்ததுண்டா என்று கேட்டான். கடைசியாக, அக்கடிதத்தின் விலாசமுள்ள மாணவன் ஹாஸ்டலில் இல்லையென்று அறிந்த ஒரு குமாஸ்தா அதைக் குப்பைத்தொட்டியில் போட்டுவிட்டதாகவும், அதைச் சமையல்காரன் அடுப்பில் போட்டு எரித்துவிட்டதாகவும் கர்மார்கருக்குத் தெரியவந்தது. ஹாஸ்டலில் கோகலே என்ற பெயருடைய மாணவன் ஒருவனும் இல்லை. இதற்காகக் கர்மார்கர் ஒரு யோசனை செய்தான். இடைவேளையில் தன் வகுப்பிலும் காலேஜிலும் கோகலே என்ற பெயருள்ள மாணவர்கள் யார் யார் இருக்கிறார்களென்று அறிந்துகொண்டு அவர்களிடம் தான் அவசரமாக ஒரு விஷயத்தைப்பற்றிப் பேசவேண்டுமென்று அவர்களை அழைத்து விஷயத்தைச் சொன்னான். அவர்களுள் கோபாலகிருஷ்ண கோகலே ஒருவர். மற்ற இருவர் கோகலே வம்சப் பெயருடையவர்களெனினும் அவர்கள் சொந்தப் பெயரும் தந்தையின் பெயரும் தெரியவில்லை. அவர்களை நாம் பாபுராவ் கோகலே என்றும் கண்பத்ராவ் கோகலே என்றும் வைத்துக்கொள்வோம்.

அந்நால்வருக்குள் பின்வருமாறு சம்பாஷணை நடந்தது:

கர்மார்கர்: இச்சோதனைக் கடிதம் கோகலே என்பவனுக்கு எழுதப்பட்டிருக்கிறது. தபால் இலாகா விதிப்படி, அந்தப் பெயருள்ள ஒருவன் தபால் சூபரின்டெண்டெண்டுக்குத் தகவல் கொடுக்காவிட்டால் தபால்காரன் வீட்டிற்குப் போகவேண்டியது தான். நமது ஹாஸ்டல் தபால்காரன் மிகவும் நல்லவன்; வயதானவன். அவனது குடும்பமோ பெரிது. அவன் தாயோ ஒரு வயதான கிழவி. அவனுக்கு ஒரு மனைவியும் எட்டுக் குழந்தைகளும் உண்டு. அவர்களை அவன் காப்பாற்றவேண்டும். அவனை நான் நன்கு அறிவேன். நீங்களும் ஒருவாறு அறிவீர்கள்; கடவுள் பக்தியுள்ளவன். பாபத்திற்குப் பயந்து நடப்பவன். ஏதோ அவனுடைய போதாத வேளை; அவனுக்கு அக்கடிதத்தால் ஒருவிதமான கஷ்டமும் வராமல் செய்யவேண்டியது அவசியம்.

பாபு ராவ்: நாம் என்ன செய்வது? விலாசதாரருக்குக் கடிதத்தைச் சரியாகப் பட்டுவாடாச் செய்யாத தபால்காரனுக்கு இரக்கப்படுவானேன்? என்ன கர்மார்கர்; இந்தத் தபால்காரப் பையனுக்கு இந்த வேலை செய்யத்தானே சம்பளம் கொடுக்கிறார்கள்? இதைச் செய்வதற்குச் சோம்பல்பட்டுப் பெட்டியில் போட்டால் அதற்கு யார் என்ன செய்வது? அதன் சுகதுக்கத்தை அவனேதான் அனுபவிக்க வேண்டும். இதில் நாம் தலையிடுவானேன்; வேண்டாத தொல்லை!

கர்மார்கர்: பாபுராவ், சற்றுக் கவனித்துக் கேள். நீ சொல்வதெல்லாம் வாஸ்தவந்தான். இதுவரை அவன்மீது ஒருவிதமான புகாரும் இல்லை. ஏதோ இந்தத் தடவை அவனை அறியாமலே இது நடந்துவிட்டது. ஓர் ஏழைக்குக் கஷ்டம் வந்தால் உதவி செய்யவேண்டியது மனிதர்களின் கடமை. காசு செலவில்லாமல், கஷ்டமில்லாமல் செய்யமுடியுமானால் நாம் ஏன் செய்யக்கூடாது? இதற்கு ஒரு வழி இருக்கிறது. உங்களில் ஒருவர் அக்கடிதம் வந்தபோது என்னுடன் ஹாஸ்டலில் இருந்ததாகவும், அக்கடிதத்தைப் பெற்றுக்கொண்டதாகவும், அக்கடிதத்தின் பேரில் கே. பி. கோகலே என்று எழுதியிருந்ததாகவும், அப்பெயர் உள்ள மாணவர் ஹாஸ்டலிலும் காலேஜிலும் இல்லாமையால் அதன்மீது, 'இந்தப் பெயருள்ள மாணவன் இந்த ஹாஸ்டலிலும் காலேஜிலும் இல்லையென்று எழுதித் தபால் பெட்டியில் போட்டுவிட்டதாகவும் ஒரு கடிதம் எழுதி ஹாஸ்டல் சூபரின்டெண்டெண்டு

மூலமாகத் தபால் சூபரின்டெண்டெண்டுக்கு அனுப்பினல் தபால்காரன் தப்பித்துக் கொள்வான்.

இதற்குள் கண்பத்ராவ் கோகலே வெகு ஆத்திரப்பட்டு, "என்ன கர்மார்கர், நீ சொல்வது அழகாக இருக்கிறது. எதற்காக நாம் மனச்சாக்ஷிக்கு விரோதமாக இவ்விதமான பொய்நடத்தையில் பிரவேசிக்கவேண்டும்? கடிதமோ ஹாஸ்டல் மாணவனுக்கு எழுதப்பட்டிருந்ததாகச் சொல்லுகிருய். நாங்களோ ஹாஸ்டல் மாணவர்களல்ல; மற்றும் அக்கடிதம் கே. பி. கோகலே என்ற மாணவன் பெயருக்கு வந்தது. எங்களில் ஒருவரும் அப்பெயருடையவரல்ல. ஒரு தபால்காரனைக் காப்பாற்ற எங்களைப் பொய் சொல்லச் சொல்லுகிருயே. அத்தீங்கு எங்களால் விளைந்திருந்தால், நாங்கள் அவனுக்கு உதவிசெய்வதில் ஏதாவது பொருத்தம் இருக்கும். இதில் ஒரு பொய்யா சொல்லவேண்டும்? பல பொய் சொல்லவேண்டுமே! ஹாஸ்டலில் இல்லாத நாங்கள் அந்தச் சமயத்தில் ஹாஸ்டலில் இருந்ததாக வேறு சொல்லவேண்டும். கடிதத்தைப் பார்க்காத நாங்கள் கடிதத்தைத் தபால்காரனிடமிருந்து வாங்கினதாகச் சொல்லவேண்டும். பிறகு அக்கடிதம் எங்களுக்கல்லவென்று எழுதி மறுபடியும் தபால்பெட்டியில் போட்டுவிட்டதாகவும் சொல்லவேண்டும். இவ்வளவு பொய் சொல்வதனல் நமக்கு ஏதேனும் லாபமுண்டா? இவையெல்லாம் பொய் என்று தெரிந்துகொண்டே நாம் என் இக்காரியத்தைச் செய்யவேண்டும்? வேண்டுமென்றால் நீயே அப்படிச் செய்யலாமே" என்றான்.

கர்மார்கர் இதைக் கேட்டு வருத்தத்துடன், "இதோ பார், கண்பத்ராவ்: நீ சொல்வதெல்லாம் உண்மை என்றே வைத்துக்கொள். தபால்காரன் நிரபராதி என்பது உனக்கு நன்ருகத் தெரியும்; அவன் ஏழை என்பதையும் நீ அறிவாய். இக்கடிதத்திற்குத் தக்க பதிலைச் சூபரின்டெண்டெண்டு பெருவிடில், தபால்காரனை வேலையை விட்டு நீக்கிவிடுவார். பொய் சொல்வதனல் நமக்கு என்ன லாபமுண்டு என்கிருய். பொய்சொல்லி நாம் லாபமடைவது சரியல்ல; வாஸ்தவமே. ஆனல் பிறர் நலத்திற்காக ஒருவருக்கும் கஷ்டத்தை விளைக்காமல் பொய் சொல்வதில் ஒரு விதமான விலக்குமில்லை. நானே அவ்விதம் என் செய்யக்கூடாது என்று கேட்கிருய்; அதற்கு ஒரு காரணம் இருக்கிறது. என் பெயர் கோகலேயல்ல; கர்மார்கர். நான் எழுதினல், கோகலே பேருக்கு வந்த கடிதத்தைத் தபால்காரன் அஜாக்கிரதையாக வேருெருவனுக்குப் பட்டுவாடா செய்தான் என்ற குற்றம் ஏற்படும். அதனல் அவனுக்குத் தண்டனை ஏற்படுவது நிச்சயம். கோகலே என்ற பெயருக்கு வந்த அந்தக் கடிதத்தைப்பற்றிக் கோகலே என்ற பெயருடைய வேருெருவர் எழுதினல் அதைத் தபால் இலாகா அதிகாரிகள் குற்றமாகக் கருத மாட்டார்கள். அதனல்தான் நான் உங்களில் ஒருவர் இந்தத் தபால்காரனை இக்கஷ்டத்தினின்றும் காப்பாற்ற வேண்டுமென்கிறேன். இதில் ஏதோ பொய் சொல்ல உங்களைத் தூண்டிவிட்டு, நான் தப்பித்துக் கொள்ளப் போவதாக எண்ணுகிறீர்கள். இது முற்றும் தப்பு" என்ருன்.

பிறகு பால்வடியும் வதனத்தையுடைய சிறுவனை கோபாலகிருஷ்ண கோகலேயைக் கர்மார்கர் பார்த்து, "என்ன கோபால்ராவ், நீதான் இவ்விஷயத்தில் உன் அபிப்பிராயத்தை இன்னும் தெரிவிக்காமல் இருக்கிருய். உன் அபிப்பிராயம் என்னவோ? நீயும், பாபுராவ் கண்பத் ராவ் இவர்களைப்போலவே அபிப்பிராயம் உடையவனயிருந்தால், பாவம் இந்தத் தபால்காரன் கதி அதோகதிதான். நான் தபால் இலாகாவில் உத்தியோகம் பார்த்திருப்பவனுதலால், அதன் நுட்பங்களை நன்கு அறிவேன். நான் சொன்னபடி செய்தால் அந்தத் தபால்காரனைத் தப்புவிக்கலாம். அதனல் அவ

னுடைய பெண்சாதி குழந்தைகள் எல்லாம் கஷ்டத்தை அனுபவியாமல் இருக்க நேரிடும். யோசித்து உங்களில் ஒருவர் நான் கூறியபடி நடந்தால்தான் தபால்காரன் தப்புவான். நீ என்ன சொல்கிறாய்? கோபால் ராவ்'' என்றான்.

அதற்குள்ளாகப் பாபுராவ், ''கர்மார்கர், உனக்கென்ன அத்தபால்காரன்மீது அவ்வளவு இரக்கம்? அவனே வந்து நம்மைக் கேட்டால் அப்போது அவனுக்கு உதவி செய்வது நமக்கும் பெருமை'' என்றான்.

கோபால்ராவ்: பாபுராவ், ஒருவனுக்குத் தெரியாமலேயே அவனுக்கு உதவி புரிவது நல்லது. ஒருவன் கஷ்டப்படுகிறான் என்று தெரிந்தால், அக்கஷ்டத்தை நீக்கும் சக்தி ஒருவனுக்கு இருந்தால், அவன் தானாகவே பிறரறியாமல் அக் கஷ்டத்தை நீக்கி உதவி செய்ய வேண்டியது அவன் கடமை. இந்த விஷயத்தில், தபால்காரன் நம்மை வந்து உதவி செய்யும்படி கேட்காதிருப்பதால் நாம் நம்மாலான உதவியைச் செய்யாதிருப்பது சரியல்ல. நாம் உதவி செய்யமுடியுமானால் அவனை அறியாமலேயே செய்வதுதான் நல்லது. ஆயினும் கர்மார்கர், இந்த விஷயத்தில் நீ எங்களையெல்லாம் ஒரு தர்மசங்கடத்தில் கொண்டுவந்துவிட்டிருக்கிறாய். கண்பத் ராவும் பாபுராவும் சொல்லும் ஓர் ஆக்ஷேபம் என் மனத்தையும் கலக்குகிறது. ஒரு தபால்காரனைக் காப்பாற்ற என்னவோ பொய்சொல்ல நேரிடுகிறதே என்றுதான் எண்ணவேண்டியிருக்கிறது. என்றாலும் நாம் ஒருவிதமாக மனத்தைச் சமாதானம் செய்துகொள்ளலாம் என்றெண்ணுகிறேன்.

பாபுராவ்: சொல்வதோ பொய். அதில் மனத்தை எப்படிச் சமாதானம் செய்து கொள்வது? கோபால்ராவ், உனக்கு இன்னும் உலகம்......

கர்மார்கர்: பாபுராவ், சற்றுப் பொறேன். இதுவரை நாம் எல்லாம் பேசும் போது ஒருவரும் குறுக்கிட்டுப் பேசவில்லை. கோபால்ராவ் நம்மைவிட வயதில் மிகச் சிறியவன். என்றாலும் அவனுடைய அபிப்பிராயத்தையும் கேட்கலாமே. அவன் சொல்லும் வழி நம்மை இசசங்கடத்தினின்றும் மீட்கலாம். மேலே சொல்லு பார்க்கலாம்: கோபால்ராவ்.

''நான் பொய் சொல்வதை இரண்டாகப் பிரிக்கிறேன். ஒன்று தன் சுயநலத் தைக் கருதி, லாபத்தைக் கருதி, அதனால் பிறர்க்குக் கஷ்டத்தையும் நஷ்டத் தையும் விளைத்து உலகத்தில் துன்பத்தை உண்டாக்கச் சொல்லும் பொய். மற்றது முற்றும் தவறானது; அதர்மம். இவ்விதப் பொய்யை யாரும் சொல்லக்கூடாது. நாங்களும் சொல்லத் தயாராக இல்லை.

கண்பத்ராவ்: அடே! கோபால் ராவ் நமக்கு நீதிதர்மம் போதிக்கிறான், பேஷ், அப்புறம்?

கர்மார்கர்: இப்பொழுதுதான் பாபுராவுக்குச் சொன்னேன். கோபால்ராவ் சொல்லும் யோசனையினால் இந்தச் சிக்கலில் நாம் தப்பப் போகிறோம் பார்: கடைசிவரை அமைதியாய்க் கேள்.

கோபால்ராவ்: நான் பெரியவர்கள் சொல்வதைக் கேட்டுச் சொல்லுகிறேன். நம் சாஸ்திரங்களில் உள்ளதைப் படித்து, எனக்குத் தோன்றியதைச் சொல்லு கிறேன். இதை நீங்கள் எற்றுக்கொள்ளவேண்டுமென்ற கட்டாயமில்லை. நம் சாஸ்திரங்களிலும் புராணங்களிலும், சில சமயங்களில் பெரிய லக்ஷியத்தைக்குறித்து, லோகஹிதத்தைக் குறித்து, ஜனங்களின் க்ஷேமத்தையும் குறித்துப் பொய் சொல்ல லாம் என்று கூறப்படுகிறது.

பாபுராவ்: கோபால்ராவ், ஜனங்களின் க்ஷேமத்தைக்குறித்துப் பொய் சொல்லலாம் என்கிறீர்களே. அம்மாதிரியான பொய்யை எப்போது சொல்லலாம்? ஓர் உதாரணம் சொல்லு பார்ப்போம்.

கோபால்ராவ்: உதாரணம் சொல்லத்தான் நினைத்திருந்தேன். அதற்குள் நீயே அதைக் கேட்டதைப்பற்றிச் சந்தோஷம். உதாரணமாக இரண்டு மூர்க்கர்கள் ஒருவரோடொருவர் சண்டையிட்டுக்கொள்ளுகின்றனர். ஒருவன் கோபமேலீட்டால் மற்றவனைக் கொல்ல வீட்டிற்குள் நுழைந்து ஒரு கத்தியெடுத்து வருகிறான். அதற்குள் மற்றவன் தன் விரோதியின் எண்ணத்தை அறிந்துகொண்டு உயிர்தப்பிப் பிழைக்க ஓட்டமெடுக்கிறான். வீட்டிற்குள் நுழைந்தவன் கத்தியும் கையுமாய் மற்றவனைப் பின் தொடர்கிறான். உயிருக்குத் தப்பியோடியவன், துரத்துபவனுக்குக் கண்மறைவாய்ச் சென்று ஓர் அடர்ந்த மரத்தில் ஏறிக்கொள்ளுகிறான். அவ்வழியில் வரும் நீ இதை நேராகப் பார்க்கிறாய். சற்று நேரத்தில் கத்திகொண்டு துரத்தும் துன்மார்க்கன் உன்னைக் கண்டு, 'இந்த வழியாக ஒருவன் ஓடிவந்தானே; அவனைக் கண்டாயா என்று கேட்கிறான். கத்தியேந்தி நிற்பவன் குரல், தோற்றம், படபடப்பு இவற்றைக் காணும் உனக்கு அவன் தீத்தொழில் புரியத்துணிந்தவன் என்பது விளங்கும். அதை யறிந்த நீ என்ன செய்யவேண்டும்? மரமேறி ஒளிந்துகொண்டவனைக் காட்டிக் கொடுத்து, அவனுடைய கொலைக்குக் காரணமாவாயா? அல்லது, 'நான் ஒருவனும் இவ்வழி வந்ததைக் காணேனே' என்று ஒரு பொய் சொல்லி, மரத்தில் ஒளிந்திருப்ப வனுக்கு உயிர்ப்பிச்சை அளிப்பாயா? 'அவனைக் காணேன்' என்று சொல்வது முழுப் பொய். அதனால் அவன் உயிர்தப்புவான். 'அவனைக் கண்டேன்' என்று சொல்வது உண்மை. அதனால் மரத்தில் இருப்பவன் கொலை செய்யப்படுவதற்கு நீ காரண மாவாய். கத்தி யேந்தி வருபவனிடம் பேசி, மரத்திலிருப்பவனைக் கொல்லாமலிருக் கும்படி அவனது மனத்தைத் திருப்பி, இருவருக்கும் சமாதானம் செய்வித்துச் சிநேக ஆர்வத்தை யுண்டுபண்ணும் சக்தியும் தைரியமும் இருந்தால், 'ஆம், இதோ மரத்தில் இருக்கிறான். அவனைக் கொல்லாதே. நான் சொன்னபடி கேள்' என்று சொல்ல லாம். இவ்விதம் செய்வதற்கு ஏதேனும் சந்தேகம் இருப்பின் ஒரு பெரிய பொய்யைச் சொல்வது பாவமாகாது.

கண்பத்ராவ்: தபால்காரன் விஷயம் அவ்விதமானதன்றே. இந்த உதாரணம் இதற்கு ஏற்றதல்ல.

கோபால்ராவ்: இல்லை கண்பத்ராவ்; நான் மிகவும் கோரமான விஷயத்தை எடுத்துச் சொன்னால்தான் அதன் தத்துவம் விளங்கும் என்று எடுத்துரைத்தேன். அதாவது, ஒருவனுக்குச் சுகத்தை ஒரு பொய் சொல்லி எளிதில் தேடிக்கொடுக்க முடியுமானால் பொய் சொல்வதில் பிசகில்லை. உண்மையையும் சொல்லிச் சுகத்தைத் தேடிக்கொடுக்கலாம். அது முடியாதவிடத்தில் பொய்சொல்வதால் பாதகமில்லை என்பது நம் பெரியோர்களின் கொள்கை. இதில் ஒரு விஷயம் நன்றாய் நினைவு வைத்துக்கொள்ளவேண்டும். பொய்சொல்வதனால் பிறருக்கு ஒரு தீங்கும் ஏற்படக் கூடாது. தீங்கு ஏற்பட்டாலும் பொய் சொல்வதால் ஏற்படும் நன்மை, ஏற்படும் தீங்கைக்காட்டிலும் பன்மடங்கு அதிகமாயிருந்தால் பொய் சொல்வதில் தப்பில்லை. நமது சுயநலத்தைக் கருதிப் பிறரின் துக்கத்திற்கும் கஷ்டத்திற்கும் காரணமான பொய்யை மாத்திரம் சொல்லக்கூடாது.

பாபுராவ்: கோபால்ராவ், நீ பலே பேர்வழி. இதெல்லாம் நீ எங்கேயப்பா படித்தாய்? சரி, சாஸ்திரத்திலும் புராணத்திலும் இதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது? சொல் பார்ப்போம்.

எங்கும் விற்பனை செய்யப்படுகிறது !

காமினியா தைலம்
(ரெஜிஸ்டர்ட்)

உங்கள் கூந்தலை வாரிக்கொள்வதில் பெருமை அடைந்து அதே சமயம் தலைக்கு ஒரு விதமான கெடுதலும் நேராதபடி பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

'இந்த உலகமே வெளிப்பார்வைக்கு நன்றாக இருப்பதைத்தான் விரும்புகிறது.' இது முற்றும் உண்மையே. பளப்பளப்பான அழகிய கூந்தல் உங்களுடைய முகவசீகரத்தை விருத்திசெய்கிறது. அழகிய அடர்ந்த கூந்தல் இந்தியப்பெண்கள் பெருமை அடையக்கூடிய இயற்கை ஐசுவரியமாகும். அதுவுமன்றி, செழித்த நீண்ட கூந்தல் நல்ல தேகாரோக்கியத்திற்குரிய லக்ஷணமாகும். 'காமினியா தைலம்' மண்டையைச் சுத்தப் படுத்திக் குளிர்விக்கிறது; மயிர்க்கால்களை அடைத்து மயிர் வளர்ச்சியைத் தடைப் படுத்தும் பொடுகு முதலியவற்றை நீக்கி விடுகிறது. புதிதாக மயிர் செழித்து வளர்வதற்கு ஏதுவாக இருக்கிறது.

ஒரு புட்டி விலை ரூ. **1**.

மூன்று புட்டி விலை ரூ. **2-10-0**. வி. பி. செலவு தனி.
இனாம் ஸாம்பிளுக்கு ½ அணாத் தபால் தலை அனுப்புக.
ஸோல் ஏஜெண்டுகள்:

தி ஆங்கிலோ இந்தியன் டிரக் & கெமிக்கல் கம்பெனி
பம்பாய்.

ராக்போர்ட் பிராவிடெண்ட் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

தலைமை ஆபீஸ்: திருச்சிராப்பள்ளி
கவர்ன்மெண்ட் செக்யூரிட்டி கட்டப்பட்டது.

மிகுந்த பாதுகாப்பு — நல்ல நிர்வாகம்
குறைந்த பிரீமியம்.

ரூ. 100 முதல் ரூ. 500 வரை இன்ஷ்யூரன்ஸ் செய்யலாம். மாதம் எட்டு அணா முதல் பிரீமியம் உள்ளது. ஜில்லாக்கள்தோறும் ஆர்கனைசர்களும், ஏஜெண்டுகளும் தேவை. சம்பளமும் கமிஷனும் உண்டு.

விவரங்களுக்கு எழுதுக.

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்யகலா நிதி

டாக்டர் உ. வே. சாமிநாதையர்

எழுதிய வசன புஸ்தகங்கள்

1.	புத்தசரித்திரம், பௌத்ததருமம், பௌத்த சங்கம்	...	0	12	0
2.	மணிமேகலைக் கதைச் சுருக்கம்	...	0	8	0
3.	உதயணன் சரித்திரச் சுருக்கம்	...	1	0	0
4.	மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் சரித்திரம் I	...	2	0	0
5.	,, II	...	2	0	0
6.	நான் கண்டதும் கேட்டதும்	...	0	6	0
7.	புதியதும் பழையதும்	...	0	9	0
8.	நல்லுரைக்கோவை முதற்பாகம்	...	0	12	0
9.	ஷை இரண்டாம் பாகம்	...	0	12	0
10.	ஷை மூன்றாம் பாகம்	...	0	12	0
11.	ஷை நான்காம் பாகம்	...	0	12	0
12.	நினைவு மஞ்சரி	...	1	0	0
13.	திருவள்ளுவரும் திருக்குறளும்	...	0	3	0
14.	கனம் கிருஷ்ணையர்	...	0	8	0
15.	கோபாலகிருஷ்ண பாரதியார்	...	0	8	0
16.	மகாவைத்தியநாதையர்	...	0	6	0

மானேஜர்—கலைமகள்—மயிலாப்பூர்

Highly useful to students of High Schools and Colleges!

1002 Essays! 606 Letters!!

MODERN ESSAYS & LETTERS

By T. I. Johnson, MA., L.T., & Five Experienced Graduates

The book contains 360 Essays fully written and 642 topics in outline; 57 Typical letters given in full and 547 topics suggested as Exercises.

Price Rs. 2-1-0 per copy. Postage and Regn. 11 as. extra. No V.P.P.

Highly useful to pupils of Higher Ely. and of Middle Schools!

EASY ESSAYS & LETTERS for the YOUNG

by An Experienced L. T.

Contains 150 Essays and 30 Letters. Young pupils will find this book very helpful. Bound on Boards. Price: 12 as. Postage and Regn. 5 as. extra. No. V. P. P.

The Little Flower Co., P.B. 99, G.T., Madras, E.

கலைமகள் வருடசந்தா

(தபால் செலவுடன்)

இந்தியா, ஸிலோன் ரூ. 4-0-0

பர்மா ரூ. 4-8-0

பினங்கு, சிங்கப்பூர், நேடால் ரூ. 6-0-0

தனி ஸஞ்சிகை அணா 6

அல்லது 36 சதம்

கோபால்ராவ்: இதோ சொல்கிறேன். தபால்காரனைப் பற்றிய விஷயத்தில் பொய் சொல்வது தப்பல்ல. லோகஹிதத்தையே லக்ஷியமாகக்கொண்டு, சுயநலத்தையும் லாபத்தையும் கருதாமல் இருந்தால் நாம் பொய் சொல்லலாமென்பதற்கு மகாபாரதத்தில் ஒரு சான்று உண்டு. மகாபாரத யுத்தம் லோகஹிதத்திற்காக ஏற்பட்ட யுத்தம். துஷ்ட நிக்ரஹ சிஷ்டபரிபாலனார்த்தம் ஏற்பட்ட யுத்தம். மகாபாரத யுத்தத்தில், பதினைந்தாம் நாள் போரில் அர்ஜுனன் துரோணரை எதிர்த்துப் போராடினன். துரோணர் ஆயுதமேந்திக் கௌரவர்கள் பக்கம் போராடும்வரையில் பாண்டவர்களுக்கு ஜயம் ஏற்படாது என்பதையுணர்ந்த ஸ்ரீ கிருஷ்ணபகவான் அசுவத்தாமாவைக் கொன்று அச்செய்தியைத் துரோணருக்குத் தெரிவித்தால் அவர் சண்டை செய்யாதொழிவார் என்று அர்ஜுனனுக்கு எடுத்துரைத்தார். இதற்கு அர்ஜுனன் சம்மதப்படவில்லை. எனினும் பராக்கிரமசாலியான பீமன் மாளவ தேசத் தரசனது அசுவத்தாமன் என்னும் பெயர் பூண்ட யானையைக் கொன்று அசுவத்தாமன் இறந்தான் என்று துரோணரிடம் சென்று தெரிவித்தான். இதன் உண்மையை அறியும்பொருட்டு, மனத்தளர்ச்சியடைந்த துரோணர் பஞ்சபாண்டவர்களில் மூத்தவரான தருமரிடம் சென்று, 'அசுவத்தாமன் இறந்தது உண்மைதானா?' என்று கேட்டார். அவர் தருமரிடம் வருவதற்குள் ஸ்ரீ கிருஷ்ண பகவான் தருமரைக் கண்டு, 'இதோ பார் தர்மபுத்ரா! இந்த மஹா பாரதயுத்தம் தர்மயுத்தம். லோகஹிதத்திற்காக இந்த யுத்தம் நடக்கிறதேயொழியப் பாண்டவர்களாகிய உங்களது நன்மைக்காகவல்ல. ஆதலால் துரோணர் வந்துகேட்டால், அசுவத்தாமன் இறந்தது வாஸ்தவம் என்று சொல்' என்றார். தருமர் மனம் ஒவ்வாது தவித்தார். கடைசியாகத் துரோணர் வந்தபோது, 'மாண்டான் அசுவத்தாமன்' என்பதை உரக்கச்சொல்லி, 'என்ற யானை அரசு' என்னும் கடைசிப்பாகத்தை மெதுவாக உச்சரித்தாராம். என் அபிப்பிராயத்தில் தபால்காரன் விஷயத்தில் நாம் ஒரு சிறிய பொய்கூறுவது சற்றும் பிசகல்ல.

கர்மார்கர்: சபாஷ், கோபால்ராவ்! இப்போது பாபுராவ், கண்பத்ராவ், இவ்விருவர்களின் சந்தேகமும் தீர்ந்திருக்கும்.

பாபுராவ்: கோபால்ராவ் சொல்வது என்னவோ நியாயமாகத்தான் தோன்றுகிறது. ஆனல் நாம் செய்தது வெளியில் தெரிந்தால் ஆபத்து வருமேயென்றுதான் பயப்படுகிறேன்.

கண்பத்ராவ்: அப்படியானல், கோபால்ராவ், நீயே ஏன் கர்மார்கர் சொற்படி செய்யக்கூடாது?

கோபால்ராவ்: எனக்குச் சம்மதம். பாபுராவ் சொன்னமாதிரி இவ்விஷயம் நம் நால்வரைத் தவிர வேறு யாருக்கும் தெரியக்கூடாது. நீங்கள் இவ்விஷயத்தை வெளியில் ஒருவரிடமும் சொல்வதில்லையென்றால் நான் அப்படியே செய்யத் தயார்.

கர்மார்கர்: எனக்குக் கோபால்ராவ் சொல்வது சம்மதம். நான் இந்த விஷயத்தை வெளியில் ஒருவரிடமும் சொல்லப்போவதில்லை. நீங்களும் சொல்லாமல் இருந்தால்தான் நான் கோபால்ராவை அம்மாதிரிக் கடிதம் எழுதிக்கொடுக்கச் சொல்லமுடியும்.

பாபுராவ், கண்பத்ராவ்: ஆஹா, அப்படியே. கோபால் ராவ் அப்படிச் செய்வதில் எங்களுக்கு ஒரு கௌரவம். நாங்கள் அக்கௌரவத்தை இழக்காமல் போற்றுவோம்.

அன்று சாயந்திரமே, கோபாலகிருஷ்ண கோகலே, கர்மார்கருடன் ஹாஸ்டல் சூபரின்டெண்டெண்டினிடம் சென்று, கே. பி. கோகலேக்குக் கடிதம் வந்த தினத்தன்று தாம் ஹாஸ்டலில் இருந்ததாகவும், ஹாஸ்டலில் அந்தப் பெயருடையவர் எவரும் இல்லாததால் அக்கடிதம் தமக்குக் கொடுக்கப்பட்டதென்றும், அக்கடிதம் தமக்கு எழுதப்பட்டதல்லவென்று தெரிந்தவுடனே 'இந்தப் பெயருடையவர் இந்த ஹாஸ்டலில் இல்லை' என்று அதன்மீது எழுதிக் கையெழுத்தும் தேதியும் போட்டுத் தபால்பெட்டியில் போட்டுவிட்டதாகவும் ஒரு கடிதத்தை எழுதிக்கொடுத்துத் தபால் சூபரின்டெண்டெண்டுக்கு அனுப்பும்படி வேண்டிக்கொண்டார். இவ்விஷயத்தைச் சிறிதும் அறியாத ஹாஸ்டல் சூபரின்டெண்டெண்டு அக்கடிதத்தைத் தபால் சூபரின்டெண்டெண்டுக்கு அனுப்பிவிட்டார்.

இதையெல்லாம் ஆபீஸுக்கு வெளியில் ஜன்னல் ஓரமாய் ஒளிந்து நின்றுகொண்டு பாபுராவும் கண்பத்ராவும் பார்த்துக்கொண்டிருந்தனர். ஹாஸ்டல் சூபரின்டெண்டெண்டு, அக்கடிதத்தை வாங்கித் தலையை யசைத்து, 'சரி' என்று சொன்னதைக் கண்டு அவ்விருவரும் ஆனந்தவெள்ளத்தில் மூழ்கியவர்கள் போல் தலைதெறிக்கத் தாம் விளையாடும் மைதானத்திற்கு ஓடினர்.

[குறிப்பு: இச்சம்பவத்தைக் கோகலேயின் நெருங்கிய பந்துவான காலஞ்சென்ற ஸ்ரீ வாசுதேவ தத்தாத்ரேய கவலங்கர் என்னிடம் நேரில் சொன்னார்.]



குஸுமா

சரத்சந்த்ர சட்டர்ஜி

[மொழிபெயர்த்தவர்: அ. கி. ஜயராமன்]

(சென்ற இதழ் 285-ஆம் பக்கத் தொடர்ச்சி)

[முன்கதைச் சுருக்கம்: குஸுமா என்ற பெண்ணுக்குச் சிறு வயதில் பிருந்தாவனன் என்ற பணக்காரச் சிறுவனுடன் விவாகம் நடக்கிறது. பின்னர் அவள் தாய்க்கு ஏற்பட்ட கெட்ட பெயரினால், குஸுமாவை விலக்கிவைத்துத் தம் மகனுக்கு வேறு கல்யாணம் செய்துவிடுகிறார் பிருந்தாவனன் தந்தை. குஸுமாவின் தாயும் கோபங்கொண்டு தன் ஜாதி வழக்கப்படி பெண்ணுக்கு மாங்கல்ய விஸர்ஜனக்கிரியை நடத்திவிடுகிறாள். குஸுமா பெரியவளாகித் தன் அண்ணன் குஞ்சநாதன் சில்லறை வியாபாரம் செய்து பிழைக்க, அவனுக்கு உதவியாக இருக்கிறாள். இதற்குள் பிருந்தாவனன் தந்தையும், ஒரு மகனை விட்டு அவன் இரண்டாம் மனைவியும் இறந்துவிடுகிறார்கள். மீண்டும் மணந்துகொள் என்று தன் தாய் வற்புறுத்தியும் அவன் கேட்காமற்போகவே அவள் குஸுமாவையே ஏற்றுக்கொள்ள இணங்குகிறாள். ஒருநாள் குஞ்சனை அவர்கள் தம் வீட்டுக்கு அழைத்து உபசரித்தபோது அவனும் பிருந்தாவனன் முதலியவர்களை விருந்துக்கு அழைத்துவிட்டுத் தன் தங்கைக்குப் பயந்து எங்கோ தலைமறைவாக இருந்துவிடுகிறான். அன்று குஸுமாவின் சங்கடநிலையைக் கண்டு பிருந்தாவனன் தன் தாய்க்குத் தெரியாமல் அவளுக்கு உதவி புரிகிறான். குஸுமாவிற்கு அன்றுதான் அவன்மீது காதல் ஏற்படுகிறது. பிறகு தாயும் மகனும் குஸுமாவை அழைத்துவர ஏற்பாடு செய்கின்றனர். குஞ்சனுக்கும் விவாகம் நிச்சயம் செய்கிறார்கள். குஸுமாவுக்கு அவள் மாமியார் முன்பு மனப்பூர்வமாக அளித்த ஒரு ஜோடிப் பொன் வளையலை அன்றே, 'குஸுமா கொடுத்தாள்' என்று சொல்லித் திருப்பித்தருகிறான் குஞ்சன். இந்தச் சம்பவத்தினால் அவர்கள் மனம் முறிந்துவிடுகிறது. குஞ்சனுக்கு விவாகம் ஆனபின் அவன் தன் தங்கையைச் சட்டைசெய்வதே இல்லை. ஒருநாள் பிருந்தாவனன் தன் மகனுடன் குஞ்சனைக் காண வரும்போது வேதனையால் வாடும் குஸுமாமட்டும் அங்கே இருக்கிறாள். குழந்தையைக் கண்டதும் அதன்பால் குஸுமாவுக்கு வாஞ்சை ஏற்பட அதை அணைத்துக்கொள்கிறாள். ஆயினும் அவளைப் பிருந்தாவனன் அழைத்துக்கொள்ளவில்லை. அதனால் அவளுக்கு அவன்மேல் கோபம் உண்டாகிறது. ஒருநாள் அவன் அவளை அழைத்தும், 'கந்தல்புடவையுடன் வரச்சொல்கிறாரே' என்று கோபப்பட்டுப் பதற்றமாகப் பேசுகிறாள். விரைவிலே பிருந்தாவனன் மறுவிவாகம் செய்துகொள்வானென்றும் அறிகிறாள்.]

அத்தியாயம் 10

எந்த நிலைமையிலும் கலங்காமல், வெட்கமோ, கோபமோ, ஆத்திரமோ அடையாமல் இருப்பவன் பிருந்தாவனன்; அம்மாதிரி அடைவதையும் பேதைமை என்று எண்ணி அதை வெறுக்கும் தன்மையுள்ளவன். இம்மாதிரி மனிதர்கள் எவ்வளவு கோபம் வந்தாலும் தாமே

சமாளித்துக்கொள்ளும் சக்தியுள்ளவர்கள்; எதுவானாலும் சரி, வாய்விட்டு எதிரியிடம் சொல்லிச் சண்டை சச்சரவிட்டு நாலுபேர் கும்பல் கூடும்படி செய்யமாட்டார்கள். ஆயினும் அன்று அவன் குஸுமாவின் கொடுமை யான செய்கையினாலும் குரூரமான வார்த்தைகளினாலும் சற்றுக் கடிந்து சில அர்த்தமற்ற வார்த்தைகளைச் சொல்லிவிட்டு வந்தான். இதை அவன் உள்ளூறச் சினங்கொண்டு சொல்லவில்லை.

ஆகையால்தான் மறுநாட்காலையில் சரணனை அழைத்துவரும் சாக்கை வைத்துக்கொண்டு ஒரு வேலைக்காரன், வேலைக்காரி இவர்களுடன் வண்டி யையும் அனுப்பினான். 'புத்திசாலியான குஸுமா இந்தக் குறிப்பை அறிந்துகொள்வாள்; ஒருகால் வந்தாலும் வருவாள்' என்றும் எண்ணினான்.

'அப்படி ஒருகால் வந்துவிட்டால் பிறகு என்ன செய்வது?' என் பதை யோசிக்கும்போது, 'வந்தாளானால் பிறகு அம்மா இருக்கிறாள்; எல்லாவற்றையும் பார்த்துச் சரிக்கட்டிக் கொள்வாள்' என்று தீர்மானித் திருந்தான். தன் தாயின் சாமர்த்தியத்தில் அவனுக்கு அபார நம்பிக்கை உண்டு. எந்த நிலைமையிலும் எந்தச் சங்கடங்கள் வந்தபோதிலும் அம்மா எவ்விதமாகிலும் இருதிறத்தினருக்கும் நன்மை ஏற்படும்வண்ணம் காரியத்தை எளிதில் முடித்துவிடுவாள். இதனால்தான் தாயிடம் சொல் லாமல் கொள்ளாமல் வண்டியை அனுப்பிவிட்டு, நம்பிக்கை, பயம், சந்தே கம், சந்தோஷம் இவைகளுடன் வழிபார்த்துக்கொண்டிருந்தான். தன் தாயிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளவாவது இன்று அவள் வருவாள் என்று எண்ணினான். மத்தியான்னம் வண்டி சரணனைமாத்திரம் ஏற்றிக் கொண்டு திரும்பிவந்தது. பிருந்தாவனன் சண்டீமண்டபத்தில் இருந்த படியே பார்த்துவிட்டுத் திடுக்கிட்டுப் போனான்.

சில நாட்களாகப் பிருந்தாவனனின் பள்ளிக்கூடம் முன்போலக் கிரம மாக நடப்பதில்லை. உபாத்தியாயருக்கே சிரத்தை யில்லாமையால் பல மாணாக்கர்கள் சரியாகவே வருவதில்லை. வருகிற பையன்களும் நாள் முழுவதும் குளத்தில் துளைந்து விளையாடத்தான் சரியாக இருந்தது. ஸ்வாமிக்குக் கற்பூர ஆரத்தியானதும் பையன்கள் பிரஸாதம் வாங்கிக் கொள்ளவரும் ஒழுங்குமாத்திரம் குலையாமல் இருந்தது. இது ஒரு மூடபக்தியின் காரணமாகவேதான்; தீபாராதனை சமயத்தில் வராமல் ஸ்வாமியை அவமதிக்க அவர்கள் விரும்பவில்லை.

இப்படி இருந்துவருகையில் ஒருநாள் பிருந்தாவனன் திடீரென்று தன் பள்ளிக்கூடத்தில் முழுக்கவனத்தையும் செலுத்த ஆரம்பித்தான். ஜலத்தில் துளைவதற்காகப் பையன்களுக்கு ஏற்பட்ட ஆறுமணி நேரத்தைப் பதினைந்து நிமிஷமாகக் குறைத்தான்; பகல் முழுவதும் இராமல் சாயங் காலம் ஸ்வாமிக்குத் தீபாராதனை நடக்கும் சமயத்தில் மாத்திரம் அவர்கள் வந்து நிற்பதையும் பார்த்துக் கவனிக்கலானான்.

பத்துத் தினங்களுக்குப் பிறகு ஒருநாள் பிருந்தாவனன், பாடம் சொல்லிக்கொடுக்கப் பையன்களை ஒரே வரிசையாக நிறுத்தினான். பையன்கள் உரக்கச் சத்தமிட்டுக் கணக்கில் தேர்ச்சியுள்ளவர்களாக முயன்றுகொண்டிருந்தார்கள். இதற்குள் யாரோ நாகரிக இளைஞன் ஒருவன் அங்கே



வந்தான். பிருந்தாவனன் சட்டென்று எழுந்து, உட்கார அவனுக்கு ஆஸனம் அளித்து அவன் முகத்தைப் பார்க்கலானான். அவனால் இளைஞனை இன்னானென்று அறிந்துகொள்ள முடியவில்லை.

வந்தவன் வயதில் அவனுக்குச் சமானமானவனே. அவன் ஆஸனத்தில் அமர்ந்து சிரித்துக்கொண்டே, "என்ன அப்பா, என்னைத் தெரியவில்லையா?" என்று கேட்டான்.

பிருந்தாவனன் சிறிது நாணத்துடன், "இல்லையே!" என்றான்.

"வந்த காரியத்தைப் பிறகு சொல்கிறேன். மாமா தம் கடிதத்தில் உன்னை மிகவும் புகழ்ந்திருக்கிறார். ஆகையால்தான் வெளிநாடு செல்லு

முன் உன்னை ஒருமுறை பார்த்துவிட்டுச் செல்லவேண்டுமென்று எண்ணினேன். நான் கேசவன்'' என்றான்.

பிருந்தாவனன் ஓடிவந்து தன் பால்ய நண்பனாகிய அவனை மார்புடன் தழுவிக்கொண்டான். அவன் பிருந்தாவனனுக்கு முன்பு ஆங்கில ஆசிரியராக இருந்த துர்க்காதாஸ் பாபுவின் மருமகன். பதினைந்து பதினாறு வருஷங்களுக்குமுன் அவன் இங்கே ஐந்தாறு மாதம் தங்கியிருந்த போது இருவரும் நெருங்கிய சிநேகிதர்களானார்கள். துர்க்காதாஸின் மனைவி இறந்ததும் கேசவன் அங்கிருந்து சென்றுவிட்டான். அதிலிருந்து மீண்டும் சந்திப்பே ஏற்படவில்லை. ஆயினும் இருவரும் ஒருவரை ஒருவர் மறக்கவில்லை. பிருந்தாவனனுக்குத் தன் உபாத்தியாயர் மூலம் பால்ய சிநேகிதனைப்பற்றிய செய்தி கிடைத்துக்கொண்டிருந்தது.

கேசவன் எம். ஏ., படித்துவிட்டு ஐந்தாறு வருஷங்களாக ஒரு காலேஜில் ஆசிரியனாக இருக்கிறான்; இந்தச் சமயம் ஏதோ அரசாங்க வேலையாக வெளிநாடு செல்கிறான்.

யோகக்ஷேமம் விசாரித்தபிறகு கேசவன், "பொய்யல்ல என்பது இருக்கட்டும்; மாமா எந்த விஷயத்தையும் மிகைப்படுத்திக்கூடக் கூற மாட்டார். சென்ற தடவை அவருடைய கடிதத்தில், 'என் வாழ்நாளில் நான் எத்தனையோ மாணாக்கர்களுக்குக் கல்வி கற்பித்தேன். ஆனால் அவர்களில் பிருந்தாவனனைத்தவிர மற்றவர்கள் உண்மையான மனிதர்களானார்களா இல்லையா என்பது தெரியவில்லை' என்று எழுதியிருந்தார். நான் இதுவரை அம்மாதிரியான உண்மை மனிதனைக் கண்ணால்கூடப் பார்த்ததில்லை. அதனால்தான் அயல்நாடு செல்லுமுன் பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன்'' என்றான்.

ஒரு நண்பன் வாயிலாக இம்மாதிரியான வார்த்தைகளைக் கேட்டும் என்ன பதில் சொல்வதென்றுகூட யோசிக்க முடியாமல் மலைத்துப் போய்விட்டான் பிருந்தாவனன்; அதற்கு அவன் அடைந்த நாணமே காரணம். இந்த உலகில் தன்னை ஒருவன் இம்மாதிரி முகஸ்துதி செய்வானென்று அவன் கனவில்கூடக் கருதவில்லை. இதைத்தவிர இந்தப் புகழ்ச்சி அவனுடைய பரம ஆசிரியர் வாயிலாகப் பிரசாரம் செய்யப் பட்டிருப்பது அவனுடைய பிரமிப்பைப் பின்னும் அதிகரிக்கச் செய்தது.

கேசவன் இதை அறிந்துகொண்டு, "நல்லது, பிருந்தாவனா; அதிருக்கட்டும். உனக்கு நாணமுண்டாகும் விஷயத்தை இனி நான் கூறமாட்டேன். மாமாவின் அபிப்பிராயத்தை உன்னிடம் சொன்னேன். இனி வந்த காரியத்தைப்பற்றிச் சொல்லுகிறேன். நீ பள்ளிக்கூடம் வைத்திருக்கிறாய், சம்பளம் இல்லை; பையன்களுக்குப் புஸ்தகம், துணிமணி இவைகள்கூட வாங்கிக்கொடுக்கிறாய் என்று கேள்விப்பட்டேன். எனக்கும் இந்தமாதிரி செய்ய இஷ்டந்தான். ஆனால் பையன்கள் சேருவதில்லை. இவ்வளவு பையன்களை நீ எப்படிச் சேர்த்தாய்? எனக்குச் சொல்'' என்றான்.

பிருந்தாவனன் அவன் குறிப்பை அறிந்துகொள்ளமுடியாமல் வியப்புடன் அவனைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

கேசவன் சிரித்துக்கொண்டே, "சரி, கேள்: நான் விளக்கிச் சொல்கிறேன். இல்லாவிட்டால் உன்னால் அறிந்துகொள்ளவே முடியாது. தேசசேவை ஏதாவது செய்யவேண்டுமானால் ஏழைச் சிறுவர்களுக்குப் போதிப்பதுதான் சரியானது என்பதை இந்தக் காலத்தில் எல்லோரும் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். படிப்புச் சொல்லிக்கொண்டிருப்பதைத் தவிர நாம் எது செய்தாலும் அது வீண்தான். சிறுவர்களுக்குக் கொஞ்சம் எழுதப் படிக்கக் கற்றுக்கொடுத்தால் பிறகு தங்களைத் தாங்களே கவனித்துக்கொள்வார்கள். என்னுடைய அபிப்பிராயமும் இதுதான். எஞ்சினில் ஆவி இருந்தால் அது தானே ஓடுகிறது. இல்லாவிட்டால் நூறுபேர் சேர்ந்து தங்கள் சரீரபலத்தால் தள்ளினாலும் ஓர் அடிகூட நகராது. நீ இதையெல்லாம் அறிந்திருப்பாய். இல்லாவிட்டால் வீணாகப் பணம் செலவுசெய்து பள்ளிக்கூடம் வைத்திருக்கமாட்டாய். நானும் இதற்காகத்தான் விவாகங்கூடச் செய்துகொள்ளவில்லை. உன்னைப்போல எங்கள் கிராமத்தில் படிப்புச் சொல்லிக்கொடுப்பவர் ஒருவரும் இல்லை. ஆகையால் ஒரு பள்ளிக்கூடம் வைத்து அவர்கள் கண்முன் பள்ளிக்கூடம் என்பதைக் காட்டுவோம் என்று ஆசைப்பட்டேன். ஆனால் அந்தப் பள்ளிக்கூடம் நடக்கவில்லை; பையன்கள் சேரவில்லை. எங்கள் கிராமத்துக் கீழ்வகுப்பு ஜனங்கள் எல்லாம் சனியன்கள். தங்கள் பையன்களைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்புவதே இல்லை; படிக்கவைக்கவும் விரும்புவதில்லை. நான் என் மானம் மரியாதையை விட்டு அவர்கள் வீடுகளுக்குச் சில தினங்கள் அலைந்தேன். ஆயினும் பலன் ஒன்றும் இல்லை" என்றான்.

பிருந்தாவனனின் முகம் சிவந்தது. ஆயினும் அவன் சாந்தத்துடன், "கீழ்ஜாதி ஜனங்கள் பாக்கியசாலிகள். ஆகையால் மேல் வகுப்பாரின் பள்ளிக்கூடத்துக்குத் தங்கள் பையன்களை அனுப்பவில்லை. ஆனால் கேசவா, உன்னைப் போன்றவர்கள் என்போன்ற சிறிய மனிதர்களின் வீடுகளுக்குச் சென்று அலைந்து மானம் மரியாதையை இழப்பது உசிதமல்ல; அல்லவா?" என்றான்.

பிருந்தாவனனுடைய வார்த்தையில் அடங்கி இருந்த பரிகாசம் கேசவனின் உள்ளத்தில் நன்றாகத் தைத்தது. அவன் மிக்க வருத்தத்துடன், பதிலளித்தான்: "இல்லையப்பா, இல்லை. உன்னை......உங்கள் விஷயம் சிறிதுகூட.........ராமராம.........நான் அதைச் சொல்ல வரவில்லை. என்ன தெரியுமா.........?"

பிருந்தாவனன் சிரித்துவிட்டு, "நான் நன்றாக அறிவேன். நீ என்னைச் சொல்லவில்லை. எனக்கு வேண்டியவர்களைச் சொன்னாய். நாங்கள் எல்லோரும் கொல்லு, தச்சு, நெசவு, பயிர் பச்சை புல்வெட்டுதல், மாடுகளைப் போஷித்தல் சகல காரியங்களும் செய்கிறோம். நேர்த்தியான ஆடை

உடுப்பதில்லை. சர்க்கார் ஆபீஸ் வாசலைக்கூட எங்களால் அணுகமுடியாது. ஆகையால் நீங்கள் எங்களைத் தாழ்ந்த ஜாதியினரென்று சொல்கிறீர்கள். ஏதாவது நல்ல காரியத்திற்குக்கூட எங்கள் வீட்டிற்கு வருவதால் உங்களைப்போன்ற படித்த நாகரிக மனிதர்களின் மானம் மரியாதை நஷ்டமாகிவிடுகின்றன'' என்றான்.

கேசவன் தலைகுனிந்துகொண்டே, ''அப்பா பிருந்தாவனா, நான் உண்மையாகச் சொல்கிறேன். நான் உன்னை மற்றவர்களிடமிருந்து தனியாகப் பிரித்துத்தான் இந்த வார்த்தையைச் சொன்னேன். நீ இந்த மாதிரி உன்னை அவர்களுடன் சேர்த்துக்கொண்டு கோபமாகப் பேசுவாய் என்று தெரிந்திருந்தால் இதைச் சொல்லியே இருக்கமாட்டேன்'' என்றான்.

''நான் இதையும் அறிவேன். நீ என்னைப் பிரித்து வைப்பதனால் நான் தனியாகி விடமாட்டேன். என்னுடைய முன் ஏழு தலைமுறைகள் இந்தத் தேசத்துக் கீழ்மக்களுடன் சேர்ந்தே இருந்து வந்திருக்கின்றன. நான் விவசாயம் செய்கிறேன். என் கையால் ஏர் ஓட்டுகிறேன். ஆகையால்தான் என் பள்ளிக்கூடத்தில் பையன்கள் சேர்ந்தார்கள்; உன் பள்ளிக்கூடத்தில் சேரவில்லை. நான் அந்தக் கூட்டத்தில் பெரியவன். அதைவிட்டுப் பிரிந்தால் நான் பெரியவனல்ல. ஆகையால் அந்த ஜனங்கள் சங்கோசம் இல்லாமல் என்னிடம் வருகிறார்கள். உன்னிடம் வர அவர்களுக்குத் தைரியம் ஏற்படுவதில்லை. நாங்கள் படிப்பற்றவர்கள்; தரித்திரர்கள். நாங்கள் எங்கள் வாயினால் எங்கள் பெருமையைச் சொல்லிக்கொள்ள முடியாது. நீங்கள் எங்களைத் தாழ்ந்த ஜாதி என்று அழைக்கிறீர்கள். நாங்கள் பேசாமல் அதை ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் எங்கள் அந்தர்யாமி அதை ஒப்புக்கொள்ளுவதில்லை; உங்கள் நல்ல வார்த்தைகளை நம்புவதில்லை'' என்றான்.

கேசவன் வெட்கமும் ஆச்சரியமும் அடைந்து பேசாமல் தலைகுனிந்து கேட்டுக்கொண்டிருந்தான்.

பிருந்தாவனன் மீண்டும், ''இதில் எங்களுக்குத்தான் வெகு ஹானி என்பதை நான் அறிவேன். ஆயினும் உங்களை எங்களுக்கு நெருங்கிய நண்பர்களென்றோ எங்களிடம் நல்ல எண்ணமுடையவர்களென்றோ ஏற்றுக்கொள்ளப் பயமாக இருக்கிறது. எங்களில் சாதாரண நாட்டு வைத்தியன், உபாத்தியாயர் முதலியவர்கள்கூட என்னைப்போலவே போற்றப்படுகிறார்கள். உங்களைப்போன்ற பெரிய பெரிய டாக்டர்கள், ஆசிரியர்களுக்குக்கூட இங்கே ஒன்றும் நடக்காது. எங்கள் ஹிருதயத்திலும் தெய்வம் வாசம் செய்கிறது. உங்களுடைய பராமுகமான கருணை, மேலே இருந்து கீழே பிச்சை இடுவது, இவை அந்தத் தெய்வத்துக்குச் சகிக்காமல் அது முகத்தைத் திருப்பிக்கொள்ளுகிறது'' என்றான்.

இந்தத் தடவை கேசவன் பதில் சொல்லத் தொடங்கி, ''ஆனால் இதற்காக முகத்தைத் திருப்பிக்கொள்ளுவது அநியாயம். நாங்கள் உண்மை

யாகவே உங்களை வெறுக்கவில்லை. உங்கள் நன்மையைத்தான் விரும்புகிறோம். நீங்கள் எங்களை முழுவதும் நம்புவதுதான் உசிதம். உங்களுக்கு இன்னது நல்லது, இன்னது கெட்டது என்பதை நாங்கள் எங்கள் கல்விப் பலத்தால் அறியமுடியும். எல்லா விஷயங்களிலும் நாங்கள் உயர்வாக இருப்பதை நீங்களே பார்க்கிறீர்கள். இந்த நிலைமையில் எங்கள் வார்த்தையைக் கேட்கவேண்டியதுதான் உங்கள் கடமை" என்றான்.

"இதைப் பார் கேசவா: உள்ளே இருக்கும் தெய்வம் ஏன் முகம் சுளிக்கிறது என்பதைக் கடவுளே அறிவார். அந்தப் பேச்சை விட்டுவிடு. ஆனால் நீங்கள் சாதாரண மனிதரைப்போல் எங்கள் நன்மையை விரும்பவில்லை; எஜமானரைப்போல் இருந்து செய்கிறீர்கள். ஆகையால் தான் உங்களில் பெரும்பாலோர் பெரிய மனிதர் பிள்ளை முன்னுக்கு வரவும், ஏழைகளின் குழந்தைகள் விருத்தியடையாமல் இருக்கவும் விரும்புகின்றனர். உங்களுடன் இருந்து எழுதப் படிக்கக் கற்றுக்கொண்டு கனவான்களான குடியானவப்பிள்ளைகள் பிறகு படிப்பற்ற தம் தந்தை, பாட்டன் முதலியவர்களிடம் மரியாதை வைத்து மதிப்பதில்லை. வித்தை கற்றுக்கொள்வதனால் உண்டாகும் இந்தக் கடைசிப்பலனை உங்கள் பழக்கத்தினால்தான் நாங்கள் அடைகிறோம். கேசவா, முதலில் நீ எங்களை, அதாவது கீழ்ஜாதியினரை உன்னைச் சேர்ந்தவர்களென்று மதிக்கக் கற்றுக்கொள். பிறகு அவர்களுக்கு நன்மை செய்ய விரும்பு. அதன்பிறகு நீ அவர்களுடைய குழந்தை குட்டிகளுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுக்கப் போ. 'நான் எழுதப் படிக்கத் தெரிந்த பெரிய மனிதர் கோஷ்டியைச் சேர்ந்தவனல்ல. படித்தாலும், படிப்பற்ற கீழ்வகுப்பாரைத் தாழ்ந்தவர்கள் என்று அவமதிக்காமல் அவர்களிடம் சிரத்தை வைத்திருக்கிறேன்' என்பதை உன்னுடைய நடத்தையால் முதலில் காட்டிக்கொள்ள வேண்டும். பிறகுதான் உன்னிடம் படிக்கும் குழந்தைகள் பிற்காலத்தில் பெரியோர்களிடம் மதிப்பின்றி இருக்கமாட்டார்கள் என்ற நம்பிக்கை ஏற்படும்; தவிர, பந்துக்களை விட்டு, சமூகத்தை விட்டு, பரம்பரையாக வந்த வியவசாயம் கைத்தொழில் இவைகளை விட்டு, எங்களை விட்டும் பிரிந்து தனித்து இருப்போம் என்று முரண்செய்ய மாட்டார்கள் என்ற தைரியமும் ஏற்படும்.

"இந்தமாதிரி செய்யாதவரையில் நீ எத்தனை ஜன்மங்கள் எடுத்துக் கல்யாணம் செய்துகொள்ளாமல் இந்த விரதம் பூண்டுகொண்டாலும் உன் பள்ளிக்கூடத்தில் கீழ்ஜாதியினர் தங்கள் குழந்தைகளை அனுப்பமாட்டார்கள். அதுவரையில் கீழ்ஜாதி மக்கள் படித்த பெரிய மனிதர்களிடம் பயந்துகொண்டுதான் இருப்பார்கள். அவர்களிடம் மரியாதை காட்டுவார்கள்; பக்தியுடனும் இருப்பார்கள். ஆனால் அவர்களை நம்பமாட்டார்கள்; அவர்களுடைய பேச்சையும் கேட்கமாட்டார்கள். உங்களுடைய நன்மையும் அவர்களுடைய நன்மையும் ஒன்றுதானா என்ற சம்சயம் அவர்கள் மனத்திலிருந்து எவ்விதத்திலும் அகலாது" என்றான் பிருந்தாவனன்.

சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டுக் கேசவன், "பிருந்தாவனு, வாஸ்தவம்; நீ சொல்லுவதுதான் சரி என்று படுகிறது. ஆனல் ஒன்று கேட்கிறேன். இருதிறத்தாரிடத்தும் பரஸ்பரம் நம்பிக்கை ஏற்படாவிட்டால் நாம் எவ்வளவு உறவு பூண்டிருந்தாலும் அது பலனளிக்காதல்லவா? நம்பிக்கை ஏற்படாதவரையில் நம்மவர் என்றும் பிறர் என்றும் நாம் எப்படிக் கூறுவது? இதற்கென்ன உபாயம்?" என்று கேட்டான்.

"பழக்க வழக்கங்கள் மாறுவதுதான் அதற்கு உபாயம். எங்கள் பழக்கவழக்கங்கள் இழிவானவையென்று படித்த பெரிய மனிதர்களாகிய நீங்கள் சொல்லுகிறீர்கள். எங்களுடைய வாசம், சமூக வாழ்க்கை, ஜீவனோபாயம் முதலியவை உங்களுடைய வியவகாரங்களினின்றும் வேறுபட்டிருக்கும்போது, நீங்கள் காட்டும் நல்லவழி உண்மையில் எங்களுக்கு நன்மை செய்யுமென்று நாங்கள் எப்படி அறிந்துகொள்ளமுடியும்?—இருக்கட்டும்; கேசவா, பூணூல் போட்டுக்கொண்ட பிறகு நீ தினம் சந்தியாவந்தனம் செய்வதுண்டா?"

"இல்லை."

"செருப்புப் போட்டுக்கொண்டே தண்ணீர் குடிக்கிறுய் அல்லவா?"

"ஆம். குடிக்கிறேன்."

"முஸல்மான் செய்த ஆகாரத்தைச் சாப்பிடுவாயா?"

"சாப்பிடுவேன்; வித்தியாசமில்லை."

"அப்படியானல் கீழ்மக்களிடையே பள்ளிக்கூடம் வைப்பதென்ற உன் யோசனை வெறும் கேலியல்ல. இதைவிட அதிகமாக மற்றொன்று இருக்கிறது. நான் அதைச் சொன்னல் நீ கோபித்துக்கொள்வாய்."

"துணிவு வேண்டும்; அதுதானே?"

"ஆம். அதுதான். கேசவா, ஆசையும் மனமும் இருந்துவிட்டால் மாத்திரம் பிறருக்கோ தேசத்திற்கோ நன்மை செய்யமுடியாது. நீ யாருக்கு நன்மை செய்ய விரும்புகிறுயோ, அவர்களுடன் வசிக்கும் கஷ்டத்தையும் நீ சகிக்கவேண்டும். புத்தி, விவேகம், தர்மகர்மங்கள் இவைகளில் நீ இவ்வளவு முன்னேறிவிட்டால் பிறகு யாவும் தாமே வந்துவிடும். இனி வேறொன்றும் இல்லை. சாயங்காலமாகிவிட்டது. சிறிது பள்ளிக்கூடத்தைக் கவனிக்கலாம்" என்றுன் பிருந்தாவனன்.

"செய். நான் நாளைக்காலை மறுபடி வருகிறேன்" என்று சொல்லிக் கேசவன் எழுந்து நின்றதும், பிருந்தாவனன் அவனுக்கு நமஸ்காரம் செய்து அவன் பாததூளியைச் சிரமேல் தரித்துக்கொண்டான்.

கிராமத்தில் வீடு இருந்தபோதிலும் கேசவன் நகரத்திலே வசிப்பவன். தன்னுடைய நண்பனின் நடத்தையைக் கண்டு அவனுக்கு மனத்திற்குள் சங்கோசம் அதிகமாயிற்று. இருவரும் கீழே இறங்கியதும் பள்ளிக்கூடப் பையன்கள் எல்லோரும் தரையில் விழுந்து கேசவனை நமஸ்காரம் செய்தனர்.

தன் பால்ய நண்பனை வாசல்வரையில் கொண்டுவந்து விட்டு, "நண்பனாக இருந்தாலும் நீ பிராம்மணன். ஆகையால் உனக்கு என் சார்பாகவும், என் மாணுக்கர்கள் சார்பாகவும் நமஸ்காரம் செய்கிறேன். தெரிந்ததா?" என்றான் பிருந்தாவனன்.

கேசவன் நாணம் கலந்த சிரிப்புடன், "ஆம், தெரிந்துகொண்டேன்" என்று சொல்லி மெள்ள மெள்ள வெளியே செல்லலானான்.

மறுநாட் காலையிலேயே கேசவன் வந்து பிருந்தாவனனிடம், "பிருந்தாவனா, இப்பொழுது நீதான் சரியான மனிதன். இதில் எனக்குத் துளிக்கூடச் சந்தேகமே இல்லை" என்றான்.

பிருந்தாவனன் சிரித்துக்கொண்டே, "எனக்கும் இல்லை! அப்புறம்?" என்றான்.

"நான் உனக்கு உபதேசம் செய்ய வரவில்லை. எனக்கு இருந்த அகங்காரம் நேற்றுச் சிதறிவிட்டது. ஒரு மித்திரனைப்போல் வினயத்துடன் கேட்கிறேன். நீ இந்தக் கிராமத்தில் உன் கைப்பொருளைச் செலவு செய்து சிறுவர்களுக்குக் கல்வி அளிக்கிறாய். ஆனால் இன்னும் இந்தத் தேசத்தில் ஆயிரக்கணக்கான கிராமங்களில் சிறுவர்கள், அரிச்சுவடி சொல்லிக்கொடுக்கக்கூட யாரும் இல்லாமல் வீணாகிறார்கள். இவைகளெல்லாம் சர்க்கார் செய்யவேண்டிய வேலையல்லவா?" என்று கேட்டான்.

பிருந்தாவனன் சிரித்தான்; "உன்னுடைய கேள்வி சிறு பிள்ளைகள் கேள்விபோல் இருக்கிறதே. முதலில் நமக்கு அருகில் இருக்கும் அறிவின்மையை நாம் போக்கத் தொடங்குவோம். பிறகு சர்க்கார் செய்கிறார்களா இல்லையா என்று பார்க்கலாம். தம்முடைய கடமையைச் செய்வதற்குமுன் பிறருடைய கடமையைப்பற்றிப் பேசுவது பாபம்" என்றான்.

"ஆனால் நம்முடைய ஆற்றல் எவ்வளவு? இந்தச் சிறிய கிராமத்துப் பிள்ளைகளைப் படித்தவர்களாக்கிவிட்டால்மாத்திரம் போதுமா?"

பிருந்தாவனன் ஆச்சரியத்துடன் சிறிதுநேரம் பார்த்துக்கொண்டிருந்துவிட்டுப் பிறகு, "இல்லை. உன்னுடைய இந்த வார்த்தை சரியல்ல. நம்முடைய பாடசாலைப் பிள்ளைகளில் ஒருவன் உண்மை மனிதனாக ஆனால் அவனால் இந்த முப்பதுகோடி மக்களும் முன்னேற்றம் அடைவார்கள். நியூடன், பாரடே, ராம்மோஹன், வித்யாசாகரர்போன்ற மனிதர்கள் நூற்றுக்கணக்காக உண்டாகமாட்டார்கள். என்னுடைய வாழ்நாட்களுக்குள் என் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுள் ஒருவன் அந்தமாதிரி ஓர் உண்மை மனிதனாவதைப் பார்த்துவிட்டுச் சாகவேண்டும் என்று ஆசீர்வாதம் செய். இன்னும் ஒரு விஷயம்: என் பள்ளிக்கூடத்தில் மற்றொரு விதி உண்டு. நேற்று மாலை இங்கே நீ இருந்திருந்தாயானால் ஒவ்வொரு பையனும் தான் பெரியவனானதும் குறைந்தது இரண்டு மூன்று பிள்ளைகளுக்காவது கட்டாயம் கல்வி புகட்டுவதாகச் சத்தியம் செய்ததைப் பார்த்திருப்பாய். என்னுடைய பையன்களில் ஐந்தில் ஒருவன் தன் பால்யகாலத்தில் செய்யும்

இந்தப் பிரதிக்ஞையை நிறைவேற்றினால், கேசவா, நான் கணக்குப் போட்டு வைத்திருக்கிறேன்: இன்னும் இருபது வருஷங்களுக்குப் பிறகு இந்தத் தேசத்தில் படிக்காதவன் ஒருவன்கூட இருக்கமாட்டான்" என்றான்.

கேசவன் ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டு, "ஆஹா! எவ்வளவு பெரிய ஆசை" என்றான்.

"ஆமாம்; நீ இப்படிச் சொல்லலாம். துர்ப்பலமான சமயத்தில் எனக்குக்கூட இது நிறைவேறாத ஆசை என்ற பயம் ஏற்படும். ஆனால் திடமான சமயத்தில், கடவுள் சித்தம் இருந்தால் இந்த ஆசை பூர்ணமாக எவ்வளவுநாள் பிடிக்கும் என்று நினைக்கிறாய்?" என்றான் பிருந்தாவனன்.

"பிருந்தாவனா, நான் இன்று இரவு வெளிநாடு செல்லவேண்டும். பிறகு மீண்டும் எப்பொழுது சந்திப்போம் என்பதைக் கடவுளே அறிவார். நான் கடிதம் போட்டால் பதில் எழுதுவாயா?" என்று கேட்டான் கேசவன்.

"இதென்ன பெரிய விஷயம்? கேசவா" என்றான் பிருந்தாவனன்.

"பெரிய விஷயந்தான் சொல்கிறேன். எப்பொழுதாவது ஒரு நண்பனுடைய உதவி வேண்டியிருந்தால் என்னை ஞாபகப்படுத்திக் கொள்வாயா?"

"கட்டாயம் செய்கிறேன்" என்று சொல்லிப் பிருந்தாவனன் கேசவனுக்கு நமஸ்காரம் செய்தான்.

அத்தியாயம் 11

பிருந்தாவனனின் தாய் ஸ்வாமிக்கு ஊஞ்சல் உற்சவம் ஆடம்பரமாகச் செய்வது வழக்கம். அது நேற்றுத்தான் முடிவடைந்தது. மிகவும் களைப்படைந்திருந்ததனால் பிருந்தாவனன் பொழுதுவிடிந்து வெகுநேரமாகியும் எழுந்திருக்கவில்லை. அவன் தாய் அவன் அறைவாசலில் நின்றுகொண்டு, "அடே பிருந்தாவனா, சீக்கிரம் எழுந்து சற்று வெளியே வா" என்று கூப்பிட்டாள்.

தாய் இந்தமாதிரி வியாகுலத்துடன் கூப்பிடுவதைக் கேட்டுப் பிருந்தாவனன் சட்டென்று எழுந்து உட்கார்ந்து, "என்ன அம்மா?" என்று கேட்டான்.

தாய் கதவைத் திறந்துகொண்டே உள்ளே வந்து, "பிருந்தாவனா, எனக்குத் தெரியவில்லை. உன் பள்ளிக்கூடத்துப் பையன் யாரோ வெளியே உட்கார்ந்துகொண்டு அழுதுகொண்டிருக்கிறான். அவன் தந்தைக்கு வாந்திபேதியாமே? எழுந்து உட்காரக்கூட முடியவில்லையாம்" என்றாள்.

பிருந்தாவனன் சட்டென்று எழுந்து வெளியே வந்தான். அவனைக் கண்டதும் சிவுவின் மகன் அழுதுகொண்டே, "ஐயா, அப்பா பேசவும் இல்லை; கண்ணைத் திறந்து பார்க்கவும் இல்லை" என்று கதறினான்.

பிருந்தாவனன் அன்புடன் அவன் கண்களைத் துடைத்து அவன் கையைப் பிடித்துக்கொண்டு அவனது வீட்டிற்குச் சென்றான்.

சிவுவுக்கு அந்திமகாலம் நெருங்கிவிட்டது. வருஷந்தோறும் இந்த மாதத்தில் காலரா பரவுவது வழக்கம். இந்த வருஷம் முதல்முதல் சிவுவுக்குக் கண்டது. சிவுவுக்கு முதல்நாள் இரவு இந்த வியாதி கண்டது. இதுவரையில் எந்தச் சிகித்சையும் இல்லாமல் இருந்தான். பிருந்தாவனன் வந்த சில மணிநேரத்திற்கெல்லாம் அவன் உயிர் நீத்தான்.

வங்காளத்தில் எல்லாக் கிராமத்திலும் தாமாகவே படித்து டாக்டரான இரண்டொரு வைத்தியர் இருப்பது வழக்கம். இந்தக் கிராமத்திலும் கோபால் என்று ஒரு டாக்டர் இருந்தார். நேற்று இரவு அவரைக் கூப்பிட்டார்கள். காலரா என்றதுமே ரூபாய் இரண்டு பீஸ் வாங்கிக் கொள்வார். ஏனென்றால் அவர் மருந்தைக் குடித்துப் பிழைத்துப் பிறகு அவர் கடனைத் தீர்க்க யாரும் ஜீவித்திருப்பதில்லை. இது அவருடைய நீண்ட நாளைய அனுபவம். சிவுவின் மனைவியால் அந்த ராத்திரியில் ரொக்க ரூபாய் தேடமுடியவில்லை. ஆகையால் மனமொடிந்து உப்பு ஜலத்தைக் கொடுத்துத் தன் கணவனுடைய கடைசிச் சிகித்சையைச் செய்துவிட்டு அவன் தலையருகில் உட்கார்ந்து வாந்திபேதியம்மனைப் பிரார்த்தனை செய்து இரவைக் கழித்தாள். பிறகு காலையில் நடந்தது இது.

பிருந்தாவனன் பெரிய மனிதன். கிராமத்தில் எல்லோரும் அவனைக் கௌரவமாக மதித்து வந்தனர். தன்னுடைய கணவனின் கிரியைகளைச் செய்யச் சிவுவின் மனைவி பிருந்தாவனனின் காலைப் பிடித்துக்கொண்டு அழலானாள். சிவுவுக்குச் சொத்து ஒன்றும் இல்லை. பசியும் பட்டினியும் இரண்டு பசுவுமே அவன் வைத்திருந்த சொத்து. பசுவில் ஒன்றை ஈடு வைத்துத்தான் நடக்கவேண்டிய காரியங்களைச் செய்யவேண்டும்.

பிருந்தாவனன் பல தடவைகள் எந்தச் சாமானையும் அடகுவாங்கிக் கொள்ளாமலே இந்தமாதிரி காரியங்களுக்கு உதவி செய்திருக்கிறான். அவன் சிவுவின் கிரியைகளையும் முடித்துவிட்டு மத்தியான்னம் வீடு திரும்பினான்.

சாயங்காலமாயிற்று. அதுவரை பிருந்தாவனன் சண்டீமண்டபத்தில் ஒரு பாயில் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தான். சட்டென்று ஏதோ காலடிச் சப்தத்தைக் கேட்டுக் கண்களைத் திறந்து பார்த்தான். எதிரே அதே சிவுவின் மகன் நின்றிருந்தான்.

பிருந்தாவனன் எழுந்து உட்கார்ந்து, "வாடா சஷ்டிசரண், உட்கார்" என்றான்.

பையன் இரண்டொரு முறை உதடுகளை அசைத்து, "ஐயா!" என்று அழ ஆரம்பித்தான்.

தந்தையற்ற அந்தப் பாலகனைப் பிருந்தாவனன் தன்னருகில் இழுத்துக்கொண்டான். பையன் அழுதுகொண்டே, "கிஷ்டனுக்கும் வயிற்றுப் போக்குக் கண்டிருக்கிறது" என்றான்.

'கிஷ்டன்' அவனுடைய தம்பி. தன் அண்ணனுடன் அவனும் சிற்சில சமயம் பள்ளிக்கூடம் வருவது வழக்கம். அன்று இரவு டாக்டர் கோபால் முதல்முதலில் பீஸ் இல்லாமலே பிருந்தாவனனுடன் கிஷ்டனைப் பார்க்கவந்தார். நாடியைப் பார்த்தார்; நாக்கைப் பார்த்தார். மருந்து கொடுத்தார். ஆனால் கிஷ்டன் தன் தாயின் உள்ளமுருக்கும் அழுகையையும் சட்டைசெய்யாமல், வைத்தியருக்கும் மரியாதை வையாமல் விடிவதற்கு முன்பே, கைராசி விஷயத்தில் ஏற்கனவே தெரிந்த கோபால டாக்டருக்குப் பின்னும் கெட்ட பெயர் உண்டாக்கிவிட்டுத் தன் தந்தைபோன இடத்துக்கே சென்றுவிட்டான்.

இறந்துபோன தன் மகனின் சவத்தை வைத்துக்கொண்டு விதவைத் தாய் கதறுவதைப் பார்த்துப் பிருந்தாவனனின் உள்ளம் விண்டுவிடும்போல் ஆகிவிட்டது. அவனுக்கும் ஒரு மகன் இருக்கிறான். துக்கத்தை அவனால் சகிக்கமுடியவில்லை. வீட்டிற்கு ஓடிவந்து சரணனைத் தன்னுடன் அணைத்துக்கொண்டு அழலானான். அவன் தன் மனத்திற்குள், 'ஹே பகவானே! மனிதர்களுடைய அபராதத்திற்காக நீ எந்தத் தண்டனையை வேண்டுமானாலும் விதி! ஆனால் இந்தத் தண்டனையைமட்டும் அளிக்காதே' என்று வேண்டிக்கொண்டான். கடவுள் இந்தப் பிரார்த்தனையைக் கேட்டாரோ இல்லையோ, இந்தத் துக்கத்தை வேறு யாராவது சகிக்கமுடியுமோ என்னவோ, தன்னால் அது முடியாதென்பதை அவன் நன்றாக அறிந்துகொண்டான்.

இதன்பின் இரண்டுநாள் ஒரு விசேஷமும் இன்றிக் கழிந்தது. மூன்றாம் நாள் அவன் பக்கத்து வீட்டில் உள்ள மிட்டாய்க்காரன் மனைவிக்கு இந்த வியாதி கண்டு இப்பொழுதோ இன்னும் சற்றுப் பொறுத்தோ என்று இருப்பதாகச் செய்தி எட்டியது.

பிருந்தாவனனின் தாய் பார்க்கச் சென்றிருந்தவள், மணி பத்துக்குக் கண்ணீரைத் துடைத்துக்கொண்டே திரும்பிவந்தாள். சில மணிநேரத்திற்கெல்லாம் கேட்ட அழுகைச் சத்தத்தால் அந்த ஸ்திரீ தன் நாலைந்து குழந்தைகளை விட்டுவிட்டு இந்த உலகத்தினிடம் விடைபெற்றுக்கொண்டாள் என்பது தெரிந்தது.

கிராமத்தில் வியாதி மும்முரமாகப் பரவ ஆரம்பித்தது. போய்த் தங்க இடமுள்ளவர்கள் ஊரை விட்டு வெளியேறினார்கள். ஆனால் பெரும்பான்மையான ஜனங்களுக்குப் போக்கிடம் ஏது? அவர்கள் பயந்துகொண்டே மேலுக்குத் தைரியத்துடன், 'ஆயுள் முடிந்தால் எங்கும் சாகப்போகிறோம். இதற்காக ஓடுவானேன்!' என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். பிருந்தாவனனின் வீட்டுக்கு எதிரில்தான் கிராமத்து ரஸ்தா. அடிக்கடி கேட்கும் ஹரிநாம சப்தங்களால், அப்படி இருந்தவர்கள் அநேகருக்கு இந்த உலகசம்பந்தம் அற்றுவிட்டதென்று தெரியவந்தது. அக்கம்பக்கத்துக் கிராமங்களிலும் இரண்டொருவருடைய சீட்டுக் கிழிந்ததாகச் செய்தி வந்துகொண்டிருந்தது. பாடல் கிராமத்து நிலைமை நாளுக்குநாள் கடுமை

யாகி வந்தது. இதற்கெல்லாம் காரணம் வேறு வேறு இருந்தாலும் முக்கியமான காரணம், அந்தக் கிராமத்தில் குடி தண்ணீரைப் போதுமான படி பாதுகாக்காததுதான்.

நதி இல்லை. முன்பு நன்றாக இருந்த இரண்டு மூன்று குளங்களும் ஜனங்கள் செய்த அக்கிரமத்தால் கெட்டுப்போயிருந்தன. அவற்றின் தண்ணீர் உபயோகத்திற்கு அருகதையற்றதாகிவிட்டது. இந்த நிலைமையை யாரும் கவனிக்கவில்லை. தாகத்தைத் தணிப்பதற்கும் சமையல் செய்வதற்கும் உபயோகிப்பதையன்றி அதன் நல்லது கெட்டதைப்பற்றி எவரும் யோசிக்கவில்லை.

கிராமத்தில், கோபால் டாக்டரை விட்டால் வேறு வைத்தியர் இல்லை. அவருக்கு ஏழைகளின் வீடு செல்லச் சமயம் இருப்பதில்லை. கிராமத்தில் நாளுக்கு நாள் வியாதி அதிகரித்துவந்தது. மருந்து, சிகித்சை முதலிய கவலை ஒருபுறம் இருக்க இறந்தவர்களைச் சம்ஸ்காரம் செய்வதுகூடக் கஷ்டமாகிவிட்டது.

பிருந்தாவனன் இருந்த தெரு ஆபத்தின்றி இருந்தது. அந்தப் பக்கத்துவீட்டு ஸ்திரீக்குப் பிறகு வேறு யாருக்கும் எமனிடமிருந்து அழைப்பு வரவில்லை. பிருந்தாவனனின் தந்தை தம் சொந்த உபயோகத்திற்காக வெட்டி இருந்த குளத்துத் தண்ணீர் அதுவரை கெடவில்லை. அதை உபயோகித்ததனாலேதான் அந்தத் தெருவிலுள்ளவர்கள் இதுவரை யமனை ஏமாற்றி வந்தனர் போலும்!

ஆனால் பிருந்தாவனன் நாளுக்குநாள் கவலையால் மனம் குன்றினான். மகனைப் பார்க்கும்போதெல்லாம் அவன் ரத்தம் உறைந்துபோயிற்று. தன் மகனுக்கும் தனக்கும் நடுவில் தவிர்க்கமுடியாத ஏதோ ஒரு பயங்கரம் நிமிஷத்திற்கு நிமிஷம் எழுந்துகொண்டிருப்பதாகவே அவன் மனம் எண்ணியது. அவன் தைரியம் தளர்ந்தது. அவனால் சகிக்க முடியவில்லை. வியாதி, சாவு என்று கேட்டாலே அவன் உடல் நடுங்கலாயிற்று. யாராவது அவனை வந்து அழைத்தால் அவன் செல்வான். அவன் வைக்கும் ஒவ்வோர் அடியும் நீதிஸ்தலத்தை நோக்கிப் போகும் குற்றவாளியின் அடியைப்போல் தயங்கித் தயங்கியே செல்லும். ஆனால் வெகுநாளைய அனுபவம் அவனை இழுத்துச் சென்றுகொண்டிருந்தது. எந்தச் சாவுக்காவது போய்த் திரும்பிவந்து சரணனை அழைத்து அவன் உடலைத் தொட்டாலும் அவன் ஸர்வாங்கமும் நடுங்கும்.

'நம்மை அறியாமல் நம் வம்சவிளக்கின் உடலில் ஏதாவது வியாதியின் வித்தை ஊன்றிவிட்டோமோ!' என்று எண்ணி அவன் மனம் கலங்கும். எப்படி வெளிஉலகத் தொடர்பிலிருந்தும் மரணத்திலிருந்தும் சரணனைக் காப்பாற்றுவது? இதே கவலைதான் அவனுக்கு.

பள்ளிக்கூடம் முயற்சியில்லாமலே மூடியாயிற்று. சரணனின் முகத்தைப் பார்த்த அவனுக்கு இது கஷ்டமாகத் தோன்றவில்லை. சில தினங்

களாகச் சரணனுக்குச் சாதம் ஊட்டுவது, ஆடை அணிவிப்பது, அவனைத் தூங்கவைப்பது யாவும் அவன் தன் கையாலேயே செய்துவந்தான். இந்த விஷயத்தில் அவன் தன் தாயைக்கூட முழுவதும் நம்பவில்லை. ஒருநாள் பக்கத்துவீட்டுத் தாரிணி முகோபாத்தியாயர் சின்ன மகனுக்கு வியாதி கண்டிருக்கிறதென்று அவன் தன் தாய்மூலம் கேள்விப்பட்டான். இதைக் கேட்டதும் அவன் முகம் கறுத்துவிட்டது. இதைக் கண்டதும் தாய், "இங்கிருந்தது போதும், பிருந்தாவனு. நீ சரணனை அழைத்துக்கொண்டு எங்காவது வெளியூர் செல்" என்றாள்.

பிருந்தாவனனின் கண்களில் நீர் பெருகியது. "நீயும் வா, அம்மா" என்றான்.

தாய் ஆச்சரியமடைந்து, "என் ஸ்வாமியை விட்டுவிட்டா?" என்று கேட்டாள்.

"ஸ்வாமி பூஜையைப் புரோகிதரிடம் ஒப்பித்துவிட்டு வா."

தாய் பின்னும் அதிக ஆச்சரியத்துடன், "என் ஸ்வாமி சேவையைப் பிறரிடம் விட்டு நான் ஓடுவதா?" என்று கேட்டாள்.

பிருந்தாவனன் சிறிது வெட்கத்துடன், "இல்லை அம்மா; உன் பொறுப்பு உன்னிடமே இருக்கட்டும். சில தினங்கள் பொறுத்துத் திரும்பி வந்து ஏற்றுக்கொண்டு விடலாமே" என்றான்.

தாய் தலை அசைத்துக்கொண்டே தீர்மானமாக, "இல்லை அப்பா! அது நடக்காத காரியம். என் மாமியார் இந்தப் பாரத்தை என்னிடந்தான் ஒப்பித்திருக்கிறாள். நானும் அவளைப்போல் யாருக்காவது கொடுக்க முடியுமானால் கொடுத்துவிடுவேன். இல்லாவிட்டால் அந்தப் பாரம் என் தலையிலேயே இருக்கட்டும். நீங்கள் போங்கள்" என்றாள்.

பிருந்தாவனன் வருத்தத்துடன், "சரிதான். உன்னை இந்தமாதிரி நிலைமையில் தனியாக விட்டு விட்டு நான் எப்படிப் போகமுடியும்? ஒரு வேளை........." என்று சொல்லும்போது தாய் சிறிது நகைத்துவிட்டு, "பிருந்தாவனு, அப்படியானால் என் காரியம் முடிந்துவிட்டமாதிரிதான். ஆகையால் ஸ்வாமியின் பாரத்தைப் பிறரிடம் ஒப்பிக்கவேண்டும் என்று தான் நான் நினைக்கவேண்டும். கடவுள் அப்படியே செய்யட்டும். பிருந்தாவனு. என் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டு நீயும் சரணனும் நிர்ப்பயமாகச் செல்லுங்கள். நான் என் ஸ்வாமியுடன் சுதந்திரமாக இங்கேயே இருக்கிறேன்" என்றாள்.

தாயின் கலங்காத குரலைக் கேட்டு எங்காவது ஓடவேண்டுமென்றிருந்த பிருந்தாவனனின் ஆசை பறந்துவிட்டது; பிறகு அவன், திடமாக, "ஆனால் நானும் எங்கும் போகவில்லை. உனக்கு ஸ்வாமி இருந்தால் எனக்கும் அம்மா இருக்கிறாள். என்னைப் பொறுத்தவரையில் சிறிது கூடப் பயமே இல்லை. சரணனைப் பார்க்கும்போதுதான் இங்கே இருக்க இயலாதென்று தோன்றுகிறது. இங்கிருந்து எப்படியும் போகமுடியா

அமாமி என்ன சுருக்காக வேலை செய்கிறது, தெரியுமா? அதுவும், அரைகுறையாக ஒன்றுமல்ல; முற்றும் செம்மையாகவும் சுகமாகவும்! கேசத்தை ஜலம் விட்டு அலசிக் கழுவினால், கோதோ காடுகளோ நிற்பதுமில்லை. சீயக்காயோ, மற்று மட்டமான தயாரிப்புகளோவானால் என்ன கழுவினாலும் மயிர்களுக்கிடையே காடுகள் தங்கி மயிர்க்கண்களை யடைத்துத் தலையில் பொடுகு விழச் செய்யும். அமாமி அப்படி யில்லை. அதன் திறனே அலாதி. கேசத்தை வெகு நாசூக்காகச் சுத்தம் செய்வதோடு கூந்தலுக்கு ஒரு தனி மினுமினுப்பும் புதுமைத் தோற்றமளிக்கவும் நறுமணமூட்டவும் செய்கிறது.

- அமாமி பற்பல தினுசு ஷாம்பூக்கள் உள்ளன. எண்ணெய்ப் பற்றற்றதோ, பிசுபிசுப்பானதோ, பொடுகு விழுந்ததோவான தலைகளுக்குப் பிரத்தியேக ஷாம்பூக்களும், நீர் ஷாம்பூ விரும்புவோருக்குச் சவர்க்காரமற்ற லிக்விட் ஷாம்பூக்களும் இருக்கின்றன.

அமாமி ஷாம்பூ

ĀMĀMĪ

SHAMPOO

G. S.

உயர்ந்த ஆடைகள் குறைந்த விலைக்குக் கிடைக்கும் கடை இதுதான் என்று சென்னையிலுள்ள யாவருக்கும் இந்த ஜி. எஸ். என்ற அடையாளம் நினைவூட்டுகிறது. அழகிய துணிமணிகளும்—பட்டு, கம்பளி பருத்தி ஆடைகள் யாவும்—சகல சுதேசி சாமான்களும் நிறைந்த ஒரு நித்தியக் கண்காட்சி.

ஜெனரல் சுதேசிஸ் லிமிடெட்

(ஹைகோர்ட்டுக்கு எதிரில்)

மதராஸ்

ONLY 1 ANNA EACH! *JUST OUT !!*

THE LIFCO "GREAT" LITTLE BOOKS:

1. A Short Book of Idioms
2. Appropriate Prepositions
3. Easy Steps to Parsing
4. Easy Steps to Analysis
5. Figures of Speech
6. Summarising Poems
7. A Short Book of Essays
8. Handy Letter-Writer
9. A Little Book of Allusions
10. Select Proverbs and Quotations
11. A Short Book of Useful Information
12. Do you Know
13. Short Lives of the Great
14. Inspiring Speeches
15. A Guide to Debating
16. Tips to Success

No V.P.P. Postage 9 pies extra for the 1st copy and 6 pies for every additional copy.

THE LITTLE FLOWER CO., P. B. 99, G. T., Madras, E.

அடுத்த இதழில்!

கார்த்திகைத் தீப சம்பந்தமான படங்கள், பாரதியார் சட்டுரை, சிறந்த கதைகள் முதலியன வெளிவரும்.

பரிசுபெற்ற சிறுவர் கதையும்

த. நா. குமாரஸ்வாமி	கி. வா. ஜகந்நாதன்
கு. ப. ராஜகோபாலன்	நா. ராமரத்னம்
அ. கி. ஜயராமன்	த. நா. ஸேனபதி

முதலியவர்கள் எழுதிய கதைகளும் வருகின்றன.

உங்கள் பிரதிக்கு உங்களூர் ஏஜெண்டிடம் முந்தியே சொல்லி விடுங்கள்

விட்டால், இன்றையிலிருந்து அவனை ஸ்வாமியின் திருவடிகளில் ஒப்பித்து விட்டு நானும் கவலையற்றிருக்கிறேன். இன்றையிலிருந்து என் முகவாட்டத்தை நீ பார்க்கமாட்டாய்'' என்றான்.

தாரிணியின் சின்னமகன் இறந்துவிட்டான். மறுநாள் பிருந்தாவனன் ஏதோ வேலையாக வெளியே புறப்பட்டான். அவனுடைய குளத்தில் யாரோ ஒரு ஸ்திரீ துணி துவைத்துக்கொண்டிருந்தாள். சிலவற்றைத் துவைத்துவிட்டாள்; சில பாக்கி இருந்தன. அந்தத் துணிகளைப் பார்த்ததும் பிருந்தாவனனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. அருகே சென்று கோபத்துடன், "இந்த இழவு பிணத்துணிகளை எல்லாம் ஏன் இங்கே துவைக்கிறாய்?'' என்று கேட்டான்.

அந்த ஸ்திரீ தன் முக்காட்டுக்குள்ளேயே சொன்ன பதில் பிருந்தாவனனுக்கு ஒன்றும் விளங்கவில்லை.

"செய்த தப்பைச் செய்தாகிவிட்டது; இனிமேல் போ. மற்றத் துணிகளையும் துவைக்காதே'' என்றான்.

அந்த ஸ்திரீ துவைத்ததும் துவைக்காததுமாக இருந்த துணிகளையெல்லாம் எடுத்துக்கொண்டு அங்கிருந்து சென்றாள்.

பிருந்தாவனன் சிறிதுநேரம் அசைவற்றுத் தண்ணீரைப் பார்த்துக்கொண்டே நின்றிருந்தான். பிறகு மெள்ள அதை விட்டுச் செல்ல ஆரம்பித்தபொழுது தாரிணி அவசர அவசரமாக அந்தப் பக்கம் வந்துகொண்டிருந்தார். ஒரு பக்கம் தன்னுடைய புத்திரசோகம்; மற்றொரு புறம் இந்த அவமானம். வந்ததுமே அவர் பைத்தியக்காரனைப்போல் கண்களையும் வாயையும் கோணிக்கொண்டு, "நீ என் வீட்டு மனுஷ்யர்களை இங்கே ஸ்நானம் செய்யக்கூடாதென்று தடுத்தாயா?'' என்று கேட்டார்.

"இல்லை, அதொன்றும் இல்லை. அழுக்குத்துணி துவைப்பதைத்தான் தடுத்தேன்'' என்றான் பிருந்தாவனன்.

தாரிணி சத்தமிட்டுக்கொண்டு, "ஆனால் அவைகளை எங்கே துவைப்பது? பாடலில் இருந்துகொண்டு வைத்தியபாடிக்குத் துணி துவைக்கப் போகவேண்டுமா? பிருந்தாவனா, நீ நாசமாகப் போய்விடுவாய். சின்ன ஜாதியாக இருந்து பணத்திமிரினால் பிராம்மணர்களுக்குக் கஷ்டமுண்டாக்கினால் வம்சநாசமாய்ப் போவாய்!'' என்று ஆத்திரத்துடன் கூவினார்.

பிருந்தாவனனின் உள்ளம் குமுறியது. ஆனால் வீண்வார்த்தை வளர்ப்பது அவன் சுபாவமல்ல. ஆகையால் தன்னை அடக்கிக்கொண்டு சாந்தத்துடன், "நான் தனியாக நஷ்டமடைவதைப்பற்றி யாதோர் ஆட்சேபணையும் இல்லை. தாங்கள் இந்தத் தெருமுழுவதுக்கும் நாசத்தை விளைவிக்க வழி தேடுகிறீர்கள். கிராமம் முழுதும் ஒரே களேபரமாக இருக்கிறது. தப்பி இருப்பது இந்தத் தெரு ஒன்றுதான். இதையாவது காப்பாற்ற விடமாட்டீர்களா?'' என்று கேட்டான்.

பிராம்மணர் சற்று ஆத்திரத்துடன், "ஜனங்கள் துணியை இங்கே துவைக்காமல் உன் தலையிலா துவைப்பார்கள்?" என்று கேட்டார்.

"இது எனக்குச் சொந்தமான குளம். என் நிபந்தனைக்கு உட்படாவிட்டால் உங்களில் யாரையும் இங்கே அனுமதிக்கமாட்டேன்."

"பின்னே, நாங்கள் எங்கே போகிறதென்று நினைத்துக்கொண்டிருக்கிறாய்?"

"இங்கிருந்து குடிக்கவும் சமையல் செய்யவுந்தான் ஜலம் கொண்டு செல்லலாம். துணி துவைக்கவேண்டுமானால் கிராமத்திற்கு வெளியேயுள்ள ஓடைக்குப் போகவேண்டும்."

தாரிணி முகத்தைச் சுளித்துக்கொண்டு, "உம்! சின்ன ஜாதியாக இருந்து இவ்வளவு தலைக்கிறுக்கா உனக்கு? ஸ்திரீகள் கிராமத்துக்கு வெளியே சென்று துணி துவைக்கவேண்டுமென்று சொல்கிறாய்? அடே! என் வீட்டிற்குமாத்திரம் இந்த ஆபத்து வந்துவிடவில்லை; நாளைக்கு உன் வீட்டிற்கும் வரும்" என்றான்.

பிருந்தாவனன் முன்போலவே சாந்தத்துடனும் திடமாகவும், "நான் ஸ்திரீகளைக் கிராமத்துக்கு வெளியே போகச் சொல்லவில்லை. உங்கள் வீட்டில் வேலைக்காரன், வேலைக்காரி யாரும் இல்லாவிட்டால் நீங்கள்தான் ஆண்பிள்ளை இருக்கிறீர்களே; நீங்களே சென்று துவைத்துக்கொண்டு வாருங்கள், நீங்கள் இந்தச் சமயம் சோகத்தால் கலங்கியிருக்கிறீர்கள். உங்களிடம் நான் கடுமையான வார்த்தை ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. ஆனால் நீங்கள் ஆயிரம் சாபம் கொடுத்தாலும் சரி; நான் இந்த ஜலத்தைக் கெடுக்கும்படி விடமாட்டேன்" என்று சொல்லி வேறு பேச்சுப் பேசாமல் தன் வீட்டிற்குச் சென்றான்.

பத்துப் பதினைந்து நிமிஷங்களுக்கெல்லாம் கோஷால் மஹாசயர் வாசற்படியில் வந்து பிருந்தாவனனைக் கூப்பிடலானார். அவர் தாரிணிக்குச் சொந்தக்காரர். பிருந்தாவனன் வெளியே வந்ததும், "பிருந்தாவனா, எல்லோரும் உன்னை நல்ல பிள்ளை என்று சொல்லுகிறார்கள். பின்னே இதென்ன இப்படிப் பண்ணிவிட்டாய்? பிராம்மணர் புத்திர சோகத்தால் தவித்துக்கொண்டிருக்கிறார். இந்த நிலைமையில் நீ குளத்தில் இறங்கக்கூடாதென்று தடுத்துவிட்டாயே; இப்படிச் செய்யலாமா?" என்று கேட்டார்.

"நான் அழுக்குத்துணிகளைத் துவைப்பதைத்தான் தடுத்தேன். தண்ணீர் கொண்டு செல்வதைத் தடுக்கவில்லையே" என்றான் பிருந்தாவனன்.

"நீ செய்தது சரியல்ல. இருக்கட்டும். நான் சொல்கிறேன்: நீ சொன்னபடியே ஆகட்டும். அவன் படித்துறையில் துவைத்துக்கொள்ளாமல் சற்றுத் தள்ளித் துவைத்துக்கொள்ளட்டும்" என்றார் கோஷால் மஹாசயர்.

"கிராமம் முழுவதற்கும் இந்தத் தண்ணீர்தான் ஆதாரம். இந்தமாதிரி சமயத்தில் எப்படியானாலும் சரி; இந்தத் தண்ணீர் கெட்டுப்போகும்படி விட்டுவிட முடியாது" என்றான் பிருந்தாவனன்.

கோஷால் மஹாசயர் கோபமடைந்து, "பிருந்தாவனா, உன்னுடைய இந்த அக்கிரமச் செயல் சரியல்ல. சாஸ்திரபூர்வமாய்ப் பிரதிஷ்டை செய்த புஷ்கரிணியின் ஜலம் எந்தச் செய்கையாலும் அபவித்ரமோ களங்கமோ அடையாது. நாலு இங்கிலீஷ் எழுத்தைப் படித்துவிட்டதனால் சாஸ்திரத்தில் நம்பிக்கை போய்விட்டதா உனக்கு?" என்றார்.

பிருந்தாவனன் ஒரே வார்த்தையை நூறுதரம் சொல்லி அலுத்துப் போய்விட்டான். ஆகையால் சிறிது வெறுப்புடன், "நான் சாஸ்திரத்தைப் பூர்ணமாக நம்புகிறேன். ஆனால் உங்கள் மனப்பிராந்தி சாஸ்திரத்தை நம்பமுடியாது. நான் எது சொன்னேனோ அதுதான் நடக்கும். அழுக்குத்துணி துவைக்க ஒருபொழுதும் விடமாட்டேன். வேறு யாரேனுமாக இருந்தால் நோயாளியின் துணியைக் கொளுத்தி இருப்பார்கள். உங்களுக்கு அந்தத் துணி வேண்டுமானால் ஊருக்கு வெளியே மைதானத்துக் கருகில் உள்ள ஓடையில் கொண்டுபோய்த் துவைத்துக்கொண்டு வாருங்கள். என்னுடைய குளத்தில் அதெல்லாம் நடக்காது" என்று சொல்லி அவன் உள்ளே சென்றுவிட்டான்.

பெரிய சாஸ்திரிகளான கோஷால் மஹாசயரும் பிருந்தாவனனை, "நீ நாசமாய்ப் போக" என்று சாபமிட்டுக்கொண்டே தம் வீடு சென்றார்.

இது இவ்வார்த்தைகளோடு தீர்ந்துவிடுகிற காரியம் அல்லவென்று பிருந்தாவனனுக்குத் தெரியும். ஆகையால் அவன் குளத்திற்கு ஓர் ஆளைக் காவல் வைத்தான். பகல்முழுதும் போய் இரவு ஒன்பது மணிக்கு அந்த ஆள் வந்து, "துணி துவைக்கிறார்கள். தடுத்தால் தாரிணி சட்டைசெய்யவே மாட்டேனென்கிறார்" என்று சொன்னான்.

பிருந்தாவனன் மடமடவென்று அங்கே சென்று பார்க்கையில் தாரிணியின் விதவைப்பெண், ஜமக்காளம், தலையணை உறை, துணிகள் முதலியவைகளைக் குளத்தில் துவைத்துக்கொண்டிருந்தாள். தாரிணி கரையில் நின்று பார்த்துக்கொண்டிருந்தார்.

அத்தியாயம் 12

மறுநாள் பிருந்தாவனன் தன் தாயின் கட்டளைப்படி சரணனைத் தன்னிடம் அழைத்து, "ஏண்டா சரண், உன் அம்மாவிடம் போகிறாயா?" என்று கேட்டான்.

சரணன் குதித்துக்கொண்டே, "உம்; போகிறேன் அப்பா" என்றான்.

பிருந்தாவனன் தன் மனத்திற்குள் சற்று அதிர்ச்சியுடன், "ஆனால் அங்கே நீ வெகுநாள் இருக்கவேண்டியிருக்குமே; எங்களை விட்டு நீ அங்கே இருப்பாயா?" என்று கேட்டான்.

சரணன் உடனே தலையசைத்துக்கொண்டே, "ஓ! இருப்பேன்" என்றான்.

வாஸ்தவமாகவே தந்தை, பாட்டி இந்த இருவருடைய கட்டுப்பாட்டினால் சரணனுக்குச் சற்றுக் கஷ்டமாகவே இருந்தது. வெளிவாசலில் சென்று விளையாட முடியாது. பள்ளிக்கூடமும் மூடியாகிவிட்டது. தோழர்களின் முகத்தைக்கூடப் பார்க்கமுடிவதில்லை. இரவு பகல் வீட்டிலேயே அடைபட்டுக் கிடக்கவேண்டியிருந்தது. நாற்புறமும் ஏதோ ஒரு விதமான பயம் சூழ்ந்திருந்தது. ஆனால் விஷயம் என்னவென்பதை அவனால் சரியாக அறிய முடியவில்லை. ஆயினும் மனத்திற்குள் சற்று வியாகுலத்துடனேயே இருந்தான். அங்கே தாயின் மட்டற்ற வாஞ்சை, தடங்கலற்ற சுதந்திரம், ஸ்நானம், ஆகாரம், விளையாட்டு எதற்கும் குறை வில்லை. ஆயிரம் தவறு இழைப்பினும் தாய் சிரித்த முகத்துடன் அவனை வாரி அணைத்துக் கொஞ்சுவாள்; அவ்வளவுதான். யாரும் அவனைக் கடிந்துகொள்ள மாட்டார்கள். ஆகையால் அவன் சீக்கிரம் வீட்டை விட்டுச் செல்லத் தயாராக நின்றான்.

அதைக் கண்ட பிருந்தாவனன், "ஆனால் சரி" என்று சொல்லித் தன் கையாலேயே ஒரு தகரப்பெட்டியில் வேஷ்டியையும் சட்டைகளையும் எடுத்து வைத்துக் கொஞ்சம் பணமும் வைத்து வண்டியில் கொண்டு வைத்தான். ஒருமுறை தன் மகனைக் கூர்ந்து பார்த்து அவன் கன்னங்களில் முத்தமிட்டுவிட்டு அவன் 'அம்மா'விடம் அனுப்பினான். அப்போது அவன் கவலையிடையிலும் சிறிது ஆறுதலுடன் பெருமூச்சுவிட்டான். கூடச் செல்லும் வேலைக்காரனிடம் சரணனை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள்ளும்படியும் உடனே வந்து க்ஷேம சமாசாரங்களைச் சொல்லும்படியும் திட்டம் செய்தான். பிறகு தனக்குள், 'சரணனை இனி அடிக்கடி பார்க்கமுடியாவிட்டாலும் பரவாயில்லை; இந்த ஆபத்தான சமயத்தில் இங்கே வைத்திருப்பது சரியல்ல' என்று சொல்லிக்கொண்டான்.

வண்டி கண்ணுக்கு மறையும்வரையில் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்துவிட்டுப் பிறகு உள்ளே வந்து சிறிதுநேரம் அங்குமிங்கும் பார்த்துக்கொண்டு நின்றான். பிறகு சட்டென்று அவனுக்கு அந்தத் தினத்திய ஞாபகம் வந்தது. எங்கே குஸுமா மீண்டும் கோபிப்பாளோ என்று பயந்தான். பிறகு மனத்திற்குள், 'இல்லை, இது சரியல்ல. இவ்வளவு பிடிவாதமும் கோபமுமுள்ளவள் என்ன செய்வாளோ! நான் கூடப் போகவில்லையே. எதையாவது நினைத்துக்கொண்டு கோபத்தினால் ஏதாவது நடந்துவிட்டால்......?' என்று எண்ணினான். சட்டென்று ஒரு சால்வையை எடுத்து அக்குளில் வைத்துக்கொண்டு மளமளவென்று சிறிது தூரத்தில் சென்றுகொண்டிருந்த வண்டியருகில் சென்று அதில் ஏறித் தன் மகன் பக்கத்தில் அமர்ந்தான்.

வண்டி குஞ்சநாதனது வீட்டின்முன் வந்து சேர்ந்ததும் வெளியே இருந்த நிலைமையைக் கண்டு பிருந்தாவனன் திடுக்கிட்டுப்போனான். நாற்

புறமும் குப்பையும் கூளமும் படிந்து வெகுநாட்களாக யாரும் வசிக்காத வீடுபோல் தோன்றியது. கதவு திறந்தபடியே கிடந்தது. பையனை அழைத்துக்கொண்டு உள்ளே சென்றான். அங்கும் அந்தக் காட்சிதான் தென்பட்டது.

சப்தத்தைக் கேட்டுக் குஸுமா, "அண்ணா" என்று கூப்பிட்டுக் கொண்டே வெளியே வந்தாள். அவர்களைப் பார்த்ததும் அவளுக்கு வெறுப்பும் கோபமும் மாறிமாறி எழுந்தன. க்ஷணநேரம் பேசாமல் நின்று சட்டென்று தன் அறைக்குள் சென்றுவிட்டாள். சாரணன் வழக்கம் போல் சந்தோஷத்துடன் கத்திக்கொண்டேபோய்க் குஸுமாவைக் கட்டிக் கொண்டான். குஸுமா அவனை இடுப்பில் எடுத்துக்கொண்டு தன் முக்காட்டைச் சரிப்படுத்திக்கொண்டு ஐந்து நிமிஷம் பொறுத்து வாசற்படி யருகில் வந்து நின்றாள்.

"குஞ்சநாதன் எங்கே?" என்று கேட்டான் பிருந்தாவனன்.

"தெரியாது; எங்காவது ஊர்சுற்றப் போயிருப்பான்" என்றாள் குஸுமா.

"பார்த்தால் இந்த வீட்டில் ஒருவருமே குடியிருப்பதாகத் தெரிய வில்லையே. ஏன்? இவ்வளவு நாட்களாக நீங்களெல்லாம் இங்கே இருக்க வில்லையா?"

"இல்லை."

"எங்கே இருந்தீர்கள்?"

ஒரு மாதகாலமாகக் குஸுமா குஞ்சனுடைய மாமியுடன் மேற்கே தீர்த்தயாத்திரை சென்றிருந்தாள். முந்தினநாள் சாயங்காலந்தான் திரும்பி வந்தாள். ஆனால் அவள் அதைச் சொல்லாமல் அலட்சியமாக, "இங்கும் அங்கும் திரிவான்" என்றாள்.

முன்பெல்லாம் பிருந்தாவனன் வந்தால் குஸுமா முதலில் அவனுக்கு உட்கார ஆஸனம் கொண்டுவந்து போடுவது வழக்கம். ஆனால் இன்று அவள் போடவில்லை. இதைப் பார்த்துவிட்டுப் பிருந்தாவனன் தானே, "நான் நிற்கிறேனே; உட்கார ஏதாவது மணை இருக்கிறதா?" என்று கேட்டான்.

குஸுமா முன்போலவே அலட்சியமாய், "பலகைகளெல்லாம் எங்கே கிடக்கின்றனவோ!" என்று சொல்லிவிட்டுத் தான் நின்ற இடத்திலேயே நின்றுகொண்டிருந்தாள். ஓர் அடிகூட அப்புறம் எடுத்து வைக்கவில்லை.

பிருந்தாவனன் இதற்கெல்லாம் தயாராகத்தான் வந்திருந்தான். ஆயினும் இந்த அவமதிப்பு அவன் மனத்தில் ஆழ்ந்த வருத்தத்தை உண்டாக்கியது. அன்று ஆத்திரத்தில் தான் நடந்துகொண்டதால் உண்டான கலகம் அவன் நினைவிற்கு வந்தது. ஆகையால் அவன் சற்று நேரம் பேசாமல் இருந்துவிட்டுப் பிறகு அடக்கமாக, "நான் அதிகநேரம் உனக்குக் கஷ்டம் கொடுக்கமாட்டேன். நான் எதற்காக வந்தேனோ, அதைச் சொல்லிவிடுகிறேன். எங்கள் கிராமத்தில் காலராநோய் பரவி

இருக்கிறது. ஆகையால் சரணனை உன்னிடம் விட்டுவிட்டுப் போகலாம் என்று வந்தேன்'' என்றான்.

குஸுமா இவ்வளவு நாட்களாக இங்கே இருக்கவில்லை. ஆகையால் இந்த நோயைப்பற்றி அவளுக்கு ஒன்றும் தெரியவில்லை. அவள் சற்றுக் கர்வத்துடன், ''ஓஹோ! அதனால்தான் இப்பொழுது கருணை பிறந்து அழைத்துக்கொண்டு வந்தீர்கள்போல் இருக்கிறது? ஆனால் அந்தப் பாழாய்ப் போன நோய் எங்கேதான் இல்லை? நான்மாத்திரம் எந்தத் தைரியத்தின்மேல் பிறருடைய பிள்ளையின் பொறுப்பை என் தலைமேல் வகிக்கமுடியும்?'' என்றாள்.

பிருந்தாவனன் சாந்தமாக, ''எந்தத் தைரியத்தில் நான் அழைத்து வந்தேனோ, அதே தைரியத்தினால்தான். தவிரவும் எல்லோரையும்விட அவன் உன்னைத்தான் அதிகமாக விரும்புகிறான்'' என்றான்.

குஸுமா வேறொன்றும் சொல்ல விரும்பவில்லை. இதற்குள் சரணன் குஸுமாவின் முகத்தைத் தன் முகத்தின்பக்கம் திருப்பி, ''அம்மா, நான் உன்னிடம் இருக்கவேண்டுமென்று அப்பா சொல்லுகிறார். நீ ஸ்நானம் செய்ய நதிக்கு வரவில்லையா?'' என்று கேட்டான்.

இதற்குப் பதிலாக அவள் பிருந்தாவனன் காதில் விழும்படியாக, ''நீ என்னிடம் இருக்கவேண்டிய அவசியம் இல்லை. உனக்குப் புது அம்மாதான் வரப்போகிறாளே. அவளிடமே இருக்கலாமே'' என்றாள்.

பிருந்தாவனன் மெல்லப் புன்னகை செய்துவிட்டு, ''அந்தச் சமாசாரமும் கேள்விப்பட்டுவிட்டாயா? சரிதான். நான் சொல்கிறேன்: அம்மா தனியாக எவ்வளவு நாள் குடும்பத்தை நிர்வகிப்பாள்? அதற்காகத்தான் அந்தப் பேச்சு எழுந்தது; பிறகு நின்றுவிட்டது'' என்றான்.

''ஏன் நின்றுவிட்டது?''

''அதற்கு ஒரு விசேஷ காரணம் உண்டு. இப்பொழுது அதைப்பற்றி என்ன? சரண், வா, வா; நாழிகையாகிவிட்டது; வீட்டிற்குப் போவோம்'' என்றான் பிருந்தாவனன்.

சரணன் சற்றுப் பிணங்கிக்கொண்டே, ''நாளைக்கு வருகிறேன், அப்பா'' என்றான்.

பிருந்தாவனன் பேசாமல் இருந்தான். குஸுமாவும் பேசாமல் சரணனை இடுப்பிலிருந்து கீழே இறக்கிவிட்டாள். இரண்டு நிமிஷங்கள் கழிந்தன. பிருந்தாவனன் ஏதோ தீர்மானம் செய்துகொண்டவனாக, ''நாழியாகிறது; வாடா சரண்'' என்று சொல்லிவிட்டு மெள்ள வெளியே சென்றான்.

சரணன் எவ்வளவு செல்வப்பிள்ளையாக இருந்தாலும் பெரியோர் உத்தரவுக்குக் கீழ்ப்படிய அவன் மறுப்பதில்லை. முதலில் ஆவல் நிறைந்த பார்வையுடன் தாயின் முகத்தை ஒருமுறை பார்த்துவிட்டு வருத்தத்துடன் பேசாமல் தந்தையின் பின்னே சென்றான்.

வண்டிக்காரன் மாடுகளுக்குத் தண்ணீர்காட்டச் சென்றிருந்ததனால் தந்தையும் மகனும் அவனை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். குஸுமா தான் இருந்த இடத்தை விட்டுக் கிளம்பிக் கதவின் மறைவில் வந்து நின்று தன் கணவன் முகத்தைப் பார்த்துத் திடுக்கிட்டுப் போனாள். அந்தப் பழைய தேஜஸ் அதில் இல்லை. கண்கள் உள்ளே போயிருந்தன. முகம் வெளுத்திருந்தது. அவளால் தன்னை அடக்கிக்கொள்ள முடியவில்லை. கதவின் மறைவில் இருந்துகொண்டே, "சற்று ஒரு வார்த்தை கேட்டு விட்டுப் போங்கள்" என்று கூப்பிட்டாள்.

பிருந்தாவனன் அவள் அருகில் வந்து, "என்ன சொல்கிறாய்?" என்று கேட்டான்.

"ஏன், சமீபத்தில் ஏதாவது நோய்வாய்ப்பட்டிருந்தீர்களா?"

"இல்லை."

"பின் ஏன் இப்படி வியாதி வந்தவரைப்போல இருக்கிறீர்களே?"

"என்னவோ சொல்லமுடியாது. ஒருகால் கவலையினால் வந்த இளைப்பாக இருக்கலாம்."

கவலையா? கணவனின் வற்றிப்போன முகத்தைக் கண்டு அவள் கோபம் மறைந்திருந்தது; கடைசி வார்த்தையைக் கேட்டு மீண்டும் கோபமடைந்தாள். பிறகு சற்றுக் கிண்டலாக, "நீங்கள் நன்றாகச் சௌக்கியமாக இருப்பதற்கு வேண்டிய எல்லாம் இருக்கின்றனவே; கவலை என்ன வந்தது? சொல்லுங்களேன்; நானுந்தான் கேட்கிறேன்!" என்றாள்.

பிருந்தாவனன் இதற்கு ஒரு பதிலும் சொல்லவில்லை. வண்டி தயாரானதும் சரணன் அதில் ஏறச்சென்றான். அப்பொழுது பிருந்தாவனன், "ஏண்டா, உன் அம்மாவுக்கு நமஸ்காரம் செய்யவேண்டாமா?" என்றான்.

சரணன் திரும்பி வந்து வாசற்படிக்கு வெளியிலேயே அம்மாவுக்கு நமஸ்காரம் செய்தான். குஸுமா ஆவலுடன் கையை நீட்டி அவனைப் பிடிக்கச் சென்றபொழுது அவன் ஓடிப் போய்விட்டான். அவன் அறியாதவனாக இருந்தாலும், 'தாய் தன்னிடம் இன்று அன்புகாட்டவில்லை. தான் தங்குவதற்காக வந்தும் அவள் தன்னை இங்கே வைத்துக்கொள்ளவில்லை' என்பதை நன்றாய் அறிந்துகொண்டான்.

பிருந்தாவனன் இன்னும் சற்று அருகில் வந்து தழுதழுத்த குரலில், "யார் அறிவார்? இனி ஒருவேளை சொல்லமுடியுமோ முடியாதோ? இன்றே சொல்லிவிடுகிறேன்: இன்று கோபத்தினால் சரணனுக்கு நீ ஆதரவளிக்கவில்லை. நான் இல்லாவிட்டால் அவனுக்கு அவசியம் நீ ஆதரவு அளிக்க வேண்டும்" என்றான்.

குஸுமா வருத்தத்துடன் கைமறித்து, "நான் இதையெல்லாம் கேட்க விரும்பவில்லை" என்றாள்.

“ஆனாலும் கேட்டுக்கொள்: நான் இவனை இன்று உன்னிடம் ஒப்பிக்கத்தான் வந்தேன்.”

“உங்களுக்கு என்னிடம் என்ன நம்பிக்கை இருக்கிறது?”

பிருந்தாவனனின் கண்களில் நீர் ததும்பிற்று. “மீண்டும் அதே குரோத வார்த்தைகளா? குஸுமா, நீ மிகவும் தெரிந்தவள் என்று எண்ணினேன். ஸ்திரீகள் எல்லாவற்றையும்விட முக்கியமாகத் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயம் பொறுமை. அதை நீ ஏன் கற்றுக்கொள்ளவில்லை? ஆனாலும் நீ சரணனின் தாய்தான் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. குழந்தையை ஒப்பிக்கும் விஷயத்தில் தந்தை தாயை நம்பாவிட்டால் பின்னே யாரை நம்புவது?” என்றான்.

தேடிப்பார்த்தும் குஸுமாவுக்கு இதற்கு யாதொரு பதிலும் கிடைக்கவில்லை.

மாடுகள் வீடுசெல்ல முரணிக்கொண்டு நின்றன: “வரலையா? அப்பா” என்று கூப்பிட்டான் சரணன்.

குஸுமா ஏதோ சொல்ல விரும்பினாள். ஆனால் பிருந்தாவனன் அதற்கு முன்னாடியே, “சரி; நான் போய்வருகிறேன்” என்று சொல்லி வண்டியில் வந்து உட்கார்ந்தான்.

குஸுமா அங்கேயே உட்கார்ந்து துக்கமும் ஆத்திரமும் பொங்கப் பரலோகத்தில் இருக்கும் தன் தாயை எண்ணி, “அடி அம்மா, நீ எனக்குத் தாயாக இருந்தும் எவ்வளவு தீமை இழைத்துவிட்டுப் போய்விட்டாய். உண்மையிலேயே நீ என்னை அறியாத வயதில் களங்கத்தில் வீழ்த்தினாயோ? அல்லது உன் கர்வம் அகங்காரம் இவைகளுக்காக என்னைப் பலியிட்டாயோ? அதை ஏன் என்னிடம் தெளிவாகச் சொல்லிவிட்டுப் போகவில்லை? யாருடைய பயத்தினால் நீ என்னுடைய மங்கல சின்னங்களை அழித்தாய்? என் உள்ளம் எவர்களைக் கணவனாகவும் மகனாகவும் எண்ணுகிறதோ அவர்களை உலகின்முன் காட்டி நிரூபிக்கும் மார்க்கத்தை நீ ஏன் தடை செய்துவிட்டாய்? அப்படி இருந்தால் இன்று என்னை யார் உதறித் தள்ள முடியும்? எந்தக் கணவன் வெட்கமற்று மனைவியை அனாதையைப் போல் தன் இருப்பிடத்துக்கு வரும்படி உபதேசம் செய்வான்? தவிர நான் உண்மையிலே கைம்பெண்ணாக இருந்தால் அந்த விஷயம் ஏன் எனக்குத் தெளிவாகப் புலப்படவில்லை?” என்று கதறினாள்.

குஸுமா உட்கார்ந்த இடத்திலேயே வெகுநேரம் அழுதுகொண்டிருந்துவிட்டுப் பிறகு ஆகாயத்தை நோக்கிக் கைகுவித்து, “கடவுளே! எனக்கு ஏதாவது வழிகாட்டு. ஒன்று, என்னைக் கர்வத்துடன் தலை நிமிர்ந்து கணவன் வீடு செல்ல விடு. இல்லாவிட்டால் கவலையும் தடையுமற்ற இளம்பருவ நாட்களைத் திருப்பிக் கொடு. அதனாலாவது நான் சற்றுத் தாராளமாய் மூச்சுவிடுகிறேன்” என்று வேண்டினாள்.

(தொடரும்)

அணில்

புரசு பாலகிருஷ்ணன், எம். பி., பி. எஸ்.

“டேய் பாலு, பல் தேச்சுட்டுக் காப்பி குடிக்க வாடா” என்று பாலுவை அவனுடைய தாய் கூப்பிட்டுப் பத்து நிமிஷங்களாகிவிட்டன. பாலு மாடியை விட்டுக் கீழே இறங்காமல், மேல் மாடத்திலிருந்து தோட்டத்தைப் பராக்குப் பார்த்துக் கொண்டிருந்தான்.

“பாலு, உடனே கீழே வா. சிறுபிள்ளையாய், லட்சணமாய், கார்த்தாலே எழுந்து பாடம் படிக்கிறது கிடையாது!” என்று அம்மாவின் மனமாறுதல் பேச்சிலும் குரலிலும் சேர்ந்து தொனிக்கவே, பாலு துரிதமாய்க் கீழே இறங்கி ஸ்நான அறைக்குச் சென்றான்.

“பல் தேய்க்காத பன்னி! எழுந்து எவ்வளவு நாழி பல் தேய்க்காதே இருக்கிறது?” என்று அம்மா அவனுக்குச் சுகாதார போதனை செய்துகொண்டு சமையலறையிலிருந்து கையில் புடைவை, துண்டு முதலியவற்றுடன் அங்கு வந்தாள். “நான் குளிக்கணும். நீ தோட்டத்துக் குழாய்க்குப் போய் அங்கே பல் தேச்சு மூஞ்சி அலம்பிண்டு வா. காப்பியை டம்ளர்லே வச்சிருக்கேன். எடுத்துக் குடி” என்று அவள் அவனை அவசரப்படுத்தவும், அவன் கரிப்பொடியைக் கையில் எடுத்துக் கொண்டு ஸ்நான அறையிலிருந்து வெளியேறினான்.

வாசற்படியைக் கடந்து செல்லுகையில் அவனுடைய தலைக்குமேல் குடு குடு என்று இரண்டு அணில்கள் ஓடின. சேற்றிலும் சாக்கடையிலும் விழுந்து புரளும் பன்றிகளைப்பற்றித் தீவிரமாய் யோசனை செய்துகொண்டிருந்த பாலு திடுக்கிட்டுப் போனான். வாசற்படியிலிருந்து இறங்கும் சமயத்தில் தன் உடம்பில் ஏற்பட்ட அதிர்ச்சியினால் அவன் இரண்டு மூன்று அடிகள் தடுமாறிய பின்புதான் திரும்பிப் பார்க்க முடிந்தது. கையிலிருந்த கரிப்பொடி மண்ணில் விழுந்தது. அம்மா குளித்து விட்டு வரும்வரையில் அவன் கரிப்பொடிக்காகக் காத்திருக்கவேண்டும். அம்மா கோபிக்க ஆரம்பிக்கும்பொழுதே அவன் அவசரமாய், “கரிப்பொடி கொட்டிப் போயிடுத்து. என் தலைக்குமேலே இரண்டு அணில் ஓடித்து” என்று முன் ஜாக்கிரதையாய்ச் சொல்லவேண்டும்.

பாலு தோட்டத்தில் நின்றுகொண்டு அணில்கூடுகளை ஆராய்ந்து பார்க்கத் தொடங்கினான். வாசற்படிக்குமேல் ஒரு கூடு. மேல்மாடத்தின் கூரையில் மற்றொரு கூடு. அவன் வீட்டைச் சுற்றி அணில்கள் அதிகம். நடுப்பகலில் சகலமும் நிச்சப்தமாய் இருக்கும்பொழுது, அவைகளின் குரல் மாத்திரம் உரக்கக் கிரீச்சுக் கிரீச்சென்று தென்னை மரங்களிலிருந்து கேட்கும். அவைகள் மாறி மாறி ஒரே மூச்சில் தொடர்ந்து கீச்சிடும்பொழுது, அசலமான அவ்வேளையின்மீதே விசித்திரமான ஒரு மாயப் போர்வை படரும்.

வாசற்கதவின்முன்பு தேங்காய் நார்களும் பல குப்பை ரகங்களும் விழுந்து வாசற்படியை அசுத்தமாக்கி இருந்தன. அணில்கள் அப்பொழுதுதான் வாசற்கதவின் மேலிருந்த வெப்பந்தாங்கியில் ஒரு கூடு கட்டிக்கொண்டிருந்தன. இதுவரையில் மேல்

மாடத்தின் கூரையில்தான் ஒரு கூடு இருந்தது. இப்பொழுது அவைகள் கட்டுவது வீட்டில் இரண்டாவது கூடு.

"பாலு, காப்பி சாப்பிட்டாயிடுத்தா?" என்று அவனை விசாரித்துக்கொண்டு அம்மா ஸ்நான அறையின் கதவைத் திறந்தாள்.

"இல்லே, அம்மா" என்று அவன் முடிப்பதற்குள் அம்மா உக்கிர தேவதையாகி விட்டாள்.

"அந்தக் காப்பி என்னத்துக்காகும், ஆறி அவலாகி? இடத்துக்கு இடம் போய், அஸமஞ்சன்மாதிரி உட்கார்ந்துண்டா?"

பாலு பதிலளிக்கத் தெரியாமல் கரி வர்ணமாகியிருந்த தன் இடது உள்ளங் கையைப் பார்த்துக்கொண்டு நின்றான்.

"நான் இன்னும் பல் தேய்க்கல்லே, அம்மா."

"பல் தேய்க்கல்லையா? கொறப்பயலே! இவ்வளவு நாழி என்ன பண்ணிண்டு இருந்தே, கையிலே கரிப்பொடியோட, வாசப்படியண்டே நின்னுண்டு?"

"இல்லே, அம்மா."

"இல்லேயாவது, ளொள்ளேயாவது? சோம்பேறி! உடம்பிலே கொஞ்சமாவது சுறுசுறுப்பு இருந்தான்னா? எழுந்திருந்து ஒரு மணியாச்சு; இன்னும் பல் தேய்க்காதெ உட்கார்ந்துண்டு இருக்கயே! எழுந்தவுடனே பளிச்சுன்னு பல் தேச்சுட்டு, சுத்தமாக் குளிச்சுட்டு, மொற மொறக்க உட்கார்ந்துண்டு, பாடத்தைப் படிச்சான்னா? சோம்பேறிச் சாவடியாய்க் கையிலே கரிப்பொடியொடே, நகர்ந்து நகர்ந்து, அங்கேயும் இங்கேயுமா நின்னுண்டு......"

"என் தலைக்கு மேலே ரெண்டு அணில் ஓடிப் போச்சு, அம்மா."

"சரி, சரி. உடனே பல் தேச்சுட்டுக் காப்பி குடிக்க வா. அணிலையும் ஆட்டுக் குட்டியையும் வேடிக்கை பார்த்துண்டு நிக்காதே......எ தாயி, 'பால்கனி'யைப் பெருக்கி ஜலம் போட்டு அலம்பு" என்று வேலைக்காரியை உத்தரவிட்டுக்கொண்டு அம்மா, பாதி உடுத்திக்கொண்டிருந்த புடைவையின் மிகுதியைக் கையில் ஏந்தியபடி மறைந்தாள். பாலு மறுபடியும் ஸ்நான அறைக்குச் சென்று, கரிப் பொடியை எடுத்துக்கொண்டு தோட்டக் குழாயை நோக்கி நடந்தான். வாசற் படியைத் தாண்டும்பொழுது மேலே அண்ணாந்து, புதிதாய்க் கட்டியிருந்த அணில் கூட்டைப் பார்த்துக்கொண்டு சென்றான். படியைத் தாண்டிக் காலைக் கீழேவைத்த பொழுது, சற்று மிருதுவான ஒரு வஸ்துவின்மேல் அவன் கால் பட்டது. ஏதோ தவளையைத்தான் மிதித்துவிட்டோமோ என்று அவனுக்குத் தோன்றவே, அவன் அருவருப்புடன் அங்கிருந்து இரண்டு அடிகள் தாவினான். அப்பொழுது அவன் கையை மூடிக்கொண்டதனால் கையிலிருந்த கரிப்பொடி மண்ணில் விழவில்லை. படியைத் தாண்டியபின் திரும்பிப் பார்க்கையில், தான் மிதித்த வஸ்து தவளையல்ல என்று கண்டான். தேங்காய்நார் உருண்டையாய் ஒரு சிறு பந்துபோல் கிடந்தது. அணில்கள் கூடு கட்டுவதற்காகச் சேகரித்து வாயில் கவ்வி நழுவவிட்ட ஒரு நார்ச் சுருள் அது. எப்படிப் பந்துபோல் அணில்கள் தங்கள் வாயால் நாரைச் சுருட்டி விடுகின்றன என்று பாலு ஒரு நிமிஷம் வியந்தான்.

"எ தாயி, 'பால்கனி'யை ஜலம் போட்டு அலம்பினயா?" என்று அம்மா வேலைக்காரியைக் கேட்பது அவன் செவிகளில் விழுந்தது.

"இல்லே, அம்மா."

"ஜலம் போட்டுப் பெருக்கு. அணில்கள் அங்கே ஆபாசம் பண்ணி வச்சுருக்கு."

பாலுவுக்கு ஓர் எண்ணம் உதித்தது. வாயிலில் நாரும் குப்பையும் கிடந்தது ஆச்சரியமல்ல. ஏனெனில் அணில்கள் அங்கே அச்சமயம் கூடுகட்டிக் கொண்டிருந்தன. ஆனால் மேல்மாடத்தில் நேற்றும் இன்றும், என்றும் இல்லாதபடி, ஏன் அணில் புழுக்கைகள் கிடந்தன? அவ்விஷயம் அவனுக்கு விளங்கவில்லை.

சற்று நேரத்தில் மாடியிலிருந்து ஜலம் கீழே விழும் சப்தம் கேட்டது. வேலைக்காரி மேல்மாடத்தை அலம்பிச் சுத்தம் செய்துகொண்டிருந்தாள்.

இதற்குள் காலை வெளிச்சத்திற்குமேல் வெயில் உறைக்க ஆரம்பித்தது.

'என்னோடே விளையாடறத்துக்கு ஒரு தம்பியோ தங்கையோ இருந்தா, எவ்வளவு நன்னா இருக்கும்!' என்று எண்ணினான் பாலு. 'கோபுவுக்கு ஒரு தங்கை இருக்காளே. அவளோடே விளையாடறத்துக்கு எவ்வளவு நன்னாயிருக்கு! கோபுவுக்கு அவளோடே எப்பவும் விளையாட முடியறதே. எனக்கும் அவளைப்போல ஒருத்தி இருந்தா?'

அதற்குள் அப்பாவின் செருப்புச் சப்தம் கேட்டது. அவர் கடற்கரையிலிருந்து திரும்பி வந்துகொண்டிருந்தார். பிரதிதினமும் அவர் கடற்கரைக்கு உலாவச் செல்லுவது வழக்கம். இன்று அவர் அதிகாலையில் புறப்பட்டபொழுதே பாலு எழுந்துவிட்டான். ஆனால் இப்பொழுதுதான் அவனுக்குப் பல் விளக்கச் சாத்தியமாயிற்று.

"பாலு, என்னடா, கரிப்பொடியைப் போட்டுத் தேச்சுண்டே இருக்கே? பல் கெட்டுப் போயிடும். சும்மாப் போட்டுத் தேய்க்காதே. சிக்கிரமா வாயைக் கொப்பளிச்சுட்டு உள்ளே போ" என்று அவனுக்குப் புத்திமதி கூறிக்கொண்டு அப்பா அவனைக் கடந்து சென்றார். பாலு கரிப்பொடியை உதறிவிட்டுக் குழாயைத் திறந்தான். அதற்குள், கொட்டும் ஜலத்தின் ஓசையையும் மீறி, அப்பாவின் கோபக் குரல் வாசற்படியிலிருந்து அவனை எட்டியது.

"என்ன இது? வாசலெல்லாம் ஆபாசம் பண்ணி வச்சிருக்கு? எங்கே பார்த்தாலும் ஒரே குப்பை, வீட்டுக்குள் போயிட்டு வரமுடியாதபடிகூட! தர்மாம்பா, வாசலைச் சுத்தமா வச்சிருக்க முடியல்லையா உனக்கு? நேத்திக்கு இப்படி இருந்தது; இன்னிக்கும் இப்படியே இருக்கு. எங்கே பார்த்தாலும் சகதி வேறே! ஒருமிக்கத் தண்ணியைக் கொட்டி வச்சிருக்கே; இங்கே இருக்கற குப்பை செத்தை போறாதுன்னா?"

"ஆமாம், ஆமாம். உங்களுக்கென்ன? கார்த்தாலே எழுந்தா, உடனே ஜோரா பீச்சுக்குப் போயிடுவேள். காத்து வாங்கிட்டுத் திரும்பி வறபோது, காப்பி எங்கேருந்தோ தயாராகி இருக்கணும். அது மாத்திரம் எங்கேருந்து அப்படித் தயாரா வந்துடுமாம்? ஒருத்தி எழுந்து, கரி எடுத்து, அடுப்பு மூட்டி, பாலைக் காய்ச்சிப் போட்டாத்தானே அது வரும்? அதெல்லாம் உங்களுக்குத் தெரியப்போறதா? பீச்சுக்குப் போயிட்டு வீட்டுக்கு வந்து, ஹாட்டுப் பூட்டுன்னு இரையத் தெரியும்—அவ்வளவுதான்!"

"என்ன, அதுக்குள்ளே இவ்வளவு கோவிச்சுணுட்டயே? கார்த்தாலே வந்தவுடனே, வாசலைப் பெருக்கி அலம்பாதெ, வேலைக்காரி என்ன வேலை செய்யறாள்? நீ அவளைச் சரியாக் கவனிச்சுக்க வேண்டாமோ?"

"அதுதான், அவளை மாடியைத் தண்ணிவிட்டு அலம்பச் சொன்னேனே. அதுக்குள்ளே நீங்க வந்து, ஹாட்டுப்பூட்டுன்னு......"

"உம்...இந்த அணில்கள் என்ன இப்படி வாசலை எல்லாம் நிர்த்துளி பண்ணி வச்சுருக்கு? மாடிலேயானும் போனுப் போறதுன்னு இருக்கலாம். வீட்டுவாசல்லே இப்படி, உள்ளே வெளியே போயிட்டுவர முடியாதபடி பண்ணிவச்சிருக்கே! ஏ கோபாலா, இந்த அணில் கூட்டை எடுத்துத் தூர எறி."

பாலு சட்டென்று குழாயை நிறுத்திவிட்டு, அப்பாவின் வார்த்தைகளைக் கவனிக்கத் தொடங்கினன்.

"கோபாலா!......ஏ கோபாலா......கோபாலன் எங்கே? அவன் இன்னும் வரல்லையா? என்ன வேலைக்காரன்கள் இவன்கள்? வேலைக்காரன், வேலைக்காரி எல்லாம் சேர்ந்து அமைஞ்சிருக்கு, இந்த வீட்டுக்குன்னு...."

கோபாலன் அப்பொழுதுதான் சிறிது தூரத்தில் தங்கள் தெருவுக்குள் திரும்புவதைப் பாலு கண்டான்.

"கோபாலன் கறிகாய் வாங்கிண்டு வரப்போயிருக்கான். இப்போ வந்துடுவான்" என்று அம்மா பதிலளித்தாள்.

"அவன் வந்தவுடனே இந்தக் கூட்டை எடுத்துத் தூர எறியச் சொல்லு."

"சரி. நீங்க காப்பி சாப்பிட வாங்கோ. கார்த்தாலே எழுந்து என்ன இப்படி சிடுசிடுன்னு இருக்கேள்? பீச்சுலே வாங்கின காத்துப் போரல்லையா?"

"போரும். காப்பி குடிக்காததுதான் போரல்லே."

உடனே அம்மாவின் சிரிப்பு. அதோடு அப்பா அம்மா இருவரும் வீட்டிற்குள் மறைந்தனர். அதற்கப்பால் கோபாலன் வீடு வந்து சேர்ந்தான். பாலு, ஒருவித யோசனையும் இல்லாமல், கோபாலனின் கையில் தொங்கும் காய்கறி மூட்டையையும் வாழை இலைக்கட்டையும் வெறுமனே பார்த்துக்கொண்டு நின்ருன்.

"பாலு, காப்பி சாப்பிட வா" என்று அம்மாவின் குரல் வீட்டின் பங்கா அறையிலிருந்து கேட்டது.

பாலு தன் இடது உள்ளங்கையிலிருந்த கரிப்பொடியை முழுவதும் அலம்பவில்லை என்று சட்டென்று உணர்ந்து, குழாயைத் திறந்து கையை அலம்பினன். அதற்குள் அப்பாவின் குரல் கேட்டது:

"ஏ கோபாலா, உடனே போய் வாசல்லே இருக்கும் அணில் கூட்டை எடுத்து எறிஞ்சுட்டு வாசலைச் சுத்தமாய்ப் பெருக்கு."

பாலு குழாயை உடனே மூடிவிட்டு அவசரமாய் வீட்டிற்குள் நுழைந்தான்.

"இவ்வளவு நாழியாச்சா பல் தேய்க்கறத்துக்கு? இனிமே நீ எப்போ குளிச்சு, என்னத்தைப் படிக்கப் போறயோ!" என்று சொல்லிக்கொண்டு அம்மா அவனுக்குக் காப்பியைக் கொடுத்தாள்.

பாலு இரண்டு வாய்கள் அருந்திவிட்டுக் கையில் டம்ளருடன் வாசற்படிக்குச் சென்ருன். அங்கே கோபாலன் இன்னும் வரவில்லை. அணில்கூடு அப்படியேதான் இருந்தது. வெப்பந்தாங்கியின் கீழ்ப்புறத்திலிருந்து இரண்டு அணில்கள், அவன் வந்த சமயத்தில் திடீரென்று மேற்புரத்திற்குச் சென்று மேல் மாடத்தின் உத்தரங்களிடையே மறைந்தன.

"பாலு, காப்பியைக் கையிலே எடுத்துண்டு வாசல்லே போயிட்டயா? அதை அங்கே கொட்டி அமர்க்களம் பண்ணணுமாக்கும்? நறுவிசா, சமையலறையிலேயே குடிச்சுட்டுப் போறத்துக்கென்ன கேடு? காப்பிகுடிக்கரத்துக்கு ஆயிரம் சிங்கிநாதம் பண்ணறது, கழுதை! உள்ளே வந்து உடனே எல்லாத்தையம் ஒருமிக்கக் குடிச்

சுட்டுப் போ. கையிலே டம்ளரை வச்சுண்டு திரியாதே'' என்று அம்மாவின் அதட்டல் கேட்டது.

அச்சமயம் கோபாலன் தூரத்தில் ஏணியுடன் வந்துகொண்டிருந்தான்.

பாலு அவசரமாய்க் காப்பிமுழுவதையும் குடித்துவிட்டு, டம்ளரைச் சமையலறையில் வைத்துவிட்டு வெகு வேகமாய் வாசற்படிக்குத் திரும்பிவந்தான். அப்பொழுதுதான் கோபாலன் ஏணியைச் சுவரில் சார்த்தி, ஏணியில் பாதிதூரம் ஏறிக்கொண்டிருந்தான்.

''கிரீச், கிரீச், கிரீச், கிரீச்'' என்று திடீரென அணில்களின் கூக்குரல் மேல் மாடத்திலிருந்து உச்சஸ்தாயியில் கேட்டது. பாலு அண்ணாந்து பார்த்தான். வீட்டின் கூரையிலிருந்து இரண்டு அணில்கள் எட்டி எட்டிப் பார்த்தவாறு ஓலமிட்டுக்கொண்டிருந்தன. அவைகளைக் கவனித்துக் கொண்டிருக்கையில், தொப் என்று வாசற்படியில் ஏதோ விழுந்த சப்தம் அவனுக்குக் கேட்டது. கீழே நோக்குகையில் ஒரு சிறிய அணிற்குஞ்சு அங்கு விழுந்திருந்தது. பாலு அநுதாபத்துடனும் சற்று அருவருப்புடனும் அதை நோக்கினான். தனக்குத் தெரியாமலேயே தன் கீழ் உதட்டைக் கடித்துக்கொண்டான். சிறிய அணில், பெரிய அணில்களைப்போல் அவ்வளவு அழகாயில்லை; அசிங்கமாய்த்தான் இருந்தது. ஆயினும் அவன் அதற்காக இரங்கினான். சிறிது நேரம் கழித்து அது ''கிரீச்'' என்று தன் முதுகை வளைத்து மெல்லிய குரலெடுத்துக் கத்தியது. சத்தம்பொழுது பின்னும் அருவருப்பாய்த்தான் இருந்தது. ஆயினும் பாலு அதை மிகுந்த சுவாரசியத்துடன் உற்று நோக்கினான்.

'பாவம், அதுக்கு எவ்வளவு வலிச்சிருக்கும்! மேலேருந்து கீழே விழுந்ததே! எவ்வளவு சின்னதாயிருக்கு!' என்று அவன் எண்ணினான்.

அதே சமயம் கோபாலன் அணில்கூடு நிக்கிரஹத்தைச் செவ்வனே செய்துகொண்டிருந்தான். தேங்காய் நாரும் குப்பையும் தும்பும் வாசற்படியில் காட்சியளித்தன. பாலு, தன் வாயை இறுக மூடிக்கொண்டு அந்தக் காட்சியைக் கவனித்தான்.

''பாலு, என்னடா வேடிக்கை பார்த்துண்டு நிக்கறே?'' என்று கூவிக்கொண்டு அவன் தகப்பனார், காப்பியைக் குடித்தபின் அம்மாவுடன் சிறிதுநேரம் பேசிவிட்டு அங்கு வந்தார். அந்தக் காட்சியைத் தாமும் கண்டபிறகு, ''ஓ!......டேய், கோபாலா! கையோடே வாசலைப் பெருக்கி, நன்னாச் சுத்தம் பண்ணிட்டுப் போ'' என்று கோபாலனுக்கு உத்தரவிட்டார்.

''அப்பா, அணில் குஞ்சு ஒண்ணு கூட்டிலிருந்து கீழே விழுந்துடுத்து'' என்று அவசரமாய்க் கூறினான் பாலு.

மெத்தைக்குச் செல்லுவதற்காக மாடிப்படி ஏற ஆரம்பித்த அப்பா கதவுவழியே வெளியில் எட்டிப் பார்த்தார். ''ஓ!'' என்று சொல்லிவிட்டுப் பிறகு மறுபடியும் கோபாலனின் வேலையை ஒரு பார்வை பார்த்துவிட்டு, மேலே செல்லத் தொடங்கினார்.

''கிரீச், கிரீச், கிரீச், கிரீச்'' என்று பெரிய அணில்களின் கூச்சல் சற்று அருகில் மல்லிகைப் பந்தலிலிருந்து கேட்டது. பாலு திரும்பிப் பார்த்தான். அணில்கள் தென்படவில்லை.

''கிரீச், கிரீச்'' என்று அணிற்குஞ்சு இருமுறை அபாயக்குரல் கொடுத்தது.

''கிரீச், கிரீச், கிரீச், கிரீச்'' என்று பெரிய அணில்களின் அபயக்குரல் மல்லிகைப் பந்தலிலிருந்து கேட்டது.

"பெரிய அணில் வந்து அதைத் தூக்கிண்டு போயிடும். நீ உள்ளே போய் உன் வேலையைப் பாரு. சும்மா வெளியிலே திரிஞ்சுண்டு நிக்காதே, போ" என்று சொல்லிக்கொண்டு அப்பா மெத்தைக்குச் சென்றுவிட்டார்.

அணிற் குஞ்சு கூட்டிலிருந்து விழுந்துவிட்டது என்று தான் அப்பாவிடம் தெரிவித்தபொழுது பாலு, இந்த எதிர்பாராத விபத்தினல் அவர் தம் கட்டளைக்காகப் பச்சாத்தாபப்படுவார் என்று எண்ணியிருந்தான். ஆனல் அணிற் குஞ்சைப் பார்த்த பிறகும் அவர், "அடாடா! கூட்டைப் பிய்த்து எறியச் சொன்னதால், இந்தமாதிரி நேரிடும் என்று நான் நினைக்கவில்லையே" என்று சங்கடப்படவில்லை. அமைதியாகவே அவர் மாடிக்குச் சென்றுவிட்டார். கூட்டைப் பிய்த்ததே தவறு. அதன் பிறகு அவர் கீழே விழுந்திருந்த அணிற் குஞ்சின் கதியையும் சட்டை பண்ணவில்லை.

"பெரிய அணில் வந்து அதைத் தூக்கிண்டு போயிடும். நீ உள்ளே போ" என்று அவர் தன்னிடம் சொன்னரே; ஆனல் விஷயம் சரிவர இவ்விதமே முடியுமா என்று அவர் கொஞ்சங்கூடக் கவலைப்படவில்லை. பாலுவினலோ அப்பாவைப் போல் நிம்மதியாய் இருக்கமுடியவில்லை.

"கிரீச், கிரீச்" என்று அணிற் குஞ்சு இரு முறை தன் முதுகை மேலே வளைத்துப் பிரயாசையுடன் கத்திற்று.

"கிரீச், கிரீச், கிரீச், கிரீச்" என்று பெரிய அணில்கள் பதிலளித்தன.

பாலு அணிற்குஞ்சை நோக்கினன்.

'எவ்வளவு சின்னது! அதனலே ஓடமுடியாது. நகராதெகூட அது கிடந்தபடியே கிடக்கிறது. எவ்வளவு மெல்லிசான குரல்லே கத்தறது! அப்படிக் கத்தி என்ன பிரயோஜனம்? பெரிய அணில் தூர இருந்தா, இது கத்தறது அதுக்குக் கேக்கவே கேக்காது. கிட்ட இருந்தால்தான் கேக்கும்......ஆன, பெரிய அணில் நன்ன பலக்கக் கத்தறது; சின்னத்துக்குக் கேக்கும்' என்று எண்ணினன் பாலு.

'இதுக்கு என்ன ஆகுமோன்னு அப்பா யோசிக்கல்லையே! பெரிய அணில் வந்து தூக்கிண்டு போயிடும்னு சொல்விட்டுப் போயிட்டாரே. அதுக்குள்ளே ஒரு காக்கா வந்து இதைத் தூக்கிண்டு போயிட்டா?' என்ற எண்ணம் பாலுவுக்குத் தோன்றிற்று.

பாலு தன்னைச் சுற்றிப் பார்த்தான். அருகில் ஒரு காகமும் இல்லை. ஆனல் தூரத்தில், மாமரத்தின்மீது ஒரு காகம் தென்பட்டது. ஏனே அது, அவன் அதைப் பார்த்த சமயத்தில், "கா, கா" என்று இருமுறை உரக்கக் கூவிற்று. ஹூம்! எவ்வளவு கறுப்பு! எவ்வளவு அவலட்சணம்!

மறுபடியும் பாலு அணிற் குஞ்சை நோக்கினன். கோபாலன் அப்பொழுது தான் எணியையும் குப்பையையும் எடுத்துக்கொண்டு கொல்லைப்புறம் செல்லப் புறப்பட்டான். அவன் மறையும்வரை பாலு அவனைப் பார்த்துக்கொண்டிருந்துவிட்டுத் தானும் உள்ளே செல்லுவதற்கு வாசற்படியை நோக்கி ஓர் அடி வைத்தான். அச்சமயம் திடீரென்று அவன் கண்ணில் ஒரு பூனை தென்பட்டது. அது அணிற் குஞ்சு இருந்த இடத்திற்கு அருகில் மெள்ள வந்துகொண்டிருந்தது.

"உஸ்!......உஸ்!......உஸ்!......" என்று சீறிக்கொண்டு பாலு, கால்களால் சப்தம் செய்து, கைகளைத் தூர விசிறி எறிந்துகொண்டு அதை விரட்டினன்.

"கிரீச், கிரீச், கிரீச், கிரீச்" என்று அதே சமயம் அணில்களின் கூக்குரல் அதிகமாயிற்று. வீட்டின் பின்புறம் இருந்த தென்னந்தோப்பில் மறைந்து

கொண்டிருந்த பூனையின் மீது பாலு ஒரு கல்லை விட்டெறிந்தான். பிறகு மாமரத்தைப் பார்க்கையில் முன்பு இருந்த காகம் இப்பொழுதும் அங்கேதான் இருந்தது. அதன் மீது மற்றொரு கல்லை விசிறி எறிந்தான் பாலு. அது பறந்து போயிற்று.

'நான் இருந்தால் பெரிய அணில் இங்கே வராது. நான் வீட்டுக்குள்ளே போய் மறைஞ்சுண்டு பார்க்கணும்' என்று எண்ணிக்கொண்டு பாலு வாசற் படியைக் கடந்து உள்ளே சென்றான். சிறிதுநேரம் வாசற்கதவிற்குப் பின் மிகவும் உஷாராய், வெளியில் நடப்பதை எட்டி எட்டிப் பார்த்துக்கொண்டு நின்றான். சீக்கிரமே பெரிய அணில் மல்லிகைப் பந்தலிலிருந்து வெளிக்கிளம்பி வாசற்படியை நோக்கி அதிக ஜாக்கிரதையாய் வந்தது. அது எப்படித் தன் குஞ்சைத் தூக்கிக் கொண்டு போகிறது என்று பாலு மிக்க சுவாரசியத்துடன், மூச்சை உள்ளடக்கிக் கொண்டு கவனித்தான். அது தன் குஞ்சை வாயில் கவ்வியவுடன் ஒரே பாய்ச்ச லாய்ப் பாய்ந்து, மல்லிகைப் பந்தலுக்குத் தாவி அதற்குள் தெரிந்ததும் தெரியாதது மாய் ஓடி, அங்கிருந்து மேல்மாடத்திற்குச் சென்று உத்தரங்களிடையே மறைந்தது.

அதுவரை மெதுவாய் மூச்சுவிட்டுக்கொண்டிருந்த பாலு முடிவில் ஆறுதலாகப் பெருமூச்சுவிட்டான்.

"டேய் பாலு! மறுபடியும் வாசல்லே நின்னுண்டு பராக்குப் பார்க்க ஆரம்பிச் சுட்டயா? காப்பி குடிக்கறத்துக்கு முந்தி அரை நாழி, பிந்தி அரை நாழி!—என்ன பிள்ளை இது! சும்மா வாசல்லேயும் தோட்டத்துலேயும் என்னத்தையோ பார்த்துண்டு நிக்கறது! வெறுமனே அங்கே நின்னுண்டே இருக்காதே, போ. உள்ளே போய் உடனே குளி'' என்று அம்மாவின் குரல் பங்கா அறையிலிருந்து கேட்டது.

2

அன்றிரவு பாலு ஒரு பயங்கரமான கனவு கண்டான்.

அவனை அப்பா வீட்டை விட்டுத் துரத்திவிட்டார். அவன் தெருக்களில் கதியற்றுத் திரிகிறான். போக இடமில்லை. அப்பா அம்மா கைவிட்டால் போக இடமேது? அவன் ஒரு சிறு பிள்ளைதானே?

அவனுக்கு அழுகை அழுகையாய் வருகிறது. ஆனால் அழமுடியாமல் அவன் மனத்தை ஏதோ ஒன்று, ஓர் இருப்புப் பாரம் போல் அமுக்குகிறது. தெருக்களில் திரி யும்பொழுது அவன் பல மனிதர்களைக் காண்கிறான். அவர்களுடைய தோற்றங்களே அவனுக்கு அச்சமளிக்கின்றன. போக்கிரிகள், குடியர்கள், திருடர்கள், தோப்புக் காரர்கள், பட்டாணியர்கள் சிலர் அவனை அடிக்க வருவதுபோல் கைகளை ஓங்கு கின்றனர். அடேயப்பா! அவர்களுக்கு எவ்வளவு பெரிய பலமான கைகள்! சிலர் அவனைத் தென்னை மரத்தின் உச்சியில் கட்டிப்போடுவதற்காகக் கயிற்றைக் கைகளில் எடுக்கின்றனர்; அவர்கள் தோப்புக்காரர்கள். அலறிப் புடைத்துக்கொண்டு அவன் ஓடுகிறான். அவனாலேயே நம்ப முடியவில்லை! கடைசியில் அவன் எப்படியோ அவர்கள் தன்னைப் பிடிக்குமுன்பே தட்டுத்தடுமாறித் தொப்டென்று தன் வீட்டு வாசலிலேயே வந்து விழுகிறான். கதவு திறந்திருக்கிறது. அப்பாவைக் காணோம். பின்வரும் தோப்புக்காரர்களை ஒருமுறை பீதியுடன் பார்த்துக்கொண்டு அவன் வீட்டிற்குள் நுழைந்து கதவைச் சரேலென்று தாழிட்டு விடுகிறான். அம்மா பங்கா அறையிலிருந்து அவசரமாய் ஓடிவந்து, அவனைக் கைகளில் வாரி எடுத்துக்

கொள்கிறாள். "அம்மா!" என்று மூச்சுவாங்கப் பேசமுடியாமல் விம்மிக்கொண்டு அவன் அம்மாவின் மார்புமீது சாய்கிறான்.

"அம்மா!" என்று தூக்கத்தில் அலறினான் பாலு.

அம்மா உடனே விழித்துக்கொண்டாள்.

"பாலு!" என்று அவனை ஒரு முறை அழுத்தமான குரலில் கூப்பிட்டுச் சமாதானப்படுத்தினாள்.

"ஒண்ணும் இல்லை" என்று நன்றாய் விழித்துக்கொண்டு பதிலளித்தான் பாலு. அப்பாடா! எல்லாம் கனவுதான்!

"என்னடா இப்படிக் கத்தினே? உனக்கு என்ன ஆச்சு?"

ஒரு நிமிஷம் பாலு மௌனமாயிருந்தான். பிறகு, "அம்மா, அப்பா என்னை வீட்டை விட்டு அனுப்பிச்சுடமாட்டாரே?" என்று கேட்டான்.

"பைத்தியம்மாதிரி பேசாதே. அப்பா ஒண்ணும் உன்னை அனுப்பிச்சுட மாட்டார். பேசாதே தூங்கு."

பாலு ஆறுதல் அடைந்தான். பிறகு அவனுக்கு மறுபடியும் ஓர் எண்ணம் தோன்றிற்று.

"அம்மா!"

"என்னடா?"

"அப்பா அனுப்பிச்சுட்டா நீ என்னை விட்டுடமாட்டயே?"

"நான் ஒண்ணும் உன்னை விடமாட்டேன். நீ அம்மா கண்ணு இல்லே? படுத்துண்டு தூங்கு. பயப்படாதே."

பாலு மறுபடியும் கண்களை மூடிக்கொண்டான்.

அப்பாடா, எல்லாம் கனவுதான்! இப்பொழுது அவனுக்கு எவ்வளவு நிம்மதியா யிருந்தது!

சிறிது நேரம் சென்றது. பாலுவுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. வேறு எண்ணங்கள் அவன் மனத்தில் தோன்றின. மறுபடியும் அவன், தன் வாயில் குஞ்சைக் கவ்விக்கொண்டு ஓடும் அணிலை மனத்தில் கண்டான்.

'அப்பா செய்தது தப்புத்தான்' என்று எண்ணினான் பாலு. அந்தச் சிறிய அணிற் குஞ்சினால் என்ன செய்ய முடியும்?

பாலு படுக்கையில் ஒரு முறை புரண்டு அம்மாவைப் பார்த்தான். அவள் தனக்குச் சில நாட்களுக்கு முன் சொல்லிக்கொடுத்த 'அணில் பாடம்' அவனுக்கு ஞாபகம் வந்தது. அந்தப் பாடம் அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது. அதில் தன் வாலைத் தூக்கிப் பின்னங் கால்களில் உட்கார்ந்துகொண்டு, முன்னங் கால்களில் ஒரு பழத்தை வைத்துக்கொண்டு தின்னும் ஓர் அணிலின் படம் இருந்தது. அதன் முதுகில் கறுப்பும் வெள்ளையுமாய் மூன்று வரிகள் இருந்தன. அதன்கீழ் எழுதி யிருந்த நான்கு வாக்கியங்களும் அவனுக்கு மனப்பாடமாகியிருந்தன:

"அணில் ஓர் அழகான பிராணி.
அணில் தொடுவதற்கு மிருதுவாய் இருக்கும்.
அணில் மரங்களில் தாவித் தாவி ஓடும்.
அணில் கொட்டை, பழம் முதலியவற்றைத் தின்னும்."

அவைகளை அவன் தன் மனத்திற்குள் சொல்லிக்கொண்டான். அவை எல்லாம் எவ்வளவு அழகாயிருந்தன!

'நாளைக்குக் கார்த்தாலே எழுந்து சீக்கிரமாய்ப் பல் தேய்ச்சுக் குளிச்சுட்டு, அந்தப் பாடத்தை மறுபடியும் படிக்கணும்' என்று எண்ணிக்கொண்டே அவன் கண்ணயர்ந்தான்.

விற்பனைக்குத் தயார்!

சென்னை அரசாங்கத்தாரின் அனுமதி பெற்ற தமிழ்ப் பதிப்புக்கள்!!

1. திருத்தி அமைக்கப்பட்ட, போதனாமுறைப் பாடசாலை, பாட திட்டங்கள் (T. S. L. C. Revised Syllabuses) எலிமெண்டரி கிரேட் ... விலை 5 அணா
2. ,, செகண்டரி கிரேட் ... விலை 6 அணா
3. ஆரம்ப பாடசாலைப் பாட திட்டத்தின் ஆசிரியர்க்குரிய பாடக் குறிப்பு நூல் (Notes for Teachers on the Syllabuses for Elementary Schools) விலை 6 அணா

சிறந்த புத்தகங்கள்! முந்துங்கள்!!

போதனாமுறைப்பாடசாலை மாணவ-ஆசிரியர்கட்கு உபயோகமானவை:

1. "லிப்கோ" தமிழ்ப்பாட புத்தக விளக்கம்—எலிமெண்டரி கிரேடு—*1942 & 1943* ... விலை *14* அணா
2. ,, செகண்டரி கிரேடு ,, ... விலை ரூ,*1-12-0*
3. "லிப்கோ" விஞ்ஞான போதனாமுறைத் துணைவன்-எலிமெண்டரி கிரேடு ... விலை 5 அணா
4. ,, செகண்டரி கிரேடு ... விலை 10 அணா
5. The "LIFCO" Guide to Longmans' Literary Selections Book II—Special Edition—for Secondary grade—T. S. L. C. 1942 & 1943—**An excellent and exhaustive guide**—In print—*copies expected to be ready by the end of October 1941.*

THE LITTLE FLOWER CO.,

P.B. 99, G.T. MADRAS, E.

டோங்ரேயின்

பாலாமிருதம்

பிரசித்தி பெற்ற

குழந்தைகளின் டானிக்

சோனுமில் பில்லைகளைச் சாப்பிட ஆரம்பித்ததும் மலேரியாஜுரம் ஓடியே போய் விடுகிறது. இழந்த தேக பலத்தையும் ஆரோக்கியத்தையும் மீண்டும் பெறுவீர்கள். மலேரியா, இன்ப்ளூயன்ஸா, முதலிய நோய்களை நிச்சயம் குணமாக்கவல்லதென்று சோனுமில் பில்லைகள் எல்லா முனிஸிபல் ஆஸ்பத்திரிகளிலும் உபயோகிக்கப்படுகின்றன.

25 பில்லைகள் விலை ரூ. 1—4—0
50 பில்லைகள் விலை ரூ. 2—4—0
வி. பி. பி. சார்ஜ் தனி.

எல்லா முக்கிய கெமிஸ்டுகளிடமும் கிடைக்கும்.

சோனுமில

நீரிழிவு

வட அமெரிக்காவில் ஒரு புராதன ஜாதியாரை மூத்திர வியாதி அணுகுவதேயில்லை. காரணம், அவர்கள் அந்த உஷ்ணப்பிரதேசத்தில் கிடைக்கும் ஒரு சிறந்த மூலிகையிலிருந்து தயாரித்து அருந்தும் கஷாயந்தான் என்பது இப்பொழுது பரிசோதனைகளால் தெளிவாகிறது. இந்த மூலிகையிலிருந்து தயாரிக்கப்பட்ட தூய பஸ்பந்தான் "கோபால்ட்ரா." மூத்திர வியாதியைக் குணமாக்குவதில் தலைசிறந்த இம் மருந்து பாரிஸ் நகரிலுள்ள நாஷனல் லெபாரடரீஸில் நெ. 1662-1 கீழ் ரிஜிஸ்தர் செய்யப்பட்டிருக்கிறது. முழு விவரங்களடங்கிய அச்சுப் பிரசுரம் இனும்.

கோபால்ட்ரா

ஸோல் ஏஜெண்டுகள்: **COPALTRA & Co., (India) LTD.,**
53, New Bhatwadi Street, Bombay 4
ஏஜெண்டுகள்: அப்பா & கோ., மதராஸ்

கொனஷ்டையின் கதைகள்

ஹாஸ்யரஸம் ததும்பும்

14 கதைகள் கொண்ட புஸ்தகம்

1. ஜோஸ்யம்
2. மௌனி
3. அறுபத்து மூவர்
4. யாகபங்கம்
5. எலெக்ஷன் சீர்திருத்தம்
6. கமிஷனரின் குறை
7. ஆந்தைப் பதக்கம்
8. அரபிச்சுவடி
9. ஸங்கீதம்
10. உத்தியோகம்
11. சுயேச்சை
12. ரேடியோ
13. உபகாரம்
14. கதை எழுதும் விதம்

விலை ரூ. 1—8—0

ஜவாஹர்லாலின் கடிதங்கள்
விரைவில் வெளிவரும்
மானேஜர்—கலைமகள்—மயிலாப்பூர்

பச்சை மோதிரம்

கி. ஸரஸ்வதி அம்மாள்

கங்காதர ஐயருக்கும் அவர் சம்பந்தி சத்தியவானுக்கும் மனஸ்தாபம் என்பது ஊர் அறிந்த விஷயமாகிவிட்டது. அதுபற்றிப் பலர் பலவிதமாகப் பேசிக்கொண்டனர். கங்காதர ஐயரும் அவர் வீட்டாருந்தான் சண்டைக்கு மூல காரணம் என்பது சிலர் அபிப்பிராயம்; அல்ல, சத்தியவானும் அவர் மனைவி சாவித்திரியுந்தான் என்று சிலர் ஸந்தேகமறத் தீர்மானித்தார்கள். எப்படியாயினும் கங்காதர ஐயர் வெகு நல்ல மனிதர். சத்தியவானோ—? அவரை 'அப்பாவி' என்றுதான் சொல்ல வேண்டும். பதற்றமாகக்கூட ஒரு வார்த்தையும் பேசத்தெரியாது. அப்படி இருக்கும்பொழுது அவர்களுள் மனஸ்தாபம் எழுவானேன்? அவர்களின் ஸஹதர்மிணிகளே அதற்குக் காரணம் என்றுதான் நாம் ஒருவாறு ஊகிக்க வேண்டும். ஆனால் அவர்களையும் பொல்லாதவர்கள் என்று சொல்லுவதற்கு இல்லை. சிநேகிதர்களுக்கும் உறவினர்களுக்கும் மிகவும் வேண்டியவர்களே. ஆனால் இது சம்பந்தி மனப்பான்மை; இந்த விஷயத்தில் நல்லவர்கள் கெட்டவர்கள் என்கிற வித்தியாசம் ஏது?

கல்யாணத்திலிருந்து சத்தியவானின் மனைவி சாவித்திரி, தாங்கள் சீர்வகைகளில் மாப்பிள்ளை வீட்டாருக்கு அதிகமாகவே செய்வதாயும், அவர்கள் பதிலுக்குச் செய்யும் மரியாதைகள் அதற்குக் கொஞ்சமும் தகுந்தவை அல்ல என்றும் எண்ணினாள். அதைப்பற்றி அவள் தான் வாய் திறக்கவே இல்லை என்று சொல்லிக்கொண்டாலும், அது கங்காதர ஐயர் மனைவி கௌரியின் காதுக்கு எவ்விதமோ எட்டித்தான் இருந்தது. மனத்திலுள்ளதைத் துளியும் வெளிக்காட்டாமல் இருக்கும் சக்தி சாவித்திரிக்கு இருந்திருக்க முடியுமா? கௌரியோ, பிள்ளையைப் பெற்றவள்; அவளுக்கு மரியாதைகள் எவ்வளவு செய்யினும் அதிகமாக ஒருபொழுதும் ஆகிவிடாது. மனஸ்தாபம் வராமல் பார்த்துக்கொள்ளும் பொறுப்புப் பெண் வீட்டாருடையது என்கிற கொள்கைகள் உள்ளவள். இவ்விதம் நினைப்பவள் சாவித்திரியின் குறைகளைத் தீர்க்க முன்வருவாளா? அதற்கு முற்றும் மாறாக, 'சாவித்திரி இம்மாதிரி எவ்விதம் நினைக்கலாம்?' என்றுதான் கோபம் கொண்டாள்.

சாவித்திரியோ, 'இக்காலத்தில் பெண்வீட்டார் என்கிற தாழ்வு உண்டோ' என்னும் எண்ணங் கொண்டவள். இருவரும் இம்மாதிரி மனப்பான்மை கொண்டிருக்கும் பொழுது கல்யாணம் சிறு சிறு சச்சரவுகள்கூட இல்லாமல் நடைபெறுவதை எதிர்பார்க்க இடம் ஏது?

இன்னும் ஒரு வருஷம் பாக்கி இருக்கும் 'ஹானர்ஸ்' படிப்பைப் பூர்த்தி செய்யப் பட்டணம் போகவேண்டியவன் மாப்பிள்ளை. அவன் புறப்பட இன்னும் சில தினங்களே இருந்தன. "அதற்குள் ஆரும்மாதம்*

---

*ஆரும்மாதமென்பது கல்யாணம் கழித்த மறுநாள்கூட நடத்தலாம். அதற்குச் சீர் வகைகள்தாம் முக்கியமே தவிர ஆறுமாதமாக வேண்டுமென்பதல்ல.

செய்துவிட்டால் பின்பு தீபாவளிக்கு ஒரு நாள் லீவு எடுத்து வந்தாலும் போதும்.'' இவ்விதம் சாவித்திரி கணவருடன் கலந்து ஆலோசித்து ஆறும் மாதத்திற்கு ஏற்பாடுகள் செய்தாள்.

மாப்பிள்ளைக்குப் பச்சைக்கல் மோதிரம் செய்து போடவேண்டு மென்று சாவித்திரி சொன்னபொழுது சத்தியவானுக்கு அவ்வளவாகச் சம்மதமில்லை. "பச்சைக் கல் விலையும் அதிகம்; அதற்கு மதிப்பும் இல்லை'' என்று அவர் ஆக்ஷேபித்தார். ஆனால் சாவித்திரி நினைத்தால் விடுவாளா? "மாப்பிள்ளையின் சிவந்த விரலுக்கு நன்றாயிருக்கும்; தவிரக் கல்யாணத்தின்போது வைர மோதிரம் கொடுத்திருக்கிறது'' என்று அவள் வாதித்தாள். இப்படி அவள் பிடிவாதத்தின் பேரில் ரூபா ஐந்நூறு கொடுத்துப் பச்சைக்கல் வாங்கி மோதிரமும் செய்து போட்டாகி விட்டது. சாவித்திரி எண்ணினது மிகவும் பொருத்தமே. மாப்பிள்ளை யின் வெண்டைப் பிஞ்சு போன்ற நீண்ட சிவந்த விரலில் அது வெகு சோபிதமாகத்தான் இருந்தது.

மோதிரத்தைக் கண்டபோது கௌரிக்கு, "உபயோகமுள்ளது ஏதாவது செய்யமாட்டார்களா? பச்சைக்கல் மோதிரம் ஒரு நகையா? அதுவும் ஒருவன் எத்தனை மோதிரங்கள் போட்டுக்கொள்வான், செட்டிப் பிள்ளைகள் போல!'' என்று பட்டது. உடனே, "இதென்ன சீர் என்று செய்திருக் கிறீர்கள்?'' என்று பதற்றமாய்க் கேட்டாள். இந்தக் கேள்வியைச் சாவித்திரி எதிர்பார்க்கவே இல்லை. 'இப்படி ஒன்றும் அறியாதவள் ஒருத்தி இருப்பாளோ' என்று நினைத்தாள். 'நமது கௌரவத்தையும், நம் பெண்ணின் அருமையையும் அறிந்திருக்கிறாளா, பச்சையின் உயர்வும் அழகும் தெரிந்துகொள்வதற்கு?' என்று கருதினாள். "மிகவும் உயர்ந்தது; ராஜக்கிருஹத்தில் இருக்கக் கூடியது. ரூபாய் ஐந்நூறல்லவோ கொடுத்து வாங்கி இருக்கிறது?'' என்று பெருமை தொனிக்க எடுத்துச்சொன்னாள் அவள் பெருமையைக் கேட்கக் கௌரிக்குச் சகிக்கவில்லை. அதுவும் தனக்கு ஒன்றும் தெரியாதென்று மட்டம் தட்டுவதாக உணர்ந்தாள். "இவ்வளவு பணத்தை வீண் செய்வார்களா? உபயோகத்திற்கு ஏற்றதாய் எவ்வளவோ செய்யலாமே! என்ன இருந்தாலும் பச்சைகள் இரவில் வெறும் இடமாகத் தான் தோன்றும். சொல்லி யென்ன? ராஜாவின் ராசி அது. மதுரை மீனாக்ஷிபோல் மரகதச் சாயையாகப் பெண்டாட்டி தான் கிடைத்தா ளென்றால், பச்சை மோதிரமும் கிடைத்துவிட்டது'' என்று ஒரே வார்த்தை யில் சாவித்திரியை அடக்க எண்ணிக் கூறிவிட்டாள் சம்பந்தியம்மாள் கௌரி.

'பெண்ணைக் கறுப்பென்று சொல்லிக் காண்பிக்கிறாள்!' சாவித்திரிக்குத் தாங்கவே இல்லை. கோபமும் ஆத்திரமும் அவளை மீறி வந்தன. என்ன பேசுகிறோ மென்பதை மறந்தே போனாள். "அவளத்தனை அழகாக எல்லாப் பெண்களும் இருந்தால் போதும். சிவப்பு இருந்தால் போதுமா! முகத்தில் பவிஷு வேண்டாமா?'' என்று சம்பந்தி அம்மாளையே சுட்டிக்காட்டுவது போலச் சொன்னாள். கௌரி இச் சொல்லைப் பொறுப்பது எப்படி? வேண்டுமென்றே விருந்திற்கு அழைத்து அவமதித்ததாக நினைத்தாள். சாப்பிடாமலே வீடு சென்றாள். கங்காதர ஐயருக்கோ, அவர் மகன் ராஜகோபாலனுக்கோ விஷயங்கள் விளங்கவே இல்லை. சமாசாரம் தெரிந்த பிறகும் செய்யும் வகை இன்னதென்று புலப்படவில்லை. பாவம், சத்தியவான் யாதும் அறியாமல் தவித்தார். சாவித்திரியோ அழுதுகொண்டிருப்பது தவிர

விஷயத்தை விளங்கவைக்கவோ வேறு செய்யவோ முன்வரவில்லை. வந்திருந்த பந்துக்களே கடைசியில் இங்கிரண்டு அங்கிரண்டு பேசி ஆறும் மாதத்தை முடித்து வைத்தார்கள் என்று சொல்லவேண்டும். சச்சரவு என்றால்



பேசி விருத்தி செய்து வேடிக்கை பார்ப்பதில் அவர்களுக்கு அளவற்ற ஸந்தோஷமே. இருந்தாலும் இன்று காரியம் முடிந்து சாப்பாடும் நடந்தாக வேண்டுமே! கௌரி ஊர்ச் சிரிப்புக்கு இடம் கொடுக்கக்கூடாதென்று

அன்று கோபம் தணிந்தவள் போல் காண்பித்துக்கொண்டாலும், பிறகு சம்பந்தி வீட்டை மிதிப்பதில்லை என்கிற தீர்மானம் கொண்டவள் போல் பேசினாள். "அவரும், அவர்பிள்ளையும் போய் உறவு கொண்டாடிக் கொள்ளட்டும்" என்று வெறுப்பாய்க் கூறினாள்.

மாப்பிள்ளை நாளைக்குத்தான் பட்டணம் போகப் போகிறார் என்று சாவித்திரி நினைத்திருந்தாள். அப்படித்தான் அன்றே சொன்னார்கள். சந்தியாகாலம்; பூஜை அறையில் விளக்கேற்றிவைக்கச் சாவித்திரி சென்றாள். மாடி வராந்தாவில் தெருவில் போவோரையும் வருவோரையும் வேடிக்கை பார்த்து நின்றிருந்த அவள் பெண் லக்ஷ்மி வேகமாக ஓடிவந்து சாவித்திரியிடம் தன் கணவன் ஊருக்குப் போகிறாற்போல் இருக்கிறது என்பதைத் தெரிவித்தாள். பெண்ணின் துடிதுடிப்பையும் அவள் சொல்லும்பொழுது அவளிடம் ததும்பும் வெட்கத்தையும் கண்ட சாவித்திரி, 'அதற்குள் என்ன பிரேமை? தொடர்ந்து கவலையுங்கூட' என்று நினைத்துப் புன்சிரிப்புக் கொண்டாள். "மாப்பிள்ளையாக இராது; நாளைக்குத்தானே நல்லநாள் பார்த்திருக்கிறார்கள்?" என்றாள் சிரித்துக்கொண்டே.

அதெப்படி இல்லாமல் இருக்கும்? லக்ஷ்மிதான் நேரில் கண்ணால் பார்த்தாளே. முதலில் அவளும் கவனிக்கவில்லைதான்; ஆனால் வண்டி வீட்டைத் தாண்டுகிற சமயம் அவள் தற்செயலாகப் பார்த்துவிட்டாள். ஒரு நிமிஷம் அவளுக்கு வெட்கத்தால் ஒன்றும் தோன்றவில்லை; பிறகுதான் அவன் ஊருக்குப் போகிறானென்பது மனத்தில்பட, தாயிடம் ஓடிவந்தாள். "இல்லை, அம்மா; பெட்டி படுக்கைகள் இருப்பதைப் பார்த்தேன்" என்று வற்புறுத்திச் சொன்னாள். சாவித்திரிக்கு யோசனை வந்துவிட்டது. 'ஒரு கால் இருக்குமோ? நமக்கு ஒரு வார்த்தையும் சொல்லவில்லையே. சொல்ல வேண்டுமென்பது என்ன? சம்பந்தி அம்மாள் கோபத்தைக் காண்பிக்கும் விதம் இதுவாயிருந்தால்!' சாவித்திரிக்கு வயிறு பகீரென்றது. "ஐயோ! கௌரி வெகு கொடியவள்போல இருக்கிறதே. தெரியாமல் பெண்ணைக் கொண்டுபோய்க் கொடுத்துவிட்டேனே" என்று அங்கலாய்க்கத் தொடங்கினாள். பிறகு அவளுக்கு ஒரு காரியத்திலும் மனம் செல்லவே இல்லை. கணவர் வெளியிலிருந்து வந்ததும் முதற்காரியமாக விசாரித்துவரச் செய்தாள். அவரும் அவ்விதமே செய்து, 'மாப்பிள்ளை பட்டணம் போனது வாஸ்தவந்தான்; திடீரென்று நிச்சயம் செய்து புறப்பட்டதால் வந்து சொல்லிக் கொள்ள முடியவில்லை' என்று சம்பந்தி சொன்னதாகக் கூறினார். ஆனால் கௌரி வேண்டுமென்று செய்ததுதான் இது என்று சாவித்திரிக்குத் தெரியும். "கிளியை வளர்த்துப் பூனையிடம் கொடுப்பதுபோல் செய்துவிட்டீர்களே!" என்று கணவரிடம் சொல்லி அழுதாள். "'பச்சைக்கல் மோதிரந்தான் இவ்வளவிற்கும் காரணம். அது வேண்டாமென்று அப்பொழுதே சொன்னேனே' என்று அவர் சொல்லிக் காண்பிப்பாரே! பச்சைப் புண்ணில் கோல் இட்டது போலல்லவா இருக்கும்? பிள்ளையின் மனத்தையும் கலைத்துவிடுவாளோ என்னவோ? கௌரி இப்படிப்பட்ட ராக்ஷஸியா? எனக்குத் தெரியாமற்போயிற்றே. தாய்தான் சொன்னாலும் இந்தக் காலத்தில் ஒரு பிள்ளை தட்டாமல் கேட்பானோ? எல்லாம் நம் அதிர்ஷ்டம்" என்று சாவித்திரி ஏங்கியே போனாள்.

ராஜகோபாலன், ஆறும் மாதத்தன்று தாய்க்கும் மாமியாருக்கும் நடந்த வாக்குவாதத்தில், கண்கலங்கி நின்றிருந்த மனைவியை அன்பு வார்த்தைகளால் தேற்றத் துடித்துக்கொண்டிருந்ததையும், எவ்வளவோ

சாமர்த்தியமாக முயன்றும் முடியாமல்தான் அவ்விதம் மனைவியைப் பார்க்காமல் பட்டணம் சென்றான் என்பதையும் சாவித்திரி அறிந்திருந்தால் அவள் மனம் எவ்வளவோ சமாதானம் அடைந்திருக்கும். ஆனால் அதை அவள் அறிய வகை ஏது?

சாவித்திரியும், சத்தியவானும் சம்பந்திகளைச் சமாதானம் செய்ய முயன்றதெல்லாம் நெருப்பை அணைக்கக் காற்று உதவுகிற ரீதியில்தான் பலன் அளித்தது. சத்தியவானுக்குச் சாமர்த்தியம் போதாது. சாவித்திரியோ பொறுமை சிறிதும் அற்றவள். அப்படி இருக்கப் புயற்காற்று வேகத்தில் மனஸ்தாபம் விருத்தி அடைவதில் ஆச்சரியம் ஏது!

தொடர்ந்து வந்த பண்டிகைகள் ஒன்றுக்கும் நாட்டுப் பெண்ணைக் கௌரி வீட்டிற்கு அழைக்கவே இல்லை. கேட்கிறவர்களுக்கு ஏதேதோ காரணம் கூறிவந்தாள். வரலக்ஷ்மி விரதத்திற்குக் கூட நாட்டுப் பெண்ணைச் சுபமாய் அழைத்துப் பூஜை எடுக்காதது சாவித்திரிக்கு மிகுந்த கவலையையும் வருத்தத்தையும் கொடுத்தது. நம் ஹிந்து ஜாதியில் அது வெகு முக்கியமான பூஜையல்லவா? சாவித்திரி வலுவிலே தாழ்ந்து சென்று கேட்டதற்குக்கூட, "லக்ஷ்மி பெரியவளான பிறகு தானே எடுத்துக் கொள்ளட்டும்" என்று விட்டேற்றியாகப் பதில் சொன்னாள் கௌரி. கோபத்தில் அவ்விதம் பேசுகிறாளென்பது சாவித்திரிக்கு நன்கு தெரிந்தது. "உடனே டொத்த குழந்தைகளுக்குக் கல்யாணங்கூடச் செய்யாமல் ஆனந்தமாய்ப் பள்ளிக்கூடம் போகவிட்டிருக்கிறார்கள். நாம் கல்யாணத்தைச் செய்து குழந்தைக்குக் கவலையை வருவித்து வைத்திருக்கிறோமே. மக்களுக்குச் சத்துரு மாதா பிதா என்னும் வசனம் நமக்குத்தான் பொருந்தும்" என்று சாவித்திரி வருந்தினாள்.

தீபாவளி வருகிறதே என்கிற விசாரம் அவளுக்கு ஒரு மாதம் முந்தியே வந்துவிட்டது. 'அதற்குக் கௌரி என்ன கூத்துக் கட்டி அடிப்பாளோ? பிள்ளையை வரவழைக்காமலே இருந்தாலும் இருப்பாள். அவர்கள் வரும்படி சொன்னால்தானே அவன் வரமுடியும்? ஏற்கனவே ஊர் வம்பு தாங்கவில்லை. தீபாவளிக்கு மாப்பிள்ளை பட்டணத்தில் இருந்து கொண்டே வராவிட்டால் பெண்ணைத் தள்ளிவைத்து விட்டதாகக்கூடச் சொல்லத் தொடங்குவார்கள். மானம் அவமானம் என்பது அவர்களுக்கு இல்லையா என்றால் அவர்கள் எல்லாவற்றையும் துடைத்து விட்டிருக்கிறார்களே. சம்பந்திப் பிராமணரும் மனைவி மனம்போல் நடக்கிறாரே தவிரப் பெரிய மனுஷத்தனமே காணோம்' என்று பல பல நினைத்துத் தவித்தாள் சாவித்திரி. "இப்படி நாம் பொறுத்துப் போவதில் என்ன பிரயோஜனம்? நீங்கள்தான் சம்பந்திப் பிராமணரிடம் சென்று எல்லாவற்றையும் எடுத்துக் கூறினாலென்ன?. அவளிடந்தான் வாய்திறக்க முடியவில்லை. தப்பாக எடுத்துக் கொள்ளுகிறாள். அவரும் இப்படியே இருப்பாரா? நாம் வருந்துவதும் அவர்களுக்குக் கொஞ்சம் தெரியட்டுமே. அப்போதாவது மனத்தில் படுமோ என்னவோ?" என்று சாவித்திரி கணவரிடம் கூறினாள். சத்தியவானுக்கும் அது சரியென்றே பட்டது. தம் ஆசைகளையும், வருத்தங்களையும் எடுத்து உரைப்பதில் தவறு ஏற்படக்கூடுமென்று அவருக்குச் சிறிதும் தோன்றவில்லை. கங்காதர ஐயரிடம் சென்று தம் மனைவி மிகவும் வருத்தப்படுகிறாள் என்பதை எடுத்துச் சொன்னார். தீபாவளியாவது மனஸ்தாபம் இல்லாமல் ஸந்தோஷமாய் நடக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்

டார். தாம் வெகு உருக்கமாகவும், சாமர்த்தியமாகவும் பேசியதாகவே எண்ணிக்கொண்டு அவர் வீடுவந்து சேர்ந்தார்.

கங்காதர ஐயர் அதைக் கேட்டுக்கொண்டிருந்தபொழுது அவ்வளவு தப்பாக நினைக்கவில்லை. ஆனால் அதைக் கௌரி கேட்டாளோ இல்லையோ, அவள் கோபம் தாங்கவே இல்லை. 'நன்றாய்க் கேட்டுக்கொண்டிருந்தீர்கள்! குதிரை தூக்கிப் போட்டதுமல்லாமல் குழியும் பறித்ததாம்' என்பதற்கு ஏற்பச் சொன்னதும் சொல்லிவிட்டு என்பேரில் திரும்புகிறாளே. நல்ல கெட்டிக்காரப் பிராம்மணர். பெண்டாட்டிக்காகப் பரிந்து பேசியிருக்கிறார். நீங்களும் கேட்டு வந்தீர்கள். நம் மனைவியின்மேல் தூஷணை என்பது கூட அறியாமல் இருந்திருக்கிறீர்களே. புருஷனும் மனைவியும் லேசில்லை!'' என்று கோபமாய் அடுக்கினாள். இது வரையிலும் தீபாவளிக்குப் பிள்ளை வரவேண்டியதுதான் என்று நினைத்து இருந்தவள், இப்பொழுது தீபாவளிக்கு ராஜா எதற்காக வருவது என்று நினைத்தாள். அப்படியே அவன் மாமனார் மாமியார் இருவருடைய பொல்லாத்தனங்களையும் எடுத்துக் கூறித் தீபாவளிக்கு வருவது சரியல்ல என்று பிள்ளைக்குக் கடிதம் எழுதினாள்.

சாவித்திரிக்கும் இவ்விஷயம் எட்டிற்று. சாவித்திரி அறியாமல் இருக்கவேண்டுமென்பது கௌரியின் நோக்கம் அல்லவே! அவள் முன்னடியே 'அறிந்து கஷ்டப்படாவிட்டால் கௌரி கோபித்துக்கொள்வதில் தான் பிரயோஜனம் என்ன? சாவித்திரி புழுவாகத் துடித்தாள். 'சமரசம் செய்யப் போய், இவ்விதம் கிணறு வெட்டப் பூதம் புறப்பட்ட சங்கதியாக முடிந்துவிட்டதே! இனி என்னதான் செய்வது! ஐயோ ஈசுவரா! இக்குழந்தை தலையிலும் எங்கள் தலையிலும் நீ என்னதான் எழுதி இருக்கிறாயோ தெரியவில்லையே!' என்று ஏங்கிப் புலம்பினாள். 'இனித் தெய்வந்தான் கதி. மனிதர்களால் ஆகும் காரியமல்ல இது' என்று அவளுக்குப் பட்டுவிட்டது. ஸதா பகவானை வேண்டத் தொடங்கினாள். ஜப தபங்களும் கோவிலுமாகவே இருந்தாள். கணவரிடம் சொல்லிப் புலம்பக் கூட அவளால் முடியவில்லை. அவர் சொல்லும் சமாதானங்கள் அவர்களுக்குத் தெம்பை ஊட்டவில்லை. மனக் கஷ்டப்பட்டுத் துன்புறுவது தவிர வேறு வழியே இல்லாமற் போய்விட்டது. ஹிருதயம் ஒடிந்து கொண்டிருக்கும்பொழுது பேச்சு எங்கிருந்து வரும்? அவள் மௌனமான துக்கம் குழந்தை லக்ஷ்மியையும் பாதிக்கத்தான் செய்தது. அவள் சிரிப்பற்று உலாவி வந்தாள். அதைக் காணச் சாவித்திரி இன்னும் துக்கத்தால் க்ஷீணித்தே போனாள். தங்கள் கஷ்டத்தைக் காட்டிலும் மக்கள் கஷ்டம் தாங்கமுடியாதல்லவா?

தீபாவளிக்கு இன்னும் ஒரு வாரங்கூட இல்லை. கங்காதர ஐயரிடமிருந்து ஆள் ஒருவன் சம்பந்திகளை உடனே வரும்படி சொன்னதாகச் சொல்லிச் சென்றான். என்ன விசேஷம்? சாவித்திரிக்கும் சத்தியவானுக்கும் ஒன்றுமே தோன்றவில்லை. வந்த ஆளை விசாரித்ததற்கு அவன் ஏதோ பட்டணத்திலிருந்து கடிதம் வந்ததாகமட்டும் சொன்னான். சாவித்திரியும், சத்தியவானும் பறந்து ஓடி வந்தபொழுது கங்காதர ஐயர் சத்தியவானை வரவேற்றுக் கடிதமொன்றைக் கொடுத்தார். சாவித்திரியும் கௌரியின் வரவேற்பில் ஏதோ மாறுதல் இருப்பதை உணர்ந்தாள். சத்தியவான் படித்த கடிதம் பின்வருமாறு:

"க்ஷேமம்,

கங்காதர ஐயர் அவர்களுக்கு அநேக கோடி நமஸ்காரம் செய்து ராஜாவின் சிநேகிதன் சந்திரன் எழுதிக்கொண்டதாவது: க்ஷேமம், க்ஷேமத்திற்கு எழுதப் பிரார்த்திக்கின்றேன். நேற்று உங்கள் மகனுக்கு வரவிருந்த ஆபத்து நீங்கள் ஏதோ ஜன்மாந்தரத்தில் செய்த தவத்தினுல்தான் விலகிற்று என்னலாம். நானும் அவனும் இரவு எட்டு மணிக்குக் கடற்கரையிலிருந்து திரும்பி வந்துகொண்டிருந்தோம். விளக்கணைப்புக் காலமாகையால் ஜாக்கிரதையாகப் போய்க்கொண்டிருந்தும் எதிர் சாரிக்கு மாறும் சமயம் கார் ஒன்று வந்த வேகத்தில் எங்களை யமனுலகுதான் அனுப்பி இருக்கவேண்டும். ஆனல் தெய்வாதீனமாக, உங்கள் மகன் விரலில் அணிந்திருந்த பச்சை மோதிரமே எங்களைக் காப்பாற்றியது என்பதைப் பிறகு காரின் 'டிரைவர்' சொல்லத் தெரிந்து ஆச்சரியம் கொண்டோம்.

"இருட்டில் அவனுக்கு ஆட்கள் தெரியாமல் இருக்கும் பொழுது காரின் மங்கல் வெளிச்சம் பட்டு ராஜாவின் விரலில் அணிந்திருந்த பச்சைக்கல் திடீரென ஒளி வீசினதைக் கண்டிருக்கிருன். உடனே 'பிரேக்' போட்டும் வேகமாய் வந்த காரணத்தினல் எங்களுக்கு வெகு சமீபம் வந்துதான் நின்றது. அந்த அதிர்ச்சியில் ராஜா விழுந்துவிட்டான். ஆனல் காயம் ஒன்றும் இல்லை. கவலைப்படவேண்டாம். காரின் சொந்தக்காரரே எங்களை ஹாஸ்டலில் கொண்டுவிட்டுச் சென்ருர். அவர் ஒரு ரத்தின வியாபாரியாம். ரத்தின பரீக்ஷைகள் நன்கு தெரிந்தவராம். ராஜாவின் விரல் மோதிரத்தைக் கண்டு நல்ல அதிர்ஷ்டப்பச்சையென்று கொண்டாடினர். அது உள்ள இடத்தில் அஷ்டைசுவரியமும் பொங்குமாம். 'இன்று அது உயிர்போவதினின்று உங்களையும், உங்களைக் கொல்லும் மஹாபாபத்தினின்று என்னையும் காப்பாற்றிவிட்டது' என்று புகழ்ந்தார். எதுவாஞலும் ராஜா சொல்வதுபோல் எங்கள் உயிரை நேற்று அதுதான் காப்பாற்றி இருக்கிறது. என்னவோ எல்லாம் ஈசன் செயல்.

"அவனுக்காகத்தான் இதை உங்களுக்கு எழுதுகிறேன். அவனுக்கு இன்னும் சிறிது அதிர்ச்சி இருக்கத்தான் செய்கிறது. எல்லாம் நாளைத்தினம் சரியாகிவிடுமென்று டாக்டரைக் கேட்டதில் சொன்னர். ஒன்றும் கவலை வேண்டாம். வேணும் அநேக கோடி நமஸ்காரம்.

இப்படிக்கு,
சந்திரன்."

இந்தக் கடிதம் எல்லாவற்றையும் மாற்றிவிட்டதென்று நாம் சொல்லவும் வேண்டுமோ? கௌரியின் கோபமெல்லாம் எங்கேயோ பறந்துபோய்விட்டது. 'அச்சானியம்போல் என்ன காரியம் செய்யவிருந்தேன்!' என்று தவித்தாள். 'தலைத்தீபாவளி கூடாது என்று நினைப்பேனு? பாவி, எனக்குப் புத்தி எங்கோதான் சென்றிருக்கவேண்டும். சாவித்திரிக்காகவா? என்

பிள்ளைக்காகவன்றோ?' என்று மேலும் மேலும் நியாயங்கள் தோன்றத் தொடங்கின. 'யார் செய்த புண்ணியமோ குழந்தை பிழைத்தான்; வீண் மனஸ்தாபங்கள் வேண்டாம். காரியத்தை நன்றாய் நடத்தவேண்டும்' என்று தீர்மானம் கொண்டாள். அன்றே கணவரைப் புறப்பட்டுச் சென்று நேரில் மகனைப் பார்த்து அழைத்துவரச் சொன்னாள். அவன் வரும்வரையும் அவனைப் பார்க்காமல் எப்படி இருப்போமென்று இருந்தது அவளுக்கு.

சாவித்திரியோ எத்தனை தாழ்ந்து போகவும் இப்பொழுது தயார். குருடன் வேண்டுவது கண்தானே? இப்பொழுது அவள் வேண்டுவதும் மாப்பிள்ளையின் க்ஷேமந்தானே?

பிறகு தீபாவளி விமரிசையைப் பற்றிச் சொல்லத் தேவையே இல்லை. சாவித்திரி செய்யும் எந்தச் சீரையும் கௌரி குறை கூறுவதாக இல்லை. அவள் எந்தப் பச்சைக்கல் மோதிரத்தைத் தூஷித்தாளோ அதையே பூஜையில் வைத்துப் பூஜிக்கத் தயாராக இருக்கும்பொழுது ஏன் குறை கூறுவாள்?

சாவித்திரியின் ஆனந்தத்திற்கு இணையே இல்லையென்றுதான் சொல்ல வேண்டும். தான் வேண்டின தெய்வங்களே மாப்பிள்ளையை ஆபத்திலிருந்து காப்பாற்றித் தீபாவளிக்கும் கொண்டுவந்து சேர்த்து யாவும் சுபமாக முடியச் செய்திருக்கின்றன என்று ஸந்தோஷித்தாள்.

ராஜாவும் அவன் சிநேகிதன் சந்திரனுமே அத்தெய்வங்களாக இருக்கலாம் என்பதை யார் கண்டது! தீபாவளிக்கு வரவேண்டாமென்று கௌரியிடமிருந்து கடிதம் வந்தது முதல், அந்தச் சாக்கில் மனைவியைப் பார்க்கத் தான் கொண்டிருந்த ஆவல் வீணாகிவிட்டதே என்று ராஜா வருந்தினதென்னவோ உண்மையே. அதைத் தீர்க்கும் உபாயத்தை அவனும் அவன் சிநேகிதன் சந்திரனுமாக மூளை குழம்ப யோசித்ததும் அதைவிட உண்மையே. அதன் விளைவுதான் இவ்வளவும் என்று தீர்மானமாகச் சொல்ல நாம் யார்?

இளங்கோ மறந்தது

"இலங்கையர்கோன்"

— ஒற்றையங்க நாடகம் —

இடம்: மாணத்திற்கு அப்பால்.

நாடக பாத்திரங்கள்: கண்ணகி, மாதவி, இளங்கோவடிகள்.

மாதவி: யார் அது, இந்த இருளில்?

கண்ணகி: (நலிந்த குரலில்) நான்......

மா: நான் என்ருல்? ஊர் பேர் இல்லையா?

க: காவிரிப்பூம்பட்டினத்துக் கோவலரின் மனைவி கண்ணகி. என்னை இவ்வளவு பயமுறுத்தலுடன் கேட்கும் நீ யார் என்பதை நான் அறியலாமா?

மா: ஓ! நான் அதே கோவலரின் காதலி, கிழத்தி...மாதவி. என்ன, என்னை உனக்குத் தெரியாதா?

க: இல்லை. நான் உன்னை ஒரு பொழுதும் பார்த்ததில்லை. மாதவி, உன்னைக் காணவேண்டும் காணவேண்டும் என்று வெகு நாளாக ஆவல் கொண்டிருந்தேன். பூவுலக வாழ்நாட்களில் அந்தப் பாக்கியம் எனக்குக் கிட்டவில்லை.

மா: என் வீடுதான் எப்பொழுதும் திறந்து கிடந்ததே. நீ ஏன் வரவில்லை? 'பத்தினி' என்ற மமதை உன்னை விடவில்லை போலும். ஆ! வந்திருந்தாயானுல், என் காதலரின் மனைவி என்ற முறையில் உனக்கு எவ்வளவு மரியாதைகள் எல்லாம் செய்திருப்பேன். அது கிடக்க; என்னைக் காணவேண்டும் என்று ஏன் உனக்கு அவ்வளவு ஆவல்? நானும் உன்னைப் போல ஒரு பெண்தானே?

க: கோபப்படாதே, அம்மா! மல்லிகையும் மணமும் போல் நானும் என் நாதரும் நன்ருக இருந்தோம். இளந்தென்றல் வாசனைக்கொள்ளை அள்ளிவரும் நிலவொளி மாடத்திலே.........ஆ! அந்த இன்ப நாட்கள்! என்னை அணைத்திருந்த என் நாதரின் கரம் கொஞ்சம் தளருமாயின், நான் எவ்வளவு வேதனைப்படுவேன்! (கண்ணீர் வடிக்கிருள்.)

மா: (பொறுமை இழந்து) இது என்ன பெரிய காரியம்? உனக்கு மட்டும் பிரத்தியேகமானதல்லவே? நானுந்தான் அப்படியெல்லாம் அனுபவித்திருக்கிறேன்.

க: இவ்வாறு 'கவவுக்கை ஞெகிழாமல்' என்னைப் பொருந்தியிருந்த என் கணவர் திடீரென்று என்னைப் புறக்கணித்துவிட்டு அகல்வதென்றால், அதற்கு ஒரு காரணம் வேண்டுமே. நீயே அந்தக் காரணமாக இருந்தால்? என்னிடத்தில் இல்லாதது எதையோ அவர் உன்னிடத்தில் கண்டிருக்கவேண்டும். அது என்ன என்று அறிய எனக்கு மிக ஆவலாக இருந்தது. அந்த மகத்தான இன்பத்தில் நான் என்னையே மறந்து போய் இருந்தேன். அவர் என் அருகில் இல்லாமல் போயே விட்டார் என்பதை முதலில் என்னால் நம்பவே முடியவில்லை.

மா: உன்மேல் பிழை இல்லை. நீ அறியாத பெண். உன் கணவருடைய உள்ளம் கவிஞருடைய உள்ளம் போன்றது. அந்தக் கவிதை உள்ளத்தை உன்னால் திருப்தி செய்ய முடியவில்லை. ஸதா புதுமையையே தேடி விழைந்து கொண்டிருந்த அவருடைய பஞ்சேந்திரியங்களும் மனமும் தினமும் நன்றாகவே இருந்த உன்னுடைய பழமையைக் கண்டு சலித்துப் போய்விட்டன. உன்னால் புதுமையைச் சிருஷ்டிக்க முடியவில்லை. அழகுணர்ச்சி ததும்பி வழிந்துகொண்டிருந்த உன் கணவரின் மனம்......

க: மாதவி, இப்படியெல்லாம் பேசாதே. என்னிடத்தில் அழகு இல்லையா? என் உடலிலும் உள்ளத்திலும் பூரித்து நின்ற அழகையும் இளமையையும் அவர் ஒருவருக்குத்தானே அர்ப்பணம் செய்தேன்? அப்படி அர்ப்பணம் செய்வதிலே நான் இறந்துபோக வேண்டி நேரிட்டிருந்தாலுங்கூடக் கொஞ்சமும் கலங்கி யிருக்க மாட்டேன். என் அழகு அவர் இன்பம்.

மா: உன்னுடைய அழகைப்பற்றிய மமதை இன்னும் உன் மனத்தை விட்டு அகலவில்லைபோல் இருக்கிறது. ஆமாம், நீ என்னிலும் பார்க்க அழகிற் சிறந்தவளாகத்தான் இருந்தாய்; அதை நான் மறுக்கவில்லை. ஆனால், அழகுமட்டும் இருந்தால் போதுமா? தாமரைப் பூ அழகாக இருக்கிறது. ஆனால் அதை எத்தனை நாட்களுக்கு வைத்துப் பார்த்துக் கொண்டிருக்க முடியும்? கையில் எடுத்து மோந்தவுடன் அதன் அழகெல்லாம் எங்கே போய் விடுகிறது?

க: உன்னிடத்திலே என்ன இருந்தது? நீ என்ன ரம்பை ஊர்வசி அல்லவே; மானிடப் பெண்தானே?

மா: ஆ! என்னிடத்தில் புதுமை இருந்தது. அவர் மனத்தில் நிகழும் மாற்றம் ஒவ்வொன்றையும் அறிந்துகொண்டு அதன்படி நடக்கும் சக்தி எனக்கு இருந்தது. நான் என்றும் புதுப்பெண்ணாகவே இருந்தேன். என் கடைவிழியின் பிறழ்ச்சியிலே, இளநகையின் மோகனத்திலே, சிறுவிரலின் அசைப்பிலே, தேன் குடித்த மந்திபோல் எந்நேரமும் மயங்கிக் கிடந்தார். இவை மாத்திரம் அல்ல. என் ஆடலும் பாடலும்....

க: போதும் போதும், உன் ஆடலும் பாடலும்! உன்னுடைய ஆடலும் பாடலும் யாருக்கு வேண்டும்? வாழ்வின் நிரந்தரமான லயத்தை

யும் கீதத்தையும் தம்முள் உணர்ந்து கொள்ளுவதற்கு மனிதர் செய்யும் மூடத்தனமான பிரயத்தனம் அல்லவா ஆடலும் பாடலும்? இவைகளைக் கண்டு அறிவாளி ஒரு பொழுதும் மயங்கமாட்டான்.

மா: உனக்கே புரியாத விஷயங்களுள் தலையிட்டுக்கொண்டு வீணாக நீ அவஸ்தைப்படுகிறாய். பல நூற்றாண்டுகளாக நம் முன்னோர் போற்றி வளர்த்து வந்த அருங்கலைகளை, அவைகளைப் பற்றி ஒன்றுமே அறியாத நீ எங்ஙனம் இகழ்ந்து பேசலாம்? அது இருக்கட்டும்; உன் அழகைமட்டும் பார்த்துக்கொண்டு ஒருவன் உன்னுடைய ஆசையிலே எத்தனை நாட்களுக்கு வீழ்ந்து கிடப்பான்?

க: உன்னிடத்தில் இல்லாத, குலமகளுக்குரிய அம்சங்கள் என்னிடம் எத்தனையோ இருந்தன. நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு....

மா: பூ! உன் நாணம், மடம், அச்சம், பயிர்ப்பைக் கண்டு யார் வியக்கப் போகிறார்கள்? இவையெல்லாம் கையாலாகாத பெண்களின் புராதனமான பலமற்ற ஆயுதங்கள். ஆடவனைத் தம் அறிவினாலும் வல்லமையினாலும் வசியம் செய்யமாட்டாத பேதைப் பெண்கள் நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்ற தம் மேன்மையைக் காட்டி அவனுடைய இரக்கத்தைப் பெற முயல்கிறார்கள்.

க: மாதவி, நீ குதர்க்கம் செய்கிறாய். உன்னோடு வாயாட என்னால் முடியாது. என்னுடைய பதிபக்தி, என் கற்பு என்னும் திறமை இவைகளைப்பற்றி உன்னால் சிறிதளவேனும் உணர்ந்து கொள்ள முடியுமா?

மா: பதிபக்தி, பதிவிரதைத்தன்மை இவையெல்லாம் அடிமைத்தனத்தைக் குறிக்கும் வார்த்தைகள் அல்லாமல் வேறு என்ன? உன் கணவர் செய்ததெல்லாம் சரி யென்று அதற்கு எதிர்வார்த்தை பேசாமல் நீ செயலற்று இருந்தாய். உன்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை. நீ வல்லவளாக இருந்திருந்தால் உன் கணவர் ஒருபொழுதும் என் வீடே கதி என்று கிடந்திருக்கமாட்டார். உன் வல்லமையின்மைதான் பதிவிரதைத்தனமா?

க: (தன் காதுகளைக் கைகளால் மூடிக்கொண்டு) ஆ! ஜினேந்திர, இவை என்ன வார்த்தைகள்! மாதவி, உன் பெண்மை இவ்வளவு தூரத்திற்கு உன்னை விட்டு அகன்றிருக்கும் என்று நான் கனவிலும் கருதவில்லை. என் காதற் கணவரை உன் செயற்கை மாயங்களினால் மயக்கி அவரை ஓட்டாண்டியாகத் துரத்தியதும் அல்லாமல், அவர் சித்தமே என் பாக்கியம் என்று வழிபட்டிருந்த என்னையுமா தூஷிக்கின்றாய்? ஆம், ஆம், பதிபக்தி, கற்பு முதலியன எல்லாம் உன் செயலில் அர்த்தமற்ற வார்த்தைகளாகத்தான் ஒலிக்கும். உன்னால் அவைகளை ஒரு பொழுதும் உணர்ந்து கொள்ளவே முடியாது. 'நான்' என்பதனை மறந்து, தனக்காக அன்றிப் பிறர்க்காக வாழ்வது என்ற தத்துவத்தின் மேன்மையை, அதனால் வரும் ஆத்ம திருப்தியை, நீ உணர்ந்துகொள்ளும் வரைக்கும் இவைகளின் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளமாட்டாய். தியாகம் என்ற தீயினால்

தான் மனிதனுடைய ஆத்மா பரிசுத்தம் அடைகிறது. இன்று பூவுலகத்தில் சென்று பார்த்தால் தெரியும் மனிதர் எல்லாரும் என்னை எப்படித் தெய்வ மாகக் கொண்டாடுகிறார்கள் என்று.

மா: தெரியும், தெரியும், உன் பதிவிரதைத்தன்மையை மெச்சி உன்னைத் தெய்வமாகக் கொண்டாடும் அந்த உலகம், இன்று என்னைத்

தெருக் கூத்திலும், நாடக மேடையிலும், சினிமாத் திரையிலும் வைத்து வேசி வியபிசாரி என்று தூற்றுகிறது. ஆணுவிற்கும் ஆவன்னுவிற்கும் வித்தியாசம் தெரியாத அவ்வளவு பாமரனை நடிகன் ஒருவன், நரி சிங்காதனத்தில் ஏறியதுபோல் நாடகமேடையில் ஏறி, 'தாசிகள் நேசம் மோசம்' என்று பாடும்பொழுது என் மனம் எவ்வளவு கொதிக்கிறது! நீ எவ்வளவு

பதிவிரதையோ, நானும் அவ்வளவு பதிவிரதை. என் மானிட வாழ்வு முழுதும் ஒரே ஒரு காதலரே என் இருதயத்திலும் உடலிலும் இடம் பெற்றிருந்தார். ஆனல் உன்னைப்போல் நான் அவரைத் தெய்வமாகக் கொண்டாடி அடிமை வாழ்வு வாழவில்லை. எவ்வழியிலும் அவரை எனக்குச் சமமாகவே பாவித்தேன். அந்த ஒரு காரணத்தினல்தான் என் மையலிலே அவரும், அவர் மையலிலே நானும் அவ்வளவு காலம் சொக்கிப்போய் இருந்தோம்.

க: அதுதான் அவர் அப்படித் திடீரென்று உன்னை விட்டு என்னைத் தேடி வந்தாராக்கும்!

மா: ஆம், ஆம். மலடி சந்ததியை விருத்தி செய்வாளென்று!

க: (திடீரென்று கண்களில் தீப்பொறி சிதற, நெற்றியில் வேர்வை அரும்ப, குறுமூச்செறிந்து, வீராவேசம் கொண்டு) அடி துரோகி, என்ன சொன்னய்? நானு மலடி? நீதான் என் கணவரின் ரத்தத்தை உறிஞ்சி ஒரு பிள்ளை பெற்றுவிட்டாயாக்கும்! இதோ பார், நீயும் உன் குலமும் உன் ஆடலும் பாடலும் எல்லாம்—

[கண்ணகி சாபம் கூறி முடிப்பதற்குள், இளங்கோவடிகள் எங்கிருந்தோ வந்து தோன்றுகிருர்.]

இளங்கோ: தாயே, க்ஷமித்தருள்வாய். எவ்வளவோ துயரங்களையும் இன்னல்களையும் சகித்துக்கொண்ட பொறுமையின் சாகரமாகிய உனக்கு இந்த அபலை மாதவி, சிந்தனை இல்லாமல் வீசிய வார்த்தைகளைச் சகித்துக் கொள்ள முடியாதா? உலகம் முழுவதையுமே வாரி அணைத்துக்கொள்ளும் உன் பரந்த அன்பில் இவளுக்கும் ஒரு துளி கொடுத்து உதவு. சரி, அப்படித்தான். நீங்கள் இருவரும் சகோதரிகள். பூவுலகில் நடந்தது என்னவோ எவராலும் மாற்றி யமைக்கமுடியாத ஓர் ஊழின் பயன். நாம் எல்லாம் விதியின் வலிய கைகளில் கிடந்து ஆடும் செயலறியாப் பதுமைகள் தாமே!

[திரை]

ஆசிரியர் குறிப்பு

சென்ற புரட்டாசி இதழில் 'கார்க்கியன்' என்பவர் பெயரோடு வெளிவந்த 'பிராயச்சித்தம்' என்ற கதை, ஆங்கிலத்தில் 'இந்தியன் ரெவ்யூ'வில் தஞ்சை அட்வகேட் ஸ்ரீமான் டி. என். விஸ்வநாதன் அவர்கள் எழுதிய கதையின் மொழி பெயர்ப்பாகும். மூலக்கதை எழுதியவர் பெயரில்லாமல் அக்கதை வெளிவர நேர்ந்ததற்கு வருந்துகிறோம். ப—ர்.

சமயோசித புத்தி

ஸ்ரீ. ஸ்ரீநிவாஸன்

பல வருஷங்களுக்கு முன் நல்லரசன்கோட்டை என்ற நாட்டைச் சத்தியநாதன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவன் அறிவிற் சிறந்தவன்.

அவன் தேசத்தில் பஞ்சம் வந்தது. ஜனங்கள் பிழைப் புக்கு ஒரு வழியும் தெரியாமல் திகைத்தார்கள். பலர் வேறு தேசங்களுக்குச் சென்று அவரவர்கள் பிழைக்கும் வழியைத் தேடிக்கொள்ளத் தொடங்கினர்.

ஒரு வீட்டில் மிகவும் வயசான கிழவி ஒருத்தி வசித்து வந்தாள். அவளுக்கு மூன்று பிள்ளைகள் இருந்தார்கள். அவரவர்கள் தங்கள் பாட்டைப் பார்த்துக்கொண்டு, தனித் தனியாகச் சென்றுவிட்டனர்; வயதுவந்த தாயா யிற்றே என்றுகூடச் சிறிதும் எண்ணவில்லை. அக்கிழவி யிடம் வெள்ளி, தங்க நாணயங்களோ, மதிப்பிடத்தகுந்த பாத்திரங்களோ இல்லாவிட்டாலும் வீட்டின் உட்புறத்தில் உள்ள களஞ்சியத்தில் ஆகாரத்திற்கு வேண்டிய நெல் அதிகமாகவே இருந்தது. இரண்டு மூன்று பசுக்களும் வீட்டின் முன்புறம் கட்டப்பட்டிருந்தன.

சில துஷ்டர்கள் கிழவி தனியாக இருப்பதை அறிந்து கொண்டு அவள் வீட்டிலிருந்த நெல்லையும், மாடுகளை யும் திருடிப்போவதற்குத் தக்க சமயத்தை எதிர்பார்த் துக் கொண்டிருந்தார்கள். ஓர் அமாவாசையன்று யாவரும் தூங்கிப்போன பிறகு நள்ளிரவில் துஷ்டர்கள் மூவர் சேர்ந்து கிழவியின் வீட்டை அடைந்தனர். வீடு உட் புறம் தாழிட்டிருப்பதை அறிந்த அவர்கள், சுவரேறிக் குதித்து உள்ளே புகுந்தார்கள். கிழவி மிகவும் நன் ருகத் தூங்குகிருள் என்பதைத் தெரிந்துகொண்டார்கள். அவர்கள் அவள் தலையணையின் கீழிருந்த சாவியை எடுத் தார்கள். பிறகு மற்ருெரு கதவைத் திறந்து அந்த அறையி னுள் இருந்த களஞ்சியத்திலிருந்து நெல்லில் ஒரு மூட்டை எடுத்துக்கொண்டார்கள். வீட்டின் வெளிப்புறத்தில் கட்டப் பட்ட மாடுகளை அவிழ்த்துக்கொண்டு புறப்படலாயினர்.

மாடுகள் தங்களை யாரோ புது ஆட்கள் அவிழ்க்கிறூர்கள் என்பதைத் தெரிந்துகொண்டு கத்த ஆரம்பித்தன. அக்குரலைக்கேட்டவுடன் துஷ்டர்கள் கிழவி எங்கே எழுந்துவிடப்போகிறுளோ என்ற பயத்தால் தங்களுக்குக் கிடைத்த நெல் மூட்டையுடன்மட்டும் வீட்டை விட்டு வெளியேறிஞர்கள். மாடுகளின் குரலைக் கேட்ட கிழவி தூக்கத்திலிருந்து எழுந்து வந்தாள்; வீட்டின் கதவும் அறைக் கதவும் திறந்திருப்பதைப் பார்த்தாள். மனம் கலங்கியது. வீட்டினுள் சென்று பார்க்கவே, நெல் மணிகள் சிதறியிருப்பதைக் கண்டு யாரோ திருடர்கள் வந்திருக்கவேண்டும் என்று அறிந்துகொண்டாள்.

மறுநாட்காலையில் கிழவி தன் வீட்டில் திருடர்கள் வந்த விவரத்தை அதிகாரிகள் மூலம் அரசனுக்குத் தெரிவித்தாள். திருடவந்த துஷ்டர்கள் வீட்டிலிருந்து அவசரத்தில் போனபோது தாங்கள் கொண்டுவந்த கயிறு, கொம்பு, இரும்பு முதலியவைகளை எடுத்துச்செல்ல மறந்துவிட்டார்கள். அவைகளைக் கிழவி எடுத்துக்கொண்டு போய் அரசனிடம் கொடுத்தாள். திருடர்களைத் தேடிப்பிடித்துவர அரசன் காவலாளர்களை அனுப்பிவிட்டான். அவர்கள், கிழவி வீட்டில் திருடியிருக்கலாம் என்று அந்தத் துஷ்டர்களையே சந்தேகித்து அரசன்முன் கொண்டுவந்து நிறுத்தினர். அரசன் அவர்களை எந்த எந்த விதங்களில் விசாரித்தாலும் கிழவியின் வீட்டில் நெல்லைத் திருடியவர்கள் அவர்களே என்று நிச்சயிப்பதற்கு முடியாமல் போயிற்று. கிழவி வீட்டில் விட்டுச்சென்ற ஆயுதங்களை அரசன் அவர்கள்முன் காட்டி, "இவை உங்களுடைய ஆயுதங்களா?" என்றுன்.

மூவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துவிட்டு, "இவை எங்களுடையன அல்ல. இந்த ஆயுதங்கள் எல்லாம் திருடர்களுடையனவாக இருக்கும். நாங்கள் திருடர்களும் அல்ல; இவை எங்களுக்குச் சொந்தமானவையும் அல்ல" என்றனர்.

சத்தியநாதன் தீர விசாரியாமல் ஒருவரையும் தண்டியாதவன். ஆகையால் இந்த வழக்கை எவ்விதம் முடிவு செய்வது என்று தெரியாமல் மிகவும் மன வருத்தமடைந்தான். சிறிதுநேரம் ஆழ்ந்த யோசனையில் அமர்ந்தான். கடைசியாக அவன் துஷ்டர்களைப் பார்த்து, "சரி, நீங்கள் குற்றவாளிகள் அல்ல. போய் வரலாம்" என்றுன்.

இவ்வார்த்தைகளைக் கேட்டதும் அவர்கள், 'அரசனையும் ஏமாற்றிவிட்டோம்' என்று எல்லையில்லாத ஸந்தோஷங்கொண்டு போகலாயினர். அவர்கள் போனவுடன் அரசன் தன் வேலைக்காரர்களை அனுப்பி அம்மூவரை மீட்டும் அழைத்துவருமாறு ஏவினன்.

"அரசன் கட்டளை: நீங்கள் மூவரும் திரும்பி வரவேண்டும்" என்று சொன்னதும் மூவரின் ஸந்தோஷமும் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது. அரசன் என்ன செய்வானோ என்று வருத்தமுற்றவராய் மூவரும் மனச்சோர்வுடன் அவன் முன் வந்து நடுக்கத்துடன் நின்றனர். அரசன் அவர்களைப் பார்த்து, "நீங்கள் திருடர்கள் அல்லவே; ஏன் உங்களுடைய சாமான்களை வைத்துச்

சென்றீர்கள்? நீங்களே எடுத்துச் செல்லலாம்" என்று அவர்கள் கிழவி வீட்டில் மறந்து வைத்துப்போன ஆயுதங்களைக் காட்டினன்.

மூவரும் முன்பின் யோசனையின்றி அவரவர் சாமானை எடுத்துக்கொண்டு புறப்படத் தயாராயிருந்தனர். உடனே அரசன், "துஷ்டர்களே! இவை திருடரின் ஆயுதங்கள். நீங்கள் திருடர் அல்ல என்று சொல்லிவிட்டு ஏன் இதை எடுத்துச் செல்லவேண்டும்? இதிலிருந்தே உங்கள் தொழிலும் குணமும் நன்கு தெரிந்துவிட்டன" என்று கூறி அவர்களுக்கு நல்ல தண்டனை விதித்தான்.

எல்லாவிதமான

தமிழ்ப் புத்தகங்களும்

எங்களிடம் கிடைக்கும்

*

சக்தி காரியாலயம்

புத்தக வியாபாரிகள்

367, எஸ்பிளனேட், சென்னை

(ஹைகோர்ட்டுக்கு எதிரில்)

தபால் பெட்டி 1361. தந்தி: 'MONTHLY'

புத்தக விலைப்பட்டியல் வேண்டுவோருக்கு
அனுப்பப்படும்

இன்ஷ்யூர் செய்யுங்கள்

ஜூபிடர் ஜெனரல்

இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

கீழ்க்கண்ட இன்ஷ்யூரன்ஸ் அலுவல்களைக் கவனிக்கும்
ஆயுள், நெருப்பு, கப்பல், மோட்டார்கார், பஸ்கள்,
டாக்ஸிகள், தொழிலாளர் நஷ்ட ஈடு

சமுத்திரம்

சாதனம் ரெயில்வே சாதனம்

தபால்

பிரபல இந்திய இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி
வாக்களிக்கப்பட்ட மூலதனம்

ஒன்றரைக் கோடி ரூபாய்

எங்கும் ஏஜெண்டுகள் தேவை

பிராஞ்சு ஆபீஸ்: 99, அரண்மனைக்காரத் தெரு, மதராஸ்.
பிராஞ்சு மானேஜர்: N. வேங்கடராம அய்யர்.

இந்தியாவில் கோஹினூர்போன்ற மருந்து

உல்லாஸ வேளை

"எஸ்.வி.வி." எழுதிய ஹாஸ்ய நூல் ... ரூ. 2 8 0

—:o:—

மால்கோஷ் (வங்காளச் சிறு கதைகள்)

13-பிரபல ஆசிரியர்களின் 15-கதைகள் வங்க மூலத்திலிருந்து த. நா. குமாரசாமி, பி.ஏ., மொழிபெயர்த்தது ... ரூ. 2 4 0

—:o:—

கவி ரவீந்திரநாத தாகூர்

கே. என். சுப்ரமண்யம், பி.ஏ., எழுதியது. ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியார், பி.ஏ., பி.எல்., முன்னுரை கொண்டது .. ரூ. 1 0 0

—:o:—

கைத்தொழில் அரசர் டாடா

வித்வான் S. G. கணபதி ஐயர், பி.ஓ.எல்., எழுதியது .. ரூ. 1 0 0

மற்றும் எல்லாத் தமிழ்ப் புத்தகங்களும் கிடைக்கும்.
விவரங்களுக்கு எழுதிக்கொள்க.

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை

நாடு ஆவணக் காப்பக நூலக
2/1868

சமீபத்தில் காலஞ்சென்ற

உலக மகாகவி ரவீந்திரர்

எழுதிய இரண்டு அரிய நவீனங்கள்

மாயாவிநோதினி

(ஸ்ரீமதி தஞ்சம் மொழிபெயர்ப்பு)

'தமிழ்நேசன்': 'கதையைப்படிக்கும்போது அது ஒரு மொழி பெயர்ப்பென்றே கூறுவதற்கு இயலாதபடி அவ்வளவு பொருத்த மாய் முதனூல்போன்றே மொழிபெயர்க்கப்பட்டிருப்பது பெரிதும் பாராட்டத் தக்கதாகும். சந்தர்ப்பங்களுக்கேற்றபடி அநேக ஆப்டோன் படங்களும் சேர்க்கப்பட்டிருப்பதானது படிப்போர் மனக்கண்முன் கதையைத் தத்ரூபமாகச் சித்திரிப்பதுபோல் தோன்றுகிறது."



குமுதினி

(ஸ்ரீமதி ரங்கநாயகி மொழிபெயர்ப்பு)

'தினகரன்': 'மானிடவாழ்க்கையில் ஏற்படும் பல துன்பங்களை உணர்ச்சி ததும்பும் முறையில் நாவலாசிரியர் சித்திரித்துக் காட்டியிருப்பது போற்றத்தக்கது'.

'செட்டிநாடு': 'தத்துவங்களைக் கொண்ட இக்கதையை அம்மையார் மொழிபெயர்க்கத் துணிந்தது அவர்களது மனோ தைரியத்தைக் காட்டுகிறது.'

விலை (ஒவ்வொன்றும் தனித் தனியே) ரூ. 1—8—0

தபால், வி. பி. செலவு தனி

கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை.



மயிலாப்பூர், மெட்ராஸ் லா ஜர்னல் அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டு,
ரா. நாராயணசாமி ஐயர், பி.ஏ., பி.எல்., அவர்களால் பிரசுரம் செய்யப்பட்டது.